வரு.73 இல. 13 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

32 பக்கங்கள் 40/-

2021 மார்ச் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை March 28 Sunday, 2021




இலவச இணைப்பு



மாகாணசபை தேர்தல் மீது அரசியல் கட்சிகள் இலக்கு! 06



ஜெனீவா பிரேரணையின் அடுத்த கட்ட எதிர்பார்ப்பு! 07



பாதிப்படைந்த குடும்பங்கள் கைதூக்கி விடப்பட வேண்டும் 13



நடுவரின் அபிப்பிராயத் தீர்ப்புக்கு எதிராக கடும் விமர்சனங்கள்! 24

### பழைய விருப்பு வாக்கு முறையா? புதிய தொகுதி முறையா?

## மாகாண சபைத் தேர்தல்; இறுதித் தீர்மானம் நாளை



### அமைச்சரவை கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பான இறுதி தீர்மானம் நாளை கூட வுள்ள அமைச்சரவை கூட்டத்தில் 04

**அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் இரண்டு மாற்று யோசனைகள் முன்வைப்பு**

## இலங்கைக்கு நேற்று வருகை தந்த 122 சுற்றுலாப் பயணிகள்



### 24 மணி நேரத்தில் 21 விமானங்கள் வருகை

பிரிட்டன் உள்ளிட்ட மேலும் சில நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் 122 பேர் இலங்கைக்கு வருகை தந் துள்ளனர். ரஷ்யா, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளிலிருந்து சுற்றுலா பய ணிகள் நாட்டிற்கு வருகை 04

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவத்தின் தேர்த்திரு விழா நேற்று (27) நடைபெற்றது.



( வடமலை ராஜ்குமார், சசி குமார் )

# ஜெனீவாவின் அழுத்தங்களுக்கு அச்சமின்றி முகங்கொடுப்போம்

### இந்து சமுத்திர அதிகார போட்டிக்கு பலியாகமாட்டோம்

### 16 ஆவது 'கிராமத்துடன் கலந்துரையாடல்' நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய உரை



ஜெனீவா அழுத்தங்களுக்கு அச்சமின்றி நாங்கள் முகங்கொடுப்போம். அதற்கு அடிபணியாமல் இருக்க முடியும். நாங்கள் ஒரு சுதந்திர நாடு. இந்தியப் பெருங்கடலில் நடக்கும் அதிகாரப் போட்டிகளுக்கு நாங்கள் இரையாக மாட்டோமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கிராமத்துடன் கலந்துரையாடலின் 16ஆவது நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாத்தறை பிடபெத்தர பிர தேசத்தில் இடம்பெற்றது. 04

### சிறிதரன் MP வீட்டின் முன் நடந்த தாக்குதல்

# CCTV மூலம் கைதாகிய 04 மாணவருக்கும் பிணை

### மேலும் மூவரைத்தேடி பொலிஸார் வலை வீச்சு

**கல்லூரி மாணவர் தலைவர்கள் என்பதால் எச்சரித்து பெற்றோரிடம் ஒப்படைப்பு**



**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் வீட்டின் முன்னால் நடத்தப்பட்ட தாக் குதல் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர்கள் 04 பேர் 02 மோட்டார் சைக்கிள்களுடன் பொலிஸாரால் 04

## குருத்தோலை ஞாயிறு தினம் இன்று



தவக்காலத்தின் பரிசுத்த வாரத்தை ஆரம்பிக்கும் குருத் தோலை ஞாயிறு இன்று உலகளாவிய கிறிஸ்தவ மக்களால் அனுஷ்டிக்கப்ப டுகிறது.

ஆலயங்களில் இன்றைய தினம் குருத்தோலை பவனிகள் நடை பெற்று ஓசான்னா கீதங்களுடன் குருத்தோலை ஞாயிறு திருப்பலி கள் நடைபெறுகின்றன.

அதனைத் தொடர்ந்து கிறிஸ்து நாதர் தமது 04

## ஆறு வயதில் உலக சாதனை படைத்த சுவிஸ் தமிழ் சிறுவன்



உலக நாடுகளின் கொடிகளை பார்வையிட்டு ஒரு நிமிடத்தில் 68, நாடுகளின் கொடிகளின் பெயர் களை சரியாக முறையே ஆங்கில மொழியில் 04

## ஏப்ரல் 01 முதல் அரிசியின் விலையில் பாரிய குறைப்பு

### பச்சரிசி ரூ.95; நாட்டரிசி கிலோ ரூ.97



சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலை யங்கள் ஊடாக சிவப்பு மற்றும் வெள்ளை பச்சரிசி ஒரு கிலோ 95 ரூபாவுக்கும், நாட்டரிசி ஒரு கிலோ 97 ரூபாவுக்கும் விற்பனை செய்ய தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு போதுமானளவு அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச் சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்

சதொச தலைவர், மொத்த கூட்டுறவு விற்பனை 04

### சுயெஸ் கால்வாயில் தரைதட்டியுள்ள கப்பல்

## இலங்கையின் எரிபொருள் தேவையில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது

### இருவாரங்களுக்கு தேவையான எரிப்பொருள் களஞ்சியத்தில்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக் குத் தேவையான எரிபொருள் களஞ்சியப்ப டுத்தப்பட்டுள்ளதால் சுயெஸ் கால்வாயில் தரைதட்டியுள்ள பாரிய கொள்கலன் கப்பல் காரணமாக இலங்கையில் எரிபொருள் தட்டுப் பாடு ஏற்படாதென எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 04

## நல்லூர் ஆலயத்தில் விஷமிகள் நாசகாரம்

### இந்து மக்கள் பெரும் கவலை



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் ஆலயத்தில் விசமிகள் சிலர் கழிவு எண்ணெய்யை ஊற்றியுள்ளமை இந்துக்கள் மத்தியில் பெரும் கவலையை தோற்றுவித்துள்ளது. கடந்த 25 ஆம் திகதி நல்லூரில் முத்தியடைந்த 04

### ஹஸ்துன் தொடர்பில் தொடரும் மர்மம்

## சாரா உயிருடன் உள்ளாரா? இந்தியாவுக்கு தப்பிச் சென்றாரா?

### மீண்டும் மரபணு சோதனை நடத்த தீர்மானம்

**சுப்பிரமணியம் நிசாந்தன்**



உயிர்த்த ஞாயிறு தாக்கு தலின் பின்னர் காணாமல் போன சாரா ஹஸ்துன் இறந்து விட்டாரா? என்பதை உறுதிப்ப டுத்த புதிதாக மரபணு பரிசோதனை நடத்த 04

### அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள்

## ஜனவரி முதல் நேற்று வரை 502 பேர் பலி



இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வீதி விபத்துக்களால் 500 க்கும் அதிகமானோர் உயிரிழந் துள்ளதாக பொலிஸ் தலை மையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் வீதி விபத் துக்களால் 13 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். 04

## டெண்டுல்காருக்கு கொரோனா தொற்று

### வீட்டிலேயே தனிமைப்படுத்தல்



இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண் டுல்காருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய் யப்பட்டுள்ளது. சச்சின் டெண்டுல்கார் தனது உத்தி யோகபூர்வ டுவிட்டர் பக்கத் தில் இதனை உறுதிபடுத்தியுள் ளார்.

இந்த நிலையில், வீட்டிலுள்ள ஏனோயோருக்கும் கொரோனா தொற்று இல்லையென உறுதி செய்யப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பளையில் கோர விபத்து

### டிப்பருடன் கார் நேருக்கு நேர் மோதி விபத்து



**பரந்தன் குறூப்நிருபர்**

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவிலில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற விபத்தில் தந்தை மற்றும் அவரது இரு மகன்களும் பலியாகி யுள்ளனர்.

விபத்து நடந்த சமயத்தில் யாழ்ப் பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக் கியவாறு கார் காணப்படுவதாகவும் அதற்கு நேரெதிரே டிப்பர் வாகனம் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீதியை விட்டு விலகிய டிப்பர் காருடன் மோதி விபத்து இடம் பெற் றிருக்கலாமென பொலிஸார் தெரிவிக்கின்றனர். 04

**ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன்கள் பலி**

### விக்கல் வீராச்சாமி



அண்ணே., ஸ்ரீதரன் எம்பி ஐயாவின்ர வீட்டுக்கு யாரோ வந்து அடிச்சுப் போட்டு போட்டாங்களாம்...?

அது சும்மா. பள்ளிக்கூட பொடியள் விளையாடின விளையாட்டாம், நல்லவேளை பொலிஸ் உண்மையைக் கண்டு பிடிச்சுட்டுது, இல்லையெண்டா இவங்க அதை அரசிய-லாக்கி அறிக்கை அறிக்கையா விட்டிருப்-பாங்கள்...!!!!

## புதிய அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கு அதிகார பரவலாக்கல்

### ஸ்ரீல.சு.கவின் நிலைப்பாடு இது என்கிறார் நிமால்


**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



புதிய அரசியலமைப் பில் மாகாண சபைக ளுக்கு அதிகார பரவ லாக்கல் இடம்பெற வேண்டுமென்ற நிலைப் பாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளதாக சு.கவின் சிரேஷ்ட ஆலோ சகரும் கைத்தொழில் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நிபுணர் குழு வுக்கு சு.க தமது யோச னைகளை நேற்றுமுன்தி னம் கையளித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா 04




# பொரளை நகர மத்தியில் நவீன வாழ்க்கைமுறை

**வகைகள்...** • 2BR (850sqft) • 3BR (1050sqft) • 3BR (1250sqft)



**விண்ணப்பக் கட்டணம் ரூபா 2,000/-**

Supun +94-77-7269740

Sharitha +94-71-5335357

Chathuranga +94-71-9335357

Office +94-11-2875907

நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மை அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை

**வீடமைப்பு பிரிவு**
நகர அபிவிருத்தி அதிகார சபை
6ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல.

www.uda.gov.lk
Urban Development Authority

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக்ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கொவிட்–19 அச்சுறுத்தலுக்கு மத்தியில் இலங்கை மக்கள் எதிர்நோக்கும் புத்தாண்டு

**இலங்கையில் கொவிட் 19 தொற்றின் இரண்டாவது அலை தற்போது அடங்கி வருகின்றது. கடந்த வருடம் ஒக்டோபரில் தலைதூக்கிய இந்த இரண்டாம் அலையைக் கட்டுப்படுத்தவென பரந்த அடிப்படையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இதேவேளை கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி முதல் கொவிட் 19 தடுப்பூசியும் வழங்கப்பட்டு வருகின்றது. இதுவும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட துணையாக அமைந்திருக்கின்றது. இற்றை வரையும் 08 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.**



ஆனால் கொவிட் 19 தொற்று ஆளுக்காள் தொற்றிப் பரவக்கூடிய ஒன்று. அதன் பரவுகைக்கு வாய்ப்புக் கிடைக்குமாயின் அதனை இத்தொற்று விரைவாகப் பரவும். இதனை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மறந்துவிடலாகாது. அதனால் இத்தொற்று மீண்டும் தலைதூக்காதென உறுதியாகக்கூற முடியாது. ஏனெனில் கொவிட் 19 தடுப்புக்கான ஊசி, இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துமே தவிர அதன் பரவுதலைக் கட்டுப்படுத்தக்கூடியதல்ல. அதனால்தான் இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களும் இத்தொற்றின் பரவுதலைத் தவிர்ப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களைத் தொடர்ந்தும் பேண வேண்டும் என்று மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினர் வலியுறுத்துகின்றனர்.

இது தொடர்பிலான அனுபவங்களை பல நாடுகள் பெற்றுள்ளன. அதாவது இத்தொற்றின் முதலாம் அலையைக் கடும் உழைப்புடன் பல நாடுகள் கட்டுப்படுத்திய போதிலும் அதனோடு சேர்த்து இத்தொற்றைத் தவிர்த்துக்கொள்வதற்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட கவனயீனமும் அசிரத்தையும் இத்தொற்றின் இரண்டாம் அலை தலைதூக்கவும் பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தவும் வழிவகுத்திருக்கின்றன. அவ்வாறான அனுபவம் இலங்கைக்கும் உள்ளது.

கொவிட் 19 தொற்றின் முதலாம் அலை 2020 மார்ச் நடுப்பகுதியில் இந்நாட்டில் பதிவாக ஆரம்பித்தது. கடும் முயற்சியின் ஊடாக ஜூன் மாதமளவில் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. அதனோடு சேர்த்து ஏனைய நாடுகளைப் போன்று இங்கும் இத்தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பிலான கவனயீனமும் அசிரத்தையும் மக்கள் மத்தியில் அதிகரித்தது. அதன் விளைவாக கடந்த ஒக்டோபர் மாத ஆரம்பப் பகுதியில் இத்தொற்றின் இரண்டாம் அலை தலைதூக்க வழிவகுத்ததோடு முதலாம் அலையில் பரவாத இடங்களிலும் இத்தொற்று வேகமாகப் பரவியது. அத்தோடு முழு நாட்டிலும் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் குறுகிய காலத்தில் பாதித்த இத்தொற்று, 500 க்கும் மேற்பட்டோரின் உயிரிழப்புக்கும் காரணமாக அமைந்துள்ளது.

என்றாலும் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதோடு கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசியும் வழங்கப்படுவதால் கடந்த பெப்ரவரி மாதத்தின் நடுப்பகுதி முதல் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்தது.

என்றாலும் கடந்த சில வாரங்களாக இந்தியாவில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதற்கும் கொவிட் 19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் மக்களின் கவனயீனமும் அசிரத்தையுமே காரணமாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதன் விளைவாக கொவிட் 19 தவிர்ப்புக்கான தடுப்பூசி ஏற்றுமதியைக் கூட தற்காலிகமாக இடைநிறுத்தும் அளவுக்கு இந்தியா சென்றுள்ளது. அத்தோடு மரபணு மாற்றமடைந்த இரண்டு கொவிட் 19 வைரசு வகைகளும் கூட அந்நாட்டில் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது.

ஆனால் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தவென பல மாதங்கள் ஊரடங்கை அமுல்படுத்தி முடக்க நிலையையும் இந்தியா முன்னெடுத்தது. அதன் பயனாக கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களாகும் போது அந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டதோடு ஜனவரி 16 முதல் உள்நாட்டு மக்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையும் ஆரம்பித்தது. இற்றை வரையும் 04 கோடிக்கும் மேற்பட்ட இந்திய மக்களுக்கு இத்தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பூனேயில் உள்ள சீரம் நிறுவனத்தில் 'கொவிசீல்ட்' என்ற பெயரில் உற்பத்தி செய்யப்படும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அஸ்ட்ரா செனகா நிறுவனத்துடன் இணைந்து கண்டுபிடித்து தயாரித்துள்ள தடுப்பூசி இந்தியர்களுக்கு வழங்கப்படும் முக்கிய தடுப்பூசியாகும். இத்தடுப்பூசியை இலங்கை உட்பட உலகின் பல நாடுகளுக்கும் இந்தியா ஏற்றுமதி செய்து வருகின்றது. அந்த வகையில் 64 நாடுகளுக்கு 60 மில்லியன் தடுப்பு மருந்து சொட்டுகள் இற்றை வரையும் இந்தியாவினால் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. அவற்றில் 12 இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.


இருந்த போதிலும் கொவிட் 19 தொற்று இந்தியாவின் பல மாநிலங்களில் தற்போது மீண்டும் தலைதூக்கியுள்ளதால், இத்தொற்றின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இத்தடுப்பூசி பாவனையை மேலும் அதிகரிக்க அந்நாடு தீர்மானித்திருக்கின்றது. அதனால் கொவிசீல்ட் தடுப்பூசி ஏற்றுமதியை கடந்த வியாழக்கிழமை முதல் ( 25.03.2021) இந்தியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இதன் காரணத்தினால் இத்தடுப்பூசியை இந்தியாவிடம் பெற்று தம் பிரஜைகளுக்கு வழங்கும் நாடுகளும், உலக சுகாதர ஸ்தாபனத்தின் 'கொவெக்ஸ்' திட்டத்தின் கீழ் தடுப்பூசி பெற்றுக்கொள்ளும் நாடுகளும் இதனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையை எதிர்கொண்டுள்ளன.

இவ்வாறான சூழலில் ரஷ்யாவிடமிருந்து 07 மில்லியன் கொவிட் 19 தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டுள்ளது. அத்தோடு சீனாவிலிருந்தும் இத்தடுப்பூசியைக் கொண்டு வரவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து கொவிட் 19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பிலும் மக்களிடம் மீண்டும் அக்கறையீனம் ஏற்படுவது ஆரோக்கியமானதல்ல.**








என்றாலும் இந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து கொவிட் 19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பிலும் மக்களிடம் மீண்டும் அக்கறையீனமும் அசிரத்தையும் ஏற்படுவது ஆரோக்கியமானதல்ல. குறிப்பாக பஸ், ரயில் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்திலும் சந்தைகளிலும் சமூக இடைவெளி பேணப்படாமையைப் பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான நிலையில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் 1100 பேர் கடந்த மார்ச் 19 ஆம் திகதி எழுமாறான பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 354 பேருக்கு இத்தொற்றுஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது சுகாதாரத்துறை உள்ளிட்ட உயர்மட்டங்களின் அவதானத்தைப் பெற்றுள்ளது. இந்த ஊழியர்களுக்கு இத்தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து ஆராயவென விஷேட குழுவென்றும் சக்தி வலு அமைச்சரினால் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ் குடா நாட்டின் சில பிரதேசங்களிலும் கொவிட் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையிலும் கடந்த சில தினங்களாக அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதன் விளைவாக சில பிரதேசங்களில் கொவிட் 19 பரவுதல் தவிர்ப்புக்காக இறுக்கமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கவனயீனமும் அசிரத்தையுமே முக்கிய காரணமாக இருக்க முடியும்.

அதனால் யாழ்ப்பாணத்திலும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகியுள்ளவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும் இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையும் இலங்கை மக்கள் தொடர்ந்தும் கொவிட் 19 தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் இலங்கையரின் முக்கிய விழாவாக விளங்கும் சிங்கள தமிழ் புத்தாண்டை இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். இப்புத்தாண்டின் நிமித்தம் மக்கள் தற்போது ஆயத்தமாதலில் ஈடுபட்டுள்ளதோடு தலைநகரிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் தொழிலின் நிமித்தம் தங்கியுள்ளவர்கள் புத்தாண்டை முன்னிட்டு இருப்பிடங்களுக்கு திரும்பவும் தயாராகி வருகின்றனர். இது விடுமுறை காலமாகையால் சுற்றுலா செல்வதிலும் அதிகளவானோர் கவனம் செலுத்தியுள்ளனர். இது சிங்கள, தமிழ் புத்தாண்டுக் காலத்தின் அண்மைக்கால வழக்கமாக விளங்குகின்றது.

ஆனால் கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நீடித்துக் கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் ஒவ்வொருவரும் மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும் முன்னவதானத்துடனும் செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும். ஏற்கனவே தீபாவளி மற்றும் புது வருடத்தின் நிமித்தம் தலைநகரிலும் அயற்பிரதேசங்களில் இருந்தும் மலையகம் திரும்பியவர்கள் ஊடாக இத்தொற்று அங்கும் பரவியமை தெரிந்ததே. அவ்வாறான ஒரு நிலைமை இப்புத்தாண்டுக் காலத்திலும் ஏற்பட வாய்ப்பு அளிக்கக்கூடாது.

ஆகவே கொவிட் 19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான பிரதான சுகாதார வழிகாட்டல்களாக விளங்கும் சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல், கை கழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களில் ஒவ்வொருவரும் உச்ச கவனம் செலுத்த வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும்.

**மர்லின் மரிக்கார்...**




# கற்ற பாடத்தை மறந்து போகும் நாடு

**நல்லது, கெட்டது என இரண்டையும் இரண்டு நாட்களில் மறப்பது வழக்கமாகி விட்டது. அது இலங்கையர் கலாசாரத்தின் ஒரு பக்கமா என சிந்திக்கத் தோன்றுகிறது. கடந்த வாரம் துயரமான சம்பவத்துடன் முடிவடைந்தது. சாரதியின் கவனயீனத்தால் பசறையில் இடம்பெற்ற விபத்தால் பதினான்கு பேரின் உயிர்கள் பலியாயின. இன்னும் முப்பது பேர் காயமடைந்துள்ளார்கள். உயிரிழந்தவர்களின் உறவினர்களும் காயமடைந்தவர்களும் தங்களது வாழ்நாளில் இதனை மறக்க முடியாது. ஆனால் சமூகமாக நாம் அனைவரும் வெகு விரைவில் இச்சம்பவத்தை மறந்து விடுவோம் என்பதில் சந்தேகமில்லை. இச்சம்பவத்தின் மூலம் பாடமொன்றை கற்றுக்கொண்டு வீதி விபத்துகளை தடுக்கக்கூடிய முறையான திட்டங்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.**

**சமூகம் வளர்ச்சியடையும் போது ஒழுக்கமும் ஏற்படும். இலங்கை வளர்ச்சியடைந்து வருகின்றது என இலக்கங்கள் மூலம் காட்டினாலும் அன்றாட நடத்தையில் அது தெரிவதில்லை. முன்னால் செல்லும் வாகனத்தை முந்திச் செல்வதில் சிலருக்கு என்ன அவசரமோ தெரியாது. மிகவும் கவனயீனமாக, கடும் பிரயத்தனத்துடன் அடுத்தவரை முந்தி சென்று சாதிப்பது என்னவென்பது தெரியவில்லை. நாள்தோறும் எங்கேயாவது ஒரு விபத்து இடம்பெறுகிறது. அநேகமாக அதற்கு காரணம் கவனயீனமும், அக்கறையின்மையுமாகும். சட்டமும் நீதிமன்ற நடவடிக்கையும் தண்டனையும் சாரதிகளின் நடத்தையில் குறிப்பிட்டளவு மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை என்பது தெளிவாகிறது.**

**இந்த விபத்து நடைபெற்றவீதியில் வீதித்தடை இருந்ததாக கூறப்படுகிறது. அதனை அகற்றுவதற்கு அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை. தடையுள்ள போது மட்டுமல்ல அவதானமான இடம் என அறிந்தும் அது பற்றி அக்கறை செலுத்தாமல் அதனை பலரும் கடந்து சென்றிருப்பார்கள் அல்லவா? குறைந்த பட்சம் வீதித் தடையையாவது போட்டிருக்கலாம். சில சாரதிகள் அதனையும் தள்ளி விட்டு செல்கிறார்கள் என்பது ரகசியமான விடயமல்ல.**

**வாகன விபத்துகளால் மரணமடைபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆய்வாளர்களின் கணக்கெடுப்பின்படி கொவிட் 19 தொற்றால் நாள் தோறும் மரணிப்பவர்களை விட அதிகமானோர் விபத்தால் மரணமடைகிறார்கள். கடந்த இரண்டு தசாப்த காலமாக விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதனை தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டு ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. சாரதிகளின் கவனயீனத்தால் பாதசாரிகளுக்கும் சைக்கிளோட்டிகளுக்கும் ஏற்படும் ஆபத்து குறித்தும் அங்கு ஆராயப்பட்டுள்ளது. இந்த அறிக்கை மூலம் தெளிவான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய முடிவுகளை எடுக்காததும் தவறாகும்.**

**பொது வீதிகளில் உள்ள இடவசதிக்கும் அப்பால் அதிகளவு வாகனங்கள் நாள்தோறும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. அதனால் ஏற்படும்; வாகன நெரிசல் சாரதிகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. பொது போக்குவரத்து சேவையை மேம்படுத்தினால் வாகன நெரிசலை குறைக்க முடியும். மோட்டார் சைக்கிள்கள்,முச்சக்கரவண்டிகள் கார்கள் மூலம் பயணத்தை மேற்கொள்பவர்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். இதற்கான திட்டத்தை தயாரிக்கும் போது புகையிரத சேவையை மேம்படுத்துவதும் அவசியமாகும். சரியான நேரத்துக்கு புகையிரத சேவையை நடத்துவதன் மூலம் மக்களுக்கு இலகுவாக இருப்பதுடன் பொருளாதார நன்மையும் கிடைக்கும். தனியாரின் அதிகளவு வாகன பாவனை குறைக்கப்பட்டால் வாகன நெரிசல் குறைவதோடு எரிபொருள் பாவனையும் குறையும். பொதுமக்களின் போக்குவரத்து நன்மை கருதி புதிய மாற்றங்களை பேற்கொள்வது அவசியமாகும். விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புகள் மூலம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமொன்றுள்ளது. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் சம்பவம் மறக்கப்படுவதுடன் சாரதிகள் வழமை போன்று செயல்படுவார்கள். வாகன அனுமதி பத்திரம் வழங்குவதில் மாற்றம் செய்வதும் மற்றும் அபராதம் விதிப்பதும் தற்காலிகமானது. நாடு இழந்த உயிர்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். நட்டஈடு மாத்திரம் போதுமானதல்ல. இவ்வாறான துயரம் ஏற்படுவதை தடுப்பதற்கான திட்டத்தை புதிதாக எண்ணுவது அவசியமாகும்.**

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**



கண்டி கண்ணொருவ ரணபிம ரோயல் கல்லூரின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட விசேட முத்திரை, முதல் நாள் கடிதஉறை வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முத்திரையையும் கடித உறையை வெளியிட்டு வைப்பதை காணலாம்.

# அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தில் விசேட பூஜைகள்


அளுத்மாவத்தை அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தில் சுவாமி ஐயப்பன் அவதரித்த நாளை முன்னிட்டு இன்று சிறப்பு பூஜைகள் நடைபெறும் என ஆலய முகாமையாளர் சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

இன்று 5.45க்கு கணபதி ஹோமம்,6.30 தொடக்கம் 7.30 வரை சுவாமி ஐயப்பன் அபிஷேகம் நடைபெற்று காலை 9.30 க்கு கருப்பனசாமி, கடுத்தசாமிக்கு பூஜைகள் நடைபெற்று மாலை 6.30க்கு தீபம் ஏற்றி பூஜைகளுடன் நிறைவடையும்.

# கொழும்பு கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் சத்துரு சம்ஹார மஹா யாகம்

கொழும்பு 13, கதிரேசன் வீதி, அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் இன்று 28ஆம் திகதி காலை சத்துரு சம்ஹார மஹா யாகம் இடம்பெறவுள்ளது. யாக நிறைவில் திருமுருக ஷட்கோண யந்திரம் வழங்கப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

பில்லி, சூனியம், கண்திருஷ்டி, உடம்பில் உள்ள நோய்கள், கடன் தொல்லை, பகைவர்கள் தொல்லை, திருமண தடை போன்ற தடைகள் நீங்கப்பெற்று சுப மங்கள காரியங்கள் நடக்கவும், வியாபாரம் விருத்தியடையவும் , பணவரவு கூடவும் முகவசீகரம், அஷ்ட ஐஸ்வரியம் பெறவும் இந்த யாகம் நடத்தப்படுகிறது.



# தவக்கால சிந்தனை

## இன்று குருத்தோலை ஞாயிறு

ஊலக வரலாற்றைநாம் புரட்டிப்பார்த்தால் ஒருவனுக்கு எதிரி என்பவன் வெளியில் இருந்துவருவதை விடஉள்ளுக்குள் இருந்து வருவதேஅதிகம். ஜுலியஸ் சீசராக இருந்தாலும் வீரபாண்டிய கட்டப்பொம்மனாக இருநதாலும் அவர்களின் எதிரிகள் உடன் இருந்தவர்களே. அதை இயேசுவின் வாழ்க்கையிலும் பார்க்கின்றோம்

இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் குருத்து ஞாயிறைக் கொண்டாடுகின்றோம். குருத்து ஞாயிறு என்பது என்ன? யூதமக்கள் கிறிஸ்து எருசலேம் வருகின்றார் என்றுகேள்விப்பட்டதும் அவரை வரவேற்க தயாராகின்றார்கள். சாதாரண மக்கள் உரோமைஅதிகாரத்தில் இருந்து விடுதலை கிடைக்குமா என்று காத்திருக்கின்றனர்.

மேசியா வருவார் அதிகாரத்தோடு வருவார் எங்களை விடுவிப்பார் என்று காத்திருக்கின்றார்கள். மெசியாவும் வந்தார் ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது போல வரவில்லை. அவர்கள் எதிர்பார்ப்பு என்ன? எங்கள் மெசியா எங்களைமீட்க அதிகாரத்தோடு வருவார் மன்னராக வருவார் படைபலத்தோடுவருவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இவரோ சாதாரண மனிதனாக அவரையே பாதுகாத்துக் கொள்ள முடியாதவரைப்போல வந்தார். இது அந்தமக்களுக்கு அதிர்ச்சி கொடுப்பதாக அமைந்தது.

இயேசு எருசலேமுக்கு வருகிறார் என்றவுடன் அவர்கள் நினைத்தார்கள் இயேசு உரோமை அரசை விரட்ட வருகின்றார் என்று நினைத்து அவரை வரவேற்க முன்வருகின்றார்கள் யோவான் 12:13: கையில் குருத்தோலைகளோடு அவரை எதிர்கொண்டு போய், ஓசான்னா! ஆண்டவர்பெயரால் வருகிறவர்வாழி! இஸ்ராயேலின் அரசர்வாழி!"என்று ஆர்ப்பரித்து வரவேற்றனர். இன்று நாம் எதாவது நிகழ்ச்க்கு பெரிய தலைவர்களை வரவேற்க கொடிகளை கட்டி தோரணங்கள் கட்டி அவர்களை வரவேற்பது போல அன்று அவர்கள் இயேசுவை அரசராக வரவேற்க ஒலிவ் இலைகளை பறித்து தங்கள் கைகளில் வைத்து அவரை வரவேற்றார்கள். ஒலிவ் இலை என்பது சமாதானத்தின் அடையாளம்.

மக்கள் அவரை புரட்சியாளராக வரவேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தாலும் அவரை சமாதானத்தின் அடையாளமாகவே அவர்கள் ஒலிவ இலைகளை கையிலேந்தி வருகின்றார்கள். பெரிய தலைவர்களை அழைக்கும்போது இரத்தின கம்பளம் விரித்து அழைத்து வருவார்கள். திருவிழா சமயங்களில் குருவானவர்களை இதுபோல் தான் அழைத்துவருவார்கள். அது அவர்களுக்கு கொடுக்கின்ற மரியாதை.

இவ்வாறு செய்ததற்காக இயேசு ஒன்றும் மயங்கிப்போய்விடவில்லை. காரணம் அவருக்குத் தெரியும் இந்தமக்களில் ஒருத்தர் கூட இன்னும் நான்குநாட்களில் என்னோடு இருக்க மாட்டார்கள். என்னைவிட்டு ஓடிப்போய் விடுவார்கள். சாதாரண மக்கள் மட்டும் அல்ல அவரிடம் பல உதவிகளை, பல புதுமைகளை பெற்றவர்களும் அவரை விட்டுப்போய் விடுவார்கள் என்றும் அவர் நன்கு அறிந்திருந்தார்.

சாதரண மக்கள் மக்கள் அல்ல, அவருடைய சீடர்கள் அவரை விட்டு விலகிப்போனார்கள்.மாற்கு14:31:இராயப்பரோ "உம்மோடு இறக்கவேண்டியிருந்தாலும் உம்மை மறுதலியேன்" என்றுவற்புறுத்திச் சொன்னார். அப்படியேஅனைவரும் சொன்னார்கள்". ஆனால் அப்படிசொன்னவர்கள் யாரும் அவருடன் இருக்கமாட்டார்கள் என்று அவருக்குத்தெரியும். ஆவரைக் காட்டிக்கொடுத்தவனோஅவருடன் இருந்த அவருடைய சீடர்களில் ஒருவன் தான்.

அருட்பணி **ஜோசப் கென்னடி...**



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னாள் தலைவரும் மறைந்த முன்னாள் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் ஒரு வருட பூர்த்தியினை முன்னிட்டு ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடந்த இரத்ததான நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

படம் ஹற்றன் விசேட நிருபர்

## ஆறு வயதில் உலக சாதனை படைத்த...

கூறியமைக்காக சிறுவர்களுக்கான உலக சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது. ஈழத்தை பூர்வீகமாக கொண்ட விஸ்ணு ஆனந்தராஜா எனும் சிறுவன் சுவிஸ் நாட்டின் நொசத்தல் மாநிலத்தில் வசித்து வருகின்றார்.

## ஜனவரி முதல் நேற்று வரை...

இதேவேள, கிளிநொச்சி - பளைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். காரொன்றும், லொறியொன்றும் மோதுண்டு இந்த விபத்து நேர்ந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## நல்லூர் ஆலயத்தில்...

யோகர் சுவாமியின் குருபூசை தினத்தன்று இந்த நாசகார செயலை செய்துள்ளனர்.

அதன்படி நல்லூரானின் தேரடியிலும், நல்லூரான் வாசலில் பக்தர்கள் அமரும் இடங்களிலும் இவ்வாறு கழிவு எண்ணெய்யை விசமிகள் ஊற்றியுள்ளனர். இந்துக்கள் மிகவும் புனிதமாக போற்றும் நல்லூரான் ஆலயத்தில் விசமிகளின் இந்த செயலுக்கு சமூகஆர்வலர்கள் பலரும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

## பளையில் கோர...

சம்பவத்தில் 09 மற்றும் 12 வயது சிறுவர்கள் இருவரே ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர். இவர்கள் பளை தர்மங்கேணி பகுதியை சேர்ந்த சற்குணம் சாருஜன், சற்குணம் சாரங்கன் என்ற சிறுவர்களாவர். சம்பவத்தில் படுகாயம் அடைந்த சிறுவர்களின் தந்தை சாரங்கன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

## ஜெனீவாவின் அழுத்தங்களுக்கு...

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முந்தைய அரசாங்கத்தின் முட்டாள்தனமான நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்பு வீழ்ச்சிக்கண்டிருந்தது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலும் அதன் விளைவாகும். இராணுவ வீரர்கள் ஆதாரமற்ற குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஜெனீவா தீர்மானத்திற்கு இணை அனுசரணை அளிக்கும் அளவுக்கு நாட்டின் இறையாண்மை சிதைந்தது. கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரியத்தை அழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜெனீவா அழுத்தங்களுக்கு அச்சமின்றி நாங்கள் முகங்கொடுப்போம். அதற்கு அடிபணியாமல் இருக்க முடியும். நாங்கள் ஒரு சுதந்திர நாடு. இந்தியப் பெருங்கடலில் நடக்கு அதிகாரப் போட்டிகளுக்கு நாங்கள் இரையாக மாட்டோம்.

எம்.சி.சி ஒப்பந்தம் மற்றும் கிழக்கு முனையம் போன்ற ஒப்பந்தங்களுக்கு இணங்கி நாட்டை பெரும் நெருக்கடிக்குள் மூழ்கடித்தனர். அவற்றுக்கு இன்று நாம் தீர்வுகளை வழங்கி வருகிறோம். அனைத்து பிரச்சினைகளையும் உருவாக்கி ஆதரித்தவர்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை செய்கிறார்கள். கடந்த அரசாங்கத்தில் பலமானவர்களாக இருந்த ஒருவர் தற்போது அந்த ஆட்சியில் இல்லாதிருந்தவரை போன்றே நடந்துகொள்கிறார்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி பேசுவது எனது கொள்கை அல்ல என்றாலும், உண்மையை தெளிவுபடுத்துவதற்கு பதிலளிக்க வேண்டியுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சக்திகளும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் மாஃபியா குழுக்களும் பொய்களை உருவாக்கி மக்களை தவறாக வழிநடத்துகின்றனர். தவறான கருத்துக்களில் ஏமாற்றமடைந்தால் கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்ட சேதம் மீண்டும் நிகழலாம். அவ்வாறு சேதம் ஏற்பட்டால் அதனை சரிசெய்வது எளிதல்ல என்றார்.

## குருத்தோலை ஞாயிறு...

அன்பை வெளிப்படுத்தும் வகையில் சீடர்களின் பாதங்களைக் கழுவும் புனித வியாழன் பாதம் கழுவும் சடங்கு, கிறிஸ்து நாதர் சிலுவையில் அறையப்படும் பெரிய வெள்ளிக்கிழமை, ஒளியேற்றும் தினமான அல்லேலுயா சனி, அதனைத்தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு ஈஸ்டர் பண்டிகை ஆகியவற்றுடன் தவக்காலம் நிறைவு பெறுகின்றது.

இவ்வாரத்தில் கிறிஸ்தவ மக்கள் ஒருசந்தி, சுத்த போசனம் மற்றும் செப, தப, ஒறுத்தல்களுடன் வழிபாட்டு நிகழ்வுகளின் பக்தியுடன் பங்கேற்பர்.

கடந்த இரண்டு வருடங்கள் தவக்காலத்தை முறையாக அனுஷ்டிக்க முடியாத நிலையில் கிறிஸ்தவர்கள் இந்த வருடம் அவற்றை உரிய முறையில் அனுசரிக்கவும் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடவும் திருச்சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ)

## CCTV மூலம் கைதாகி...

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது

நான்கு மாணவர்களும் மாணவர் தலைவர்களாக இருப்பதால் நான்கு பேரையும் கடுமையான எச்சரிப்புடன் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று நீதிமன்றத்துக்கு அவர்களது பெற்றோரும் வருகை தந்திருந்ததாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

விசாரணைகளின் போது இந்த வீடு பாராளுமன்ற உறுப்பினரின் வீடுதான் என்பது தமக்கு தெரியாதென்றும் தெரிந்திருப்பின் வந்திருக்க மாட்டோம் என்றும் பொலிஸாரிடம் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 03 பேர் கைது செய்யப்படவுள்ளதாகவும் மேலும் 03 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்படவுள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தற்போது கைப்பற்றப்பட்டுள்ள 03 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அங்கிருந்த மோட்டார் சைக்கிள் மீது நடத்திய தாக்குதல் காரணமாக சுமார் 10,000 ரூபா முதல் 15,000 ரூபா வரையிலான நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த யாழ். பொலிஸார் சீ.சீ.ரி.வி தரவுகளை பயன்படுத்தி நேற்று அதிகாலை சுமார் 2.30 மணியளவில் 04 பேரையும் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு வருகை தந்துள்ள 122 ...

தந்துள்ளதாக விமான நிலைய கடமை நேர பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை நாட்டில் கடந்த 24 மணித்தியாலத்தில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக ஆயிரத்து 996 பேர் பயணித்துள்ளனர்.

இதன்படி இக் காலப்பகுதியில் 21 விசேட விமானங்கள் மூலம் ஆயிரத்து 254 பேர் நாடு திரும்பியுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், நாடு திரும்பிய அனைவரும் முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் சுற்றுலா விடுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இக் காலப்பகுதியில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் 742 பேர் வெளிநாடுகளுக்கு பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபைத் தேர்தல்...

மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கமைய, முன்னர் போன்று பழைய விருப்பு வாக்கு முறைமைக்கமைய தேர்தலை நடத்துவதா? அல்லது புதிய தொகுதி முறைமைக்கமைய தேர்தலை நடத்துவதா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோனினால் இதற்கான 02 மாற்று யோசனைகள் அடங்கிய அமைச்சரவை பத்திரம் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சர்கள் சிலர் அறிவித்திருந்தனர்.

எனவே, அமைச்சரவை பத்திரத்தை கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை ஒரு வாரம் பிற்போடப்பட்டது.

இந்த நிலையில், அந்த அமைச்சரவை பத்திரம் நாளை கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய, தேர்தலை பழைய முறையில் நடத்துவதானால், பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள, மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான புதிய சட்டத்தை நீக்கி பழைய சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

விகிதாசார முறைமை மற்றும் கலப்பு தொகுதி முறையில் தேர்தலை நடத்துவதானால், தொகுதிவாரியாக 70 சதவீதமும், விகிதாசார முறைமையின் கீழ் 30 சதவீதமும் உறுப்பினர்களை நியமிப்பதற்கான புதிய சட்டமூலத்தை உருவாக்குவதற்கும் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இரண்டாவது யோசனையை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெறும் கட்சிக்கு மாகாண ரீதியாக வழங்கப்படும் 02 மேலதிக ஆசனங்களுக்காக, மாவட்ட ரீதியாக இரண்டு மேலதிக உறுப்பினர்களை நியமிப்பதற்கும் அமைச்சரவை பத்திரத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இரண்டு மாவட்டங்களை கொண்ட மாகாணங்களுக்கு, நான்கு ஆசனங்களும், மூன்று மாவட்டங்களை கொண்ட மாகாணங்களுக்கு 06 ஆசனங்களும் கிடைக்கும் வகையில் தேர்தல் சட்டம் திருத்தத்திற்கு உட்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், நாளை இடம்பெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

## ஏப்ரல் 01 முதல் அரிசியின்...

நிறுவன ஆணையாளர், பிரதான விற்பனை நிலையங்களின் பிரதானிகள் ஆகியோருடன் விவசாயத்துறை அமைச்சில் நடை பெற்ற பேச்சு வார்த்தையின் பின்னரே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசியின் நிர்ணய விலையை பேணுவது சவால்மிக்கதாக உள்ளது. அரிசியின் விற்பனை விலை தொடர்பில் அரசாங்கம் வர்த்தமானி வெளியிட்டாலும் அவற்றை முறையாக பின்பற்ற முடியாத தன்மை காணப்படுகிறது.

கடந்த காலங்களில் அரிசி உற்பத்தியாளர்கள் முறையற்ற வகையில் செயற்பட்டதன் காரணமாக அரிசி விலையில் மாறுப்பட்ட தன்மை ஏற்பட்டது.

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலைக் குறைப்பினூடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன் முதற்கட்டமாக அரிசி விலையின் நிர்ணய தன்மையை உறுதியாக பேண தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விலைக் குறைப்பு கார்கில் புட் சிட்டி உட்பட பிரதான விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் உள்ள மொத்த விற்பனை கூட்டுறவு நிலையங்கள்,447 சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் பிரதான விற்பனை நிலையங்கள் ஆகியவற்றுக்கு 3 மாத காலத்துக்கு தேவையான அரிசி நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக விநியோகிக்கப்படும்.

நாட்டில் அரிசி விநியோகத்தில் எவ்வித தட்டுப்பாடும் கிடையாது. 6 மாத காலத்துக்கு தேவையான அரிசி போதுமான அளவிற்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

## இலங்கையின் எரிபொருள் தேவையில்...

தாய்வானின் எவர் கிறீன் மெறைன் நிறுவனத்திற்கு சொந்தமான, எவர் கிவன் என்ற உலகின் மிகப்பெரிய எரிபொருள் பரிமாற்றும் கொள்கலன் கப்பலான இரண்டு இலட்சத்து 24 ஆயிரம் தொன் எரிபொருளை கொண்டு சென்றுக்கொண்டிருந்த வேவையில் சுயெஸ் கால்வாயில் திடீரென ஏற்பட்ட மணல் காற்றால் கப்பலானது திசைமாறி தரைதட்டியுள்ளது.

400 மீற்றர் நீளமும் 59 மீற்றர் அகலமும் உடைய குறித்த கப்பல் கடந்த செவ்வாய்க்கிழமை சீனாவிலிருந்து நெதர்லாந்து நோக்கி பயணித்துள்ளது. கப்பலில் 20ஆயிரம் கொள்கலன்களில் எரிபொருள் கொண்டுவரப்பட்டுள்ளது. பல நாடுகளுக்கு இந்த எரிபொருள் பகிர்ந்தளிக்கப்படவிருந்த நிலையிலேயே விபத்து நேர்ந்துள்ளது. கப்பலை தரையிலிருந்து கடலுக்கு இழுக்கும் செற்பாட்டை நெதர்லாந்தின் விசேட படையினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்நடவடிக்கைக்கு பல நாடுகளும் உதவிகளை அளித்து வருகின்றன.

சுயெஸ் கால்வாயில் கப்பல் தரைதட்டியுள்ளதால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலையும் உயர்வடைந்துள்ளது. ப்ரெட் சந்தையில் 0.7 சதவீதத்தால் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. கடந்த ஐந்து தினங்களாக இந்தக் கப்பலை அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இன்னமும் அந்தப் பணி வெற்றியடையவில்லை.

இதன் காரணமாக சுயெஸ் கால்வாயின் ஊடாக பயணிக்கவிருந்த 200 இற்கும் அதிகமாக கப்பல்கள் கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளன.

கப்பலை விரைவாக அகற்ற முடியாது போனால் உலக பொருளாதாரத்திற்கும், தாக்கம் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக சர்வதேச பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர். கப்பல் தரைதட்டியுள்ளதால் இலங்கையில் எரிபொருள் விலையில் மாற்றங்கள் அல்லது எரிபொருள் தட்டுப்பாடு ஏதும் ஏற்படாதென அமைச்சர் உதய கம்மன்பில கூறியுள்ளார். இலங்கையில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குத் தேவையான எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

## சாரா உயிருடன் உள்ளாரா? அல்லது ...

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சாய்ந்தமருது பிரதேசத்தில் பயங்கரவாதி சஹ்ரான் ஹாசீமின் குடும்பத்தினர் உயிரிழந்த இடத்திலிருந்து மீட்கப்பட்டு புதைக்கப்பட்ட உடல் பகுதிகளை மீண்டும் தோண்டி எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதி சஹ்ரான், ஹஸ்துன் தொடர்பில் ஆரம்பத்தில் நடத்தப்பட்ட மரபணு பரிசோதனைக்காக மாதிரிகள் பொலிஸ் அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதை அடுத்தே புதிதாக மரபணு பரிசோதனை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் வழங்கப்பட்ட சாரா ஹஸ்துனின் மரபணு பொருந்தவில்லையென்பதால், புதைக்கப்பட்ட உடல் பகுதிகளை மீண்டும் தோண்டி எடுத்து பரிசோதனை நடத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் இதற்குப் பதிலாக பொலிஸார் ஏற்கனவே இருந்த மாதிரிகளை மரபணு பரிசோதனைக்கு அனுப்பியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக சாய்ந்தமருது தாக்குதலில் கொல்லப்பட்ட 08 பேரின் உடல் பகுதிகளின் மாதிரிகளை மீண்டும் பெற்று பரிசோதனை நடத்த நீதிமன்ற அனுமதியை பெறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

சாரா ஹஸ்துன், தாக்குதலில் இறந்து போனாரா? அல்லது இந்தியாவுக்கு தப்பிச் சென்றாரா? என்பதை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த இந்த மரபணு பரிசோதனை நடத்தப்படவுள்ளது. சாரா காணாமல் போயுள்ளமை குறித்து நாட்டில் பெரும் சர்ச்சை எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசியலமைப்பில் மாகாண...

மேலும் கூறியுள்ளதாவது,

புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்தை பாதுகாத்தல் மற்றும் அதற்கு முன்னுரிமை வழங்குதல் பிரதான விடயமாகும். அடிப்படை மனித உரிமை தொடர்பான அத்தியாயம் மாற வேண்டும் என்பதுடன், சுற்றுச் சூழலை பாதுகாத்தல், மனிதர்களை போன்று விலங்குகளுக்கும் இடம்பெறும் சித்திரவதைகள் அடிப்படை உரிமை மீறலாக கருதப்பட வேண்டும்.

சில விடயங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றில் வழக்கு தொடரும் அதிகாரத்தை மாகாண மேல் நீதிமன்றங்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். புதிய அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கு அதிகார பரவலாக்கல் இடம்பெற வேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே சு.க உள்ளது.

மாவட்ட சபைகள் அல்லது பழைய செனட் சபை முறைக்கு சமாந்திரமாக இருந்த இரண்டாம் சபை முறைகள் உருவாக்கப்பட வேண்டும். குறித்த சபையில் உறுப்பினர்களையும் படித்தவர்களையும் கொண்டு சபை உருவாக்கப்பட வேண்டும்.

விசேடமாக புதிய அரசியலமைப்பு திருத்தத்தில் விருப்பு வாக்கு முறை நீக்கப்பட வேண்டும். விருப்பு வாக்கு முறை நீக்கப்படும் விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கடந்த முறையும் ஏமாற்றப்பட்டது. 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக விருப்பு வாக்கு முறையை நீக்கி தொகுதிக்கு பொறுப்புக்கூறும் உறுப்பினர் ஒருவரை நியமிக்கும் முறையொன்றை பெற்றுக்கொடுக்கும் வாக்குறுதியின் படியே 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு நாம் ஆதரவளித்திருந்தோம் என்றார்.

அங்கம் – 06

# நாட்டுக்கு மீள்திரும்புதல்

நேற்றைய கதையின் தொடர்ச்சி

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா? தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாதுகாப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக்கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 6 ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

## மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்!

பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு
IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.



இதற்கிடையில் கொரோனா வைரஸ் துரிதமாக பரவுவதை ராஜா தெரிந்து கொள்கிறார்.



இடைத்தங்கள் நாட்டில் குடிவரவு சட்டங்களை மீறி ஒழிந்து தங்கியிருப்பதால் ராஜா உதவிகளை பெற்றுக் கொள்ளவோ




வைத்தியசாலையை அணுகி மருத்துவ உதவியை நாடவோ தயங்கினார்.



இவை போன்ற காரணங்களால் இலங்கைக்கு திரும்பி விட வேண்டும் என ராஜா வலுவாக உணர்ந்தார்.



அதே வேளை கொரோனா வைரசின் பரவலை கட்டுப்படுத்துவதற்காக வேண்டி புலம்பெயர்ந்தோர் இலங்கையினுள் படிப்படியாகவே பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.



இதன் காரணமாக மேலதிக காலங்கள் இடைத்தங்கள் நாட்டில் ராஜா தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

## மீள்திரும்புவதை திட்டமிடுவதற்கு ராஜாவுக்கு வழங்கக் கூடிய சிறந்த அறிவுரை என்ன?



விடை 1:

ஒழிந்திருக்கும் இடத்திலேயே தொடர்ந்தும் ஒழிந்திருக்க வேண்டும்.



விடை 2:

தற்போது தங்கியிருக்கும் நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்தை உடனே தொடர்பு கொள்ள வேண்டும்.

இக் கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுத்தழுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S6 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

S6 விடை எண் (கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்

உதாரணம்:

S6 3 ,4 22.03.2021 _ தினத்தந்தி
ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்

விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)
9ஆம் மாடி, IBSL கட்டிடம்,
80A , எல்விட்டிகல வீதி, பொறல்லை, கொழும்பு 8.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் பங்குனி மாதம் 15ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 14

# வீதி விபத்துகள்: மக்கள் சிந்தனையில் மாற்றம் அவசியம்

கடந்த சனிக்கிழமை பசறை 13ம் கட்டைப் பகுதியில் பயணித்த ஒரு தனியார் பேருந்து இருநூறு அடிப் பள்ளத்தில் உருண்டதில் 14பேர் மரணமடைந்ததோடு 33பேர் காயமடைந்த செய்தி நிச்சயம் காற்றோடு கலந்து விடுகின்ற மற்றொரு செய்தி அல்ல. ஏனெனில் இரண்டு கோடிக்கும் சற்று அதிகமான சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் வருடா வருடம் வீதி விபத்துகளால் மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் உடல் அவயங்களை இழப்போரின் தொகை மென்மேலும் அதிகரிப்பதும் நாம் சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது. இந்த வீதி விபத்துகள் தண்ணீரில் மிதக்கும் ஒரு பாரிய பனிப்பாறையின் மேல் பகுதியைப் போன்றது என்றுதான் கொள்ள வேண்டும்.

ஏனெனில் கெட்டுப்போன ஒரு சமூகத்தைத்தான் இவ் விபத்துகள் எமக்கு உணர்த்துகின்றன. நாட்டில் திட்டமிடலின்றி நிறைவேற்றப்படும் திட்டங்கள், தகுதியற்றவர்களுக்கு பொருத்தமற்ற பதவிகளை வழங்குதல், ஊழல் லஞ்சலாவணியம் மலிந்து போதல், எல்லாத் துறைகளிலும் அரசியல் புகுந்து விளையாடுவது பணமும் செல்வாக்கும் இருந்தால் எவர் வேண்டுமானாலும் எந்தப் பதவியை வேண்டுமானாலும் அடைந்துவிடலாம் என்ற தைரியம், முகஸ்துதிக்கு சலாம் என்று சமூகச் சீர்கேடுகளை பட்டியலிட்டுச் செல்ல முடியும்.

ஒருவருக்கு வாகன சாரதி அனுமதி பத்திரம் வேண்டுமானால் அதை சட்ட திட்டங்களின் படியும் பெறலாம்; அவற்றைப் பின்பற்றாமலும் பெறலாம் என்பது பகிரங்க இரகசியம். சாலை விதிகளை மீறினால், விபத்தொன்றில் மாட்டிக் கொண்டால் எப்படி அவற்றில் இருந்து சேதமில்லாமல் மீண்டுவரலாம் என்ற சூத்திரம் அறியாத வாகன சாரதிகளே இல்லை எனலாம். சட்ட திட்டங்களை அமுல் செய்வோர் யாரானாலும் அவர்களை எப்படிச் சமாளித்து நமது வழியில் தாண்டிச் செல்லலாம் என்பதில் நாம் வல்லவர்களாக உள்ளோம். வீதிச் சட்ட திட்டங்கள் என்றில்லை; எல்லா சட்ட திட்டங்களையும் தாண்டிச் செல்லும் வித்தைகளை மக்கள் கற்று வைத்திருக்கிறார்கள். ஒரு விஷயம் இப்படித்தான் நடக்க வேண்டும் என்பதில் கண்டிப்பு காட்டப்படுவது போய், ஒரு விஷயம் எப்படி வேண்டுமானாலும் நடத்தப்படலாம்; காரியம் ஆனால் போதும் என்று நினைக்கும் காலத்தில் நாம் இருக்கிறோம். இந்த உக்கிப்போன, இற்றுப்போன சமூகத்தின் வெளிப்பாடுதான் இந்த வீதி விபத்துகள் என்றால் அது மிகையல்ல.

முன்னர் இ.பொ.ச பஸ்களில் பின்புறமாக ஏறி முன்புறத்தால் இறங்க வேண்டும். இது கட்டாயம். மக்கள் அதைப் பின்பற்றினர். மிதிபலகை சவாரி முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. அதை மீறுகிறார்கள் என்பதால் முன் வாசலருகே ஒரு கதவு பொருத்தப்பட்டிருந்தது. சாரதி அதைத் திறந்து விட்டால் தான் இறங்க முடியும். இந் நாட்டில் எல்லா சட்டங்களும், ஒழுக்கங்களும் ஏற்கனவே கடைபிடிக்கப்பட்டவை தான். லஞ்சமும் வாங்கப்பட்டதுதான். ஆனால் மிகமிக ரகசியமாக லஞ்சம், மோசடி என்பனவற்றில் ஈடுபட்டு மாட்டிக் கொண்டவர்களை சமூகம் இழிவாகப் பார்த்தது.

இன்று ஒருவர் லஞ்ச லாவண்யம், மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்றால் அது இரகசிய செய்தி அல்ல. அப்படியும் அவருக்கு மிகுந்த மரியாதை தருகிறோம். இத்தகையோரும் அரசியல் பலம் படைத்தோரும் முதன் முதலாக தமது தேவைகளுக்காக குறுக்கில் பாய்ந்து முன்னேற தலைப்பட்ட பின்னர் படிப்படியாக இந்த குறுக்கு வழியை சமூகத்தின் ஏனையோரும் பின்பற்றத் தொடங்கினர். 77 இன் பின்னர், திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்த பின்னர் இப்போக்கு அதிகரித்துச் சென்றது எனலாம். குறுக்கு வழியில், கொஞ்சம் கூட தகுதி இல்லாமல் என்ன வேண்டுமானாலும் பெறலாம் என்ற நிலை ஏற்பட்டது. போலித் தனங்கள் மிகுந்து விட்டன. தகுதி உடையவன் ஒதுக்கி வைக்கப்படுகிறான், செல்வமும் அதிகார பலமும் இருந்தால் மட்டுமல்ல, அத்தகையோர் நிழலில் இருந்தாலே சாதிக்கலாம் என்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

நாடு சுதந்திரம் பெற்று எழுபது ஆண்டுகள் கழிந்த பின்னரும் ஏன் பொருளாதாரத்துறையில் இலங்கை எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை எட்டவில்லை என்பதற்கான காரணம், அரசியல்வாதிகளும் வசதி படைத்தவர்களும் சட்டங்களை மதிக்கத் தவறியதுதான். இந்த ஒட்டுமொத்த சீர்கேடுகளின் வெளிப்பாடாகத்தான் அதிகரித்துச் செல்லும் வாகன விபத்துகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

வாகன ஓட்டுதலில் போதிய அனுபவமற்றவரும் அவர் விரும்பினால் சாரதி அனுமதியைப் பெறலாம். சாலைவிதிகளை மீறி போக்குவரத்து பொலீசாரிடம் சிக்கிக் கொண்டால் 'பேசி' சமாளித்துக் கொள்ளலாம். அவர் ஒரு அரசியல் செல்வாக்கு கொண்டவராக இருந்து பொலிஸ்காரரும் விட்டுக் கொடுப்பு செய்யாவிட்டால் அப்பொலிஸ்காரர் தண்ணீரில்லா காட்டுக்கு இடமாற்றம் பெறக்கூடும். அந்த இடத்திலேயே தாக்கப்படவும் கூடும். இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தும் உள்ளன.

உலக நாடுகளில் சாலை விதிகள் கடுமையானவை. மீறினால் கடுமையான தண்டனை உண்டு. சாரதி பத்திரமே இரத்துச் செய்யப்படலாம். மது வருந்தி விட்டு வாகனம் செலுத்தினால் கடுந்தண்டனை உண்டு. எனவே சாலை விதிகள், போக்குவரத்து சட்டங்கள் பற்றிப் பேசுவதற்கு முன்னர் இருக்கும் சட்டங்களை கடுமையாக அமுல் செய்வதற்கான அனுமதியை, சுதந்திரத்தை அதிகாரிகளும் அரசியல்வாதிகள் பொலிசாருக்கு தருவார்களா? என்ற கேள்விக்கு விடைகாண வேண்டும். கடந்த ஞாயிறு நாடளாவிய ரீதியாக பொலிஸார் வாகனங்கள் மீது நடத்திய சோதனையில் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் சுற்றி வளைக்கப்பட்டனர். மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரையிலான காலப்பகுதியிலேயே இவ்வளவுபேர் கைதாகினர். இவர்களில் மதுபோதையில் வாகனம் செலுத்தியோர் எண்ணிக்கை 454 சட்டவிரோத மது உற்பத்தி தொடர்பில் 523 பேர் கைதாகினர்.

இலங்கையில் வருடமொன்றுக்கு இரண்டாயிரம் பேர்வரை வீதி விபத்துகளில் பலியாகின்றனர். 2018இல் 3,151 பேரும் 2019இல், 2, 839 பேரும் உயிரிழந்ததாக அறிய முடிகிறது. கடந்த இரண்டரை மாதங்களில் பலர் மரணித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் 16 வயது முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்கள். அதாவது நாட்டுக்கு அவசியமான இளைஞர்கள்.

பசறை விபத்தை எடுத்துக் கொண்டாலும் ஆறுமாதத்துக்கு முன்னர் உருண்டு வந்த ஒரு கற்பாறை அகற்றப்படாமல் அப்படியே பாதையின் ஒரு பகுதியை அடைத்துக் கொண்டு கிடந்திருக்கிறது. அதை அப்போதே அகற்றியிருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் விபத்து நடைபெற்ற பின்னரே அதிகாரிகளின் கண் திறந்து அப்பாறை அகற்றப்பட்டிருக்கிறது. நமது மனப்பான்மை எப்படியோ அப்படித்தான் வாழ்க்கை. வீதி விபத்து அதிகரிப்புக்கு எத்தனையோ காரணங்கள் முன்வைக்கப்படலாம். ஆனால் நாம் தேட வேண்டியது அடிப்படைக் காரணங்களை. நமது பொது மனப்பான்மையில் பாரிய மாற்றம் அவசியமாகத் தேவைப்படுகிறது.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# மாகாணசபை தேர்தல் மீது அரசியல் கட்சிகள் இலக்கு!



**ஒரு வருடத்துக்கு மேலாக இலங்கை உள்ளிட்ட உலக நாடுகளைப் பல்வேறு அச்சுறுத்தலுக்கும், சவால்களுக்கும் உட்படுத்திய கொவிட்-19 உலகத் தொற்று நோயின் தாக்கம் ஓரளவு குறையத் தொடங்கியிருக்கும் இன்றைய நிலையில், நாட்டின் இயல்புநிலை படிப்படியாக வழமைக்குத் திரும்பி வருகிறது.**

பல மாதங்களாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் நாளை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளமை இதற்கான ஒரு அறிகுறியாக அமைகிறது. கொவிட்19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தடுப்பூசியை ஏற்றத் தொடங்கியதிலிருந்து தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சி கண்டிருப்பதால், மக்கள் மத்தியில் ஒரு விதமான நம்பிக்கை இப்போது ஏற்பட்டுள்ளது.

நாடு இயல்பு நிலைமைக்குத் திரும்புவது அரசியலிலும் ஒரு உத்வேகத்தைக் கொடுத்துள்ளது என்றே கூற வேண்டும். சுகாதார ரீதியில் சாதகமான சூழ்நிலை தோன்றியிருப்பதால், மாகாண சபைத் தேர்தலை நோக்கி அரசாங்கம் செல்வதாகத் தெரிகிறது. இவ்வருட இறுதிக்குள் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியிருப்பதுடன், அத்தேர்தல்களை நடத்துவது தொடர்பில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி தலைமையில் ஆராயப்பட்டும் உள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு, சுகாதாரத் தரப்பினர் உள்ளிட்ட தரப்பினர் பலரும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.


அரசியலமைப்பின் 13வது திருத்தத்துக்கு அமைய மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர் எட்டு மாகாண சபைகள் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டிருந்தன. வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இணைந்து காணப்பட்டிருந்த போதும், பின்னர் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய இரு வேறு மாகாண சபைகளாக அது பிரிக்கப்பட்டது.

இந்த நிலையில், மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் முடிவடைந்து ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு மேலாகியும் இன்னமும் அவற்றுக்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை. பல மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முடிவடைந்திருந்த போதும், அவற்றுக்கான தேர்தல்களை நடத்த அன்றைய ஆட்சியாளர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

இவ்வாறான நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து மீண்டும் மாகாணசபைத் தேர்தல்கள் பற்றிய பேச்சுக்கள் எழத் தொடங்கின. புதிய அரசாங்கம் உடனடியாக மாகாணசபைத் தேர்தலுக்குச் செல்லும் என்ற எதிர்பார்ப்புகளும் தோன்றியிருந்தன. எனினும், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஆரம்பத்தில் மாகாண சபை முறைமைக்கான தேவை குறித்த சந்தேகங்கள் தென்னிலங்கை அரசியல் தரப்பிலும், பெரும்பான்மை கடும்போக்காளர்கள் தரப்பிலும் இருந்து எழுப்பப்பட்டிருந்தன.

குறிப்பாக மாகாணசபைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சர், இம்முறைமை வீணான செலவு என்றும், மாகாண சபை முறைமையை ஒழிப்பதற்கான யோசனையொன்றை முன்வைக்கப் போவதாகவும் கூறியிருந்தார். அப்போதைய இராஜாங்க அமைச்சரும், இன்றைய அமைச்சருமான அவரது கருத்துத் தொடர்பில் இந்தியா தனது அக்கறையை வெளிக்காட்டியிருந்த நிலையில், குறித்த இராஜாங்க அமைச்சரின் விடயதானம் மாற்றப்பட்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

## ஆளும் தரப்பு, எதிரணி அரசியல்வாதிகள் கிராமங்களை நோக்கி படையெடுப்பு




இவ்வாறான பின்புலத்தில் கொவிட் 19 தொற்றுநோய் சூழலைக் கருத்தில் கொண்டு மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தும் திட்டத்திலிருந்து அரசாங்கம் பின்வாங்கியிருந்தது. கொவிட் தொற்றினால் நாட்டை முடக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் இன்றைய நிலையில், மீண்டும் மாகாணசபைத் தேர்தலுக்கான பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். பௌதிக ரீதியில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டாலும், சட்டரீதியான சிக்கலொன்று அத்தேர்தல் விடயத்தில் நிவர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது. பாராளுமன்றத்தின் ஊடாக இச்சிக்கல் தீர்க்கப்பட்டாலே மாகாண சபைத் தேர்தலை திட்டமிட்டவாறு முன்னெடுக்க முடியும்.

இலங்கையின் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்தாடல்கள் நீண்ட காலமாக இடம்பெற்று வந்த நிலையில், கடந்த நல்லாட்சி அரசாங்கம் மாகாணசபைத் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வந்தது. தற்பொழுது காணப்படும் விகிதாசார பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக வட்டாரம் மற்றும் விகிதாசாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய கலப்பு முறையான தேர்தல் முறையொன்றை கடந்த அரசாங்கம் கொண்டு வந்திருந்தது.

இது தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற அப்போதிருந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத காரணத்தால், சிறுபான்மைக் கட்சிகள் குறிப்பாக தமிழ், முஸ்லிம் கட்சிகள் முன்வைத்த நிபந்தனையொன்றுக்கு இணங்க குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றியிருந்தது.

அதாவது வட்டாரங்கள் தொடர்பான எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய சபையின் அறிக்கை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலேயே மாகாணசபைத் தேர்தல் குறித்த சட்டமூலம் பூர்த்தியடையும் என்ற நிபந்தனை இதனில் சேர்க்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் புதிய முறையின் கீழ் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதாயின், எல்லை நிர்ணய சபையின் அறிக்கை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள மாகாணசபைகள் தேர்தல் சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டு, பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கான அங்கீகாரத்தைப் பாராளுமன்றம் வழங்க வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்நோக்கப்படுகின்ற சட்டரீதியான சிக்கல் இதுவாகும்.

எனினும், தற்பொழுது ஆட்சியில் உள்ள அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவது என்பது சிக்கலானதொரு காரியமாக அமையப் போவதில்லை. எனவே, எந்த முறையில் தேர்தலை அணுகுவது என்பதை அரசாங்கத்தின் மேலிடம் தீர்மானிக்குமாயின் அதன் கீழ் தேர்தல் நடத்தப்படலாம்.

எந்த முறையில் தேர்தலை எதிர்கொண்டாலும் ஆளும் பொதுஜன பெரமுன கட்சிக்கு பாரிய சவால் இருக்கப் போவதில்லையென அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இருந்த போதும், தற்பொழுது காணப்படும் சுகாதாரச் சூழல் உள்ளிட்ட பின்னணியில் மாகாணசபைத் தேர்தல் குறித்த புதிய சட்டத்தை வாபஸ் பெற்று, மீண்டும் பழைய முறைக்குச் செல்வதற்கான வாய்ப்புகளே அதிகம் தெரிகின்றன. எதுவாக இருந்தாலும், இதுபோன்ற சட்டச் சிக்கல்களை சரி செய்து தேர்தலுக்குச் செல்வதற்கு இன்னமும் ஒரு சில மாதங்கள் நிச்சயமாகத் தேவை.

மறுபக்கத்தில், மாகாணசபைத் தேர்தலை இலக்கு வைத்து அரசியல் கட்சிகள் காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளன. பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஆளும் பொதுஜன பெரமுன போன்றன ஏற்கனவே மாகாணசபைத் தேர்தலுக்குத் தயாராகி விட்டன. இரு பிரதான கட்சிகளும் வாக்குகளை இலக்கு வைத்து கிராமங்களை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கி விட்டன.

கூட்டணி பற்றிய பேச்சுக்கள் இன்னமும் ஆரம்பிக்கப்படாத போதும், தேர்தலை இலக்காகக் கொண்ட சில பேச்சுகளுக்கான முயற்சிகளில் சிறுபான்மைக் கட்சிகள் ஈடுபடத் தொடங்கியிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தமிழ் அரசியல் தரப்பைப் பொறுத்தவரையில், குறிப்பாக தமிழரசுக் கட்சியின் வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் குறித்த பேச்சுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டன. இதற்கிடையில் 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' என்ற கவனயீர்ப்புப் பேரணியை அடிப்படையாகக் கொண்டு தமிழ்க் கட்சிகள் பலவற்றை ஒன்றிணைத்து புதிய கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

அவ்வாறான புதியதொரு கூட்டணி இம்முறை மாகாணசபைத் தேர்தலில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தாதிருந்தாலும், கணிசமான செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்க முடியும். இது தவிரவும் இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை உள்ளிட்ட விடயங்களை முன்னிலையாக வைத்து தமிழ் அரசியல் தரப்புக்கள் வாக்குச் சேகரிப்புக்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதையும்பார்க்கக்கூடியதாகவுள்ளது.

எதுவாக இருந்தாலும் கொவிட் 19 என்ற பாரியதொரு சவாலுக்குப் பின்னர் மாகாண சபைத் தேர்தலை நோக்கிய நகர்வுகள் இடம்பெறுவதால் மக்களின் நிலைப்பாடு எவ்வாறானதாக இருக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

பி.ஹர்ஷன்...

## தேர்தலுக்கான கூட்டணி அமைக்கும் எண்ணத்தில் சிறுபான்மைக் கட்சிகள்

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# ஜெனீவா பிரேரணையின் அடுத்த கட்ட எதிர்பார்ப்பு!

சமார் ஒரு மாத கால பரபரப்பான காத்திருப்புக்குப் பின்னர், இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றத்துடன் ஜெனீவாவில் நடைபெற்று வந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத் தொடர் முடிவுக்கு வந்துள்ளது.

2009ஆம் ஆண்டின் பின்னர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து நிறைவேற்றப் பட்ட மற்றுமொரு தீர்மானமாக இது அமைகிறது.

'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் கடந்த 23ஆம் திகதி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கொவிட்19 சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நடத்தப்பட்ட நிகழ்நிலையிலான இலத்திரனியல் வாக்கெடுப்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமையைக் கொண்டுள்ள 47 நாடுகளில் 22 நாடுகள் குறித்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.

11 நாடுகள் இப்பிரேரணையை எதிர்த்தும், 14 நாடுகள் நடுநிலை வகித்தும் வாக்களித்திருந்தன. பிரேரணைக்கு ஆதரவு திரட்ட இணை நாடுகளுடன் சேர்ந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழ் அமைப்புக்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த அதேநேரம், இலங்கை அரசாங்கம் பிரேரணையைத் தோற்கடிக்கும் வகையில் உலக நாடுகளின் ஆதரவைத் திரட்ட கடைசி நேரம் வரை கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தது.

இருந்த போதும், இலங்கை தொடர்பான பிரேரணைக்கு கூடுதலான வாக்குகள் அளிக்கப்பட்டமையால் அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சுட்டிக் காட்டியுள்ளார். இவ்விவகாரம் குறித்து பாராளுமன்றத்திலும் அவர் விளக்கவுரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

அவர் குறிப்பிடுகையில், 'மனித உரிமைகள் பேரவை ஐ.நா. சாசனத்திற்கு மாறாக செயற்பட முடியாது. மனித உரிமைகள் பேரவையை நிறுவுவதற்கான உண்மையான பிரேரணைக்கு மாறாக அவர்களால் செயற்பட முடியாது. ஐ.நா. சாசனத்தின்படி, அவர்கள் விரும்பிய படி தனிப்பட்ட நாடுகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது' என்று சுட்டிக் காட்டினார்.

யும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும், எங்களுக்கு எதிரான தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நாங்கள் அப்போது வாக்குறுதியளித்தபடி, மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது, அதன் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன' என தினேஷ் குணவர்த்தன அரசாங்கத்தின் நிலைப்பாட்டை திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மறுபக்கத்தில், இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை புலம்பெயர் வாழ் தமிழர் அமைப்புக்கள் மற்றும் ஒரு சில மனித உரிமை அமைப்புக்கள் வரவேற்றுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த அனைத்து நாடுகளுக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் இதற்கு முன்னரும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு அவை எதுவும் நடைமுறைக்கு வராத நிலையில், மற்றுமொரு பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இம்முறை நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பச்லெட்டின் இலங்கை குறித்த சமீபத்திய அறிக்கையை வரவேற்றிருப்பதுடன், 'கடந்த கால விடயங்களைக் கையாழும் போது ஒரு விரிவான அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலயுறுத்துகிறது.

நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாராத நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவது, நீதியை நிலைநாட்டுவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வுகளை வழங்குதல், மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழாமல் தவிர்ப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பது, நல்லிணக்கத்தை மேம்படுத்துவது' என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்குத் தொடரும் நோக்கத்தில் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் நிர்வகிக்கும் ஆதாரங்களின் மைய தரவுத்தளத்தை நிறுவ இந்த தீர்மானம் பச்சைக்கொடி காட்டியுள்ளது.

முன்மொழியப்பட்ட பொறிமுறைக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை எனவும் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

எதுவாக இருந்தாலும், பிரேரணையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. தம் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்திருப்பதுடன், உள்ளூர் பொறிமுறையின் ஊடாக நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் அது உறுதியாக உள்ளது.

அரசு தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பது ஒருபுறமிருக்க, அரசுக்கு ஆதரவு வழங்குவதில் உலகின் பலம் வாய்ந்த சில நாடுகளும் துணையாக இருப்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.





## மாகாணசபை தேர்தலில் அரசியல் பேசுபொருளாக அமையப் போகும் ஜெனீவா விவகாரம்!

ஆரம்பம் தொடக்கம் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் மறுத்து வந்திருந்ததுடன், ஐ.நா சாசனத்தை மீறும் வகையிலும், இலங்கையின் இறைமையை பாதிக்கும் வகையிலும் திட்டமிட்டு பிரேரணை நிறைவேற்றப்பட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ் சாட்டுகிறது.

பிரேரணைக்கு ஆதரவாக இலங்கை அரசாங்கம் உலக நாடுகளின் ஆதரவைக் கோரியிருந்தது. பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ், எரிடேரியா, வெனிசுவெலா, பங்களாதேஷ், பொலீவியா, சோமாலியா, உஸ்பெஸ்கிஸ்தான் மற்றும் கியூபா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தன. இந்நாடுகளில் அநேகமானவை இடதுசாரிக் கொள்கையைக் கொண்டுள்ளவையாகும்.

இவ்வாக்கெடுப்பில் அவதானிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் நடுநிலை வகித்த நாடுகளைப் பற்றியதாகும். குறிப்பாக இலங்கையின் 'பிக் பிரதர்' என வர்ணிக்கப்படும் இந்தியா இரு பக்கமும் இன்றி நடுநிலை வகித்திருந்தது. இந்தியா மாத்திரமன்றி 14 நாடுகள் நடுநிலையாக வாக்களித்திருந்தன.

இந்த நடுநிலை வாக்குகள் தமக்குத்தான் கிடைத்தாக இரு தரப்பும் உரிமை கொண்டாடுகின்றன. ஐ.நா மனித உரிமை பேரவையில் நடைபெற்ற இலங்கை குறித்த வாக்கெடுப்பில் தமக்கு மொத்தமாக 24 வாக்குகள் கிடைத்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

பிரேரணையை ஆதரிக்க முடியாத காரணத்தாலேயே அந்த நாடுகள் நடுநிலை வகித்ததாகவும், எனவே இந்த நாடுகளின் ஆதரவு தமக்கே இருப்பதாகவும் அமைச்சருடைய விளக்கம் அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கிலேயே இவ்வாறான பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும், இது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று எனவும்

'அந்த அடிப்படைக் கொள்கைக்கு மாறாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளில் 22 நாடுகள் மட்டுமே பிரித்தானியா, ஜேர்மனி, கனடா மற்றும் பல நாடுகளால் கொண்டு வரப்பட்ட எமது நாட்டிற்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. இதனால், அவர்கள் பெரும்பான்மையை இழந்துள்ளனர். இது தெற்கு அல்லது காலனித்துவ நாடுகளிடமிருந்து கடுமையாக வெற்றி கொண்ட சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி வடக்கால் தோற்கடிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமாகும்.

குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர், எமது அரசாங்கம் மற்றும் நாட்டை நேசிக்கும் முக்கியமானவர்கள் ஒன்றுகூடி இதை உலகிற்கு உணர்த்தியுள்ளனர். கொவிட் தொற்றுநோயால் இந்த மாநாட்டில் நாங்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மெய்நிகர் மாநாடுகளை நடத்தி, எம்மைப் போன்ற நாடுகளில் செல்வாக்குச் செலுத்திய போதிலும், எம் நாட்டின் இறையாண்மையை

Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Y | ARGENTINA | N | ERITREA | Y | NETHERLANDS |
| Y | ARMENIA | Y | FIJI | N | PAKISTAN |
| Y | AUSTRIA | Y | FRANCE | N | PHILIPPINES |
| Y | BAHAMAS | A | GABON | Y | POLAND |
| A | BAHRAIN | Y | GERMANY | Y | REPUBLIC OF KOREA |
| N | BANGLADESH | A | INDIA | N | RUSSIAN FEDERATION |
| N | BOLIVIA (PLURINATIONAL STATE OF) | A | INDONESIA | A | SENEGAL |
| Y | BRAZIL | Y | ITALY | N | SOMALIA |
| Y | BULGARIA | A | JAPAN | A | SUDAN |
| A | BURKINA FASO | A | LIBYA | A | TOGO |
| A | CAMEROON | Y | MALAWI | Y | UKRAINE |
| N | CHINA | Y | MARSHALL ISLANDS | Y | UNITED KINGDOM OF GREAT BRITAIN AND NORTHERN IRELAND |
| Y | CÔTE D'IVOIRE | A | MAURITANIA | Y | URUGUAY |
| N | CUBA | Y | MEXICO | N | UZBEKISTAN |
| Y | CZECH REPUBLIC | A | NAMIBIA | N | VENEZUELA (BOLIVARIAN REPUBLIC OF) |
| Y | DENMARK | A | NEPAL | | |
| IN FAVOUR 22 | | AGAINST 11 | | ABSTAIN 14 | |



## மனித உரிமைகள் ஆணைக்குழு நகர்வுகள் இலங்கைக்கு பாதிப்புகளை உருவாக்குமா?

மறுபக்கத்தில், இலங்கை அரசாங்கம் சரியான முறையில் விடயங்களைக் கையாளவில்லை என்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. குறிப்பாக யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களுக்கு அப்பால் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் சிறுபான்மையினர் மீது மேற்கொண்டுள்ள அடக்குமுறைகள் குறிப்பாக கொவிட்19 இல் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வது உள்ளிட்ட விடயங்கள் போன்ற மனித உரிமை விடயங்களில் சரியான நிலைப்பாட்டைப் பின்பற்றாமையே இந்த நிலைமைக்குக் காரணம் என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டுக்களை அடுக்கியுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் நாடு மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்ளவிருப்பதால் ஜெனீவா பிரேரணை நிச்சயமாக அரசியல் அரங்கத்தில் பேசப்படும் ஒரு விடயமாக இருக்கப் போகிறது. இது அரசியல் ரீதியான பேசுபொருளுக்கு அப்பால் இனங்களுக்கிடையிலான விரிசலை ஏற்படுத்துவதற்கான ஆயுதமாக மாற்றப்படக் கூடாது என்பதுதான் முக்கியம்.

கடந்த காலங்களில் ஜெனீவா விவகாரம் உள்நாட்டில் ஆட்சி அதிகார மாற்றத்துக்கு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. இது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படக் கூடாது. அதேநேரம், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் தமது அரசியல் நிலைத்திருப்புக்கு இதனை நிச்சயமாகப் பயன்படுத்தப் போகின்றனர். இலங்கை விவகாரம் என்பது சர்வதேச நாடுகளின் பூகோள அரசியலின் ஒரு பகுதி என்பதே உண்மை.

எனினும், தமிழ் மக்கள் மீது சர்வதேச நாடுகள் அதீத அக்கறை கொண்டிருப்பது போலவும், இதனைப் பெற்றுக் கொடுப்பதற்காக தாம் சர்வதேச அரங்கில் போராடியது போலவும் பிம்பங்களைத் தோற்றுவிப்பதற்கு சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிப்பார்கள். இதன் உண்மைத் தன்மையை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளின் வரிசையில் மற்றுமொரு பிரேரணையே இதுவாகும். உண்மையில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் சர்வதேசம் உறுதியாக இருந்திருந்தால் யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களில் ஏன் இதனைச் செய்யவில்லையென்ற கேள்வி உள்ளதல்லவா?

## மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை வாய்ப்பாக வைத்து தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் மக்களிடம் வாக்குகளை வேட்டையாடுவதற்கான அறிகுறிகள்!

# பசறை பஸ் விபத்து படிப்பினை தருமா?



அம்மாவும் அப்பாவும் ஏன் தூங்கிக்கிட்டே இருக்காங்க..? இது ஒரு குழந்தையின் கேள்வி. சாதாரண குழந்தையா அது இல்லை. பசறை பஸ் விபத்தில் தாயையும் தந்தையையும் பறிகொடுத்து விட்டு பதில் தெரிந்து கொள்ள முடியாத பரிதாபத்துக்குரிய குழந்தை.

கடந்த 20ஆம் திகதி காலை பதுளை செங்கலடி வீதியின் பசறை 13ஆவது மைல்கல் அல்லோல கல்லோலப்படுகிறது. 200 அடி பள்ளம். இரக்கமே இல்லாது விதியின் விளையாட்டு. லுணுகலையிலிருந்து பதுளை வீதிக்கூடாக கொழும்பு நோக்கி பயணித்த அந்தத் தனியார் பஸ் உருள்கிறது. புரண்டு உருண்டு தவிடுப்பொடியாகின்றது. மரண ஓலங்கள். கண்மூடி



திறப்பதற்குள் நடந்து முடிகின்றது. 14 உயிர்கள் பலி. பலருக்கு பலத்த காயம். வாழ்வே மாயம் என்னும் தத்துவத்துக்கு தக்க சம்பவம்.

எதிரே வந்த டிப்பர் வாகனத்துக்கு வழிவிட முனைந்த போதுதான் இந்தப் பரிதாபம் நிகழ்ந்தது. விசாரனைகள் முடிந்து சாரதியின் கவனயீனமே இந்த விபத்துக்குக் காரணம் என்று பொலிஸ் தரப்பு அறிவித்து விட்டது. தப்பியோடிய லொறி சாரதியை தேடிப்பித்து சிறையில் அடைத்து விசாரணைவரை கொண்டுபோய் விட்டுள்ளது. இங்கே இன்னுமொரு அவலத்தையும் குறிப்பிடவே வேண்டும். சம்பவம் இடம் பெற்ற பாதை ஒரு இருவழி நெடுஞ்சாலை. இதில் ஒரு வழியோரமாக பாரிய கற்பாறையொன்று உருண்டு வந்து ஓட்டிக் கொண்டிருக்கிறது. ஆறுமாதத்துக்கு முன்பு வந்த பாறை. அதை அகற்ற யாருமே அக்கறை கொள்ளவில்லை. அரச அதிகாரிகளின் அசமந்தம். அட பாறைதான் அப்படியே இருக்கிறது. ஒரு அவதான பலகையாவது வைத்திருக்க வேண்டாமா? ஊகூம் வைக்கவில்லை.

எல்லாம் நடந்து முடிந்த பின்னரே எச்சரிக்கை சமிக்ஞைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. முழுநாட்டையே விநாடிப் பொழுது விறைக்க வைத்த இந்த விபத்து யார் மனதிலாவது உறைத்ததா?

இப்போது போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் முதன் முதலாக வாகனங்களின் சக்கரங்களை சோதனையிட ஆரம்பித்துள்ளனர். பாதையில் ஓடுவதற்குப் பக்குவமா? இல்லை, பல நாட்கள் ஒடி தேய்மானம் கண்டவையா? என்று கண்டு பிடிக்கும் முயற்சி. அதுவும் இப்படி.. பாதையோரம் சிறிய ரக வாகனம் ஒன்றின் சக்கரங்களைச் பரிசோதனை செய்து கொண்டிருந்த போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு அதிகாரியின் உயிரை காவு கொடுத்தலுடன் ஆரம்பாமாகி இருக்கிறது.

எதிர்த் திசையிலிருந்து அசுர வேகத்தில் வந்த வாகனம் ஒன்று பரிசோதனை செய்து கொண்டிருந்த பொலிஸ் அதிகாரியையும் அவருக்கு அருகில் நின்ற சிறியரக வாகன உதவியாளர் ஒருவரையும் முட்டிமோதி சாகடிக்கச் செய்துவிட்டது.

அண்மையில் பதுளை நகரில் மற்றுமொரு மனமுருக்கும் சம்பவம். முதல் நாள் ஆரம்பப் பாடசாலைக்குச் சென்ற பாலகனை பின்னால் நகர்த்தப்பட்ட கனரக வாகனமொன்று மோதி பலியெடுத்தது. பசறை விபத்து இடம் பெற்ற மறுதினமே அதே வீதியில் முச்சகரவண்டியொன்றும் சிறிய ரக வாகனம் ஒன்றும் நேருக்குநேர் மோதிய விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த பெண் ஒருவர் அந்த இடத்திலேயே அகால மரணம்.

சாரதிகளுக்கு சட்ட விதி முறைகள் உண்டு. அதை பசறை விபத்தின்போது எதிரே வந்த டிப்பர் வாகன சாரதி மதித்து செயற்படவில்லை என்கிறார் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் ரோஹன. உண்மையில் எத்தனை சாரதிகள் இதனைக் கடைப்பிடிக்கிறார்கள்? வீதி விபத்துக்களில் அதிக உயிரிழப்புகளை உள்வாங்கிக் கொள்ளும் நாடாக இலங்கை மாறியுள்ளது. தினம் ஒன்றுக்கு சராசரி 9 பேர் வரை வாகன விபத்தில் பலியாகி வருகிறார்கள். வளர்ந்து வரும் நாடுகளில் இதுவொரு சாபக்கேடு. இலங்கையை பொறுத்தவரை மலையகம் அதிக விபத்துக்களை சந்திக்கும் இடமாக காணப்படுகின்றது. இதற்கு புவியியல் அமைவும் ஒரு காரணம். இது சூழ்நிலைகள் உருவாவதை நிர்ணயம் செய்கின்றது. சூழ்நிலைகளைக் கவனமாக கையாளாமையே பசறை பஸ் விபத்து போன்றவை நடக்க ஏதுக்கள். விபத்துக்கள் என்றாலே மனதில் தோன்றுபவர் சாரதியாகவே இருக்கின்றார்.

வீதிப் பாதுகாப்பு பற்றி யாருமே அலட்டிக் கொள்வது இல்லை. சாரதிகள் தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றார்கள் பொதுவாக அதிக வேகம் என்பது ஆபத்தில் கொண்டு போய் விடுகின்றது. இதே போல பாதசாரிகளும் பக்குவமாக பயணிப்பது குறைவு. சாரதிகளைப் போலவே அலைபேசியில் பேசிக் கொண்டு செல்வது, நினைத்த இடத்தில் பாதையைக் கடக்க முனைவது என்று எச்சரிக்கை உணர்வே இல்லை. மது பாவனை, கவனம் இன்மை, வாகனத்தில் பயணிப்பவர்கள் பற்றிய கரிசனை இல்லாமை, அநுபவம் இன்மை, அதிக வேகம், எதிர்வரும் வாகனம் பற்றிய முன்னெச்சரிக்கை உணர்வு எதுவும் இல்லாத சாரதிகளாலேயே அதிகமான விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

2013 இல் தீபாவளி தினத்துக்கு முதல் நாள் பண்டாரவளை பூனாகலை வீதியில் பஸ் பள்ளத்தில் விழுந்ததனால் பல அப்பாவித் தொழிலாளர்கள் அவலச்சாவு. அலைபேசியில் கதைத்துக் கொண்டே வாகனத்தைச் செலுத்திய சாரதியின் கவனயீனமே காரணம். சில வாகன ஓட்டுனர்கள் பாதசாரிகளை எதிரிகள் போலவே எடைபோட்டு கண்மண்

**பன். பாலா ...**

தெரியாமல் வாகனம் செலுத்துவதைக் காணலாம் இவ்வாறான நேரத்தில் பாதசாரிகளின் சிறு பதற்றம் கூட பாதகமான விளைவுகளை உண்டாக்கிவிடும். வளைவுகளைக் கடப்பதில் கவனம் எடுக்காமை, போட்டி போட்டுக் கொண்டு வாகனம் செலுத்தல், போக்குவரத்துக் குறியீடுகளை புறக்கணித்தல் என்பன சாரதிகளின் பலவீனம். ஓய்வின்றி வாகனம் ஓட்டுவதும் ஆபத்தில் மாட்டிவிடும்.

இது போலவே காலநிலையைக் கணக்கில் எடுக்காமல் கண்டபடி கதைப் பேசிக் கொண்டு வாகனத்தை செலுத்தும் போக்கும் பாதகத்தை உண்டாக்கும். மலையகத்தின் பல பகுதிகள் காலை அந்தி நேரங்களில் பனி மூட்டமாகவே காணப்படும். இவ்வாறான வேளைகளில் வாகனத்தைச் செலுத்துவது சிரமமாகவே இருக்கும். மலைகத்தின் பல பாதைகள் இன்னும் அபிவிருத்திச் செய்யப்பட்டாமலே காணப்படுகின்றன. இதனால் அடிக்கடி முச்சக்கர வண்டி, இரு சக்கரவண்டி, சிறு ரக வாகனங்கள், வேன்கள் விபத்துக்குள்ளாகின்றன. கரடுமுரடான தோட்டப் பாதைகளில் நோயாளிகளைக் காவிச் செல்லும் அம்பியூலன்ஸ் வண்டிகளும் விபத்தை எதிர்நோக்கின்து.

தோட்டபாதைகளைத் தோட்ட நிர்வாகங்களே அபிவிருத்திச் செய்ய வேண்டும் என்னும் நிலை இன்று இல்லை. பிரதேச சபைகளால் இவற்றை அபிவிருத்தி செய்ய முடியும். மேடு பள்ளம், குன்று குழி என்று ஆபத்தானதாகவே பல தோட்டபாதைகள் இன்னும் இருப்பது குறிப்பிடத்தகது. மலையகத்தில் அதிகமான இளைஞர்கள் சாரதிகளாக இருக்கின்றார்கள். இவர்கள் வேகமாக வாகனத்தைச் செலுத்துவதை விநோதமாக எண்ணுகின்றார்கள். அதிக வேகம் காரணமாக வாகனங்கள் கட்டுப்பாட்டை இழக்கும் பட்சத்தில் பாரிய விபத்துக்களை ஏற்படுத்தி விடுகின்றது. இலங்கையைப் பொருத்தவரை வீதி விபத்துகள் சம்பந்தமான கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டே உள்ளன. ஆனால் நாளுக்கு நாள் விபத்துக்கள் அதிகரித்தே வருகின்றன. வீதிப்பாதுகாப்புக் குறித்ததான விழிப்புணர்வு சாரதிகளுக்கு மிகமிக அவசியம். பெரும்பாலான விபத்துக்களுக்கு சாரதிகளின் அசிரத்தையே அடிப்படைக் காரணம் என்பதை மறுப்பதற்கு இல்லை. தவிர உளவியல் ரீதியில் பாதிக்கப்படாதவர்களாக சாரதிகள் கடமையில் ஈடுபடுவது முக்கியம்.

மனோ ரீதியில் குழப்பமடைந்த நிலையில் நிதானமாக வாகனம் செலுத்த முடியாது. வாகனத்தைச் செலுத்தும் போது மது அருந்தியிருப்பது ஆபத்தானது. அத்துடன் வாகனத்தைச் செலுத்திக் கொண்டே அலைபேசியையும் பாவிப்பதால் கவனம் சிதறிப் போக இடமுண்டு. உரிய இடத்தை அடைவதில் அவசரம் காட்டுதல் வாகனத்தை முந்திச் செல்லும் முனைப்பு வாகனத்தைக் கட்டுப்படுத்துவதில் சவாலை உண்டாக்கும்.

வாகன சக்கரங்கள் தேய்ந்திருக்கும் நிலையில் அந்த வாகனத்தைச் செலுத்த உடன்படக்கூடாது.

(21ஆம் பக்கம் பார்க்க)

---

## பூர்த்தியடையாது கைவிடப்பட்ட நிலையில்

# புளத்சிங்கள கொபாவெல தோட்ட வீட்டுத்திட்டம்

2017ம் ஆண்டு மே மாதத்தில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவுகல் புளத்சிங்கள தொகுதியே மிக மோசமாக பாதிப்புக்குள்ளானது. பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டு பெரும் அழிவுகள் ஏற்பட்டன. புளத்சிங்கள கொபாவெல தோட்டத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவினால் பத்து உயிர்கள் மண்ணோடு மண்ணாக புதையுண்டுபோன சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

மண்சரிவு ஏற்பட்ட அதே தோட்டத்தில் மற்றுமொரு பகுதியில் 21 தொழிலாளர் குடும்பங்கள் வசித்துவந்த லயன் குடியிருப்புக்கள் அமைந்திருந்த பகுதியில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து இங்கு வசித்துவந்த குடும்பங்களை பாதுகாப்பான பகுதியில் குடியமர்த்துவதென முடிவு செய்யப்பட்டு அப்போதைய மலைநாட்டு புதிய கிராமம் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகளினால் பாதுகாப்பான பிரதேசத்தில் தோட்டக்காணி அடையாளங் காணப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 7 பேர்ச் காணி ஒதுக்கப்பட்டது. அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் தலா 10 இலட்சம் ரூபா செலவில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மேற்பார்வையில் வீட்டுத்திட்டத்துக்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த 21 வீடுகளில் 11 வீடுகளுக்கான நிதி அமைச்சு மூலமாகவும் பத்து வீடுகளுக்கான நிதி கொரிய அரசினால் பெற்றுக்கொடுக்கப்பட்டு மொத்தமாக 21 வீடுகளும் பயனாளிகளுக்கு இலவசமாகவே பெற்றுக் கொடுக்குமுகமாக நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரையில் 13 வீடுகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டு எஞ்சிய வீடுகள் இது வரையில் பூர்த்தி செய்யப்படாமல் அத்திவாரத்துடன் இரண்டு வருடங்களுக்கு மேலாக கைவிடப்பட்ட நிலையில் கிடக்கிறது. கைவிடப்பட்ட நிலையில் கிடக்கும் வீட்டுத்திட்டம் குறித்து புகார் செய்யப்பட்ட போதிலும் எந்தவொரு பலனும் ஏற்படவில்லையென பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.





இந்திக நிரோஷினி பொன்னம்பலம்

**இங்கிரிய மூர்த்தி ...**

வீடுகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் லயன் குடியிருப்புக்களில் குடியிருந்து வரும் குடும்பங்கள் மிகவும் அச்சத்துடனேயே வாழ்கின்றன. காற்று இடி மின்னலுடன் மழை பெய்யும் வேளைகளில் குடும்பங்கள் வெளியேறி அயலவர்களின் வீடுகளில் தஞ்சமடைந்து பொழுதை கழிக்கின்றன.

இந்த வீட்டுத்திட்டம் குறித்து ட்ரஸ்ட் நிறுவனத்தின் காலி கிளையிலுள்ள உயர் அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ட்ரஸ்ட் நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட 11 வீடுகளும் பூர்த்திசெய்யப்பட்டு அவற்றுக்குரிய சகல கொடுப்பனவுகளும் கட்டட ஒப்பந்தக்காரருக்கு செலுத்தி முடிக்கப்பட்டதாக தகவல் தெரிவித்தார். இந்த வீட்டுத் திட்டத்தின் நிலை குறித்து தற்போதைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு விபரமான அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிடுகிறார்.

எஞ்சிய பத்து வீடுகளில் இரண்டு வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எட்டு வீடுகள் பூர்த்திசெய்யப்படாமல் இருப்பதற்கு கட்டட ஒப்பந்தக்காரரே காரணம் எனவும் அவரே இதற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்கிறது பயனாளிகள் தரப்பு.

21 வீடுகளில் 10 வீடுகளை கொரிய நாட்டு உதவியுடன் தான் பூர்த்தி செய்து தருவதாக கட்ட ஒப்பந்தக்காரர் அப்போதைய அரசாங்கத்தின் உயரதிகாரி ஒருவரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கான அனுமதி எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து 11 வீடுகளுக்கான கொரிய உதவியை கட்டட ஒப்பந்தக்காரர் பெற்றுக் கொண்டாரா? இல்லையா? நிதி கிடைத்ததா? அதற்கு என்ன நடந்தது? ஏன் இந்த வீடுகள் கைவிடப்பட்ட நிலையில் கிடக்கின்றன என்பது மர்மமாகவே உள்ளது. வீடுகள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்ட நிலையில் கிடப்பதற்கான காரணம் என்னவென கட்டட ஒப்பந்தக்காரருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தான் அந்த ஒப்பந்த வேலையைச் செய்யவில்லையெனக்கூறிவிட்டு தொலைபேசித் தொடர்பை துண்டித்துக் கொண்டார். இது சந்தேகத்தை எழுப்புகிறது. தோட்ட நலன்புரி மேற்பார்வையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது கைவிடப்பட்ட நிலையில் கிடக்கும் வீடுகளை ட்ரஸ்ட் நிறுவனத்தின் மூலம் பூர்த்தி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஒரு தகவல் சொன்னார்.

(21ஆம் பக்கம் பார்க்க)

---

மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஆளுமைகள்

## உலகத் தமிழ் படைப்பாளராக பரிமாணம் பெற்றிருக்கும்

# மாத்தளை சோமு



மலையக எழுத்தாளர்களில் ஒருவரான சோமு மாத்தளையில் முத்துசாமிப்பிள்ளை செல்லம்மாள் தம்பதிகளின் மூத்த புதல்வராகப் பிறந்து 1983 இல் இடம்பெற்ற கலவரங்களைத் தொடர்ந்து தமிழ்நாடு சென்று, பின்னர் அங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தவர்.

பொதுவாக சோமுவின் கதைகள் இலங்கைத் தமிழ் சிறுகதை உலகிற்கு புதிய பரிமாணத்தை அளிப்பனவாக இருக்கின்றன என்று கலாநிதி க. அருணாசலத்தின் தேசம் என்னும் சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் சிவகுமார் இவரின் தமிழக அரசின் விருதுபெற்ற 'பாலி முதல் மியன்மார் வரை' என்ற பயண நூலை படிப்பதற்கு முன்னர் பாலி சென்று திரும்பியிருந்தார். அதைப்பற்றி சொல்லும்போது 'சென்ற ஆண்டு பாலித்தீவுக்கு ஒரு வாரம் சுற்றுப்பயணம் போயிருந்தேன். அதற்கு முன்பு மாத்தளை சோமுவின் இந்நூலை படித்திருந்தால் இன்னும் கொஞ்சம் ஆழமாக, பாலியை நான் ரசித்திருக்க முடியும் என்று இப்போது தோன்றுகிறது. இந்த நூல் சுற்றுலாப் பயணிகளின் கையேடு என்று சொல்வதைவிட அந்நாடுகளின் வரலாற்றுக் கண்ணாடி என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன்' என்று முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.



மாத்தளையில் சோமுவுக்குக் கௌரவம். படத்தில் மாத்தளை கார்த்திகேசு, முன்னாள் அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன், பீர் முகம்மது.

மாத்தளை முதல் மலேசியா வரை, லண்டன் முதல் கனடா வரை, சிட்னி முதல் நோர்வே வரை, பாலி முதல் மியன்மார் வரை சோமுவின் பயண இலக்கியம் மணியன் எழுதிய இதயம் பேசுகின்றதைப் போன்று பயண இலக்கியத்திற்கு பெருமை சேர்க்கின்றன.

தமிழக எழுத்தாளர் பிரபஞ்சன் கறுப்பு அன்னங்கள் சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில், மாத்தளை சோமு உலகை மனிதர்களால் நிரப்ப வேண்டும் என்று எதிர்பார்த்து நல்ல கதைகளை எழுதுகிறார் என்று தெளிவாகச் சொல்கிறார். பர்மாவிற்குச் சென்ற மாத்தளை சோமு எழுதிய பர்மாவும் தமிழர்களும் என்ற நூல் வரலாற்று ஆவணமாகத் திகழ்வதாகவும், தமிழ் இலக்கியத்திற்கு இந்நூல் அரிய கொடையாகும் என்றும் சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் மணிகண்டன் தன் முன்னுரையில் கூறியிருக்கின்றார். மாத்தளை சோமு அவுஸ்திரேலியாவில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்தாலும் தான் பிறந்து வளர்ந்த மலையக மண்ணையும், மக்களையும் பற்றி நாள்தோறும் சிந்திப்பவர். அவர்களுடைய அவலங்கள், துன்பங்கள் என்பன சோமுவின் மனதை எப்போதும் அறிந்துகொண்டே இருக்கும். அதனால் தமது எழுத்துக்களில் தமது ஆதங்கங்களையும் அம்மக்கள் பற்றிய கருணை கூர்ந்த பார்வையையும் வெளிப்படுத்த வேண்டும் என்று உத்வேகத்துடன் செயற்பட்டவர். அதன் விளைவாகவே கண்டிச் சீமை வரலாற்று நூல் உருவானது என்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற மாத்தளை சோமுவின் கண்டிச் சீமை வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் குறிப்பிட்டது நோக்கத்தக்கது.







'நண்பர் மாத்தளை சோமுவின் கதைகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மனித வாழ்வின் அவலங்களைக் கதையின் கருப்பொருளாகக் கொள்ளும்போது மனித ஆத்மாக்கள் அந்த அவலத்திற்கான மூலகாரணங்களை எதிர்த்து எத்தகைய வீரம் செறிந்த போராட்டத்தை நடத்துகின்றன என்பதை படைப்பாக உருவாக்குதல் என்பது முற்போக்கு இலக்கியக் கடமையாகும். இந்தக் கதைகளை ஈழத்து முற்போக்கு இலக்கியப் படைப்புகளின் வரிசையில் நிச்சயம் ஏற்றிவைக்கும், ஏற்றி வைத்திருக்கிறது என்றுகூடச் சொல்வேன் என்று சொன்னதைக் கவனிக்கிற போது இவர் மானுடத்தை உயர்த்தவே இலக்கியம் என்ற கோட்பாட்டில் இருப்பது புரிகிறது' என்கின்றார் இவரின் நமக்கென்றொரு பூமி என்ற முதலாவது சிறுகதைத் தொகுதிக்கான முன்னுரையில் எழுத்தாளர் ஜெயகாந்தன். இனத்துவத்தின் உணர்வேயில்லாது போகுமளவுக்கு ஒடுக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் இனத்துவத்தின் பேராலும் ஒடுக்கப்படும் பொழுது அவர்கள் செயல்முறைகளிலும் சிந்தனையோட்டத்திலும் ஏற்படும் உணர்வு மாற்றங்கள் நாவலில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. அந்தளவில் இந்நாவல் மிக முக்கியமான ஒரு சமூக வரலாற்று ஆவணமாகியுள்ளது என்று எல்லை தாண்டா அகதிகள் (1994) நாவல் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

மூலஸ்தனம் (1998) என்ற நாவலில், தெய்வங்கள் கூடச் செல்ல அஞ்சும் இடங்கள் என்று ஆங்கிலத்தில் கூறப்படுவதைப்போல மாத்தளை சோமு அத்தகைய இடங்களுக்குச் செல்ல அஞ்சாமல் தம் கருத்துச் சுதந்திரத்தை ஆணித்தரமாக பறைசாற்றியுள்ளார் என்கிறார் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவரும் மூத்த எழுத்தாளருமான தெளிவத்தை ஜோசப் மலையக சிறுகதை வரலாற்று நூலில், மலையக எழுத்தாளர்களைப் பொறுத்தவரை மாத்தளை சோமு மிகவும் உயரத்தில் இருப்பவர். மற்றவர்கள் அண்ணாந்து பார்க்கும் உயரம் அது. சிட்னி என்ன? லண்டன் என்ன? மலேசியா என்ன? கொழும்பு என்ன? மாத்தளை சோமு என்னும் பெயரும் பிரசித்தம். அவருடைய நூல்களும் பிரசித்தம். கணையாழி, தீபம், சுபமங்களா, இந்தியா டுடே, ஆனந்த விகடன், கல்கி, குமுதம், தினமணி, கதிர் முதலிய ஏடுகளில் மாத்தளை சோமுவின் படைப்புகள் முக்கியத்துவத்துடன் பிரசூரம் பெறுவதும், தமிழ் இலக்கியத்தின் தரமான படைப்பாளர்கள் என்று பெயர்பெற்ற ஜெயகாந்தன், அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, வல்லிக்கண்ணன், ராஜம் கிருஷ்ணன், பிரபஞ்சன், வண்ணநிலவன் முதலியோர் மாத்தளை சோமுவின் படைப்புகள் பற்றிச் சிலாகித்து எழுதுவதும் அவருடைய உச்சங்கள் என்று குறிப்பிடலாம்.

(21ஆம் பக்கம் பார்க்க)

**எச்.எச்.விக்கிரமசிங்க ...**

# சீனி இறக்குமதியில் ஏதேனும் குளறுபடி உள்ளதா?

இந்த காலத்தில் பலரும் பேசும்பொருளாக இந்த சீனி வரி குறைப்பும், சீனி இறக்குமதியும் உள்ளன.

கடந்த வருடம் (2020.10.14) ஒக்டோபர் மாதம் 14ம் திகதி , சீனி விலையை குறைக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கம் சீனிக்கான இறக்குமதி வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதம் வரை குறைத்தது. அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது.

அந்த வேளையில் சீனி ஒரு கிலோ 135 ரூபா வரை விற்கப்பட்டது. இந்த வரிக் குறைப்பினால், அதன் விலை (49 ரூபா 75 சதத்தால்) குறைய வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை. நுகர்வேருக்கு எதிர்பார்த்த நன்மை கிட்டவில்லை. அதே வேளை அரசாங்கத்திற்கும் நட்டம் ஏற்பட்டதாக கூறப்பட்டது. மேலும் வில்மா நிறுவனம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சாதாரண நிலைமைக்கு மேலாக அளவுக்கதிகமாக ஏனைய இறக்குமதியாளர்களை விட கூடுதலான சீனியை இறக்குமதி செய்தது என்றும் கூறப்பட்டது.

2020 ஒக்டோபர் மாதத்தில் சுமார் 7000090000 மெட்ரிக் தொன் சீனி நாட்டில் இருப்பில் (அரச மற்றும் தனியார்) இருந்தது. அது 3 மாதங்களுக்கு போதுமானது. ஆனால் அது 50 ரூபா வரியுடனேயே இறக்குமதி செய்யப்பட்ட சீனியாகும். தனியார் நிறுவனங்கள் மற்றும் சீனி இறக்குமதியாளர்கள் விலையை குறைக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

சாதாரணமாக இலங்கையின் தேசிய சீனித்தேவையில் 5 வீதம் மட்டுமே உள்நாட்டில் கரும்பு மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதி, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. பெரும்பாலும் இந்தியாவிடமிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. உலக சந்தையில் சீனி ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்று இந்தியா. 2020 செப்டெம்பர் மாதமளவில் உலக சந்தையில் சீனி ஒரு கிலோ (Cost Insurance Freight CIF ) விலை 81 ரூபா. 2020 நவம்பர் மாதத்தில் அது 85 ரூபாவாக அதிகரித்தது.

டிசம்பர் மாதத்தில் அது 84 ரூபாவாக இருந்து 2021ம் ஆண்டு ஜனவரி மாத்தில் 92 ரூபாவாக அதிகரித்தது.

இந்தியா கொவிட்19 தொற்று நிலைமை காரணமாகவும் உள்நாட்டு நுகர்வு காரணமாகவும் ஏற்றுமதி அளவை கட்டுப்படுத்தியமையும் இந்த விலை அதிகரிப்புக்கு ஒரு காரணம்.



2020 ஒக்டோபர் 14ம் திகதி வர்த்தமானி அறிவித்தல் இன்னும் அமுலில் இருக்கிறது. வரி குறைப்பின் பின்னர் 300000 மெட்ரிக் தொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டது. அதில் வில்மா நிறுவனம் 37 வீதத்தையே இறக்குமதி செய்தது. எஞ்சிய 63 வீதம் வேறு தரப்பினரால் இறக்குமதி செய்யப்பட்டது. ஒரு வரி குறைப்பு இடம் பெற்றவுடன் சீனியின் விலை அடுத்த நாளே உடனடியாக குறையும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்காக புதிய கேள்வியின் அடிப்படையில் கட்டளை பத்திரம் அனுப்பி அவற்றை பெற 22 மாதங்கள் எடுக்கும். அதுவரை இருப்பில் இருக்கின்ற ஏற்கெனவே 50 ரூபா வரியுடன் இறக்குமதி செய்யப்பட்ட சீனி கையிருப்பே பயன்படுத்தப்படும். அது முடிவடைந்த பின்னர் புதிய கையிருப்பு சந்தைக்கு விடப்படும். அந்த வகையில் சீனித் தொகுதிகள் டிசெம்பர் மாதமளவிலேயே கிடைக்கப்பெற்றன. அந்த வேளையில் CIF விலை 84 ரூபா. அந்த வேளையிலும் பழைய கையிருப்பு இருந்துள்ளது. ஜனவரி மாதத்தில் CIF சீனி விலை 92 ரூபா.

92 ரூபா + 0.25 சதம் + தேசிய போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் இலாபம் (1025 ரூபா) = 105 ரூபா (ஒரு கிலோ சீனி – சராசரி விலை)

பழைய கையிருப்பு தற்போது முடிவடைந்ததால், இந்த விலையை கடந்த பெப்ரவரி நடுப்பகுதியிலிருந்து இப்போது வரை சீனியின் விலையை 100 முதல் 105 ரூபாவரை எதிர்ப்பார்க்கலாம். தற்போதைய விலையும் அதுவே. ஆனால் முன்னர் 2020 ஒக்டோபர் இருந்த நிலை 135 ரூபா – 49 ரூபா 75 சதம் = 86 ரூபாவிற்கு வழங்க முடியாது, ஏனெனில், உலக சந்தையில் சீனியின் கேளிவி அதிகரித்ததால் CIF விலை 81 ரூபா – 85ரூபா 92 ரூபாவாக 2021ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாறியமை குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் சென்ற ஒக்டோபர் மாதத்தில் அரசாங்கம் வழங்கிய வரி குறைப்பிற்கான அனுகூலத்தை பொது மக்கள் தற்போது அனுபவிக்கின்றனர் என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும்.

எனவே இங்கு எந்தவொரு குளறுபடியோ மோசடியோ இடம்பெறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. **( பொருளாதார ஆய்வு அடுத்தவாரமும் தொடரும் )**



**ஜெயரஞ்சன் யோகராஜ்**
சிரேஸ்ட ஊடகவியலாளர்
(பல்துறைசார் ஊடக ஆய்வாளர்)

## சீனி வரி தொடர்பில் எழும் வினாக்கள்

01. சீனியை இந்நாட்டிற்கு கொண்டு வரும் வரி 50 ரூபாவிலிருந்து 25 சதமாகக் குறைத்துள்ளதால் அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது?

02. அந்த வரி குறைப்பின் நன்மை மக்களுக்கு கிடைத்ததா? இல்லையா?. அவ்வாறு கிடைத்தால் அல்லது கிடைக்காவிட்டால் அது எவ்வாறு இடம்பெற்றது?

03. இது தொடர்பில் நிதி மற்றும் வர்த்தக அமைச்சு அதிகாரிகள் இன்னும் மௌனமாக இருக்கின்றார்களா? அப்படியாயின் ஏன் அப்படி?

04. வரி குறைப்பின் நன்மை பாரிய வியாபாரிகள் சிலருக்கு கிடைத்ததா? அவ்வாறு கிடைத்தால் அது எவ்வளவு?

05. சீனி இறக்குமதியில் வரி மோசடி இடம்பெற்றுள்ளது என்ற பிரசாரம் உண்மையானதா? பொய்யானதா?







# சீனி வரிக்குறைப்பு மக்களுக்கான நிவாரணமே

தற்போது பெரும்பாலானோரின் பேசுபொருளாக ஆகியிருப்பது சீனி வரி தொடர்பிலாகும். பாராளுமன்ற நிதிக் குழு கூடிய சந்தர்ப்பத்தில் சீனி வரி தொடர்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. அரசாங்கத்தினால் வரித் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் சீனி இறக்குமதியாளர்களால் சீனி இறக்குமதியின் போது முறையற்ற வகையில் இலாபம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தின. இதில் 15.9 பில்லியன் வருமானம் அரசாங்கத்திற்கு இல்லாமல் போயுள்ளது என்பது அவர்களது குற்றச்சாட்டாகும்.

புதிய அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய வரிகளைக் குறைப்பது சாதாரண நிகழ்வாகும். நிதி அமைச்சினால் 2007ம் ஆண்டின் 48ம் இலக்க விசேட சந்தைப் பொருட்கள் வரிச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 2020.10.14ம் திகதி ஆரம்பமாகும் மூன்று மாத காலம் வரையான கால எல்லைக்குள் நடைமுறையாகும் வகையில் விசேட வர்த்தமானியின் மூலம் சீனி உள்ளிட்ட 28 பொருட்களுக்கான விசேட சந்தைப் பொருள் வரிகள் குறைக்கப்பட்டதற்கு அமைய சீனியின் விலை கிலோ ஒன்று 25 சதத்தினால் குறைந்தது. குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் போது இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோவுக்கு 50 சதம் வர்த்தக பொருள் வரி அறவிடப்பட்டது. அதேபோன்று அந்த குறித்த தினத்தில் இந்நாட்டில் சீனியின் விலை அண்ணளவாக 135 ரூபாவாக குறிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயின் சீனி அல்லாத வர்த்தக பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி 49.75 ரூபாவினால் குறைந்திருந்தால் 135 ரூபாவை விட 49.75 ரூபா குறைவாக நுகர்வோரால் சீனியைக் கொள்வனவு செய்ய வாய்ப்பு இருந்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு இடம்பெறாததால் பாரியளவிலான மோசடி இடம்பெற்றிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இதனை ஆய்வு ரீதியாக நோக்கும் போது 2020 மே 01ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 26 பொருட்களுக்காக விசேட சந்தைப் பொருள் வரி அதிகரிக்கப்பட்டது. உள்நாட்டு உற்பத்திகளை பலப்படுத்துவதே இதன் நோக்காகும். இதனடிப்படையில் உள்நாட்டு உற்பத்திகளுக்கு சிறப்பான இடம் கிடைத்ததோடு, உள்நாட்டு உற்பத்தியும் அதிகரித்தது. சீனியை இந்நாட்டு துறைமுகம் வரைக்கும் கொண்டு வருவதற்கு எவ்வளவு நிதி செலவிடப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதேபோன்று கொவிட் 19 தொற்று நிலைக்கு மத்தியில் சீனியை போதுமானளவுக்கு களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. உலகில் பல நாடுகளிலிருந்து சீனியைக் கொள்வனவு செய்வதற்கு கோரிக்கைகள் கிடைத்ததால் சீனியின் விலைகளும் வேகமாக அப்போது உயர்ந்து செல்ல ஆரம்பித்திருந்தது.

இதனடிப்படையில் சீனி இறக்குமதியாளர்களுக்கு அதிகூடிய உதவிகளை வழங்க வேண்டிய நிலை உருவானது. எதிர்க்கட்சிகள் எழுப்பும் அடிப்படையற்ற மற்றும் அரசியல் நோக்கில் மாத்திரம் முன்வைக்கப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுக்கள் என்பது மிகத் தெளிவானதாகும். அரசினால் பெறுமானம் சேர்க்கப்பட்ட வரிகள் 15 வீதத்திலிருந்து 8 வீதமாக குறைக்கப்பட்டதன் மூலம் அரசின் வரி வருமானம் 250 பில்லியன் அளவில் குறைந்ததனால் மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணமும் ஒருநாள் மோசடியாக வரைவிலக்கணப்படுத்தப்பட முடியும் என்றும், இவ்வாறான குற்றச்சாட்டுக்களை பொருளாதாரம் குறித்த புரிதல்கள் இல்லாதவர்கள் கூட முன்வைக்க மாட்டார்கள் என்பதும் பலரது கருத்தாகும்.

### வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன

01. எந்த ஒரு வரிக் குறைப்பின் போதும் அவ்வாறு குறைக்கும் அளவுக்கு ஏற்ப அரசின் வரி வருமானம் குறைவடையும். கடந்த அரசாங்க காலத்தில் ஈடு செய்ய முடியாதளவுக்கு வரி வேட்டை இடம்பெற்றது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியான உடனேயே 15 வீதமாக இருந்த வற் வரியை 8 வீதமாகக் குறைத்தார். அதன் மூலம் கோடிக்கணக்கிலான அரச வருமானம் குறைந்தது. அதேபோன்று அரச மற்றும் தனியார் துறை பணியாளர்கள் உழைக்கும் போது செலுத்தும் வரியும் நீக்கப்பட்டது. அந்த வரியினால் கிடைத்த வருமானம் ஒரு சதம் கூட இப்போது அரசுக்கு கிடைப்பதில்லை. 2 வீதமாக இருந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் நீக்கப்பட்டது. எந்த ஒரு வரியை நீக்கினாலும் அதன் மூலம் கிடைத்த வருமானம் அரசுக்கு கிடைப்பதில்லை. சீனி வரி தொடர்பில் எந்த ஒரு மோசடியும் இடம்பெறவில்லை. சீனியை மாத்திரம் பிடித்துக் கொண்ட போதிலும் வெங்காயம், டின்மீன் மற்றும் பருப்பு போன்ற நான்கு பொருட்களினது வரிகளும் குறைக்கப்பட்டன. வரிகளைக் குறைத்து மக்களுக்கு அவ்வாறான நிவாரணங்களை வழங்கும் போது அரசாங்கத்திற்கு நஷ்டங்கள் ஏற்படும்.

02. மக்களுக்கு இதன் இலாபம் கிடைத்தது. அவ்வாறு இடம்பெற்றிருக்காவிட்டால் இப்போது சீனி ஒரு கிலோவின் விலை 145 ரூபாயாக விற்கப்பட்டிருக்கும். இப்போது சதோசவில் ஒரு கிலோ சீனி 99 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. பெப்ரவரியில் நாம் சதோசவில் ஒரு கிலோ சீனியை 85 ரூபாவுக்கு விற்றோம். அதன் மூலம் நுகர்வோருக்கு நன்மைகள் கிடைக்கவில்லை எனக் கூற முடியாது.

03. குரல் எழுப்புமளவுக்கு தவறுகள் இங்கு இடம்பெறவில்லை. மோசடி செய்த தரப்பினருக்கு நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டு வெகு சீக்கிரத்தில் வழங்கக் கூடிய தண்டனையினை வழங்குவதுதான் செய்ய வேண்டிய விடயமாகும். இதற்காக எமது அரசாங்கத்தில் எவரும் நீதிமன்றங்களுக்கு அழுத்தங்களைச் செய்யப் போவதில்லை.

04. எந்த ஒரு அரசாங்க காலத்திலும் கிழங்கு, வெங்காயம், சீனி, மிளகாய், பருப்பு போன்றவற்றை இறக்குமதி செய்வது ஒரே தரப்பினரேயாகும். அரசாங்கங்கள் மாறினாலும் வர்த்தகர்கள் மாறுவதில்லை. மோசடிக்காரர்கள் என்றால் எந்த அரசாங்க காலத்திலும் மோசடிக்காரர்கள்தான். கடந்த அரசாங்க காலத்தில் உலகில் மிகச் சிறந்த நிதி அமைச்சர் ஒரேயடியாக சீனிக்கான வரியைக் 25 சதமாகக் குறைத்து இறக்குமதியாளர்கள் போதியளவில் வருமானம் தேட இடம் கொடுத்தார். மீண்டும் 40 ரூபாவாக அதிகரித்தார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மோசடிகள் இடம்பெறும். அந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் செயற்பாட்டிற்கு எதிராக நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

05. பொறுப்புள்ள முன்னாள் அமைச்சரவை அமைச்சரான ராஜித சேனாரத்ன முதலைகளுக்குச் சாப்பாட்டிற்காக மனிதர்களைக் கொடுத்த முறையினைக் கூறினார். அதன் இரண்டாவது வடிவம் தான் இது. மத்திய வங்கியின் பிணை முறை மோசடியை விட பாரிய மோசடி இங்கு இடம்பெற்றிருப்பதாகக் கூறுகின்றார்கள். பிணைமுறை மோசடி எனக் கூறுவது என்ன? அந்த மோசடியின் நஷ்டம் 2000 பில்லியன் அளவிலானது என அது தொடர்பான விடயங்களைத் தேடிய பொருளியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளார்கள்.

### ம. வி. முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி

01. நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக நிதி குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கம் 50 ரூபாயாக இருந்த வரியை 25 சதமாகக் குறைத்தது அதன் பிரதிபலனை மக்களுக்கு வழங்குவதற்கு, அல்லது அரசாங்கம் அந்த வரியின் பிரதிபலனைப் பெற்றுக் கொண்டது. அது மக்களுக்கு கிடைக்கவுமில்லை என்றால் அதன் நன்மை யாருக்குச் சென்றது? யாருக்காவது சென்றிருக்க வேண்டுமல்லவா? அரசாங்கம் கூறுவதைப் போன்று அவர்கள் அதன் நன்மைகளைக் கைவிட்டுள்ளோம் எனக் கூறுகிறார்கள். அப்படியாயின் அதன் நன்மைகள் யாருக்குச் சென்றன? அரசாங்கத்திற்குத்தான் சென்றது எனக் கூற முடியாது. இதுவரைக்கும் நாம் யாரும் 85 ரூபாவுக்கு சீனியை வாங்கவில்லையே. அப்படியாயின் மக்களுக்கு அந்த நன்மை கிடைக்கவுமில்லை. அரசாங்கத்திற்குச் செல்லவுமில்லை. 1595 கோடி இந்தக் காலத்தினுள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என பாராளுமன்ற நிதி குழு ஏற்றுக் கொண்டுள்ளது. அது நஷ்டம்தானா? இழப்பா? கைவிட்ட ஒன்றா? என்னவானாலும் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய நன்மை அரசாங்கத்திற்கு கிடைக்கவுமில்லை. மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணம் அவர்களுக்கு கிடைக்காமல் போயுள்ளது. சீனி இந்த விலைக்கு இல்லாதிருந்தால் 175 ரூபா வரையில் அதிகரித்து இருக்கும் என நிதி அமைச்சின் செயலாளர் கூறியிருக்கின்றார். அப்படி நடக்க வாய்ப்புக்கள் இல்லையே. 175 ரூபா வரை உயர வேண்டுமாயின் ஒரு கிலோவுக்கு 100 வீதம் வரி விதித்திருக்க வேண்டும். அப்படியாயின் உலக சந்தையிலிருந்து நாம் சீனியை இலங்கைக்கு 100 ரூபாய்க்காவது கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி கொண்டு வரவில்லை. எந்த ஒருவரும் ஒரு கிலோ சீனியை 100 ரூபாவுக்கு கொண்டு வந்திருக்கவில்லை.

02. அங்கு கூறப்படும் நன்மைகள் கண்டிப்பாக போயிருப்பது சீனியை இறக்குமதி செய்யும் இடைத் தரகர்களுக்கேயாகும். குறித்த காலப்பகுதியினுள் 320000 மெட்ரிக் தொன் சீனி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதில் 125000 மெட்ரிக் தொன் சீனியை இறக்குமதி செய்திருப்பது ஒரு தனியார் கம்பனியாகும். அதிகளவான சீனியை இறக்குமதி செய்பவர்தான் அதிக இலாபத்தை அடைந்து கொள்கிறார். சீனி இல்லை என இலங்கை மக்கள் ஆர்ப்பாட்டம் செய்யவுமில்லையே. அதே போன்று இலங்கையில் சீனிக்கு தட்டுப்பாடு உள்ளதாக பிரச்சினை வரவுமில்லை. இந்த வர்த்தகர்கள் 10000 மெட்ரிக் தொன் சீனியைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்திருக்கின்றார்கள்.

03. இது அவர்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி. இதனை எம்மிடம் கேட்டு வேலையில்லை. இந்த வரியைக் குறைத்த நேரம் அதனைச் செய்தது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் எனில், மக்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்கவில்லை என இப்போது எமக்கு நன்கு விளங்குகின்றதுதானே. சதோச சீனியை இறக்குமதி செய்து மக்களுக்கு வழங்கியிருக்கலாம். அவ்வாறு செய்ய முடியாவிடின் அதனை உடைப்பதற்கே சதோச என்ற நிறுவனம் இருக்கின்றது. சதோசவும் கூட சீனியை வாங்கியிருப்பது 120 ரூபாவுக்கு அந்த முதலாளிகளிடத்திலாகும். அவ்வாறு கூடிய விலைக்கு வாங்கி சதோச அதனை 85 ரூபாவுக்கு விற்கின்றது. அந்த நஷ்டம் அரசுக்கு உள்ளது. வியாபாரிகளிடத்தில் கூடிய விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு நுகர்வோருக்கு விற்க வேண்டிய நிலை சதோசவுக்கு நேர்ந்துள்ளது. இதன் பின்னர்தான் கூடிய விலை என்பதை விலக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

04. தற்போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் 1595 கோடி எனக் கூறுவது நிதி அமைச்சின் செயலாளரே தவிர நானல்ல. சதோசவிலிருந்து கூடிய விலைக்கு வாங்கி குறைந்த விலையில் விற்ற இழப்பைத் தவிர அந்தக் கால எல்லையினுள் இடம் பெற்ற நஷ்டமாக கணிப்பீடு செய்யப்பட்டிருப்பது மேற்கூறப்பட்ட தொகையேயாகும். இதன் நன்மைகள் சென்றிருப்பது சீனியை இறக்குமதி செய்யும் வியாபாரிகளுக்கேயாகும்.

05. இவை உண்மை எனத் தெரிந்து கொண்டுதான் அநுர குமார திசாநாயக்கா பாராளுமன்றத்தில் பேசியிருந்தார். அவர் இதனைப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருக்காவிட்டால் இதனைப் பற்றி இவ்வாறு பேச்சுக்களோ, விசாரணைகளோ இடம்பெற்றிருக்காது. இந்தளவுக்காவது விசாரணை செய்வதற்கு கிடைத்தது அவர் இதனைப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியதனாலாகும். வரி மோசடியைக் கண்டுபிடிப்பதற்கு இவ்வாறு வெளிப்படுத்தத்தான் வேண்டுமா? என்பதுதான் எனக்குள்ள கேள்வி. இது பற்றி அரசாங்கத்திடம் பொறிமுறைகளோ, செயற்பாடுகளோ இல்லையா? இவ்வாறு வெளிப்படுத்தப்படாத, தெரிய வராத போதியளவு வரி மோசடிகள் இந்நாட்டில் இடம்பெறலாம். சீனிக்கு தட்டுப்பாடு இலங்கையில் இருக்கவுமில்லை. அரசாங்கம் முன்னர் சீனிக்காக வரி விதித்தது உள்ளூர் சீனி உற்பத்தியை உயர்த்தி, டொலர் வெளிநாடுகளுக்குச் செல்வதை தடுப்பதற்காயின் இந்த வரி ஏன் குறைக்கப்பட்டது? அவ்வாறு செய்வதற்கான காரணம் என்ன?

### பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா

01. நேரடியாகவே பதில் கூறினால், நிதி அமைச்சு கூறுவதைப் போன்று 15.9 பில்லியன் அதாவது 1500 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு இல்லாமல் போயுள்ளது.

02. அந்த வரி குறைக்கப்பட்டதன் வாசி மக்களுக்கு கிடைத்ததா என்ற பிரச்சினையில் நாம் சற்று பின்னோக்கிச் செல்ல வேண்டும். உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு, உள்நாட்டு விவசாயி மற்றும் உள்நாட்டு உற்பத்தியைப் பலப்படுத்துவதே அரசின் கொள்கை என அரசாங்கம் கூறியது. அவ்வாறு கூறி அரசாங்கம் 2020 ஜுலை மாதத்தில் சீனிக்கான வரியை 50 ரூபாயாகக் குறைப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்தது. உள்நாட்டு சீனி உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதற்கே அதனைச் செய்ததாக அரசாங்கம் கூறியது. அந்தக் கொள்கையினை அரசாங்கமே இரண்டு பௌர்ணமி தினங்கள் கடக்கும் போதே மாற்றிக் கொண்டது. சில நாட்கள் கடக்கும் போது சீனியின் விலை 85 ரூபாய் என அரசாங்கம் அறிவித்தல் விடுத்தது. இறக்குமதியாளர்களுக்கு 50 ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. 50 ரூபாவையும் நீக்கிக் கொள்ள முடியாது என நிதி அமைச்சு கூறுகின்றது. வரியினை முற்றாக நீக்காது 49.75 ஐ நீக்குகின்றது. அதன் பின்னர் நுகர்வோருக்கு இதன் நன்மை போக வேண்டுமாயின் இறக்குமதி விலை குறைய வேண்டும். அதன் பின்னர் கூடிய விலை பற்றிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டும். 85 ரூபாய் நிர்ணயித்தது. நுகர்வோருக்கு நன்மைகள் கிடைப்பதற்கான அனைத்தையும் அரசாங்கம் செய்தது. எனவே இதன் நன்மைகள் போயிருப்பது வியாபாரிகள் சிலருக்கேயாகும்.

**சுபத்ரா தேசப்பிரிய**
**தமிழில்: எம்.எஸ்.முஸப்பிர்**
(புத்தளம் விசேட நிருபர்)

# சமாதானத்துக்கான பாகிஸ்தானின் அழைப்பை இந்தியா எப்படி எடுத்துக் கொள்ளும்?

**சமீபத்தில் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பாகிஸ்தான் இராணுவத் தலைவர் கமார் ஜாவிட் பஜ்வா, இந்தியாவுடனான நீண்டகால பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். பழையதை மறந்து முன்னேறிச் செல்ல வேண்டும் என்பது அவரது அழைப்பாக இருந்தது. தெற்காசியாவில் உள்ள அமைதி விரும்பிகளுக்கு இந்த அழைப்பு அமிர்தமாக இருந்திருக்க வேண்டும்.**

இதில் முக்கியம் என்னவென்றால், இந்த அழைப்புக்கு இந்தியா எவ்வாறான சமிக்ஞைகளை வெளியிடப்போகிறது என்பது தான். ஏனெனில் இதுபோன்ற சமாதான அழைப்புகள் முன்னரும் விடுக்கப்பட்டாலும் சாதகமான முடிவுகள் எட்டப்படவில்லை என்பதால் இந்த அழைப்பையும் புதுடில்லி சந்தேகக் கண் கொண்டு பார்க்கலாம். நல்லெண்ண சமிக்ஞைகளை விடுப்பதும் பின்னர் பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்வதும் முன்னரும் நடந்திருப்பதாக இந்தியா கருதுகிறது. ஒரு யுத்தமே நிகழ்ந்தது என்று இந்தியா சுட்டிக் காட்டுகிறது. எனவே பாகிஸ்தான் இராணுவத் தலைவரின் நல்லெண்ண சமிக்ஞையை இந்தியா எப்படி எடுத்துக் கொள்ளும் என்று தெரியவில்லை.

தனது இஸ்லாமாபாத் உரையில், தெற்கு மற்றும் ஆசிய பிராந்தியத்தின் இன்னும் பயன்படுத்தப்படாத வளங்களை பயன்படுத்துவதற்கும் இந்த இந்தோபாகிஸ்தான் நல்லுறவு உறுதுணையாக இருக்கும் என்றும் இவ்விரு நாடுகளுக்கு இடையிலான மோதல் நிலையானது இப்பிராந்தியத்தை ஒரு பணயக் கைதியாக வைத்திருப்பதாகவும் ஜாவிட் பஜ்வா சுட்டிக் காட்டியிருந்தார்.

அதேசமயம் இந்தியா வசமுள்ள காஷ்மிர் பகுதியில் நடைமுறைக்கு ஏதுவான சூழலை இந்தியாவே உருவாக்க வேண்டும் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டிருப்பது இந்தியாவை துணுக்குறச் செய்திருக்கலாம். ஏனெனில் இப்பிராந்தியத்தில் தீவிரவாதமும் வன்முறையும் மேலெழுவதற்கு பாகிஸ்தான் காரணமாக இருந்ததாக அந்நாட்டின் மீது ஒரு குற்றச்சாட்டை இந்தியா முன்வைக்கிறது.


எனவே, பாகிஸ்தான் விடுத்திருக்கும் இந்த அழைப்பு எவ்வளவு உண்மையானதாக இருப்பினும் நடைமுறை அனுபவங்கள் காரணமாக இந்த அழைப்பை இந்தியா சுலபத்தில் நம்பப் போவதில்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் பாகிஸ்தான் முதுகில் குத்தும் என்பது இந்தியாவின் குற்றச்சாட்டு.

உதாரணமாக வாஜ்பேயின் பாகிஸ்தான் விஜயத்தை இந்தியா சுட்டிக் காட்டுகிறது. 1999ம் ஆண்டு அன்றைய பிரதமரான அடல் பிஹாரி வாஜ்பேயி முக்கியத்துவம் வாய்ந்த பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொண்டார். அன்றைய பாக். அதிபர் நவாஸ் ஷெரீப்புடன் லாகூர் பிரகடனத்தில் கையெழுத்திட்டார். 'சமாதானமும் உறுதிப்பாடும் கொண்ட திட்டமொன்றை பகிர்ந்து கொள்ளல்' 'நிலைத்து நிற்கும் சமாதானம்', அமைதிபூர்வமான உறவு, நட்பு பூர்வமான ஒத்துழைப்பு என்பனவற்றை வளர்த்தல்' 'பாதுகாப்பு சூழலை அபிவிருத்தி செய்வதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கான இருதரப்பு இணக்கம்' ஆகிய வாசகங்களும் அடங்கியதாக இப்பிரகடனம் அமைந்திருந்தது.



இது நடைபெற்ற ஆறுமாதங்களில் என்ன நடந்தது என்றால், பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லைக்குள் புகுந்து கடும்பனிப் பொழிவு காரணமாக இந்திய இராணுவம் கைவிட்டுச்சென்றிருந்த பாதுகாப்பு நிலைகளை கைப்பற்றிக் கொண்டது. கைப்பற்றியது இந்தியத் தீவிரவாதிகளாகத் தான் இருக்க வேண்டும் என்றே இந்தியா முதலில் எண்ணினாலும் பின்னர் கிடைத்த தகவல்கள் பாகிஸ்தான் இராணுவம் ஊடுருவியிருப்பதை உறுதிப்படுத்தின. அதன் பின்னர் அப்பகுதிகளை மீளவும் கைப்பற்ற இந்தியாவுக்கு ஒரு மாதகாலம் பிடித்தது. இச் சண்டையில் 500 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்த கார்கில் அனுபவத்தின் பின்னரும் அரசியல் நாகரிகத்துடன் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷரப்பை இந்தியாவுக்கு வருமாறு இந்தியா அழைத்தது. 2001இல் இந்தியா வந்தவருடன் ஆக்ரா உச்சிமாநாடு நடைபெற்றது. ஆனால் இது சாதகமான பலன்களைத் தரவில்லை. இதன் பின்னரே பாகிஸ்தானில் இயங்கும் லக்ஷர் ஈ தொய்பா இயக்கத் தீவிரவாதிகள் டில்லிக்குள் புகுந்து பாராளுமன்றக் கட்டடத்தைத் தாக்கினர். ஜாயிஷ்ஈமொஹமட் இயக்கமும் இத் தாக்குதலில் ஈடுபட்டிருந்தது.




இருந்தும் கூட, 2015ல் இன்றைய இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, பாகிஸ்தான் பிரதமரின் பிறந்தநாள் வைபவத்தில் கலந்து கொண்டு அவரை வாழ்த்துவதற்காக எதிர்பாரா பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொண்டார். இரு நாடுகளுக்கும் இடையே பிரச்சினைகள் இருந்தபோதும் இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டது நல்லெண்ணத்தையும், சாதகமான சமிக்ஞைகளையும் பிராந்தியத்தில் அமைதி சூழலை ஏற்படுத்தும் வகையிலும் இப்பயணம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒரே வாரத்தில் நிலைமை மாறியது. பாகிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாதிகள் பஞ்சாப் பதன்கோட்டில் அமைந்திருக்கும் இந்திய விமானப்படை விமானத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தினர்.

பாகிஸ்தான் தரப்பு இவ்வாறு சமாதான முயற்சிகளின் பின்னரெல்லாம் தாக்குதல்களை முடுக்கிவிட்டிருப்பதால் அந்நாட்டின் நல்லெண்ண சமிக்ஞைகளை எவ்வாறு சாதகத் தன்மையோடு எடுத்துக் கொள்வது இந்தியாவின் பிரச்சினையாக உள்ளது. மேலும் 2008 மும்பை தாக்குதல், 2019 புல்வாமா தாக்குதுல் போன்ற தாக்குதல்கள் என்பன இந்தியாவில் பாகிஸ்தான் வெறுப்புணர்வு அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளன. பாக். மண்ணில் இயங்கும் தீவிரவாத குழுக்கள் தொடர்பான போதுமான தகவல்களை இந்தியா பாகிஸ்தான் அரசுக்கு வழங்கிய போதிலும் அவற்றின் மீது பாக். அரசு உறுதியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது இந்திய தரப்பு வாதமாக உள்ளது.

நட்புக் கரம் நீட்டப்பட்ட போதெல்லாம் இந்தியா காட்டிக் கொடுக்கப்பட்டதாக பாரதப் பிரதமர் நரேந்திரமோடி தனது 2019 உரையொன்றில் குறிப்பிட்டிருந்தார். "2014ம் ஆண்டு பிரதமராக சத்தியபிரமாணம் செய்து கொண்ட வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பாகிஸ்தான் பிரதமருக்கு அழைப்பு விடுத்தேன். பாகிஸ்தானை நோக்கி நட்புக்கரம் நீட்டினோம். லாகூருக்கு விஜயம் செய்தேன். ஆனால் இறுதியில் காட்டிக் கொடுக்கப்பட்டோம்" என்றார் இந்திய பிரதமர் மோடி.

இரு நாடுகளுக்கு இடையிலான முதல் கட்டத் தொடர்பை இந்தியாவே ஏற்படுத்தவேண்டும் என்று இன்றைய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் காண் சமீபத்தில் தெரிவித்திருந்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச எல்லையில் கடைப்பிடிக்கப்படும் வன்முறை தவிர்ப்பு ஏற்பாட்டில் மீறல்கள் ஏற்படுவதை குறைக்க வேண்டும் என்றும் பாக். பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளுமே 2003ம் ஆண்டில் போர் தவிர்ப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. என்ன நடந்தது என்றால், கையெழுத்தான புதிதில் எல்லாம் சரியாகத்தான் இருந்தது. பின்னர் உடன்படிக்கை மீறப்படுவதாக இரு நாடுகளும் ஒன்றை ஒன்று குற்றம் சாட்டிக் கொள்ளத் தொடங்கின. உடன்படிக்கையை இரு தரப்பும் சட்டை செய்யவில்லை.

2020ம் ஆண்டை எடுத்துக் கொண்டால் பாகிஸ்தான் தரப்பில் மட்டும் 5,100 தடவைகள் போர் தவிர்ப்பு உடன்படிக்கை மீறப்பட்டுள்ளது. 2003ம் ஆண்டில் இருந்து பார்த்தோமானால் இது அதிகமாகும். இந்திய இராணுவம் 36 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் 139 பேர் காயமுற்றதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தப் பின்னணியில் இருந்தே பாகிஸ்தானிய இராணுவத் தலைவர் விடுத்திருக்கும் அழைப்பை அவதானிக்க வேண்டும் என்பது இந்திய நிலைப்பாடாக உள்ளது.



இந்திய பாராளுமன்றத்தின் மீதான தாக்குதல்களின் போது...

**நோமன் ஹுஸைன்...**

# ஜெனீவா தோல்வியில் துளிர்விடும் அபிலாஷைகள்!

**"பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதை, தன் சொல்லாலே தன்னை துயர்படுத்தும்" என்பது இலங்கைக்கும் பொருந்தப் போகிறதோ தெரியாது. ஜெனீவா தோல்வியையடுத்து, இலங்கை மீது விழும் விமர்சனங்கள் இவை. ஏற்கனவே 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் கிடைத்த தோல்விகளில் திருந்தி நடக்க முயற்சித்திருந்தால், இந்த முறை இப்படித் தோற்றிருக்காது. தவறுகளைச் சரிப்படுத்தப் போய், சங்கடத்தில் விழுந்து விட்டது இலங்கை.**

நாட்டின் இன்றைய பேசுபொருள்களே இவை. இத்தோல்வி குறித்து இலங்கை அரசாங்கமும் நாடு கடந்த தமிழீழ அரசும் தத்தமது எண்ணங்களை யதார்த்தங்களாக்க எத்தனிக்கின்றன. அடுத்த அமர்வு (செப்டம்பர்) வரை இலங்கை அரசுக்கு கடிவாளம் இடப்பட்டுள்ளது, அவ்வளவுதான் என்கின்றனர் இன்னும் சிலர்.

ஆனால், அதிகார இலக்குகளுக்காக நடத்தப்பட்ட அநீதிகள் மற்றும் ஏனைய இனங்களில், எல்லையின்றிச் செயற்படும் இனவாதத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது இந்த வாக்கெடுப்பு. இதுதான் உண்மை. இவற்றை ஆராய்வதற்கென கடந்த காலத்தில் விதிக்கப்பட்ட கால (2001-2011) எல்லையின் அளவை விடவும், இந்த தீர்மானத்தின் கால எல்லை விரிகிறது. இதனால், 1983 முதல் 2009 வரையிலான காலக் களங்கள் சாட்சிக்குத் திரட்டப்படலாம்.

ஜெனீவாத் தீர்மானங்கள் எல்லாம் இலங்கையில் ஒரு அரசாங்கத்தை மாத்திரம் குறிவைக்கும் மேலைத் தேயத்தின், தீய முயற்சிகளென்ற விவாதத்தை இது இல்லாமலுமாக்கியுள்ளது. இனச் சமரா? அல்லது பயங்கரவாதத்துக்கு எதிரான போரா? எது நடந்திருக்கும்! இதைத் தெளிவாக அறிவதன் விருப்பத்தையே, இந்த வாக்கெடுப்பு விளக்கியுள்ளது. இன்னும் ஆறுமாத காலங்களுக்குள் இதற்கான விருப்புக்களை இலங்கை அரசாங்கம் செயற்பாடுகளில் காட்டவும் வேண்டும். நடப்பவற்றின் கண்காணிப்புக்கள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் நேரடித் தலையீட்டில் இடம்பெறுவது, ஒவ்வொன்றும் ஆதாரங்களுக்கான ஆவணங்களாக்கப்படுவதெல்லாம் அரசாங்கத்துக்கு விழுந்துள்ள மூக்கணாங்கயிறின் பிடியைப் புரிய வைக்கின்றன.

யுத்தம் முடிந்த கையோடு 2009 ஜெனீவாவில் வைக்கப்பட்ட பிரேரணையில் வெல்லக் கிடைத்த இலங்கை, ஏனையதில் எல்லாம் தோற்றே வருகிறதே! ஏன், என்ற சிங்களப் புலத்தின் சந்தேகங்களை எதிரணியினர், ஏறிச் சென்று ஆட்சியைப் பிடிக்கப் பாவிக்காமல் இருக்க வேண்டுமே! இந்தப் பீதியும் அரசுக்கு ஏற்பட்டுள்ள அடுத்த நெருக்கடிதான். "ஒரு கல்லில் இரண்டு மாங்காயா, எவ்வளவும் வீழ்த்தலாம் இதோ பார்" என்றுதான், உள்ள ஆறு மாதங்களுக்கும் இந்த அரசு புறப்படவுள்ளது. 'புலிகளின் சிந்தனையை உயிரூட்ட விரும்புவோர்' என்ற அடைமொழிதான் 2009 இல் ஜெனீவாவில் வெற்றியைத் தந்தது. இருப்பினும் இந்த அடைமொழிக்குள் இத்தனை காலமும் இந்த அரசு பிறமொழியைச் சேர்க்கவில்லை.

சூடான் ஜனாதிபதி ஒமர் அல் பஷீருக்கு விடுக்கப்பட்ட பிடியாணை, பயணத் தடைகள் எல்லாம், எடுத்தெறிந்த போக்குகள் எப்போதும் சரிவாராதவை என்பதற்கான சத்தியங்கள் இல்லையா? எனவே, பொறுப்புக் கூறல், இனவுறவு, பாதிக்கப்பட்டோரை ஆற்றுப்படுத்தல் மற்றும் சகல சமூகங்களுக்குமான சரிநிகர் மனநிலைகளில் செயற்படவுள்ள காலத்திணிப்புக்குள், இலங்கை அரசாங்கம் கால் வைத்திருப்பதாகவே ஜெனீவாத் தோல்வியைக் கருத வேண்டியுள்ளது. இந்த வெற்றிக்கு வழிகோலியது யாரென்று தற்போது எழுந்துள்ள கோணல் பார்வைகளும், குறுக்குக் கேள்விகளும் இருக்கிறதே! இனவுறவுக்கு அரசாங்கம் விரும்பினாலும் இவ்விவாதங்கள் விடும்பாடாய் இல்லை. இதுதான் இதிலுள்ள புதுக் கவலை.



**அதிகார இலக்குகளுக்காக நடத்தப்பட்ட அநீதிகள் மற்றும் ஏனைய இனங்களில், எல்லையின்றி செயற்படும் இனவாதத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது இந்த வாக்கெடுப்பு.**

உண்மையில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய கனடா, பிரிட்டன், ஜேர்மன், மொண்டிநீக்ரோ, மசிடோனியா மற்றும் மார்ஷல் ஆகிய நாடுகளில் முதலுள்ள மூன்றிலும் புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்குகள் மிகைத்துள்ளன. இந்நாடுகளில், பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகுமளவுக்குப் பலங்கள் அதிகரித்துள்ளன. அதிக உள்ளூராட்சி மன்றங்கள், இவர்களின் செல்வாக்குகளுக்கு உட்பட்டும் உள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நினைவுத் தூபி உடைக்கப்பட்டதற்கு எதிராக, முதலில் தீர்மானம் நிறைவற்றி, பரந்து வாழும் தமிழர்களின் கவனத்தை ஈர்த்ததும், நான்கு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் வாழும் கனடாவிலுள்ள உள்ளூராட்சி மன்றம் ஒன்றுதானே. புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்கால் கொண்டுவரப்பட்டதாக நம்பப்படும் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு, Cote d'Ivoire என்ற ஒரேயொரு முஸ்லிம் நாடுதானே ஆதரவளித்தது. 12 முஸ்லிம் நாடுகளுள்ள ஐ.நா மனித உரிமை பேரவையில், ஏனையவை எதிர்த்தும், நடுநிலை வகித்தும் உள்ளன. இலங்கையை ஆதரித்த பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், பங்களாதேஷுடன் ஏனைய ஒன்பது முஸ்லிம் நாடுகளும் இணைந்திருந்தால், 21 ஆதரவுகளுடன் வென்றிருக்கலாம் என்கிறது ஜே.வி.பி. இவ்வாறான ஒரு நிலை நிலவியிருந்தால், நடுநிலை வகித்த ஏனைய ஏழு நாடுகளின் தீர்மானம், நிச்சயமாக வேறாகியிருக்கும்.

இந்த நாடுகளிலும் டயஸ்பொராக்கள் இல்லாமலில்லையே! குறைந்தது, தொப்புள்கொடி உறவுகளில் தங்கியுள்ள நாடும் உள்ளமை எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதானே. இதுதான், புலிகளின் சிந்தனைகளை உயிரூட்டும் முயற்சிகள் என்ற இலங்கை அரசின் அடைமொழியைத் தோற்கடித்து வருகிறது. புலிகளைத் தடை செய்த பிரிட்டன், கனடா மற்றும் இந்தியாவின் நிலைப்பாடுகள் இன ஒடுக்குதல்களுக்கு எதிரானதுதான். மாறாக இறந்துபோன பயங்கரவாதத்துக்கு உயிரூட்டுவதல்ல. மதங்களிலுள்ள மக்களின் நம்பிக்கைகளை பழிவாங்கும் வகையில் நடந்துகொண்ட இலங்கையை முஸ்லிம் உலகு கண்டுகொள்ளவில்லை. இதில், பிராந்திய, தனிப்பட்ட நோக்கங்கள்தான், மூன்று முஸ்லிம் நாடுகளை இலங்கையின் பக்கம் ஈர்த்திருக்கலாம். நடுநிலை வகித்த இந்தியாவுக்கும் இவ்வாறு ஒரு ஓரக் காரணம் இருந்துள்ளது. இந்த இந்தியா பிராந்திய வல்லரசுக்கான வகிபாகத்தை இவ்வாறெல்லாம் நடந்துகொண்டு இழக்கவா போகிறது? சீனாவும், பாகிஸ்தானும் போல சிந்திப்பதில் இலங்கை நலனில் இந்தியாவுக்கு என்ன கிடைக்கப்போகிறது? என்பது காலம் சொல்ல வேண்டிய பதில்.

தமிழ் நாட்டின் தேர்தல் முடியும் வரையிலாவது, வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரைப் பதவி நீக்குமாறு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அழாக் குறையாகக் கோருகிறது. தமிழரான ஜெய்சங்கர், ஈழத் தமிழருக்காக ஜெனிவாவில் எதைப் பேசினார் என்பதுதான், திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல கட்சிகளின் பிரசாரங்கள். இந்த லட்சணத்தில்தான், தமிழ் நாட்டின் இருபது சட்டசபைத் தொகுதிகளை பி.ஜே.பிக்கு விட்டுக்கொடுத்திருக்கிறது அ.தி.மு.க.



**சுஐப்.எம்.காசிம்...**

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

SRI LANKA YOUTH

## விளையாட்டு குழுமம் பயிற்சி முகாமிற்காக பயிற்சி போதனாசியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்

(முழுநேரம்/குறுகியநேரம்/பகுதிநேரம்/வார இறுதி)

1. தடகள விளையாட்டு பயிற்றுவிப்பாளர்
2. விளையாட்டு குழு பயிற்றுவிப்பாளர்
   (வொலிபோல்/பீச் வொலிபோல்/வலைப்பந்து/கூடைப்பந்து/பற்மின்ரன்/கிறிக்கற் உதைபந்து/பெண்கள் உதைபந்து/கபடி/எல்லே/கரம்/செஸ்/கயிறு இழுத்தல்)
3. பயிற்சி குழும பயிற்றுவிப்பாளர்
   (வில்லுஅம்பு எய்தல்/இலக்குப் பார்த்து சுடுதல்/நீச்சல்/கலப்பு சண்டைப் பயிற்சி/ கராட்டி/வுசு/டயிகொண்டோ/ஜிம்னாஸ்டிக்/யோகா/உடல் கட்டமைப்பு)

மேற்குறித்த போட்டிகளுக்காக பிரதேச மட்ட; மாவட்ட மட்ட மற்றும் தேசிய மட்டங்களில் பயிற்சி வழங்குவதற்கு ஆர்வமுள்ள போதனாசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்

**www.nyscsports.com**

இணையத்தளத்தில் போதனாசிரியர் ஆட்சேர்ப்பு செய்யும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் 2021 மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யவும்

தெஷார ஜயசிங்ஹ
தலைவர்/பணிப்பாளர் நாயகம்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
மஹரகம



பெருந்தோட்ட அமைச்சு

## சௌபாக்கியத்தின் நோக்கு

### சிறிய மற்றும் நடுத்தர அளவான தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் வழங்கும் திட்டம் மற்றும் JFPR வழங்குதல் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் JFPR மன்றம்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் குறுகியகால மற்றும் நீண்டகால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதியமைச்சு மற்றும் பெருந்தோட்ட அமைச்சு தகைமையுள்ள கலந்துகொள்ளக்கூடிய பத்து (10) நிதி நிறுவனங்களின் பங்களிப்பில் இந்த செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகிறது

**சிறிய மற்றும் நடுத்தர அளவான தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் வழங்கும் முறை மற்றும் JFPR வழங்கல்**

கடன்

- தகைமை பெறும் குழுக்கள் - ஐம்பது ஏக்கர் (50) இற்கு குறைந்த காணி உடைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தேயிலைதோட்ட உரிமையாளர்கள்.
- கடன்வகை - முதலீடு
- அதிகூடிய கடன்தொகை - ரூ.30,000,000.00
- வட்டி விகிதம் 4.5% - 5% (கிட்டத்தட்ட)*
- கடன் மீண்டும் செலுத்தும் காலம் - அதிகூடியதாக பத்து (10) வருடம்
- வட்டி சலுகை காலம் - தேயிலை மீள் பயிர்செய்கை மற்றும் புதிய பயிரிடுதலுக்காக குறைந்தபட்சம் இரண்டு (02) மற்றும் வேறு விடயங்களுக்காக அதிகூடியது ஒரு வருடம் (01)
- தகைமை பெறும் பிரிவுகள் - மீள் பயிர்செய்கை, புதிய பயிரிடல், வெற்றிட நடுகை (Infilling), நாற்று மேடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் மற்றும் மண் முகாமைத்துவம் மற்றும் இயந்திரமயம் போன்ற விவசாய பாவனையின் மூலம் தேயிலை கொழுந்து உற்பத்தியை மேம்படுத்தும் சகல வகையான செயற்றிட்டங்கள்

**வழங்கல்கள்**

- ❖ தகைமைபெறும் குழுக்கள் - (10) பத்து ஏக்கரக்கு குறைந்த காணி உரித்துடைய சிறிய தேயிலைதோட்ட உரிமையாளர்கள்
- ❖ வழங்கலுக்கான தகைமை பெறும் கடன் தொகை - அதிகூடியது ரூ.5,000,000.00
- ❖ தகைமை பெறும் செயற்பாடுகள் - தேயிலை மீள் பயிர்செய்கை மற்றும் புதிய பயிரிடல்
- ❖ தகைமைபெறும் வழங்கல் : அடிப்படைக் கடன் தொகையில் மீளச் செலுத்தும் பெறுமதியில் 10% - 20% குறைக்கப்படல்

**கலந்துகொள்ளும் நிதி நிறுவனங்கள்**

| | |
|---|---|
| ❖ இலங்கை வங்கி | ❖ டி.எப்.சி.சி.வங்கி |
| ❖ மக்கள் வங்கி | ❖ கொமர்ஷல் வங்கி |
| ❖ பிரதேச அபிவிருத்தி வங்கி | ❖ செலான் வங்கி |
| ❖ ஹட்டன் நெஷனல் வங்கி | ❖ சம்பத் வங்கி |
| ❖ தேசிய அபிவிருத்தி வங்கி | ❖ நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி |

**தகைமை பெறும் பொதுவான விதிகள்**

1. தேயிலை காணி பதிவுசெய்யப்படல் வேண்டும்
2. தற்போது பெற்றுக்கொண்டுள்ள கடன்களை செலுத்த அனுமதியளிக்கப்படமாட்டாது
3. சௌபாக்யா கொவிட் 19 மீள கட்டியெழுப்பும் வசதிகளின் கீழ் தற்போது கடன் பெற்றுள்ள சிறிய, மற்றும் நடுத்தர அளவான தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு இதன்கீழ் கடன்பெறும் தகைமை உண்டு.

தரப்பட்டுள்ள வட்டி விகிதத்தில் சந்தை நிலைமையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒரு தடவை நாளது வரைக்கும் உட்படுத்தப்படும்.

இந்த கடன்/வழங்கல்கள் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற தேயிலைக்கான - உரிமையாளர்கள் தயவுசெய்து மேலே தரப்பட்டுள்ள கலந்துகொள்ளும் நிதி நிறுவனங்களின் ஒரு கிளையை நாடுங்கள்

Japan Fund for Poverty Reduction

From the People of Japan

- பெருந்தோட்ட அமைச்சு
- கம்பனி தோட்ட மீளமைப்பு, தேயிலை மற்றும் றப்பர் தோட்டம் சார்ந்த பயிர்செய்கை மற்றும் தொழிற்சாலை புதுப்பித்தல் மற்றும் தேயிலை மற்றும் றப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு
- இலங்கை தேயிலை சபை
- சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை
- நிதி அமைச்சு
- அபிவிருத்தி நிதித்திணைக்களம்

மேலதிக விபரங்களுக்கு

பெருந்தோட்ட அமைச்சு - 0112186160

சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை - 0117909056

- 0117909034

இலங்கை தேயிலை சபை- 0112580152

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## இலங்கையில் வர்த்தக நிறுவனங்களின் படிமுறை வளர்ச்சி : 7

# பேரளவு கைத்தொழில் விரிவாக்கத்தைப்பெற என்ன செய்ய வேண்டும்?

1980களில் இருந்து கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் இலங்கையில் பதவியிலிருந்த அரசாங்கங்கள் பெரும் எடுப்பில் இலங்கையில் கைத்தொழில் விரிவாக்கத்தை அடையப்போவதாக பிரசாரங்களைச் செய்துவந்த போதிலும் யதார்த்தத்தில் இலங்கைப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்பட்டளவு பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தவல்ல கைத்தொழில் பெருக்கம் இடம் பெறவில்லை. எவ்வாறாயினும் இலங்கையின் கைத்தொழிற்துறை தேக்க நிலையிலும் காணப்படவில்லை என்பதனையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகள் இலங்கையின் கைத்தொழில் துறையின் முதுகெலும்பாகக் காணப்படுகின்றன. மொத்த கைத்தொழில் முயற்சிகளில் 75 சதவீதத்திற்கு மேற்பட்டவையாக இவை உள்ளன. அத்துடன் மொத்த தொழில் வாய்ப்புகளில் 45 சதவீதத்திற்கு இவை பங்களிப்புச் செய்வதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்களிப்பை இவை வழங்குகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை உள்நாட்டுச் சந்தைக்கு பொருள்களை வழங்கும் நிறுவனங்களாகும். ஏற்றுமதிச் சந்தையுடன் தொடர்புடைய சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகும்.

ஏற்றுமதிகளுடன் தொடர்புடைய பெரிய கைத்தொழில் முயற்சிகளின் விரிவாக்கம் போதியளவு இடம்பெறாமையே இலங்கையின் பிரச்சினையாகும். அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளுக்கும் ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழில் முயற்சிகளுக்கும் இடையில் பின்னோக்கிய அல்லது முன்னோக்கிய தொடர்புகளோ காணப்படவில்லை. ஜப்பான் போன்ற நாடுகளில் அவற்றின் ஏற்றுமதிக் கைத்தொழில் துறையோடு அவற்றின் சிறிய நடுத்தர கைத்தொழில்கள் மற்றும் குடிசைக் கைத்தொழில்களும் நெருக்கமாகத் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன.

உதாரணமாக, டொயோட்டா அல்லது நிசான் போன்ற வாகன உற்பத்தியாளர்களின் வாகன உதிரிப்பாகங்களில் பெரும்பாலானவற்றை மேற்படி சிறிய நடுத்தரக் கைத்தொழில்களே உற்பத்தி செய்தன. இத்தகைய தொடர்புகள் மூலம் அந்நாடுகளில் பெருங்கைத் தொழில்களுடன் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் விரிவாக்கமும் ஏக காலத்தில் ஏற்பட்டது. மாறாக இலங்கையில் பெரிய அளவிலான ஏற்றுமதிக் கைத்தொழில்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்பதுடன் அவற்றுக்கும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கும் இடையில் எதுவிதத் தொடர்புகளும் காணப்படவில்லை. பெரிய ஏற்றுமதிக் கைத்தொழில்கள் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடும்போது எதிர்நோக்க நேரும் உள்நாட்டுச் செலவுகள் மிக உயர்வாகக் காணப்படுகின்றன.



அதாவது அரசாங்க நிருவாகக் கடப்பாடுகளைப் பேணுதல் இறக்குமதி செய்யும் நாட்டினால் விதிக்கப்படும் பொருளின் தரம் குறித்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் என்பவற்றுக்காக அதிக செலவுகளை எதிர்நோக்க நேரிடுகிறது. எனவே தீர்வைத் தடைகளுக்கு மேலதிகமாக நிருவாகக் கட்டுப்பாடுகளால் ஏற்றுமதிகளின் செலவுகள் அதிகரிக்கின்றன. உதாரணமாக இலங்கையிலிருந்து பொருளை ஏற்றுமதி செய்யும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளன. இவை காலதாமதத்தையும் பணச் செலவுகளையும் ஏற்படுத்துகின்றன. பல்வேறு அரச நிறுவனங்களின் ஒப்புதல்களையும் சான்றிதழ்களையும் பெறவேண்டிய நிலை உள்ளமையே அதற்குக் காரணமாகும்.

அத்தகைய செலவுகளையும் காலதாமதங்களையும் எதிர்கொண்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களுடன் வர்த்தகம் செய்து விரிவாக்கம் அடையும் அளவுக்கு சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் இருக்கப்போவதில்லை. பெரிய ஏற்றுமதியாளர்களே ஏற்றுமதிச் செலவினங்களையும் காலதாமதங்களையும் சமாளிக்க முடியாதுள்ளதாகக் கூறுகின்றனர். அத்துடன் அரசு அதிகாரிகள் வேண்டுமென்றே இவற்றைச் செய்வதன் மூலம் வாரந்தேடலில் (rent seeking behaviour) ஈடுபடுவதாகக் குற்றஞ் சாட்டுகின்றனர். இத்தகைய செலவுகளைக் குறைத்து ஏற்றுமதியாளர் ஒருவர் ஒரே நிறுவனத்தில் மாத்திரம் ஏற்றுமதி விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஏற்றுமதி அனுமதியைப் பெறும் வண்ணம் ஒற்றைச் சாளர (single window) நடைமுறையினை அறிமுகப்படுத்த சிலகாலத்துக்கு முன்னர் முயற்சிக்கப்பட்டது. ஆயினும் அது நடைமுறைப்படுத்தப்பட்டதா இல்லையா என்பது தெரியவில்லை. அதனுடன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் அதனை நடைமுறைப்படுத்த விரும்பவில்லை என்பதனை நேரடியாக அவதானிக்கும் வாய்ப்புக் கிட்டியமையை இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். எனவேதான் இலங்கைக் கைத்தொழிற்துறையின் முதுகெலும்பாகக் கருதப்படும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகள் பெரும்பாலும் உள்நாட்டுச் சந்தைக்காக உற்பத்தி செய்வனவாக உள்ளன.

எனவே வெளிப்படைத்தன்மையான இலகுபடுத்தப்பட்ட நடவடிக்கைகள் மூலம் சிறிய தொழில் முயற்சியாளரும் வெளிநாட்டுச் சந்தைகளை இலகுவில் அடையும் வண்ணம் நிருவாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்முலம் இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டுச் சந்தைத் தேவைப்பாடுகள் பற்றியும் போட்டித் தன்மை பற்றியும் புரிதலுக்கு வரமுடியும். பரிவாரங்களுடன் வெளிநாடுகளுக்குச் சென்று வர்த்தகக் கண்காட்சிகளைச் செய்வதனால் ஏற்றுமதிக் கைத்தொழில் அதிகரிப்போ உள்நாட்டுக் கைத்தொழில் விருத்தியோ ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது. களத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு

**'டொயோட்டா அல்லது நிசான் போன்ற வாகன உற்பத்தியாளர்களின் வாகன உதிரிப்பாகங்களில் பெரும்பாலானவற்றை மேற்படி சிறிய நடுத்தரக் கைத்தொழில்களே உற்பத்தி செய்தன. இத்தகைய தொடர்புகள் மூலம் அந்நாடுகளில் பெருங்கைத் தொழில்களுடன் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் விரிவாக்கமும் ஏக காலத்தில் ஏற்பட்டது. மாறாக இலங்கையில் பெரிய அளவிலான ஏற்றுமதிக் கைத்தொழில்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்பதுடன் அவற்றுக்கும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கும் இடையில் எதுவிதத் தொடர்புகளும் காணப்படவில்லை'**

நீண்டகாலத் தீர்வுகளை வழங்கிய நாடுகளே வெற்றிகரமான ஏற்றுமதி விரிவாக்கத்தையும் கைத்தொழில் விருத்தியினையும் எய்தின. அத்துடன் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை மையப்படுத்திய கைத்தொழிலாக்கத்தின் மூலம் துரித கைத்தொழில் விரத்தியிகையோ நாடுகள் எதிர்பார்க்க விரும்பும் ஆச்சரியங்களையோ அடைய முடியாது.

பாரிளவிலான முதலீட்டுடன் மேற்கொள்ளப்படும் பேரளவுக் கைத்தொழில் விரிவாக்கத்தின் ஊடாகவே ஒரு நாடு கணிசமானளவு கைத்தொழில் விரிவாக்கத்தினை கண்ணுக்கு எட்டிய எதிர்காலத்தில் எய்த முடியும். இலங்கையில் வாய்ச்சவடால் பேசும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பெரும் எண்ணிக்கையில் இருந்த போதிலும் பெரும்பாய்ச்சலை எற்படுத்தவல்ல பாரியளவு முதலீட்டை நாட்டில் கொட்டக் கூடியளவுக்கு இடரை எதிர்நோக்கவல்ல உள்நாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் இல்லை. அவ்வாறு இருப்பினும் இலங்கைக்கு வெளியிலேயே தமது பணத்தைக் கொட்ட முயல்கின்றனர். அரசியல் வாதிகளுடன் உள்ள தனிப்பட்ட தொடர்புகள் காரணமாக ஒருசில முதலீடுகள் நாட்டுக்குள் வந்தாலும் காலப்போக்கில் அவை கட்டிய கோட்டைகள் சரிந்து விழுவதையும் அரச அனுசரணைகளை நாடிநிற்பதையும் கடந்த கால அனுபவங்களிலிருந்து உய்த்துணர முடிகிறது.

நாட்டில் நிலவும் முதலீட்டாளலுக்கான பற்றாக்குறையை வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டு பூர்த்தி செய்யலாமென கடந்த காலங்களில் பெருமளவு எதிர்பார்க்கப்பட்டது. குறிப்பாக 2009 இல் உள்நாட்டு யுத்த முடிவின் பின்னர் இலங்கை மிகப்பரியளவில் வெளிநாட்டு முதலீட்டைக் கவருமெனவும் எதிர்வு கூறப்பட்டது. ஆயினும் அதே காலப்பகுதியில் இலங்கையுடன் சமமான வைத்த நோக்கப்பட்ட நாடுகள் பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் செயலாற்றும் எவ்வகையிலும் திருப்திகரமானதாக இல்லை.

மறுபுறம் ஏன் இலங்கையால் எதிர்பார்க்கப்பட்டளவு முதலீடுகளைப் பெறமுடியவில்லை எவை அவற்றை ஏனைய நாடுகளை நோக்கி நகர்த்தின. என்ன செய்தால் அவற்றை எதிர்காலத்தில் கவர முயற்சிக்கலாம் என்பது பற்றிய சுயபரிசீலனைகள் நேர்மையாக மேற்கொள்ளப்பட்டனவா? அவதானிக்கப்பட்ட குறைபாடுகளைக் களைந்து முன்னேற்றங்கான முயற்சிக்கப்பட்டனவா? என்பது பற்றிய வினாக்கள் விடையற்ற நிலையிலேயே உள்ளன. நேர்மையாக இவற்றுக்கு விடைகண்டு நிபுணர்களின் துணையுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் எதிர்காலத்திலாவது ஓரளவு முன்னேற்றம் காணலாம். அல்லாதுவிடின் ஒருவரை ஒருவர் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டிக்கொண்டு இப்போதிருப்பது போன்றே எப்போதும் இருக்கலாம்.

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# வடகொரிய ஏவுகணைப் பரிசோதனையும் அமெரிக்க - வடகொரிய அரசியலும்

உலகளாவிய அரசியலில் மீளவும் வடகொரிய விடயம் முதன்மை பெற ஆரம்பித்துள்ளது. அதிலும் ஜோ பைடன் ஆட்சிக்கு வந்த பின்பு அமெரிக்க, வடகொரிய அரசியல் அதிக முக்கியத்துவம் பெறுகின்ற தொன்றாக காணப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் ஆட்சியில் இருக்கும் போது வடகொரியாவுடன் ஏற்பட்ட பேச்சுவார்த்தை முறிவடைந்த போதும் இரு நாட்டுக்குமான புரிந்துணர்வு நிலவியது. அமெரிக்க ஆட்சி மாற்றம் வரையும் இரு நாட்டுக்குமான உறவு சுமூகமானதாகக் காணப்பட்டது. இத்தகைய சுமூக நிலைக்கு அமெரிக்க நிர்வாகத்தின் அணுகுமுறையே பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது. அதிலிருந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் வடகொரிய, அமெரிக்க அரசியல் நகர்வுகள் அமைந்துள்ளன. இக்கட்டுரையும் ஜோ பைடன் ஆட்சிக்கு வந்ததன் பின்பான அமெரிக்க, வடகொரிய உறவினை தேடுவதாக அமையவுள்ளது.

கடந்த 25.03.2021 அன்று வடகொரியா ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையா என்பதில் குழப்பம் நிலவுவதாக ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகின. அதே நேரம் இத்தகைய பரிசோதானைக்கு முன்பு இரு குறுந்தூர ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்ததாக தெரியவருகிறது. கப்பலில் இருந்து ஏவப்படும் குறுந்தூர ஏவுகணைகளை பரிசோதித்துள்ளது. இவை எதுவும் ஐக்கிய நாடுகள் சபையின் தடைக்கு உட்படாதவை என்பதனால் அதிக நெருக்கடியை வடகொரியாவுக்கோ அயல் நாடுகளுக்கோ ஏற்படுத்தவில்லை. ஆனால் ஐ.நா பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் வடகொரியா அச்சுறுத்தல் விடுக்கக் கூடியதாக கருதப்படும் தடைசெய்யப்பட்ட ஏவுகணையை பரிசோதித்துள்ளதாக தெரியவந்துள்ளது.இதனை தென் கொரியாவும் ஜப்பானும் உறுதிப்படுத்தியிருப்பதுடன் அமெரிக்க புலனாய்வுத் துறையும் தெளிவுபடுத்தியுள்ளது. ஜப்பானியக் கடலில் இவ்விரு ஏவுகணைகளும் பரிசோதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவும் ஜப்பானும் தெரிவித்துள்ளன. ஜப்பானும் தென்கொரியாவும் இத்தகைய வடகொரியாவின் நடவடிக்கையைக் கண்டித்ததுடன் பாதுகாப்புச் சபை நாடுகளுடன் உரையாடிவருகின்றன.

ஆசியபசுபிக் பிராந்திய படைகளை கண்காணிக்கும் இராணுவக் கட்டளைப்பிரிவானது வடகொரியாவின் சட்டவிரோத ஆயுத நிகழ்ச்சித் திட்டமானது பிராந்திய நாடுகளை



அச்சுறுத்துவதுடன் சர்வதேசத்தின் அமைதியைக் குலைப்பதாக தெரிவித்துள்ளன. குறுந்தூர ஏவுகணையை பரிசோதித்த நான்கு நாட்களில் இத்தகைய நீண்ட தூர ஏவுகணையை வடகொரியா பரிசோதித்துள்ளது கவனிக்கத்தக்கதாகும். குறுந்தூர ஏவுகணைப் பரிசோதனை ஒரு அச்சுறுத்தல் இல்லை என ஜோ பைடன் கருத்து வெளியிட்ட குறுகிய காலத்தில் வடகொரியா அடுத்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு வட கொரியா செயல்பட்டமைக்கு தெளிவான நோக்கம் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

ஒன்று தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து இப்பிராந்தியக் கடல் பிரதேசத்தில் மேற்கொள்ளவுள்ள கடல்பயிற்சியை எச்சரிக்கும் விதத்தில் வடகொரியாவின் நடவடிக்கை அமைந்துள்ளதாக தெரிகிறது. குறிப்பாக ட்ரம்ப் நிர்வாகம் கைவிட்ட இரு நாட்டுக்குமான கடற்படைப் பயிற்சியை மீளவும் ஜோ பைடன் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளமை கவனத்திற்குரியதாகும். அத்தகைய நடவடிக்கையை தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதும் வடகொரியா, அதனை எதிர்கொள்வதற்கு தயாராகின்றது. ஜப்பான் தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து வடகொரியா மீது தாக்குதல் நிகழ்த்தலாம் என்ற அச்சுறுத்தலைக் கொண்டுள்ளது. அத்தகைய தாக்குதல்கள் பல வட, தென் கொரியார்களுக்கிடையில் பல தடவை நிகழ்ந்துள்ளது. அதனால் வடகொரியா எப்போதும் தனது பாதுகாப்பினை முதன்மைப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. அதன் அணுவாயுத பலமும் அத்தகைய எச்சரிக்கை யுடனேயே உருவானது. அதுவே வடகொரியாவின் பாதுகாப்பாக தற்போதுள்ளது என்பதை நிராகரித்துவிட முடியாது.

இரண்டு தென் சீனக்கடல் பகுதியில் சீனாவுக்கு நெருக்கடி கொடுக்கும் விதத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அதனை திசைதிருப்பவும் அதற்கு பதில் நெருக்கடி கொடுக்கவும் வடகொரியா முயல்வதைக் காணமுடிகிறது. ஜோ பைடன் ஆட்சிக்கு வந்த பின்பு தென் மற்றும் கிழக்கு சீனக்கடல் பகுதிகளில் அமெரிக்க கப்பல்களது நடமாட்டம் அதிகரித்துவருகிறதை அவதானிக்க முடிகிறது. அதன் மூலம் சீனா மட்டுமல்ல வடகொரியாவும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது. அத்தகைய முயற்சியை மட்டுப்படுத்தவும் பதில் வழங்கவும் வடகொரியா நீண்ட தூர இலக்கைத் தாக்கும் ஏவுகணைகளை பரிசோதித்திருக்க வாய்ப்புள்ளது.

மூன்று இந்தோ,பசுபிக் நாடுகளது பிராந்தியத்தை நோக்கி சீனாவும் அமெரிக்காவும் அதிக பிரயத்தனம் கொண்டுள்ளன. அதில் அமெரிக்கா தனியான படைப்பிரிவை அமர்த்தி இப்பிராந்தியத்தை கண்காணித்து வருகிறது. அத்தகைய படைப்பிரிவின் ரோந்து நடவடிக்கையும் நகர்வுகளும் வடகொரியாவின் இருப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதுடன் குவாட் நாடுகளது ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகிறது. அதிலும் ஜோ பைடன் பதவியேற்ற பின்பு அத்தகைய நடவடிக்கை அதிகரித்துள்ளது. அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலைக்குள் வடகொரியாவும் சீனாவும் தள்ளப்பட்டுள்ளன. சீனாவின் நெருக்கமான நட்பு நாடான வடகொரியா அமெரிக்காவின் நகர்வுகளை தகர்க்கும் உத்திகளை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதனை இப்பிராந்தியத்தில் பலதடவை அவதானிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. சீனா, வடகொரியாவையும் வடகொரியா, சீனாவையும் பாதுகாக்கும் பொறிமுறையைக் கொண்டிருப்பதைக் காணமுடிந்தது. அதனுடைய நீட்சியே தற்போதைய நகர்வுமாகும். அமெரிக்கா எப்படி தென்கொரியாவையும் ஜப்பானையும் கையாளுகிறதோ அதே போன்றே சீனாவும் செயல்படுகின்றது. இத்தகைய அரசியல் உபாயம் மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருப்பதை காணலாம்.

நான்கு அமெரிக்காவின் இன்னொரு சவால் வடகொரியாவுக்கு ஜோ பைடன் காலத்தில் ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்திலும் போர் கொதிநிலையுடன் தொடங்கிய அமெரிக்க வடகொரிய அரசியல் சமாதானம் மூலம் முடிபுக்கு வந்தது. அதற்கு அடிப்படைக் காரணம் வடகொரியாவின் அணுவாயுத பலமேயாகும். அத்தகைய அணுவாயுதத்தை நீண்ட தூர ஏவுகணையில் பரிசோதித்து வெற்றி கொள்வதே வடகொரியாவின் பாதுகாப்புக்கு சாதகமானது என்பதை கிம்ஜோங்உன் உணராமலில்லை. அதனை நோக்கியே வடகொரியாவின் நகர்வு காணப்படுகிறது. தற்போது பரிசோதித்த ஏவுகணை தொடர்பில் குழப்பகரமான தகவல்கள் உண்டு. அது குறுந்தூர ஏவுகணை அல்லது ஆட்லரி செல் போன்ற ஏதோவெரு ஆயுதம் என ஆரம்பத்தில் அமெரிக்கத் தரப்பு அறிவித்திருந்தது. பின்பே ஜப்பான் தென்கொரியா எச்சரித்த பின்பே அது நீண்ட தூர ஏவுகணை என அமெரிக்கா அறிவித்துள்ளது. அவ்வாறு பார்க்கும் போது வடகொரியாவிடம் உள்ள ஆயுதங்கள் தொடர்பில் தெளிவான தகவல் அமெரிக்க புலனாய்வுத் துறையிடமே கிடையாது. காரணம் வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனை தொடர்பில் ஜோ பைடனிடம் பத்திரிகையாளர் கேட்ட போது வேடிக்கையாக சிரித்திருந்தார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஐந்து ஜப்பானும் தென்கொரியாவும் இராணுவ ரீதியில் வலுவடைகின்றதைக் காணமுடிகிறது. இது வடகொரியாவின் பாதுகாப்புக்கு அதிக ஆபத்தானதாகவே அமைய வாய்ப்புள்ளது. அதனால் வடகொரியாவும் அந்த நாடுகளுக்கு ஏற்ப ஆயுதங்களை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்குடன் செயல்படுகின்ற போக்கே ஏவுகணைப் பரிசோதனையாகும். குறிப்பாக ஜப்பான் தனது பாதுகாப்புச் செலவீனத்தை வேகமாக அதிகரித்து செல்வதுடன் இராணுவத்தினை பெருக்கவோ ஆயுதங்களை கொள்வனவு செய்து பெருக்கவோ முடியாது என்ற அரசியலமைப்பு விதிகளை ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் போதே நீக்கிவிட்டது. இதனால் அதிக அச்சுறுத்தல் வடகொரியாவுக்கு ஏற்பட்டுள்ளது. பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தடுப்பு அரணாக ஜப்பான் மாறிவருகிறது. ஒக்கினாவா மட்டுமல்ல ஜப்பானே பெரும் இராணுவ வலிமையுடைய நாடாக விளங்குகிறது.

எனவே வடகொரியாவின் ஏவுகணை பரிசோனை மூலம் இப்பிராந்திய நாடுகளை மட்டுமல்ல அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளையும் எச்சரித்துள்ளது. அதில் குறிப்பான செய்தி அமெரிக்காவின் நகர்வுகளுக்கு எதிரானதாகும். அமெரிக்கா தென்கொரியாவையும் ஜப்பானையும் பலப்படுத்துவதே வடகொரியாவின் உடனடி நெருக்கடியாகும். ஜோ பைடன் காலம் மீளவும் வடகொரிய அமெரிக்க முறுகலுக்கான காலமாகவே தெரிகிறது. எந்தவித இராஜதந்திர நகர்வுகளும் இன்றி இராணுவ முனைப்புகளை கொண்டிருப்பதோடு போர் முனைகளைத் திறக்கும் உத்தியை அமெரிக்கா மீளவும் ஆரம்பித்துள்ளது. குறிப்பாக தென் சீனக்கடல் தைவான் ஈரான் சிரியா போன்ற பகுதிகளில் அமெரிக்க போர் உத்திகளே அதிகம் பிரதிபலிகிறது. இது ஆபத்தான தருணத்தை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. வடகொரியாவைப் பொறுத்து அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை அடுத்துவரும் வாரங்களில் ஜோ பைடனால் அறிவிக்கப்படும் போதே முழுமை நிலை தெரியவரும். ஆனாலும் அதிகம் இராஜதந்திர நகர்வை விட இராணுவ நகர்வே அதிகமாகக் காணப்பட வாய்ப்புள்ளது.

தினகரன் வாரமஞ்சரி

# மஞ்சரி மாருதம்



# பசறை பஸ் விபத்து

## பாதிப்படைந்த குடும்பங்கள் கைதூக்கி விடப்பட வேண்டும்

எல்லா பொழுதுகளும் நல்ல பொழுதுகளாக அமைய வேண்டும் என்றே அனைவரும் எதிர்பார்க்கின்றோம். எனினும் சில சமயங்களில் விதியின் கோரத் தாண்டவத்தால் சில பொழுதுகள் யமனுக்குரியவையாக மாற, சிலரது வாழ்க்கை சின்னாபின்னமாகி விடுகின்றது.

கடந்த இருபதாம் திகதி சனிக்கிழமை லுணுகலையிலிருந்து கொழும்பு நோக்கி காலை சுமார் 6.20 மணியளவில் புறப்பட்ட என்.சீ.ஜி. தனியார் பஸ் பயணத்தை ஆரம்பித்த பயணிகள் அன்றைய நாளில் தமது வாழ்க்கை முற்றுப் பெற போகிறது அல்லது உடல் உபாதைகளை சந்திக்க போகிறது என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். அந்த பஸ்சில் பயணித்தால் தமது அலுவல்களை நேரகாலத்தோடு கவனித்து அடுத்ததைப் பார்க்கப்போய் விடலாம் என்ற எதிர்பார்ப்பில் இந்த பஸ்சில் ஏறுவோர் பலர். பதுளை, பசறை போன்ற இடங்களுக்கு தொழிலுக்கு செல்வோரும், பதுளை மாகாண வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக செல்வோரும், பாடசாலை மாணவர்களும், வேறு தேவைகளுக்காக செல்வோரும் வழமையாக இவ்வண்டியில் பயணிப்பது வழக்கம்.

பஸ் விபத்தை சந்தித்த தினம் சனிக்கிழமை ஆதலால் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இவ்வண்டியில் பெருமளவில் பயணித்திருக்கவில்லை. வழமையாகவே வேகமாக பயணிக்கும் பஸ் வண்டி சுமார் 7.00 மணியளவில் பதுளை செங்கலடி வீதியின் 13 ஆம் கட்டை பகுதியில் உள்ள மெத்தை கடை பகுதியை அண்மித்திருந்தது, எதிர்த்திசையில் வந்த கனரக டிப்பர் வாகனத்தை கடந்து செல்ல முற்பட்ட வேளையில் திடீரென வீதியை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது.

சுமார் 250 அடிக்கும் மேற்பட்ட பள்ளத்தில் பஸ் சுக்குநூறாகி விழும் போது பஸ் நான்கு முறை புரண்டு சென்றதாக விபத்து சமயத்தில் பஸ்சில் சிக்குண்டு காயமடைந்த பாடசாலை மாணவர் தெரிவித்தார். பஸ் கற்பாறை படுக்கையில் புரளும்போது அதில் உறங்கி கொண்டும், இருக்கைகளில் அமராமல் நின்று கொண்டும் பயணித்தவர்கள் பஸ்சினுள்ளே அங்குமிங்கும் தூக்கியெறியப்பட்டுள்ளார்கள். இருக்கைகளின் கம்பிகளை பற்றி பிடித்துக்கொண்டு பயணித்தவர்களில் சிலர் தடம்புரண்டு பள்ளத்தில் விழும் வரை கம்பிகளை இறுக பற்றிக்கொண்டு உயிருக்கு போராடினர். அவ்வாறானவர்களில் பெரும்பாலானோர் காயங்களுடன் உயிர் தப்பினர். சிலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



## வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டுவதில் பயன் இல்லை!

பதினான்கு பேர் உயிரிழக்கவும் 33கும் மேற்பட்டோர் காயமடையவும் காரணமான பஸ் விபத்து 13ஆவது மைல்கல், மெத்தகடையில் பொருத்தப்பட்டிருந்த சீ.சி.டி.வி கமராவில் பதிவாகியிருந்தது. இக்காட்சியில் குறித்த வீதியில் வீழ்ந்து அகற்றப்படாமல் இருக்கும் கற்பாறைக்கு அருகில் கனரக டிப்பர் தரித்து நிற்பதையும், எதிர்திசையில் வேகமாக வரும் பஸ், வந்த வேகத்திலே டிப்பரை கடந்து செல்ல முற்படுகையில் குடை சாய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்விபத்தில் பஸ்ஸின் சாரதி இறந்து விட்டதாக ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகின. எனினும் அவர் காயங்களுடன் உயிரோடு இருப்பதாக பின்னர் தெரியவந்தது. பஸ் விபத்திற்குள்ளாகிய சந்தர்ப்பத்தில் சாரதியின் இருக்கைக்கு அருகில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட நிலையிலே சாரதி இறந்து விட்டதாகவே முதலில் நம்பப்பட்டது. பஸ் விபத்திற்குள்ளாகிய சில நிமிடங்களிலேயே விபத்து பற்றிய செய்தி காட்டுத் தீயாக பரவியது. சம்பவ இடத்தில் திரண்ட ஊர் மக்களும், அயலவர்களும் இணைந்து விபத்தில் சிக்குண்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபடத் தொடங்கிய வேளையில் பசறை பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணியில் கைகொடுத்தனர்.

விபத்து இடம்பெற்றதும் ஏழு பேர் இறந்ததாக முதல் தகவல் கசிந்தது. காயங்களுடன் மீட்கப்பட்ட பயணிகள் பசறை ஆதார வைத்தியசாலை, பதுளை மாகாண வைத்தியசாலை என்பவற்றில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்ல 8 அம்பியூலன்ஸ் வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. நண்பகல் வேளையில் 14 பேர் உயிரிழந்துள்ளதாக பசறை பொது சுகாதார வைத்திய அதிகாரி கே.எம். சமரபந்து உத்தியோகபூர்வமாக தகவல் வெளியிட்டு இருந்தார். மீட்பு பணி இடம்பெற்று கொண்டிருந்த வேளையில் ஆயிரக்கணக்கான மக்கள் சம்பவ இடத்தில் திரண்டதால் பொலிஸாரால் போக்குவரத்து தடை ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த பஸ் விபத்தில் மீதும்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ராமன் நாகரத்தினம், 24ஆம் கட்டை, வெல்லவெலயைச் சேர்ந்த ஜயதுன் பீபி, ஹலிமா உம்மா, சோலண்ட்ஸ் தோட்டத்தில் வசித்த சுப்பிரமணியம் ராஜேந்திரன், ஹொப்டன், யப்பாமையை சேர்ந்த ஆர். எம்.எச்.சந்தமாலி, லுணுகலையை சேர்ந்த எம். ஏ.எச். சத்சரனி, புகைப்படக் கலைஞர் பொன்னலகன் டெனில் ஹரிகரன், அடாவத்தை தோட்டத்தில் வசித்த ஏ. நோவா, பீ. மொடோனா தம்பதிகள், தேஷ்போக்கை சேர்ந்த வெள்ளையன் சுப்பிரமணியம், மீதும்பிட்டியவைச் சேர்ந்த பாக்கியநாதன் யோகதாஸ், யப்பாமையை சேர்ந்த ஆர். எம். அசோக பத்மகுமார, எல்டராடோ, அடாவத்தையை சேர்ந்த ஆசிரியர் பெருமாள் முரளிதரன் மற்றும் ஹொப்டன், 19ஆம் கட்டையைச் சேர்ந்த சொக்கன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.



இறுதி யாத்திரைக்காக நோவா, மெடோனா தம்பதியினர்





இவர்கள் தவிர காயமடைந்த 33 பேரில் 5 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். விபத்தை எதிர்நோக்கிய பஸ் வண்டியில் சிறார்கள் இருந்த போதும் அவர்கள் பெரிய பாதிப்புகள் ஏதுமின்றி உயிர் தப்பியுள்

ஆ. புவியரசன் ...

ளனர். காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களில் 9 பேருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் இயல்பு நிலைமைக்கு திரும்ப நீண்ட காலம் எடுக்குமென கூறப்படுகிறது. சிலர் விபத்தை சந்தித்த அதிர்ச்சியில் இருந்து மீளமுடியாது உள்ளனர். இதன் காரணமாக அவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாகாண வைத்தியசாலையின் ஆலோசனையின் பேரில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சையளிப்பதற்காக விசேட வைத்திய குழுவும், சுகாதார குழுவும் அமைக்கப்பட்டு களப் பணிக்கு அனுப்பப்பட்டிருந்தன. இவர்களின் முதற்கட்ட சிகிச்சையால் உயிரிழப்புகள் குறைக்கப்பட்டிருந்தன. பஸ் விபத்து தொடர்பான தகவல்கள் இவ்வாறு இருக்கையில் உயிரிழந்தவர்களின் பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. உயிரிழந்தவர்களின் அதிகமான பிள்ளைகள் லுணுகலை ஸ்ரீ இராமகிருஷ்ணா இந்து கல்லூரி மாணவர்கள்.

அடாவத்தையை சேர்ந்த நோவா, மெடோனா தம்பதிகள் சம்பவ தினம் பதுளை மாகாண வைத்தியசாலையின் கண் சிகிச்சை பிரிவில் கணவன் நோவாவிற்கு சிகிச்சை பெறும் நோக்கில் வந்துள்ளனர். பஸ் வண்டி நேரத்துடனே புறப்பட்டு சென்று விட்டதால் முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்திச் சென்று குறித்த பஸ்ஸில் ஏறி பயணத்தை தொடர்ந்த வேளையில் 13ஆம் கட்டை பகுதி விபத்தில் உயிரிழந்தனர். இவர்களுக்கு 9, 4 வயதுகளில் இரு மகள்மாரும், 8 வயதில் ஒரு மகனும் உள்ளனர். முத்த மகளும், மகனும் முறையே தரம் 4, 3 வகுப்புகளில் கல்வி கற்று வருகின்றனர். தந்தை நோவா வேல்டிங் கராஜ் ஒன்றில் தொழில் புரிபவர். தாய் இல்லத்தரசி. நோவாவின் பெற்றோர் வயது முதிர்ந்தவர்களாக இருப்பதால் இவர்களின் இறப்பு பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாகியுள்ளது.

புகைப்படக் கலைஞர் டெனிலுக்கு 12, 3 வயதுகளில் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். இவர்களில் ஒருவர் தரம் 7இல் கல்வி கற்கிறார். லுணுகலையில் வாடகை வீடொன்றில் குடியிருந்த இவரின் மனைவி இல்லத்தரசி. சம்பவ தினம் பண்டாரவளை, ஊவா ஜலண்ட்ஸ், எல்லவல பகுதியில் இடம்பெற்ற மங்கள நிகழ்வொன்றை புகைப்படம் எடுக்கச் சென்ற வேளையில் இவ்வனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த ஹலிமா உம்மாவின் மகனுக்கு 12 வயது. இவர் தரம் 7இல் கல்வி கற்கிறார். உயிரிழந்த பாக்கியநாதன் யோகதாசுக்கு ஒரு மகள் உயர்தர வகுப்பிலும், மகன்மார்கள் 01, 08 ஆம் தரங்களிலும் கல்வி கற்கின்றனர். இவர்களது தாயார் குடும்பப் பொறுப்புகளை கவனித்து வருகின்றார். விபத்தில் உயிரிழந்த முரளிதரன் உடற்கல்வி ஆசிரியராக மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்தில் பணிபுரிந்து வந்தவர். சம்பவ தினம் பண்டாரவளையில் இடம்பெறவிருந்த சாரணர் படையணி தலைவர்களுக்காக ஊவா மாகாண மட்டத்தில் வழங்கப்படவிருந்த பதவி வழங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தனது நண்பரான மீதும்பிட்டிய ஸ்ரீ கணேஷா தமிழ் வித்தியாலய ஆசிரியர் பாரிநேசனுடன் இணைந்து குறித்த பஸ்சில் பயணிக்கும்போதே விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இவருக்கு 15, 12 வயதுகளில் மகளும், மகனும் உள்ளனர். இவர்கள் முறையே தரம் 10, 7 ஆகிய வகுப்புகளில் கற்கின்றனர். மனைவி ஆசிரியையாக உள்ளார்.

இவ்வாறான நிலையில் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வைத்தியசாலையிலிருந்தது வீடு திரும்பியுள்ள ஆசிரியர் பாரிநேசன் விபத்து பற்றி எம்மிடம் பேசினார். "பண்டாரவளை செல்ல சம்பவ தினம் நான் பஸ்ஸில் ஏறிய நேரத்தில் இருந்து மிகவும் வேகமாக பயணித்ததை உணர்ந்தேன். விபத்து நடந்த இடம் ஆபத்தான இடம். பஸ் சாரதிக்கு இது தெரியும். பயணிகள் நலனில் அக்கறை கொண்டிருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம். அத்துடன் சாரதி முதல் நாள் கொழும்பில் இருந்து அதிகாலை 3.30 மணியளவிலே லுணுகலைக்கு பஸ்ஸை செலுத்தி வந்துள்ளார். விபத்து நிகழ அவரது உடல் அசதியும், தூக்கக் கலக்கமும் அதனால் ஏற்படும் அசிரத்தையுமே காரணம் என்பது என் கணிப்பு" என்கிறார் இவர்.







(21ஆம் பக்கம் பார்க்க)

# பட்டதாரிகளே!

கே.எல்.ஹில்மி,
சம்மாந்துறை10.

பெற்றோரின்
இரத்தத்தை
பணமாக்கிப்
படித்த பட்டதாரிகளே!
காலத்தைகாவலாக
வைத்து படித்தபட்ட
தாரிகளே!
உயிரைபணயமாக
வைத்துபடிப்பை
முடித்தபட்ட தாரிகளே!
ஏனடா உனக்கு
இன்று இக்கதி
இனியும் வேலை தேடி,
காலத்தை மண்ணாக
காமல்
ஒரு கைத்தொழிலை
யாவது தொடங்கி
முன்னேறடா,





# பராத்

இ. ஷமீலா இஸ்மத்

முஸ்லிம்களது இன்னொரு புகழ்
வாய்ந்த ஷஃபான் மாதத்தின்
பராத் வந்ததுவே கொண்டாட
பிறை பதின்மூன்று பதின்நான்கு
பதினைந்து மூன்று நோன்புகள்
நோற்க வேண்டும்
இதில் பராத் இரவுக்கான நோன்பு விசேஷம்
என்னவென்றால் மூன்று யாசீன்
ஓத வேண்டும்
ஒவ்வொரு யாசீன் முடிவிலும்
துஆக்கள் கேட்க வேண்டும்
நீண்ட ஆயுள், ரிஸ்கி, சலாத்தும் பரக்கத்தும்
என கேட்பது வழக்கம்
ரொட்டி, கஞ்சி, வாழைப்பழம், பேரீச்சம்பழம்
போன்றவை செய்து பள்ளி வாயிலுக்கு
மிஸ்கின்களுக்காக அனுப்பி வைப்பார்கள்
அடுத்து நம்மை விட்டு முதியோருக்காக
அல்லாஹ்விடம் கையேந்தி பிரார்த்தனை
செய்வது வழக்கம்
அல்லாஹ்வே இந்த வருடமும் அனைவருக்கும்
அனைத்தும் வழங்கி அரவணைப்பாக
எல்லோரும் பிரச்சினையின்றி இருக்க
உன்னிடம் வேண்டி கையேந்துகின்றேன்!
ஆமீன்! யாரப்பல் ஆலமீன்




# முத்தமிழ் வித்தகன்

தேவந்தி
காரைதீவு



வெள்ளை நிற மல்லிகைக்கு வெளிச்சம் தந்தவனே இந்தப்
பிள்ளை சொல்லும் தமிழுக்கு இசையாய் வருவாயோ
உள்ளமெங்கும் உன்நினைவு ஊற்றாய் இருக்க
தள்ளி நீயும் போனது சரிதானோ
காரைதீவில் தான் பிறந்து
கண்ணகி மடியினில் நீ தவழ்ந்து
பாரே வியந்து நின்ற எங்கள்
முத்தமிழ் வித்தகன் நீயே
அறிவால் உயர்ந்த அறிஞரும் நீ தமிழை
ஆராய்ந்த விஞ்ஞானியும் நீ
மருவிச் சென்ற எங்கள் யாழிசையை
மிளிரச் செய்த வித்தகனும் நீ
யாழின் வகை பல சொன்னாய்
யாவரும் ஒன்றே என்றாய்
வாழ்ந்த நாட்கள் எல்லாம் கொடை
வள்ளலாக திகழ்ந்தாய்
கனவில் உனை நான் நினைக்கின்றேன்
உன் கற்பனை வரிகளில் மூழ்கி தித்திக்கிறேன்......

# அடிவாங்கி பழகியவர்கள் நாம்

ஸாலிஹ் அஸீம்
புத்தளம்

அடிவாங்க
பிறந்தவர்கள் நாங்கள்
அடி வாங்கி
கொண்டே இருப்போம்
மரத்துப்போன நமக்கு
வெறுத்து போன
இதயத்தில்
அடிகள் கண்டு
அதிர்வது இல்லை
பகடையாய் நம்மை
உருட்டி பார்ப்பவர்கள்
நாம் புரண்டு
படுகிற அடிகளில்
வேடிக்கை பார்ப்பார்கள்
பாசத்தை
பாசாங்காய் காட்டி
விஷ சொற்களால்
வதை செய்து
மௌனித்து போவார்கள்
அடிவாங்கி
பழகியவர்கள் நாம்
அடி வாங்கி கொண்டே
இருப்போம்
அடிப்பவர்கள்
அடித்துக் கொண்டே
இருப்பார்கள்

# நீயாக இருக்கலாம்...

எம்.எஸ்.எப். சுமையா, நெல்லிகம, பலாகல

காற்றானது இழுத்து வந்தது
ஓர் இன்னிசையை – அது
உன் புல்லாங்குழலின்
ஓசையாக இருக்கலாம்...
இல்லை... இல்லை
அது என் பிரம்மைக் கனவின்
அழரலாக இருக்கலாம்
அல்லது என் மனக் கோவிலின்
அபிஷேகமாக இருந்திருக்கலாம்...
தென்றல் தாலாட்டுகின்றது – அது
எனக்காய் உன்னிடம் தூது
செல்ல தயக்கம் காட்டுகிறது
அது காட்டும் தயக்கத்தில் – என்
உள்ளக் கோயிலின் கனவுகள்
உடைந்து நொருங்குகின்றது...
திடீரென சிற்றலையாய் சலனமொன்று
தலைகாட்டுகின்றது மனதோரத்தில்
இத் தென்றலை எனக்காக
அனுப்பியது
“நீயாக இருக்கலாம்” என



# அன்பே வாழ்வாகிடனும்

வரக்காமுறையூர் ராசிக்

பல்லினம் பரந்து வாழும்
பண்புள்ள இத் தீவினிலே
நல் லெண்ணம் கொண்டு நிதம்
நாடுயர உழைத்திடனும்
வேற்றுமை வேரறுந்து – நாம்
வீறு கொண் டெழுதலுடன்
ஒற்றுமைக் குரல் ஓங்கிடனும்
ஒன்று பட்டே நாம் ஒழுகிடனும்
குருதி யோட்டும் குணங்கள்
குழி தோண்டி புதைய
ஓரினமாய் நாம் சேர்ந்திடனும்
ஒற்றுமையே எம்பலம் ஆகிடனும்
நிம்மதி யில்லா திங்கே
நிர்கதியி லுள்ளோ ரெல்லாம்
அமைதி நிதம் கண்டிடனும்
அன்பு வழி சென்றிடனும்
சாதி மத பேதம்
சாத்தான் வழி போதம்
வேத மிதை ஓதிடனும்
வெற்றி பெற வாழ்ந்திடனும்
நித்தில மெனும் முத்து
நித்தமும் எங்கள் சொத்து
சத்தியமிதை ஏற்றிடனும்
சந்தோஷம் வாழ்வில் சேர்த்திடனும்
துகள் துகளாய் மனிதம்
தூசான நிலை மாறி
அகல் விளக் கேற்றிடனும்
அன்பே வாழ் வாகிடனும்

# சுயலாபம்

மொழிவரதன்,
கணபதிபுரம்

நீயோ நிறத்தை இயற்கை
சூழலுக்கிளைபாக்கி
வாழ முயல்கிறாய்
அரசியல் வாதிகளோ
தனி சுயலாபத்துக்காய்
நிறம் மாறி அரசியல் செய்கிறார்



எம்.சி.மஹ்மூதா பீவி
ஒலுவில்

# தரணியெலாம் எங்கள் தாயகமாம்

பூ கோளத்தின் தரணியில்
தூவி விடப்பட்ட வண்ண மலர்களாய் நாம்
புவியை அலங்கரிக்கிறோம்
பல்லின மக்களாயும்
பல் மொழி பேசும் உறவுகளாயும் இன்று
ஆதாமும் ஏவாலுவும் ஈன்றெடுத்த வாரிசுகளாம் எம்மை
அகிலமெலாம் தூவி விட்டான் இறைவன் நாம்
இனங்கள் வேறாகி மதங்களும் வேறாகினாலும்
இன்பமாய் வாழ்வதற்கு
மனித குலமொன்றே போதும் எமக்கு
ஆலமுல் அர்வாவில் சங்கமித்த உறவுகளாய் நாம்
ஆளுக்கோரு பக்கம்
சிதறி வாழ்கிறோம் புவியில் இன்று
தெரியாத உறவுகளாய்
திரிந்தலைந்து திரிகிறோம்.
மேற்கென்றாலும் கிழக்கென்றாலும்
வல்லவன் பார்வையில் ஒரு நாளும்
கண் மறைந்து போகாது எமது
காரியங்கள் காலம் உள்ளவரை அவன் வசமே!
உணர்வற்றுக் கிடக்கும் உள்ளங்களை சற்று
உசுப்பி விடுங்கள் அவை
ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று
ஓயாமல் உரைக்கட்டும் உலகத்தார்க்கு
ஒற்றையில் நின்று சாதிக்க முடியாததை
ஒன்று பட்டால் சாதிக்கலாமென்பது
ஆண்டவனின் அருள் வாக்கு இது
ஆண்டோரின் முது மொழியும் கூட
சாதிகள் வேறாகலாம் ஏன்
மொழிகளும் வேறாகலாம் ஆனால்
சரீரத்தினுள் ஓடும் குருதி ஒன்றென்று
உரக்கச் சொல்லிடுவோம் சாதி வெறி கொண்டு
உலகில் அலையும் மானிடற்கு
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு இதை
ஓதி உணர்ந்து கொண்டால் நாம்
கட்டடத்தின் கற்களாய் என்றும்
கனகாலம் வாழ்ந்திடலாம்
இறப்பில் ஓர் கருத்துள்ள எமக்குள் ஏன்
இறையியலில் வேறுபாடு?
பிறப்பிலும் நாம் ஒன்றுதான் இதை
பிற் சந்ததிகளுக்கும் சொல்லி வைத்திடுங்கள்
ஆண்டவன் படைத்த பூமியில்
ஏண்டவன் சமத்து என்பார்கள்
புவியில் அவன் எல்லைக் கோடுகள் இடவில்லை
நாம் தான் எமக்குள் சுயநலமாய்
கூறுகள் போட்டுக் கொண்டோம்
எல்லைகளையும் வகுத்துக் கொண்டோம் நாடுகளாய்
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
அன்பே எங்கள் உலகத் தத்துவம் இது
கவிஞனின் கவிவரிகள் ஆனாலும்
மனிதம் உள்ளோர்க்கு என்றும் இதில்
மாற்றுக் கருத்து ஏதுமில்லை
மனிதத்தை வாழ வைத்தால்
மனநிம்மதி எமக்குண்டு
இதனைப் புரிந்து கொண்டவர்க்கு
தரணியெலாம் தாயகம்தான் இதுவே
தாரகை மந்திரமும் கூட
கொரோனாவின் தாக்கத்தால்
உலகமே ஸ்தம்பித்து நிற்கிறது அதில்
ஊமையாகிப் போனது நம் எல்லோர் உள்ளமும் தான்
அதற்குத் தெரியாது தனித்து துவம்சம் செய்ய
இனபேதம் பார்க்காது யாரும்
இருக்கும் நிலை புரியாது
தரணியெலாம் என்தாயகமென்று
தடம் பதித்துச் செல்கிறது
கொரோனாவெனும் அந்த
கொடிய வைரஸ் இன்று

# வசந்த காலம்

ஜெகன்



இலை உதிர்த்த மரங்களின்
கிளைகள் மீண்டும் தன்னை
குருத்துக்களால் அலங்கரிக்கும்
பூக்களின் பிரசவங்கள்
பூமியை அழகாக்கும்
ரோஜாவின் முட்கள்
இலைகளுள் மறைந்திருக்க
புதிய மலர்கள்
தன் முகம் காட்டும்
குடி இருப்பின் சுவர்களில்
செடிகள் முளைத்து இருக்கும்
வேலிகள் பச்சையாய்
மாற்றம் கொண்டு
வீட்டை சுற்றி
பசுமை பரப்பும்
விண் மீன் ஒளியில்
வானம் மௌனமாகி
தெளிவாக தன்னை
அடையாளம் காட்டும்
வசந்த காலப் பறவைகள்
இனிமை தவழும்
தன் குரலால்
கீதம் இசைத்து
காலைப் பொழுதை
பரவசப் படுத்தும்
குளிர் விலகி
கோடை காலம்
நோக்கிய பயணம்
ஆரம்பம் ஆகும்

# மோதலின் முடிவு!

ஜெயசீலன்,

கவலைகள் மோதும்! மனதின்
கனவுகள் கலைந்து போகும்!
சவமதாய் உடலும் சேர்ந்து
சந்தியில் வீழ்ந்து வாடும்!
உவமைகள் கூறும் யாக்கை
உவர்ப்பிலே கலந்து தோயும்!
அவமதாய் வாழ்வு அழிந்து
ஆற்றலை இழந்து வீழும்!
விலையுடன் மோதி வாழ்வு
விடியலை இழந்தது! ஆழ்கடல்
அலையுடன் மோதி தோணி
ஆயுசை இழந்தது! கருங்கல்
சிலையுடன் மோதி உடல்
சிரசை இழந்தது! புகழ்ச்சி
மலையுடன் மோதி மானிடா
மதியை இழந்தால் நீயே!
நினைவுடன் மோதி நெஞ்சு
நிம்மதி இழந்தது! செய்த
வினையுடன் மோதி விழிகள்
வெளிச்சம் இழந்தது! உதறச்
சினையுடன் மோதி பெண்மை
சிசுவை இழந்தது! காதல்
மனையுடன் மோதி மானிடா
மானத்தை இழந்தால் நீயே!
விதையுடன் மோதி தளிரது!
வித்தினுள் அழிந்தது! கட்டுக்
கதையுடன் மோதி காதல்
கருவிலே அழிந்தது! எரியும்
சிதையுடன் மோதி உடலது
சாம்பலாய் அழிந்தது! காமச்
சதையுடன் மோதி மானிடா
சகலமும் அழிந்தாய் நீயே!

# அடையாளம் தெரியவில்லை

பாத்திமா சில்மியா
புத்தளம்

அழும்போது
சிரித்து கொள்ளும்
உலகம்...
சிரிக்கும் போது
அழுது கொள்கிறது...
பொறாமையில்லை என்று சொல்பவர்கள்...
பொறாமை தீ கொண்டு
எரித்து சாம்பலாக்கிய
கனங்கள் அதிகம்...
பூ வாசம் வேண்டுமென்று
பூவை
நசுக்கி போடுவார்கள்...
காய்ந்து கிடக்கும்
அப்பூவை
காலால் ஏறி
மிதிப்பார்கள்...
உதடுகளின் உச்சரிப்பில்
உண்மையில்லை...
உள்ளக்கிடங்கில்
சுத்தமில்லை...
உண்மை முகங்களை
எங்கே தேடுவது...
உண்மை முகங்களை
தேடி எடுப்பதற்கு...
மறைக்கப்பட்ட முகங்களுக்குள்
அடையாளம் தெரியவில்லை...

# நினைவில் நீ

க.நிஷாந்தனி

நீ என்னைக் காணாது
நான் இன்னும்தூங்காது
ஏக்கங்கள் பலவாகும்
என்நிமிடம் உனதாகும்....
காதலின் வலி
என்கண்ணீருக்கு புரியும்
உனக்கு இன்னும்புரியவில்லையா?
உன் மௌனத்தால் என்னை கொல்லாதே!
நான் உன்னை பார்க்கும் போது
என் இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது
வார்த்தைகள் வரவில்லை
சொல்ல வந்த வார்த்தைகளையும்
உன்னை கண்டதும் மறந்துவிட்டேன்
காத்திருந்து காலங்கள் போகுது
உன்மௌன ராகத்தால்
என்இதயம் வாடுதடா
என்னை அறியாமலேயே
நான் தடுமாறுகின்றேன்
வெட்கத்தால் என்னை மறந்தேன்
உன் காந்த பார்வையால்
என் நாணத்தை இழந்தேன்
நீ தூங்கும் அறை –என்இதயம் என்றால் –
நீதூங்கும் வரை –என்இதயத் துடிப்பை
நிறுத்திவைக்கின்றேன்
காதல்தனலோ தெரியவில்லை
உன் அழகை தவிர வேறு
அழகு தெரியவில்லை

# நினைவு கூரலுக்கான தடைகள்

# தமிழ் தேசிய தரப்பின் அரசியல் முதலீடுகள்



“தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் தமிழ்த்தேசிய அரசியலையே ஆதரிக்கிறார்கள். தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கே வாக்களிக்கிறார்கள். தமிழ் ஊடகங்களில் பலவும் கூட தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுடன்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. புலம்பெயர்திருக்கும் மக்களிலும் பெரும்பான்மையினர் தமிழ்த்தேசிய அரசியலின் பக்கமே நிற்கின்றனர். அப்படியிருக்கும்போது நீங்கள் தமிழ்த்தேசிய அரசியலின் மீது கடுமையாக விமர்சனங்களையும் எதிர்ப்பையும் முன்வைக்கிறீர்களே! இது தவறென்று உங்களுக்குத் தோன்றவில்லையா? பெரும்பான்மை மக்களின் உணர்வுக்கும் அரசியல் நிலைப்பாட்டுக்கும் எதிராக நிற்பது தவறென்று உணரவில்லையா?” என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். இந்தக் கேள்வி சிலரிடம் மட்டுமல்ல. பலரிடமும் உள்ளது என்பதை அறிவேன். இது நீண்ட நாட்களாகப் பலருக்குள்ளேயிருந்து துளைத்துக் கொண்டிருக்கும் கேள்வி என்பதையும் அறிவேன்.

**கருணாகரன்...**

ஆனால், என்ன செய்வது, ரஜினிகாந் ஒரு திரைப் படத்தில் சொல்வதைப்போல, “என் வழி தனி வழி” என்று சொல்வதைத் தவிர வேறு எதைத்தான் சொல்ல முடியும்? அல்லது அவரே இன்னொரு படத்தில் சொல்வதைப்போல “மந்தை கூட்டமாகத்தான் வரும். சிங்கம், சிங்கிளாகத்தானிருக்கும்” என்றுதான் சொல்ல வேண்டும்.

இதொன்றும் பகடியல்ல. அல்லது இதைப் பகடியாக்கிக் கடந்து செல்வதுமில்லை. ஆனால், உண்மையில் இது பகடிதான்.

ஏனென்றால், உண்மையில் தமிழ்த்தேசியம் என்றால் என்ன? என்ற கேள்வியும் தேடலும் இவர்களிடம் உண்டா? அல்லது அதைக்குறித்த புரிதலாவது இவர்களுக்கிருக்கிறதா? அல்லது இந்த நண்பர்கள் கூறுவதைப்போல அல்லது நம்முடைய நிலைப்பாட்டைக் குறித்துக் கவலைப்படுவதைப்போல தற்போது பிரயோகத்தில் உள்ளதுதான் தமிழ்த்தேசியமா? இவர்களுடைய தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கும் புலிகளுடைய நிலைப்பாட்டுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை – வேற்றுமை (வேறுபாடு மாறுபாடுகள்) என்ன? புலிகளின் அரசியலையே பின்பற்றுவதாக இருந்தால் அதை எந்த வகையில் பின்பற்றுகிறார்கள்? அதைப் பற்றிச் சொல்ல முடியுமா? அல்லது அதைக் குறித்து நாம் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிக்க இவர்கள் தயாரா? அது முடியுமா? புலிகளின் அரசியல் தொடர்ச்சியைத்தான் இவர்கள் முன்னெடுப்பதாக இருந்தால் அது எந்த அளவுக்கு எதிர்காலத்துக்குப் பொருத்தமானதாக இருக்கும்? புலிகளிலிருந்து வேறுபடுவதாக இருந்தால் அந்த வேறுபாடு என்ன? யுத்தத்துக்குப் பிறகு தமிழ் மக்களுடைய அரசியலை முன்னெடுக்கும் முறைமை குறித்து இந்தத் தமிழ்த்தேசியக் கட்சிகளின் அணுமுறை சரியானதா? இந்த அணுகுமுறையின் மூலம் பெற்ற – பெற்றுக் கொண்டிருக்கும் வெற்றிகளும் நன்மைகளும் என்ன? இதைப்பற்றிய மதிப்பீடுகள், ஆய்வுகள் உண்டா?

இந்த மாதிரியுள்ள ஆயிரம் கேள்விகளுக்குரிய பதிலாகவே என்னுடைய நிலைப்பாடுள்ளது. இந்த நிலைப்பாடு என்பது கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையிலும் அரசியல், வரலாறு மற்றும் சமூக விஞ்ஞான அடிப்படையிலானது. இதை இன்னும் சுருக்கமாகவும் நேரடியாகவும் சொல்வதென்றால், மக்களுக்கானது. மக்களுடைய வெற்றிக்கானது. அவர்களுடைய எதிர்காலத்துக்கானது. அவர்களைப் பாதுகாப்பதற்கானது. அவர்களை மேம்படுத்துவதற்கானது. உலகளாவிய அரசியற் பொருளாதாரப் போக்கின்பாற்பட்டது. அதற்குத் தாக்குப்பிடித்து நிற்கக் கூடியது. இதை மறுப்பதாக இருந்தால் இவர்கள் கூறும் அந்தப் பெரும்பான்மையான தமிழ்த் தேசியவாதிகளை நோக்கிச் சில கேள்விகளை எழுப்பலாம்.

முதலில் இவர்கள் அனைவரும் புலிகளின் அபிமானிகளாக புலி நிழலில் ஊஞ்சலாடுகிறார்கள். ஆகவே அதைக்குறித்துச் சில கேள்விகள்.

1. விடுதலைப்புலிகளையும் அவர்களுடைய தியாகங்களையும் மதிப்பதாக கூறும் அல்லது அப்படிக் காட்டிக் கொள்ளும் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் அந்தக் கட்சிகளின் அரசியல்வாதிகளும் நடைமுறையில் புலிகளுக்கு மாறாகவே செயற்படுவது ஏன்? உதாரணமாக

2. புலிகள் காடழிப்புக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதேவேளை வனவளப்பாதுகாப்புப் பிரிவை உருவாக்கி காட்டைப் பாதுகாத்ததுடன், மரநடுகைகளிலும் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் நடுகை செய்த காடுகள் வடக்குக் கிழக்கில் இன்னமும் பல இடங்களிலும் உண்டு.

ஆனால், இப்பொழுதோ காடழிப்புக் கட்டற்ற முறையில் நடக்கிறது. ஒரு பக்கம் மரம் வெட்டுதலாக. மறுபக்கத்தில் அரச செல்வாக்கைப் பயன்படுத்தி காணி பிடிப்பதற்காக என.

இதைச்செய்வது வேறு யாருமல்ல. அரச எதிர்ப்பைப் பலமாகக் கூவிக் கூவித் தம்மைப் புலிகளின் தொடர்ச்சியாகக் காட்டிக் கொண்டிருக்கும் தரப்புகளே. இதற்கு சட்டம், ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் தரப்புகளும் வனப்பிரிவும் ஏதோ வகையில் ஒத்துழைக்கின்றன.

அதெப்படி அரசியலில் அரச எதிர்ப்பைச் செய்து கொண்டு அரசாங்கத்தின் ஏஜென்டுகளாக இருக்கும் காவல்பிரிவினர், வனப்பிரிவு, காணிப் பிரிவு, அமைச்சுகள், அதிகாரிகள் போன்ற

தரப்புகளின் மூலமாக தங்களின் தனி நலன்களைப் பேணுவது நீதியாகும்? தவிர, புலிகளின் காடு பராமரிப்புக்கு இது எதிரானதாக உள்ளது அல்லவா!

3. தனித்தேசமும், அந்தத் தேச வளங்களும் முக்கியம். தமிழ்த்தேசியத்தின் அடிப்படைகளில் இதுவும் ஒன்று என்று சொல்லிக் கொண்டு அதற்கு மாறாக தமிழ்த்தேசிய அடிப்படைக்கு மாறாக எப்படிச் செயற்பட முடியும்? புலிகளின் தமிழ்த்தேசியம் என்பது தமிழீழம் என்ற தேச வரையறையையும் வரன்முறையையும் உள்ளடக்கமாகக் கொண்டது. அந்த அடிப்படையில் அவர்கள் நிர்வாகம், சட்டம், ஒழுங்கு, சமூகப் பாதுகாப்பு, வளப் பேணுகை, வள உருவாக்கம், சமூகடிசமத்துவம் என்றவாறாக தேசக் கட்டுமானங்களில் கவனம் கொண்டிருந்தனர். இதில் சரி பிழைகள் இருக்கலாம். தங்கள் நோக்கில் இவ்வாறான கொள்கையை நடைமுறைப்படுத்தி வந்தனர். ஆனால், புலிகளின் பெயரைச் சொல்லி, அவர்களுடைய தியாகத்தில் அரசியல் நடத்துவோர் இதை எந்தளவுக்குப் பின்பற்றுகிறார்கள்? எப்படி நடைமுறைப்படுத்துகிறார்கள்?


4. இதைப்போல மணல் அகழ்வுக்கு எதிராகவும் வயல் நிலத்தில் அல்லது பயிர்ச்செய்கைக்குரிய நிலத்தில் வீடுகள், வணிக மையங்கள் போன்றவற்றை அமைப்பது தவறு என்பதில் புலிகள் உறுதியாக நின்றனர்.

ஆனால், இன்றோ இதற்கு மாறாகவே பலரும் நடக்கின்றனர். வயல்களில் கட்டிடங்கள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. குளங்கள் மூடப்படுகின்றன. எப்போதும் எங்கும் குளங்களைத் தூர்வாருவதே நடப்பதுண்டு. ஆண்டுதோறும் குளங்களை அகழ்ந்து, வாய்க்கால்களைப் புனரமைப்பது வழமை. ஆனால், இப்பொழுது குளங்கள் மூடப்படுகின்றன. வாய்க்கால்கள் நிரவப்படுகின்றன. இந்த வாரம் கூட வவுனியாக் குளத்தை அபிவிருத்தியின் பேரால் மண் நிரப்பிச் சுருக்குவதற்கு எதிராக வவுனியா நகரில் மக்களால் ஒரு போராட்டம் நடக்கிறது.

ஆனால், மறுவளத்தில் குளங்களை மூடுவோரும் வயல் நிலங்களை ஆக்கிரமிப்போரும் புலிகளின் விசுவாசிகளாகவே தம்மைக் காட்டிக் கொள்கின்றனர். இது எந்தளவு சரியானது? புலிகளை உண்மையாக நேசித்தால், அவர்களையும் அவர்களுடைய இலட்சியத்தையும் உண்மையாகவே மதித்தால் இப்படி எதிர்மறையாகச் செயற்பட முடியுமா?

5. கசிப்பு, போதைப்பொருள் போன்றவற்றைக் கடுமையாக புலிகள் எதிர்த்தனர். இதற்கு மரண தண்டனை வரையில் கொடுத்தனர். ஆனால், புலிகளை ஆதரிப்பதாகக் கூறுவோரில் பலரே இப்பொழுது கசிப்புக் காய்ச்சுவது, கசிப்பை விநியோகிப்பது தொடக்கம் போதைப்பொருள் கடத்தல், விநியோகம் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றனர். இவர்களும் தமக்கு வசதியாக சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான தரப்புகளை (அரச தரப்பை) பயன்படுத்துகின்றனர். (21ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்தார் ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியர்



ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியர் பொன்னாலையூர் பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் (வயது77) உயிரிழந்தார். படையினரின் வாகனம் மோதியதில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் சிகிச்சை பயனின்றி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இவர் உயிரிழந்தார்.

கடந்த 20ஆம் திகதி மதியம் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது யாழ். பன்றிக்கோட்டு பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் படையினரின் வாகனம் இவரை மோதியது. தலையில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

ஈழநாடு பத்திரிகையின் தலைமை ஒப்பு நோக்குநராக இருந்த இவர் பின்னர் உதவி ஆசிரியராக உயர்ந்தார். ஊடகத்துறையில் பணியாற்றிய காலத்தில் பல ஊடகவியலாளர்களை உருவாக்கினார். அவரிடம் பயிற்சி பெற்ற சிலர் இன்றும் ஊடகத்துறையின் சிரேஸ்ட ஊடகவியலாளர்களாக பணியாற்றுகின்றனர்.

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலயத்தின் தலைமை அர்ச்சகராகவும் அக்கோயிலின் பரிபாலகராகவும் இறுதிவரை இருந்தார். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவத்தை ஆரம்பித்து வருடாந்தம் அதை சிறப்பாக நடத்திவந்தார்.

தமிழ், சமஸ்கிருதம், சமயம், இலக்கியம் போன்ற பல்துறை விற்பன்னரான இவர் பல நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் கீழைத்தேயக் கல்விக் கல்லூரியின் விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டை தொகுதி தமிழ்ச் சங்கத்தின் பல்வேறு பதவிநிலை செயற்பாட்டாளராகவும், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சை செயலாளராகவும், வெண்கரம் அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார்.

மாணவர்களுடனும் பெரியவர்களுடனும் அன்பாக பழகும் மனிதநேயப் பண்புமிக்க இவர் ஆயிரக்கணக்கான நிகழ்வுகளில் பங்குபற்றி மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அறிவுரை கூறியவர். கல்விமான்கள் பல இடங்களிலும் இருந்து இவரது ஆலயத்திற்கு வருகைதந்து அறிவுரைகளைக் கேட்டுச் செல்வதை அடிக்கடி வழக்கமாக்கிக்கொண்டனர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக கல்வியியலாளர்களுக்கு வழங்கப்படும் சிவத்தமிழ் விருது கடந்த 2017ஆம் வருடம் இவருக்கு வழங்கப்பட்டது.

## சீரடி சாய்நாதர் பிரதிஷ்டை மகா கும்பாபிஷேக பெருவிழா



திருக்கோவில் பிரதேசத்தில் தாமரைக்குளம் என்னும் இடத்தில் கறுவப்பங்கேணி ஸ்தபதி க.க. கமல், தமிழ்நாடு ஸ்தபதி இராமன் உலகப்பன் குழுவினர் இணைந்து பிரமாண்டமாய் நிர்மாணித்துள்ள சீரடி சாய் கருணாலயத்தின் சீரடி சாய் நாதர் மற்றும் பரிவார மூர்த்திகளின் பிரதிஸ்டையும், மகா கும்பாபிஷேக பெருவிழாவும், சாயிநாதனின் புகழ் பரப்பும் ஒலிபேழை வெளியீட்டு விழாவும், சித்த வித்தியார்த்தி பண்டித் ஸ்ரீல ஸ்ரீ சிவசங்கர் குருஜி தலைமையில் நடைபெறும்.

நாளை 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9:00 மணி முதல் 10:30 மணிவரை உள்ள சுப வேளையில் சாய் நாதர் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளார். இதற்கான சகல ஏற்பாடுகளையும் திருக்கோவில் சீரடி சாய் பாபா கருணாலயத்தில் ஆதின கர்த்தா ஸ்ரீமதி சாய் சீதா விவேக் மேற்கொண்டு வருகின்றார்.

மார்ச் 31 முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை காலை, மாலை கிரிகைகள் நடைபெற்று ஏப்ரல் 2 ஆம் திகதி காலை 9:00 மணி முதல் 10:30 மணி வரையுள்ள சுப வேளையில் வவுனியா சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், சிவாகம் ரத்னா, கிரியாக் கிரம ஜோதி, சிவஸ்ரீ லக்ஷ்மி காந்த ஜெயகதீசக் குருக்கள் (நல்லூர் வேதாகம பாடசாலை) மதுர சாதகர், பிரம்ம கேதீஸ்வர பவித்ர சர்மா சாதக சுடர் பிரம்மஸ்ரீ ஹரிகர சர்மா வேதாகம சக்கரவர்த்தி சிவஸ்ரீ ஆதி சௌந்தர்ராஜக் குருக்கள், சாய்ஸ்ரீ செல்லையா ருத்திரன் ஆகியோர் வேத பாராயணம் செய்ய சித்தர்களின் குரல் ஆஸ்தான சிவாச்சாரியார்,ஷப்த ரிஷி குருபீடம் யாழ் வட்டுக்கோட்டை தேசமான்ய சிவஸ்ரீ குமர விக்னேஸ்வர குருக்களும் அவரது குழுவினரும் கும்பாபிஷேக கிரிகைகளை நடாத்தவுள்ளனர்.



## புசல்லாவை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பங்குனி உத்தர மஹோற்சவ அருட்பா...

புசல்லாவை புகழ் மணக்கும்
கதிர்வேலாயுதா போற்றி போற்றி
ஆழிசூழ் சுந்தரத்தீவகம் லங்காபுரி
மத்தியில் உயர் மலைக் குன்றமென, குளிர்
நிறை தளிர் பயிர் நிறை தரணியாம்
தண்டபாணி புகழ் மணக்கும்
புசல்லாவைத் திருநகர் கண்ணே
திருக்கோயில் கொண்டு
ரத்தின மயிலாசனம் அமர்ந்த மயில்
வாகனனே புசல்லாவை புகழ் மணக்கும்
கதிர்வேலாயுதா போற்றி...போற்றி...!
சக்தித் திருமகன் முத்துக்குமரன் பக்தியுடன்
கதிர்வேலாயுத பெருமானாய்
செங்கோல்புரி நந்நிலமதில் வள்ளி
தேவயானி உடனுறை
தேவசேனாபதியென, குகநேய அடியார்
குறையகல அறுமுகத்துடன் ஓர்
திருமுகமாய் திருவாய்ச்செவ்விதழ்
மலர்ந்து
திக்கெட்டும் தீந்தமிழோடு,
தேமதுர செழுந்தமிழுடன் ,தென்மதுரைத்
தென் பொதிகை தென்றல் தாலாட்டும்
அன்னை மீனாட்சி பதி
சொக்கநாதனும் இரண்டறத்திருமேனியாய்
சுந்தர வதனத்தானை கொஞ்சி மகிழ்
எழில் காட்சியாய்,அஞ்சி வரும்
எளியோர்க்கும் தஞ்சமென வஞ்சமின்றி
பன்னிரு விழியால், புடை சூழ வரும் பக்தர்
படைக்கு இன்னருளை வாரி வழங்கும்
புசல்லாவை புகழ் மணக்கும்
கதிர்வேலாயுதா போற்றி...போற்றி...!
கனிக்காக மூத்தோன் கணபதி மனம்
நொந்த தம்பியாய்,ஒரு பெரும்
தத்துவத்தின் பொருளுரைத்து
ஆண்டிக்கோலமாய் மலை மீது மூன்றாம்
படையாய், நின்ற பழனி வேலவா
புசல்லாவை புகழ் மணக்கும்
கதிர்வேலாயுதா போற்றி...போற்றி...!
ஓமெனும் ப்ரணவ மந்திரம்,நான் முகனும்
பொருளறியா நிலை எழ,தந்தை ஈசனுக்கே
பொருளுரைத்து தகப்பன்சாமி எனப் பெயர்
விளங்க கந்தசாமியாகிய சுந்தரவேல்
நான்காம் படையாய் குருபீடம் அமர்ந்த
சுவாமிநாதனே புசல்லாவை புகழ்
மணக்கும் கதிர்வேலாயுதா
போற்றி...போற்றி...!
தெய்வப் புலவோன் நக்கீரன்
அறுபடை வேலவன் புகழ்
பாடி அகிலம் போற்றிச் செய்
திருமருகாற்றுப்படை தனில்
மெய் மறந்து தமிழுக்கும் அமுதூட்டிய
இயல் இசை நாடகத் தமிழர் குல
நாயகன் தமிழ் வேந்தே அவ்வைக்கும்
அருள் காட்டிய முத்தமிழ் வேலவா
புசல்லாவை புகழ் மணக்கும்
கதிர்வேலாயுதா போற்றி போற்றி...
என்றும் நின் திருவடியே கதியென சிரம்
தாழ்த்தி இருகரம் ஏந்தி வந்தனை
செய்யும்...

**எஸ் கணேசன் ஆச்சாரி சதீஷ்**
கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன்
தேவஸ்தான உப செயலாளர்,
கம்பளை.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம் நிலாமின் "தட்டுத் தாவாரம்" நூல் வெளியீட்டு நிகழ்வு



சிரேஷ்ட ஊடகவியலாளர் "ஈழத்து நூன்"எம்.ஏ.எம் நிலாமின் "தட்டுத் தாவாரம்"கவிதை நூல் வெளியீட்டு வைபவம் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம் அமீன் தலைமையில் கல்லொலுவையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் கௌரவ அதிதிகளாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுத்தீன், கொழும்பு பிரதி மேயர் எம். ரீ இக்பால், மற்றும் அசீஸ் மன்றத்தின் தலைவர் அஸ்ரப் அசீஸ் ஊர்பிரமுகர்கள் கல்வியிலாளர்கள் இலக்கியவாதிகள் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். தலைமையுரையை என்.எம் அமீன் நிகழ்த்த வாழ்த்துரைகளை நாச்சியாதீவு பர்வின், தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர், தினகரன் ஊடகவியலாளர் தௌபீக், மினுவான்கொடை பிராந்திய கல்வியதிகாரி அமீர் அலி, நூல் பற்றிய ஆய்வுரையை கலைவாதி கலீல், நிகழ்த்த கவிவாழ்த்துக்களை சட்டத்தரணி ரசீத் எம். இம்தியாஸ், கவிஞர் அக்பர் அலி, கவிஞர் ஹஸீர் ஆகியோரும் நிகழ்த்த்தினார்கள். பல்வேறு அமைப்புகள் நிலாமுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர். *(படங்கள்: அஷ்ரப் சமத்)*


**சுதேச மருத்துவத்துறைக்கான பட்டப்பின் படிப்பு நிலையம்**

**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**MD in UNANI MOALIJAT AND BOARD CERTIFICATION**

**தேர்வுப் பரீட்சை தொடர்பாக விண்ணப்பங்களை அழைத்தல் - 2021**

1. விண்ணப்ப முடிவுத்திகதி : 03.05.2021
2. பரீட்சைத் திகதி : 03.06.2021
3. (அ) பதிவுக் கட்டணம் : ரூ. 1,000.00
   (ஆ) பரீட்சைக் கட்டணம் : ரூ. 10,000.00
   (அரசதுறை சாரா வேட்பாளர்களிடம் மேற்கண்ட கட்டணத்தில் 50% கூடுதலாக வசூலிக்கப்படும்.
4. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 84061028 என்ற கணக்கு இலக்கத்திற்கு பின்வரும் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி மற்றும் செலுத்துகைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய உரித்தான விபரங்களை 2021 மார்ச் 29 முதல் 2021 மே 03 வரையான வேலை நேரங்களில் (மு.ப. 9.00 - பி.ப. 4.00) பொரளை, தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை 5ஆம் மாடி, சுதேச மருத்துவத்துறைக்கான பட்டப்பின் படிப்பு நிலையம், உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**சுதேச மருத்துவத்துறைக்கான பட்டப்பின்படிப்பு நிலையம்.**

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

மட்டக்களப்பில் வா்த்தக காணி விற்பனைக்கு. மட்டக்களப்பில் 103.0 பேர்ச் வர்த்தக காணி விற்பனைக்கு திருகோணமலை வீதி, பிள்ளையாரடி, மட்டக்களப்பு. தொ.பே 0771112732. 023650

வெற்றிபெற வாங்குங்கள், கொழும்பில் நிரப்பு நிலையம், 17 அறை, சுற்றுலா ஹோட்டல் பத்தேகமவில் தேயிலை தொழிற்சாலை உடன் விற்பனைக்கு. ராஜ கிரிய, கோட்டே, மாலபே, அத்துருகிரிய வியாபாரக் கட்டிடம் குத்தகைக்கு மற்றும் கொழும்பு மாவட்டத்தில் சகல நகரிலும் வீடு, காணி விற்பனைக்கு. தொடர்பு 0776470596, 0112562456. செல்வின் ரியல் எஸ்டேட். 023447

### 212 அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு

OFFSET PRINTING MACHINES விற்பனைக்கு Proteck Plate Exposer 01 KORD Heidelberg (18 x 25) 2 மெசீன்கள் CYLINDER HEIDELBERG (18 X 24) 1 மெசீன் Electric Chinese Cutter ஒன்று SCHNEIDER Polar Cutter (36 inch) ஒன்று வார நாட்களில் மு.ப 10.00 பி.ப. 4.00 வரை பார்வையிடலாம். தொடர்பு 0777347228/ 0777739459. 63/5, சிறி விக்கிரம மாவத்த, வத்தளை. 022782

### 218 மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை

உடல் பருமன் கூட்டுதல், குறைத்தல், புகை மது பாவனை நிறுத்துதல், அதிக நித்திரை, நித்திரையின்மை, மனச் சோர்வு, கோபம், சரும நோய்கள் உள்நாட்டு மருத்துவம் மூலம் நிவாரணம் பெறலாம். Dr. ஆப்டீன் சுஜப், நிவ் திஹாரிய மெடிக்கல், 116C, கொழும்பு கண்டி வீதி, திஹாரி சந்தி பெற்றோல் நிலையம் அருகே. 07 1 8369333, 0740656333. 016933

### 242 கோழிகள், முட்டைகள்

A.D.N. Dias Farm (நாட்டுக் கோழிக் குஞ்சுகள்) ஒரு வயதுள்ள மிகவும் ஆரோக்கியமான நாட்டுக் கோழிக் குஞ்சுகள். சேவல் குஞ்சுகளை மத்திரம் பெறலாம். போக்குவரத்து ரயில் மூலம். (100 இற்கு மேற்பட்ட ஓடர்கள் மட்டும் ஏற்கப்படும்) ஒரு குஞ்சு 60/ கம்பஹா. 0766876559 020060

## வேலைவாய்ப்பு

### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

Trainee Audit Secretary A/ L வர்த்தகத்துடன் சந்தைப்படுத்தல் (Marketing) விண்ணப்பிக்கவும் 89/ 1/ 2 பேங்ஷால் வீதி, கொழும்பு11. தொ.பே 0777239397 WhatsApp - 075-5030954. e-mail: agapeaccservices@gmail.com 023530

### 311 வெற்றிடங்கள் தகவல் தொழில்நுட்பம்

கம்பியூட்டர் கிரபிக் டிசைனர் தேவை. டைப்செட்டிங் உடன் Illustrator & Photoshop. ஆங்கிலத்தில் தேர்ச்சி சிறந்த தொடர்பாடல் திறமை. தயவு செய்து உங்கள் CV ஐ labequ@sltnet.lk இற்கு அனுப்புங்கள் தொ.பே 0777560544. லெ போரட்ரி ஈகிப்மன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட். 023075

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

ஹோமாகம, பனாகொட, டெம்பிள்பேர்க் இன்டஸ்ட்ரியல் சோன் தயாரிப்புக் கம்பனிக்கு உற்பத்தி பிரிவு வேலையாட்கள் தேவை. வயதெல்லை 1830 தங்குமிடம் உண்டு. சிறந்த சம்பளம் மற்றும் மேலதிக படிகள் தயவுசெய்து அழைக்கவும். 0778869803/ asifplastic508@gmail.com023916

### 313 வெற்றிடங்கள் அச்சடித்தல்

பைன்டின் மற்றும் லெமினேட்டட் பைன்டின் போட்களால் உருவாக்கப்படும் பெட்டிகள் போன்றவற்றை ஒட்டக்கூடிய சிறந்த அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. 0777313478. 023938

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

இருவரைக் கொண்ட குடும்பத்தில் உணவு சமைக்க, வீடு சுத்திகரிக்க பெண் தேவை. 0777268835, 0717268835. 023244

ஏக்கல நிவாசிரிபுர வீட்டிற்கு தங்கி வேலை செய்வதற்கு திறமையான, நேர்மையான பெண் அல்லது தனித்து இருப்பவர் தேவை. 0703276665, 0767224860, 0767224860. 024126

பாடசாலை ஆசிரியருக்கு நன்றாக சமயல் தெரிந்த ஒரு பெண் தேவை. 25 35 குடும்பத்தில் ஒருவர் போல் கவனிக்கப்படும். 0779873316, 0769987669 023919

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கிரில்லவெலயிலுள்ள கபே ஒன்றிற்கு யூஸ், சப்மரீன் சாண்ட்வீச் செய்வதற்கான ஆட்கள் தேவை. தொலைபேசி இல 0701004611. 024030

### 325 தொழில்துறை பொது

களுஅக்கல தொழிற்சாலைக்கு ஆண்/பெண் ஊழியர் தேவை. வாரசம்பளம்/ தினமும் முற்பணம். ஆண் ஊழியர்கள் 1250/ பெண் ஊழியர் 950/ பகல் உணவு இலவசம். 07 7 8077813, 0722273273. 023361

கிருளப்பனை எப்பார்ட்மன்ட்ஸ் Building இல் Cleaning வேலை செய்வதற்கு ஊழியர் ஒருவர் தேவை. கிருளப்பனை, நுகே கொடை அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. மேலதிக தொடர்புகளுக்கு 0775158079 023808

கொழும்பிலுள்ள நாம் சர்வதேச உணவக முகவராக செயற்படும் அதே வேளையில் எமது வியாபாரத்தை விஸ்தரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேர்ச்சியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். குழு உறுப்பினர்கள், பணிவிடைக்காரர்கள், முறை மாற்று முகாமையாளர்கள், சமையற்காரர்கள், சமையலறை உதவியாளர்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகள் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல் வேண்டும். ஆர்வமும், விருந்தோம்பல் ஆளுமையுடைய நபர்களாகவிருத்தல் வேண்டும். முதல் மூன்று நிலைகளுக்கு QSR அனுபவம் தேவை. மீதியான நிலைகளுக்கு தொழிலில் ஆகக்குறைந்தது 1 வருட அனுபவம். உங்கள் சுயதரவை shiransahabdeen@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம் அல்லது 0703466766 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளலாம். 024082

கொழும்பு சுத்திகரிப்பு நிலையத்திற்கு சுப்பர்வைசர், மெசின் ஒபரேட்டர் பெண் சுத்திகரிப்பாளர், வேலை சுத்திகரிப்பாளர் தேவை. அழையுங்கள் 0772771022 023518

தையல் இயந்திரம் லெதர் உற்பத்தி இயந்திர ஆண்/ பெண் இயக்குநர்கள் பயிற்சி பெற்ற/ பெறாத தொழில்நுட்பவியலாளர் பயிற்சிக்காக ஆண்/ பெண் இலகுவான வேலை நல்ல சம்பளம் கூடுதல் வருமானம் புதிய அறிவு மற்றும் பயிற்சி வெற்றிகரமான தொழில்சார் பின்னணிக்காக எம்மோடு இணையுங்கள். 0114322711 024256

பேலியகொடை பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகத்திற்கு கையுதவியாட்கள் மற்றும் வெயிட்டர்கள் தேவை. வெயிட்டர்கள் 1,000/ கையுதவியாட்கள் 1,000/ அனுபவம் உடையவர்களுக்கு 1,500/ பழச்சாறு மற்றும் உணவு வகைகளுக்கு 1,500/ அழையுங்கள் 0767569937 024055

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

ஆண்களுக்கு அறை இணைந்த குளியலறையுடன் வாடகைக்கு உண்டு. 3 மாத முற்பணம். இல. 121/ 1, சரணங்கர ரோட், தெஹி வளை. 077749903 8/ 0777983989 / 0777337032 024327

## காணி/தோட்டம்

### 612 கட்டிட நிர்மாணம்/ பொருட்கள்

உங்களது புதிய, பழைய கட்டிட மூலப்பொருட்களுடன் பெயின்ட் செய்வதற்கு பொறுப்பேற்போம். நியாயமான விலைகள் அழையுங்கள் பிரேம்லால் 0777611299. 022309

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

களுபோவில 11 பேர்ச் இரண்டு மாடி வீடு உடன் விற்பனை. 8 படுக்கையறைகள், 5 குளியலறைகள், தோட்டம் மற்றும் கராஜ் 0777347169, 0779269423. 023755

கொழும்பு 03, 2 பர்ச் காணி மற்றும் 4 மாடி வீடு, கொழும்பு 07, 11 பேர்ச் காணி மற்றும் வீடு விற்பனைக்கு. (தரகர்கள் வேண்டாம்) 0773810404, 0332288303. 022767

மாலபே SLIT-SITM HORIZON இற்கு அருகாமையில் வலிவிட்ட பாதையில் விஜயபா மாவத்தையில் 10 பேர்ச் 3 அறைகள் பான்ரி, ஹோல், ஊழியர் அறை, 4 வாகனங்கள் நிறுத்துமிடம் ஒருவரும் வசிக்காத புதிய வீடு விற்பனைக்கு LK 240, 0773222571. 015738

வீடு/காணி, வியாபாரஸ்தலம் விற்பனைக்கு மற்றும் குத்தகைக்கு. களுபோவில, தெஹிவளை மேலும் பிரதேசங்களில் தொடர்பு சுனில் 0777846326, 0753846326. 022536

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

வத்தளை, கெரவல்லபிட்டிய பெரிய வீடு 22 பேர்ச் காணியுடன் சுவரினால் சூழப்பட்டுள்ளது. குடியிருப்பு அல்லது வியாபார நோக்கத்திற்கு பொருத்தமானது. கெரவலப்பிட்டி அதிவேக உள்நுழைவுக்கு 01 KM. விலை 35 மில்லியன் (பேசித்தீர்க்கலாம்) தொடர்பு 0774102411. 023225

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

களுபோவில இரண்டு படுக்கையறை மேல்மாடி வீடு வாடகைக்கு. 43/ 14, ஹத்போதிய ரோட், களுபோவில. 0779269423, 0112728054. 023765

கொலொன்னாவ மீத்தோட்டமுல்ல பெரேரா மாவத்தை இரண்டு வீடுகள், 3 அறைகள் 30, 000/ 2 அறைகள் 20,000/ உடன் வாடகைக்கு. தொடர்பு 0 777486536 023315

வீடு வாடகைக்கு வெள்ளவத்தை Station அருகில் சகல தளபாடங்களுடன் தனி வீடுகள் Separate Sanitizer Rooms with Attached Bathroom வாடகைக்குண்டு. விஷேட வைபவங்களுக்கும் வீடுகள் 2, 3, 6 அறைகள் Fully Furnished நாள் வாடகைக்கு. தொடர்பு 0710667511/ 0777667511 023511

**Repeat Your ad For Better Offers**





நாட்டிய கலாமந்திர் அதன் 45ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும், இத்தருணத்தில் கலாமந்திரின் இயக்குனர் ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவி யஷ்மேத்தா பிரபாகரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி பத்தரமுல்லையில் அமைந்துள்ள 'லைட் ஒப் ஏசியா' வில் இடம்பெறவுள்ளது. (படம்: வி. ஜெகதீஸ்வரன்)

Uva Wellassa University

# தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசிய வளத்தை மையப்படுத்தி அதற்கான மேலதிக செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுடன் பட்டப்படிப்பு, நிபுணத்துவம், கூட்டுறவு என்பனவற்றின் புதிய போக்குகளையும் ஏற்படுத்துகின்றது. பல்கலைக்கழக கல்விசார் திட்டங்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டு தங்கள் தொழில் வழங்குநருக்கு பெறுமதி சேர்க்கும் தேர்ச்சிவாய்ந்த புதிய மாணவர் பரம்பரையை முன்கொணர்கின்றது. தேசிய பல்கலைக்கழகங்களில் தேசியரீதியிலான இப்பாரிய முயற்சியில் நீங்களும் ஓர் அங்கத்தவராகலாம்.

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத்தலைவர் விலைமனுக்களை கோருகின்றார்.

| விபரம் | வாகனங்களின் எண்ணிக்கை | கேள்வி இல. | கேள்வி சேகரிப்பு கட்டணம்/ மீளளிக்கப்படாத |
|---|---|---|---|
| வாகனங்கள் வாடகைக்கு/ குத்தகைக்கு (மூன்று (03) வருடங்களுக்கு) | | | |
| 01. Motor Car Sedan (1490CC - 1600CC/ Petrol/ Non Hybrid/ Air Conditioned/ Toyota-Nissan or Equal (பிரதிப் பீடாதிபதிக்கு) | 01 | UWU/ GA/V/21/01 | Rs. 2,000.00 |
| 02. Motor Car Sedan (1490CC - 1600CC/ Petrol/ Hybrid or Non Hybrid/ Air Conditioned/ Toyota, Nissan or Equal. (பதிவாளர், Deans, நூலகம்) | 04 | | |

2021.03.20 முதல் 2020.04.19 வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக காசாளருக்கு ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், அல்லது 3114820 என்ற இலங்கை வங்கியின் கணக்கிலக்கத்திற்கு நேரடியாகவே வைப்புச் செய்த பின்னர் இந்த பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டை எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், எந்தவொரு விலைமனுதாரரினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். http://www.uwu.ac.lk/procurement என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்வோர் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை ரொக்கப் பணப் பற்றுச்சீட்டு/ பணவரவுத் துண்டின் மூலப்பிரதியுடன் சமர்ப்பிக்கவும். மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலிருந்தும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக 3114820 என்ற கணக்கிலக்கத்திற்கு பணக்கொடுப்பனவு மேற்கொள்ளலாம். விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

2021 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அவைகள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார். கேள்விகள் தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் உரித்தான கேள்வி இலக்கம் எழுதப்பட்டு பதிவுத் தபாலில் "தலைவர், பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

055-2226470 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெறுகைக்கான பிரதி பதிவாளரிடமிருந்து (பொது நிர்வாகம்) மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
28.03.2021

சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

# கேள்வி கோரல்

## விமானி அற்ற விமானங்களுக்கான முழுமையான தன்னியக்க முறைமையொன்றை அமுலாக்குதல் மற்றும் பராமரித்தல்

## (Implementation and Maintenance of the Fully Automated Platform for Unmanned Aircraft Systems [UAS])

**கேள்வி இல. SP/2021-4**

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் விமானி அற்ற விமானங்களுக்கான முழுமையான தன்னியக்க முறைமையொன்றை அமுலாக்குதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. கேள்வியிடல் தேசிய போட்டி முறையிலான செயற்பாடுகளுக்கமைய இடம்பெறும்.
3. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. 2021 மார்ச் மாதம் 30ஆம் திகதி முதல் 2021 ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத இரண்டாயிரத்து ஐந்நூறு 2500.00) (வெட் இன்றி) ரூபா கட்டணத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் ஒரு இலட்சம் (100,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு கேள்விப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
6. 2021 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை "தொழில்நுட்பம்" மற்றும் "நிதி" என வெவ்வேறாக இரண்டு பிரேரணை எனும் வகையில் அதிகாரம் வாய்ந்த நபரின் உத்தியோகபூர்வ முத்திரை சகிதம் கையொப்பமிட்டு, முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு இயைபுடைய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்பம்" மற்றும் "நிதி" எனவும் மற்றும் "முழுமையான தன்னியக்க முறைமையை அறிமுகப்படுத்தி பேணிக்கொண்டு செல்லல்" எனக் குறிப்பிட்டு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
7. 2021 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
8. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2021 ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் இடம்பெறும்.
9. கேள்வியைக் கையளிப்பதற்கு தகைமை பெறும் நிறுவனத்தினால் முழு ஒப்பந்தப் பெறுமதியின் 10% பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனைகளற்ற செயற்றிறன் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். எதிர்பார்க்கப்படும் செயற்றிறன் மட்டத்திலான சேவை கிடைக்காவிட்டால் அதை அறவிட்டுக் கொள்ளும் உரிமையை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க.**

நேஷனஸ்டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி மற்றும் வீடு

பாணந்துறை வீட்டுடன் காணி
அளவு: 19 பேர்ச் குறைந்த கேள்வி ரூ. 26 மில்லியன்
தொடர்பு: 077 2361243

மஹரகம வீட்டுடன் காணி
அளவு: 13.25 பேர்ச் குறைந்த கேள்வி ரூ. 18 மில்லியன்
தொடர்பு: 077 3427535, 071-04514093

அம்பலங்கொட வீட்டுடன் காணி
அளவு: 9.25 பேர்ச் குறைந்த கேள்வி ரூ. 4 மில்லியன்
தொடர்பு: 076 1349716


பலாங்கொட, புத்தஜயந்தி மாவத்த
அளவு: 25 பேர்ச் குறைந்த கேள்வி ரூ. 1.25 மில்லியன்
தொடர்பு: 076 1544246

கண்டி, ஹுளுகங்க வீட்டுடன் காணி
அளவு: 157.7 பேர்ச் குறைந்த கேள்வி ரூ. 8.4 மில்லியன்
தொடர்பு: 076 3050559

பலாங்கொட புத்த ஜயந்தி மாவத்த
அளவு: 14.8 பேர்ச் குறைந்த கேள்வி ரூ. 740,000/-
தொடர்பு: 076 15442466

விலைமனுக்கள் பேசித்தீர்த்தல்
**நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி விசேட சொத்து முகாமைப்பிரிவு இல-242, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02** முகவரியில் 2021.04.11 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

# அமரர் அருள் செல்வநாயகம் ஓர் அயராத படைப்பாளி

இவருடைய எழுத்துப்பணி, படைப்பாற்றல் மிக விதந்து பேசத்தக்கது. அத்தோடு அவர் எமது மண்ணின் பெருமைக்கு வித்திட்ட முத்தமிழறிஞர் சுவாமி விபுலானந்தர் பற்றிய வரலாறு, அவர் ஆற்றிய அரும்பணிகள் குறித்து முதன் முதலில் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி விபுலாந்தரியலுக்கு அத்திவாரமிட்ட முதல் மேஸ்திரியாக அருள். செல்வநாயகம் விளங்குகிறார்.

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, குருமண்வெளி என்னும் அழகிய கிராமத்தை சேர்ந்த இவர், ஒரு நல்லாசிரியர், அறிஞர், எழுத்தாளர்.

அடக்கமும், பணிவும், எளிமையும் இவர் தன்னகத்தே கொண்ட கவச குண்டலங்கள் என்று சொல்லலாம். தனது படைப்புகளை நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை என்று பல தளங்களில் எழுதி அவற்றை வெளிக்கொணர்ந்தவர். ஆனால் விபுலானந்த அடிகளார் இந்த தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அருளிவைத்த கலைப்பொக்கிசங்களை துருவித் துருவி தேடி தொகுத்து வெளியிட்ட பெருமை.. அருள். செல்வநாயகம் அவர்களுக்கு மட்டுமே உரியது. உயரிய நோக்குடனும்,சிந்தனையுடனும், எதிர்கால தமிழ் சந்ததியினருக்கு எம்மண்ணின் துறவி அடிகளார் பற்றிய வரலாற்றை, அவர் படைப்புகளை இலகுதமிழ் கொண்டு படித்து தெளியவேண்டும் என்று இவர் தொகுத்த நூல்கள் எமது மக்களுக்கு வரமாகவும், வாய்ப்பாகவும் அமைந்தன.



சுருக்கமாக சொன்னால் அடிகளாரை அகிலத்துக்கு அறிமுகப்படுத்திய எங்கள் மூத்த படைப்பாளி அருள். செல்வநாயகம் என்று சொல்வது மிகை இல்லை. 1954ல் "விபுலானந்த அடிகள்" என்ற நூலை எழுதி அதில் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை சொன்னவர்.

1956ல் "விபுலானந்த அமுதம்" தந்து அடிகளாரின் மற்றுமொரு அவதாரத்தை காட்டியவர். இந்த நூலிலே விபுலானந்தரின் நூலுரு பெறாத கட்டுரைகளை "கரந்தை தமிழ் சங்கத்திடம்" இருந்து பெற்று அவற்றை தனது அமுதத்தில் கலந்தார்.

அதே ஆண்டில் மேலுமொரு நூல் அடிகளார் பற்றி எழுதினார். அது "தேனாக" வெளிவந்தது. ஆம் "விபுலானந்த தேன்" என்ற புத்தகம். இது கல்வி அமைச்சினால் பாடத் திட்டமாக அங்கீகரிக்கப்பட்டது. 1957ல் விபுலானந்த கவிதைகள், 1961ல் விபுலானந்த வெள்ளம், (இது தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கலைமானி பட்டப்படிப்புக்கு பாட நூலாக தெரிவு செய்யப்பட்டது. 1963ல் "விபுலானந்த ஆராய்வு" என்ற நூல் வெளிவந்தது.

**1965ல் விபுலானந்த கவிமலர்....**
**1967ல் விபுலானந்த வெள்ளம்..**
**1973ல் விபுலானந்த இன்பம் ..**

என்று சுவாமி விபுலானந்தரின் மகத்தான ஆக்கங்களை தனித்து நின்று தொகுத்து பத்துப் புத்தகங்களாக வெளியிட்ட துணிச்சல் இவரைவிட யாருக்கு இருக்கிறது. இவர் தொகுத்த விபுலானந்த அடிகள், அமுதம், தேன், ஆராய்வு, வெள்ளம்,செல்வம், கவிதை, கவிமலர், சொல்வளம், இன்பம் என்ற பத்து நூல்களும் 2008ல் "விபுலாநந்த இலக்கியம்" என்ற தலைப்பில் மகா நூலாக வெளிக்கொண்டுவந்தார். இவரது மூத்த மகள் திருமதி. ஜயந்திமாலா. குணசீலன். இவரது தந்தையாரின் தொலைநோக்கு சிந்தனையால் விபுலானந்தர் மறைந்த பின்னரும் அவரது ஆக்கங்கள் நம் மத்தியில் இன்றும் பேசப்படுகிறது.

அழியாத செல்வமாக இருக்கிறது. அமரர் அருள் செல்வநாயகம் அவர்கள் வெறுமனே விபுலானந்தர் பற்றி மட்டும் எழுதாமல் தனது சொந்த படைப்புகளாக வரலாற்று இலக்கியங்கள்,சமூக நாவல்கள் என இருபத்தி நான்கு நூல்கள் படைத்திருக்கிறார்.இது ஒரு மிகப்பெரிய சாதனையாகும்.இந்த மூத்த படைப்பாளி பற்றி எம் மண்ணினின் ஏனைய மூத்த படைப்பாளிகளான புலவர்மணி, பெரியதம்பிபிள்ளை, க.செ.நடராசா கலாநிதி பாலசுந்தரம்,கலாநிதி மௌனகுரு ஆகியோர் மிகவும் வியந்து, விதந்து பாராட்டியுள்ளார்கள்.

**கோவிலூர் சொல்வராசன்**

# இன நல்லுறவுக்கு பாலமாய் விளங்கிய முன்னாள் யாழ் பிரதி மேயர் எம்.ஜி.பஷீர்

யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் முகம்மது கனி ஹக்கீமா தம்பதியினருக்கு 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி ஐந்து பிள்ளைகளுள் மூத்த மகனாக எம்.ஜி.பஷீர் பிறந்தார். இவரது தகப்பனார் முகம்மது கனி தையல் தொழில் செய்ததால் பருத்தித்துறையில் குடும்பத்துடன் வசித்துவந்தார். அதனால் பஷீர் தனது ஆரம்பக் கல்வியை பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆரம்பப் பாடசாலையிலும், 08 ஆம் வகுப்பு வரை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்றார்.

அதனைத் தொடர்ந்து இவரது குடும்பம் மீண்டும் யாழ்ப்பாணம் சோனகத் தெருவிற்கு குடியேறியபோது தரம் 09 தொடக்கம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் கல்வி பயின்றார்.

படித்து முடித்ததும் எம்.ஜி.பஷீர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல நிறுவனத்தில் பல வருடங்கள் பணிபுரிந்தார். பஷீர் 1955 இல் யாழ் முஸ்லிம்களின் விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ் முஸ்லிம் மாணவர்கள் சங்கம் ஒன்றை ஸ்தாபித்தார். இச்சங்கத்தின் போஷகர்களாக அபூசாலி ஹாஜியாரும் சேகுமதாரும் ஒத்துழைப்பு வழங்கினர்.

வருடந்தோறும் மாணவர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து ஜஸ்மின் இல்லம், பிரிம்ரோஸ் இல்லம் என்று பெயருமிட்டு ஜஸ்மின் இல்லத்துக்கு அப்துல் ஸலாமும், பிரிம்ரோஸ் இல்லத்துக்கு ஏ.எச் ஹாமீமும் பொறுப்பெடுத்து விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கி வந்தார்கள்.

எம்.ஜி.பஷீர், மொஹிடீன் ஆசியா தம்பதியினரின் அன்பு மகள் ஆசிரியை சுல்பாவை 23.08.1964 இல் திருமணம் செய்தார். பஷீர் சுல்பா தம்பதியினருக்கு நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். இவர்களுக்கு ஒரு வளர்ப்பு மகனும் உண்டு. எம்.ஜி.பஷீர் இளம் பராயத்திலேயே இயற்கையாக சமூக சேவையில் ஈடுபடக் கூடியவராக இருந்தார்.



முஸ்லிம் வட்டாரத்தில் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் ஐந்தாம் வகுப்பு படித்து முடித்ததும் படிப்பை இடைநிறுத்தி ஏதாவது சிறிய வேலைக்கு அனுப்புவது வழமையாக இருந்தது.

இந்த மாதிரியான பெற்றோர்களை எம்.ஜி.பஷீர் சந்தித்து கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி கல்வியை இடையில் விட்ட அந்த பிள்ளைகள் திரும்பவும் கல்வியை தொடர அரும்பாடுபட்டார்.

பெற்றோர்களால் கல்வியை தொடர விடாமல் இடைநிறுத்திய அந்த மாணவர்கள் இவரது முயற்சியால் மீண்டும் கல்வியை தொடர்ந்து அரசாங்க உத்தியோகத்தில் பணிபுரிந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் 1969 இல் அபூசாலி ஹாஜியாருக்கு எதிராக யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாநகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் யாழ் மாநகர சபையின் பிரதி மேயராகவும் பணிபுரிந்தார்.

இவர் முன்னாள் மேயர் அல்பிரட் தங்கராஜா துரையப்பாவுடன் இணைந்து பல சமூக வேலைத் திட்டங்களுக்கு உறுதுணை புரிந்தார். புதிய சோனகத் தெருவிற்கு (பொம்மைவெளி) மின்சார வசதியைப் பெற்றுக் கொடுத்ததோடு வேறு பல உதவிகளையும் செய்தார்.

மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசல் பகுதியில் ஒரு குடியேற்றத் திட்டத்தை உருவாக்கி, ஒரு பாடசாலையையும் உருவாக்கி பல உதவிகளைச் செய்தார். சோனகத் தெருவில் பல வீதிகளைத் திருத்தியமைத்தார். இவர் மாநகரசபை உறுப்பினராக இருந்த காலத்தில் மின்சாரம், சுகாதாரம், கட்டடங்கள் பழுதுபார்த்தல் போன்ற வேலைகளுக்கும் தலைவராக இருந்து பல வேலைத்திட்டங்களுக்கு உறுதுணை புரிந்தார்.

யாழ். மாநகரசபையில் இவரின் தீர்மானத்தை ஏற்று முன்னாள் கல்வியமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்தின் யாழ்ப்பாண விஜயத்தின் போது அமைச்சருக்கு இன, மத வேறுபாடின்றி பொது வரவேற்பு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்குப் பின்னால் 1993 இல் அப்போதைய யாழ் மாநகர சபை ஆணையாளர் பாலசிங்கம் யாழ் நவீன சந்தையில் உள்ள அனைத்து முஸ்லிம்களது கடைகளை டென்டர் மூலம் கொடுப்பதற்கு முயற்சி எடுத்தார். அச்சந்தர்ப்பத்தில் எம்.ஜி.பஷீர் ரன்முத்து ஹோட்டலின் உரிமையாளர் சேர் அமீர் மூலம் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசவைச் சந்தித்து அந்த டென்டரை நிறுத்தும் முயற்சியில் கடுமையாக உழைத்து அந்த டென்டரை நிறுத்தினார்.

இடம் பெயர்ந்த பின் புத்தளத்தில் வறுமையில் வாடிய குடும்பங்களில் நடந்த திருமணங்களிற்கு தனவந்தர்களைச் சந்தித்து அவர்கள் மூலமாக பலருக்கு உதவி புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் தமிழர் முஸ்லிம் நல்லுறவு பாதித்து விடக்கூடாது என்பதிலும் பஷீர் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டார்.

யாழ்ப்பாண முஸ்லிம்களில் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக ஆர். எம்.இமாம் வருவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாநகர சபையின் முன்னாள் பிரதிமேயர் எம்.ஜி.பஷீர் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 12.02.2021 இல் தனது 84 ஆவது வயதில் இறையடி எய்தினார்.

அன்னாருக்கு ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த அந்தஸ்துள்ள சொர்க்கம் கிடைக்க அல்லாஹ் அருள்புரிவானாக.

**பரீட் இக்பால்**
யாழ்ப்பாணம்.





இரத்தினபுரி நுகேபொல கலைமகள் தமிழ் மகா வித்தியாலய 2001ஆம் ஆண்டின் பழைய மாணவர் அணியினர் அண்மையில் மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றை நடத்தினார்கள். இதன்போது வித்தியாலய அதிபர் திருமதி ஜீவரட்ணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



# 'ஈழத்து நூன்' இவன் எம் இதயத்து 'மூன்'

ஈழத்து நூன் எங்கள் எம்மேயெம் நிலாமை
உள்ளத்து மகிழ்வுடன் நிறைவாக வாழ்த்திடவே
கல்லொழுவ ஊரதில் ஒன்றிணைந்தத நேயர்காள்
வல்லோன் அருள்மாரி உம்மீது சொரியட்டும்
1985 .04. 12
எம் இல்லத்தின் முதல் திருமணம் நிகழ்ந்த நாள்
நம் ஈழத்து நூன் தன் துணையோடு
எம் இல்லம் வந்த முதல் நாள்
எம் குடும்பத்தார் மனதில் இன்றும்
மறக்க முடியாத பசுமை நாள்
நான்கு தசாப்தங்கள்
நட்பால் நாமிணைந்தோம்
நன்மைகள் செய்வதிலே
தோளோடு தோள் சேர்ந்தோம்
என்றென்றும் எழுத்தெம்மை
இணைத்ததால் உளம் மகிழ்ந்தோம்
நன்றென்று நான் சொல்வேன்
நாமென்றும் இணை பிரியோம்
எழுபத்தைந்து அகவைகள் கண்ட எம் நூன்
எழுத்துலக ஜாம்பவானாய் முன்னே வீற்றுள்ளார்
ஈழத்து நூன் என்று புகழ் பூத்த எம் எழுத்தாளன்
உலகத்து மாந்தர்களின் மனதினிலே வாழ்கின்றான்
இருபதாம் நூற்றாண்டின் ஏழாம் தசாப்தத்தில்
இலங்கையின் உன்னத 'தினகரன்' நாளிதழில்
உளமாற கால்பதித்து ஊடகத்தில் இணைந்த இவன்
வளமான தன் எழுத்தால் வான்புகழ் பெற்றானே
தினகரன் தினக்குரல் வீரகேசரி என்றிவன்
தினசரிகளில் சாதித்தவை தாராளம் ஏராளம்
தினச்செய்தி பிரசுரிக்க நாடுவோரும் தேடுவோரும்
தினம் நிலாமின் தயவினைதான் தவறாது நாடினரே
அரசியல் தலைவர்க்கு நிலாம் ரொம்ப நெருக்கம்
இராஜ தந்திரிகளுக்கு நிலாம் நல்ல விருப்பம்
சோரம் போனவர்க்கோ நிலாமோடு தயக்கம்
வீரம் இவன் எழுத்தில் அதில் இல்லை மயக்கம்
நிலாம்
நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என
சற்றும் தயங்காது தட்டிக் கேட்பான் .
ஆற்றல் உள்ளோர்கள் வெற்றிக் கனி பறிக்க
தட்டிக் கொடுப்பான் தன் தனி எழுத்ததனால்.
நிலாம்
தமிழ் முஸ்லிம் நல்லுறவு
தரணியிலே தழைத்தோங்க
தெளிவாக செயல்பட்டான்
தெய்வத்தின் அருள் பெற்றான்
நிலாம்
ஓர் உலகம் சுற்றிய பத்திரிகையாளன்
ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான்,
ஈரான், நேபாளம், சவூதி அரேபியா என
எண்ணற்ற நாடுகள் இவன் தரிசனத்தில்
நிலாம்
உலகம் வியக்கும்
வெள்ளை மாளிகைக்கு
விஜயம் செய்த இலங்கையின்
முதல் தமிழ் பத்திரிகையாளன்
நிலாம்
நல்லன எழுத்தில் சேர்ப்பான்
அல்லன களைய உழைப்பான்
மெல்லென சுகமாய் கதைப்பான்
வல்லோனின் அருளில் சிறப்பான்
நிலாம்
பவளவிழா காணும் பாவலன்
நலவுகள் நிறைசெய்த நாயகன்
எழுச்சியோடு எழுதிவந்த ஊடகன்
என்றும் எங்கள் நல் நேசகன்
"தட்டுத்தாவாரம்" தரும் இவன் திறன்
தடுமாறவில்லை அது தீமைக்கு முறன்
எட்டுத் திக்கும் பேர் பெற்ற பெருமகன்
என்றும் நிலைக்கும் இவன் பெறும் புகழ்
எழுபத்தைந்து வயதில் நிலாமின் பிரசவம்
எல்லோரும் மகிழும் வெளியீட்டு உற்சவம்
எழுதியதால் நிலாம் மனதில் பரவசம்
என்றென்றும் நலம் பெறுவார் நிச்சயம்
ஈழத்து நூன் இவன் எம்
இதயத்து மூன் – இவன்
எழுத்துலகில் தேன்
கௌரவத்தில் கவரிமான் நான்
என்றும் இவன் பே(f)ன்
என்பதில் நான் மகிழ்வேன்

('ஈழத்து நூன். எம். ஏ. எம். நிலாம் எழுதிய "தட்டுத்தாவாரம்" நூல் வெளியீட்டு விழாவும், அவரது பவள விழாவும் கடந்த வாரம் மினுவங்கொடை, ககல்லொளுவவில் நடைபெற்றபோது பாடப்பட்ட வாழ்த்துக் கவிதை....

**இலக்கியச் செம்மல்,**
**கலாபூஷணம்**
**சட்டத்தரணி**
**ரஷீத் எம். இம்தியாஸ்**



# ஆலயத் தேர் திருவிழாவுக்கு தாமரைப் பூ பறிக்கச் சென்ற ஆசிரியர் நீரில் முழ்கி மரணம்

வவுனியா விசேட, ஓமந்தை விஷேட நிருபர்கள்

வவுனியாவில் கருமாரி அம்மன் ஆலய தேர் திருவிழாவுக்கு தாமரைப் பூ பறிப்பதற்காக சென்றவர் வைரவபுளியங்குளம் குளத்தில் முழ்கி மரணமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா, குட்செட் வீதி, கருமாரி அம்மன் ஆலயத்தின் தேர் திருவிழாவிற்கு தாமரைப் பூ மற்றும் தாமரை இலை என்பவற்றை பறிப்பதற்காக ஆசிரியர் ஒருவர் வைரவபுளியங்குளம் குளத்திற்குள் சென்றுள்ளார்.

குளத்தில் தாமரை இலை மற்றும் தாமரை பூவைப் பறித்துக் கொண்டிருந்த போது தாமரைக் கொடியில் சிக்கி நீரில் முழ்கியுள்ளார். குளத்தில் நடமாட்டதைக் காணாமையால் அயலவர்கள் மற்றும் குளத்தின் கமக்கார அமைப்பினர் இணைந்து குளத்தில் தேடிய போது நீரில் முழ்கிய நிலையில் ஆசிரியர் மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட ஆசிரியர் அம்பியூலன்ஸ் வண்டி மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும், அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்னேரே நீரில் முழ்கியதால் மரணமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இரசாயனவியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியரும், மாணவச் சிப்பாய் படையணியின் (கடேற்) ஆணை பெற்ற அதிகாரியான 02 ஆம் லெப்டினன் ப.பரந்தாமன் (வயது 33) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இதேவேளை, ஆசிரியர் நேற்று ஆரம்பித்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுக்கும் செல்லவிருந்தமை குறிப்பிடத்தக்கது.


தினகரன் வாரமஞ்சரி BUDGET adz It suits your budget

Hotline - 011 2 429 367 | 011 2 429 368


உணவு வசதி
சீருடை வசதி
தங்குமிட வசதி } இலவசமாக வழங்கப்படும்.

மாதச் சம்பளம் ரூபா 30,000, 35,000
ஒரு நாள் சம்பளம் → 1100 வழங்கப்படும்

PRIMA COMPANY → தொழிற்சாலை வேலை வாய்ப்புக்காக ஆட்கள் எடுக்கப்படுகின்றார்கள். 18 - 55 வரை ஆட்கள் எடுக்கப்படுகின்றார்கள்.

சஜினி 071 4 333 203 071 2 822 944 சந்திரன்
உங்களை நாங்கள் அன்புடன் வரவேற்கின்றோம்.
594/A, வல்கம, மல்வானை.




Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT
adzsuo@gmail.com







SAMEERA AUTO TRADERS

எம்முடன் இணைவதற்கு வாருங்கள்...!!!
நம்பிக்கை, சுறுசுறுப்பு மற்றும் அனுபவமுள்ள சேவைக் குழாமின் சேவை...!!!
ஒரே நாளில் லீசிங் வசதிச் சேவை...!!!
BUY WITH CONFIDENCE
FREE 3 SERVICES




UDAYA - 076 909 56 05 / ASELA - 0776 562 007
Can be Seen @ 121/A Pagoda Road, Nugegoda.
( Close to Ananda Balika College )
100% ACCIDENT FREE... / 100% RUNNING CONDITION... / 100% INTERIOR CONDITION...
SAMEERA AUTO TRADERS






# நோன்மதி தின சிறப்பு பௌத்த கலந்துரையாடல்கள்

## இன்று தேசிய தொலைக்காட்சியில்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசையான நேத்திரா டி.வியில் ஒவ்வொரு மாதமும் நோன்மதி தினத்தன்று விசேட பௌத்த கலந்துரையாடல் தமிழ் மொழியில் ஒளிபரப்பாகி வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் மெதின் தினம். புத்த பகவான் சுமார் 20,000 சீடர்கள் சகிதம் தமது தந்தையார் ( மன்னர் சுத்தோதனவின்) அரண்மனை நோக்கி பயணித்த நாளாக இந்த நாள் நினைவுகூரப்படுகிறது. அவர் ரஜ கஹாநுவரவிலிருந்து தனது பிறப்பிடமான கபிலவஸ்துபுர நகரம் நோக்கி பயணித்த நாளாக இது அமைகிறது. துறவறம் பூண்டபின்னர், புத்த பகவான் தனது தந்தையாரின் வேண்டுகோளுக்கிணங்க அவரை சந்திக்க சென்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

தமிழ் பேசும் மக்களுக்கு பௌத்த தர்மம் தொடர்பான விளக்கம் வழங்கும் நோக்கிலேயே, இந்த நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பாக இடம்பெற்று வருகிறது. இன்று நோன்மதி தினத்தன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை நேரடி ஒளிபரப்பாக நேத்ரா டி.வியில் இடம்பெறவுள்ளது.சில சந்தர்ப்பங்களில் அவை பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாகவும் அமைகின்றன.

2019 நவம்பர் மாதம் 16ம் திகதி ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்கு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் பல்வேறு மத நல்லிணக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகஸ்ட் 5ம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மாபெரும் வெற்றியை பதிவு செய்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. அதன் பின்னர் மீளவும் பிரதமராக பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷவின் நேரடி நிர்வாகத்தின் கீழ், புத்த சாசன அமைச்சு வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

ஒரு மதம் பற்றி ஏனைய சமூகங்களுக்கு அந்த சமூகங்களின் மொழிகளில் இலகு நடையில் வழங்கும் போது நல்லிணக்கம் ஏற்படுகிறது. மேலும் மதங்கள் பற்றிய பல சந்தேகங்களும் முரண்பாடுகளும் நீங்குகின்றன. நோன்மதி தினத்தின் வரலாற்று சிறப்பு, பௌத்த தர்மம், பஞ்ச சீலம் தொடர்பான விளக்கம், தியானம் மற்றும் தானங்கள் பற்றிய விளக்கம், புத்த பகவானின் வாழ்கை சரித்திரம் உட்பட பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் பேசும் பௌத்த பிக்கு மூலம் பௌத்த தர்மம் குறித்த விளக்கம் இலகு தமிழில் வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும். புத்த சாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்ஜன் யோகராஜ் அமைச்சின் சார்பில் கலந்துகொள்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மார்ச் மாதம் 28ம் திகதி மெதின் நோன்மதி தினத்தன்றும் விசேட ஒளிபரப்பு இடம்பெறவுள்ளது.

நோன்மதி தினம் பற்றிய அறிமுகம், அதன் சிறப்பு, பௌத்த தர்மம், புத்த பகவானின் போதனைகள் மற்றும் வரலாறு தொடர்பில் சிறந்த விளக்கங்களை முந்தலம, மங்கள எலிய, ஸ்ரீ தேவ்ராம் விகாரையின் பொறுப்பாளர் சங்கைக்குரிய திரு நெல்வேலி போதி தம்ம அரவணடிகள் வழங்குவார். அன்றைய தினம் காலை 9 மணி முதல் 10.30 வரை இந்த விசேட உரையாடல் இடம்பெற உள்ளது.




**தகைமைகள்:**

**வெளியக அபேட்சகர்கள் ( கிரேடுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

(01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார முகாமைத்துவம் அல்லது வர்த்தகம் ஆகியவற்றில் பெற்ற முதனிலை பட்டதாரிப் பட்டமொன்று.

அத்துடன்

உரித்தான துறையில் பட்டப்பின் தகைமைப் பட்டம் (முதுமாணி) அல்லது பதவிக்கு உரித்தான விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் முழுமையான/ இணைந்த அங்கத்துவம்.

மற்றும்

கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்டசபையொன்றில்/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் "நிருவாக மட்டத்தில்" ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தில் 5 வருடங்கள் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய பணி அனுபவத்துடன் சிரேஷ்ட நிருவாக மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

(02) பதவியின் விடயப்பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் முழுமையான அங்கத்துவம்.

மற்றும்

"நிருவாக மட்டத்தில்" ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தில் 5 வருட அனுபவம் கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்டசபையில்/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய பணி அனுபவத்துடன் சிரேஷ்ட நிருவாக மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

**வயது:** 45 இற்கு குறையாமலும் 60 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
**சம்பளம் மற்றும் ஏனைய படிகள்:** அடிப்படைச் சம்பளம்: ரூபா 150,000. (செயற்பாட்டுப் படி – 75,000 + போக்குவரத்துப் படி ரூபா 50,000 மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்கு ஏற்புடையதாகவிருக்கும் வகையில் வழங்கப்படும் மாதாந்த எரிபொருள் படி + அலைபேசி மீள்நிரப்பல் - ரூபா 9,000.)

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.**

- மதிப்பீடு செய்தல், புதுப்பித்தல், தரவு உரைபெயர்ப்பு ஆகியவற்றின் ஆற்றலுடன் பகுப்பாய்தல், சிக்கலுக்கு தீர்வு காணல் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான திறன்கள் மற்றும் சிறந்த மட்டத்தில் சுயமாக சிந்தித்து செயலாற்றக்கூடிய தனிநபர்
- திடமான தலைமைத்துவ தகைமைகள், சமூகரீதியிலான தொடர்பாடல் திறன்கள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல்.
- சிறந்த தகவல் தொழில்நுட்பவியல் திறன்களை வெளிப்படுத்தக்கூடிய தகைமை.
- பன்முக மற்றும் கற்கை நெறிகளுக்கு தலைமை தாங்கவும், வழிநடத்தவும் கூடிய நிரூபிக்கப்பட்ட திறமை, மனித வளங்களையும் ஏனைய வளங்களையும் முறையாகப் பயன்படுத்தலிலும் வினைத்திறனாக முகாமைப்படுத்தலிலுமுள்ள அனுபவம்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

I. இலங்கை பிரஜையொருவராக இருத்தல் வேண்டும்.
II. பதவியின் கடமைகளை திறம்படச் செய்வதற்கும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உளரீதியிலான ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

உங்களுக்கு பொருத்தமான தகைமைகள் மற்றும் அனுபவம் ஆகியன இருக்குமானால், தயவு செய்து உங்கள் சுயதரவு அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளை பதிவுத் தபாலில் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட 10 நாட்களுள் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும். அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் (விண்ணப்பிக்கும் பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்/ மின்னஞ்சலில் subject என்ற இடத்தில் குறிப்பிடல் வேண்டும்)

(தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுடன் மாத்திரமே இந்த நிறுவனமானது தொடர்பு கொள்ளும்)

வர்த்தக அமைச்சு

தலைவர்,
லங்கா சதொச லிமிடட்,
சதொச செயலகக் கட்டிடம்,
இல.: 27, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

லங்கா சதொச

நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

# முன்மொழிவுகளுக்கான அழைத்தல்

## தெமடகொட அதி உயர் கலவை அபிவிருத்தி செயற்திட்டம்

நகர அபிவிருத்தி அதிகாரசபை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து (முதலீட்டாளர்கள், அபிவிருத்தியாளர்கள்) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியினுள் அதிஉயர் கலவை அபிவிருத்தி செயற்றிட்டமொன்றினை திட்டமிடல் - நிர்மாணித்தல் - நிதியிடல் - உரிமையாக்கல் - நடைமுறைப்படுத்தல் (DFBOO) எனும் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்காக முதலீட்டு முன்மொழிவுகளை அழைக்கின்றது. உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்படும் வழிகாட்டல் முறைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பொருத்தமான விபரங்களடங்கிய முன்மொழிவு அழைத்தல் ஆவணங்களை மீள் செலுத்தப்படாத 25,000/- ரூபா கட்டணத்தை (அதற்கான VAT வரி உள்ளடங்கலாக) செலுத்திய பின் பத்தரமுல்ல, செத்சிரிபாய - கட்டம் 1, 8ஆம் மாடியில் அமைந்த அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவிலிருந்து 2021.04.01ஆம் திகதி முதல் 2021.04.30 ஆம் திகதி வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 2.30 மணி இடையே பெற்றுக் கொள்ளலாம்.

அபிவிருத்தி முன்மொழிவுகள் 07.05.2021 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பெற்ற தொழில்நுட்ப முன்மொழிவுகள் பத்தரமுல்ல, 'சுஹுருபாய', 17 ஆம் மாடியில் அமைந்த நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் (அபிவிருத்தி) அலுலகத்தில் திறக்கப்படும்.

முன்னோடி விலைமனுக் கூட்டம் 2021.04.25 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு செத்சிரிபாய, கட்டம் 1, 9ஆம் மாடியில் அமைந்த நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.






**மேலதிக விபரங்கள்:**
**பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி),**
**ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு,**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
**8 ஆம் மாடி, செத்சிரிபாய, கட்டம் 1,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி இல. : 011-2875921, 011-3611950 அல்லது 011-2875916-20 நீட்டு: 2965 - 2967**
**தொலைநகல் : 011-2875900**
**மின்னஞ்சல் : realestatedivisionuda@gmail.com**
**இணையத்தளம் : www.uda.gov.lk**

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான சமரச பேச்சுவார்த்தைக் குழு, 17 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு, 'சுஹுருபாய', பத்தரமுல்ல.

| அமைவிடம் | மாற்று முறை | துண்டு இல. | வரைபட இல. | அளவு | குத்தகை அடிப்படை விலை (ரூபா மில்லியன்) | பிணை முறி (ரூபா மில்லியன்) | குத்தகை கால எல்லை (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| தெமடகொட | 1. ஒரே துண்டாக | A | 4392A | 3A 2R 24.59P (ஹெக்டெயார் 1.4786) | 3,086.00 | 31.00 | 99 |
| தெமடகொட | 2. இரண்டு காணித் துண்டுகளாக | A1 | 5661 | 3A 2R 24.59P (ஹெக்டெயார் 1.4786) | 1,411.00 | 15.00 | 99 |
| | | A2 | 5661 | 3A 2R 24.59P (ஹெக்டெயார் 1.4786) | 1,581.00 | 16.00 | 99 |

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயபொங்கல் உற்சவம் இன்று



நாகதம்பிரான் சர்ப்பக் குழந்தையாக பிறந்த பங்குனி மாத உத்தர நட்சத்திரம் கூடிய பௌர்ணமி தின நாளில் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் உற்சவமானது வருடாந்தம் நடைபெற்று வருகின்றது.

வடபகுதியில் வரலாற்றுத்தொன்மையும் பாரம்பரிய வழிபாட்டு முறைகளுடனும் பல்வேறு சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்ட கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் இன்று (28.03.2021) மிக சிறப்பாக நடைபெறுகின்றது. இலங்கைத்தீவில் உள்ள இந்து ஆலயங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயமும் ஒரு தனிச்சிறப்புமிக்கததாகும்

இதன் வரலாறு புதுமையானதாகவே உள்ளது.

அதாவது நல்லுள்ளம் கொண்ட செல்வந்தராக காணப்பட்ட நீதி நாயக முதலியார் கமலம் தம்பதியினர் இல்லற வாழ்வில் எந்தக்குறைகளுமின்றி வாழ்ந்தபோதும் குழந்தைச்செல்வம் இல்லாத ஒரு குறை இவர்களை வாட்டியது.

இதனால், இவர்கள் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமனை வணங்கி பல தானதர்மங்களையெல்லாம் செய்து விரதம் இருந்து வந்தனர். சிவபெருமானை வணங்கி வழிபட்டதன் பயனாக கமலம் அம்மையார் கர்ப்பமுற்று இரண்டு ஆண்பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையினையும் அத்தோடு ஒரு பாம்புக்குழந்தையையும் பெற்றெடுத்தார்.

பங்குனி மாத உத்தர நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய நன்னாளில் பாம்பு பிறந்ததைக்கண்ட உற்றாரும் ஊரவரும் அச்சமடைந்திருந்த வேளை, தாய்தந்தையர் இது இறைவன் செயலென எண்ணி பாம்பையும் பிள்ளைகளோடு சேர்த்து பாலூட்டி வளர்த்தனர். அவர்களுடன் கூடவே பாம்பும் குழந்தையாகவே வளர்ந்தது.

பிள்ளைகள் வளர்ந்து அவர்களும் இல்லற வாழ்வில் இணைய அந்தப்பாம்பும் திருமணம் செய்தது போன்று வேறு பல பாம்புகளுடன் கூடி வாழ்ந்து வந்தது, பிள்ளைகள் மாப்பாணி முதலியார், வவுனிய முதலியார் வள்ளிநாச்சான் என்றும் பாம்பு தம்பிரான் என்றும் அழைக்கப்பட்டு வந்தது.

தந்தையான நீதிநாயக முதலியார் வயோதிபமுற்ற காலத்தில் தனக்குரிய காணிகள் மற்றும் சொத்துக்களை எல்லாம் பிள்ளைகளுக்கு பகிர்ந்தளித்தார்.



இதனால் ஆத்திரமடைந்த நாகதம்பிரான் என்ற பாம்பின்செய்கையால் ஆதனங்கள் சொத்துக்கள் நான்கு பங்குகளாக பகிரப்பட்டன. பாம்பு தனது பங்கை தங்கையாரான வள்ளிநாச்சியான் பங்கோடு சேர்த்து அதனையும் எடுத்துககொள்ளுமாறு உணர்த்தியது. நீதிநாயக முதலியாரும் கமலம் அம்மையாரும் பாம்புடன் இணைந்து வீட்டில் வாழ்ந்துவந்தனர். வழமைபோன்று கமலம் அம்மையர் ஒரு நாள் வீட்டு முற்றத்தை கூட்டும்போது, இந்தப்பாம்புடன் சேர்ந்த ஏனைய பாம்புகளும் கூட்டி வைத்த குப்பைகளைக் கிழறியும் அம்மையார் மீது ஏறியும் இறங்கியும் திருவிளையாடல்களை செய்த வண்ணம் இருந்தன. இதன்தொல்லை தாங்கமுடியாத கமலம் அம்மையார் தொலைந்து போங்கள் என்று விளக்குமாற்றினால் தட்டினர். உடனேயே கோபமடைந்த தம்பிரான் என்ற பாம்பும் ஏனைய பாம்புகளும் வீட்டை விட்டு வெளியேறின.

பாம்புகளை காணாத தந்தையாரும் அயலவர்களும்தேடியும் எங்கும் கண்டுகொள்ளவில்லை இதனால் களைப்படைந்து கவலையுடன் தூங்கியபோது கனவில் தோன்றிய சிவன் பாம்புகள் கொக்காவில் காட்டுவழியாகச்சென்று புதூர் என்ற இடத்தில் தங்கியிருக்கின்றன. நீர் அங்கு சென்று அதனை அழைத்து வந்து புளியம்பொக்கணையில் ஆலயமாக அமைத்து அந்தப்பாம்பை தெய்வமாக வழிபட்டால் உனக்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும் எனக்கூறி மறைந்தார். அப்படியே பாம்பினை புளியம்பொக்கணைக்கு அழைத்து வந்து பூசை செய்துவந்தார்.

நீதிநாயக முதலியார் இறந்தபின்பு அவரது மகன் வவுனிய முதலியார் பூசகராக பூசைசெய்து வந்தார்.

இவ்வாறு பூசை செய்து வருகின்ற காலத்தில் ஒரு பங்குனி உத்தரப்பொங்கலை முன்னிட்டு விளக்கு வைத்தல் வைபவத்துடன் ஆலயத்திலிருந்து மாட்டுவண்டிலில் ஊர்கள் தோறும் சென்று பொங்கலுக்கான பொருட்களை சேகரித்து வருகின்ற போது வழமைபோன்று கண்டாவளை மடுக்கரை என்ற இடத்தில் தரித்து தம்பிரானுக்கு பூசைசெய்து அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடாகஇருந்த வேளை அப்போது இலங்கையை ஆண்ட ஒல்லாந்தர் நாட்டைச் சுற்றிப்பார்க்கவந்தனர். பூசகரையும் ஏனைய பக்தர்களையும் கண்டு நீங்கள் எங்களுக்கு எதிரான எந்தக்காரியங்களையும் செய்யக்கூடாது என்று தடுத்ததோடு, இதைமீறினால் சுட்டுவிடுவோம் என்றும் அச்சுறுத்தினர். இதனால் பயமடைந்த பூசகர் எமது முன்னோர் வழக்கப்படியும் எமது குலதெய்வத்தின் வேண்டுதலுடனும் இவ்வாறு வழமைபோன்று செய்து வருகின்றோம் எனக்கூறினார்.

அப்போது ஒல்லாந்த அதிகாரி, உங்களின் குல தெய்வம் என்னவென்று கேட்டு மிரட்டினார்.

தங்களின் குலதெய்வம் ஒரு பாம்பு என்றார்.

அப்படியானால் பாம்பை இப்போதே எங்களுக்கு காண்பிக்கவேண்டும், இல்லையேல் இங்கிருக்கின்ற பூசைப்பொருட்களை தூக்கி எறிந்து உங்களையும் விரட்டுவேன் என்று அச்சுறுத்தினர்.

அப்போது பூசகர் பூசைக்குரிய எல்லாவற்றையும் செய்து ஒரு புதிய மண் பானையினுள் வெள்ளைத்துணியை முறுக்கி வைத்து விட்டு மனத்தூய்மையோடு தோத்திரங்கள் பாடி பூசையைச்செய்து சிவபெருமானை வேண்டி நின்றார். அப்போது பானையிலிருந்து பெரும் இரைச்சலோடு ஐந்து தலைகளைக்கொண்ட நாகம் காட்சியளித்து மறைந்தது.

இதனைக் கண்ட ஒல்லாந்த அதிகாரிகள் பூசகரிடம் மன்னிப்புக்கேட்டு தம்பிரானை வணங்கி கோயிலின் பூசைக்குச்சென்று வழிபட்டதுடன், தாங்கள் கண்ட பாம்பின் உருவத்தைப்போன்ற வெள்ளியினால் செய்த நாகபடத்தினையும் பூசகரிடம் கொடுத்து சென்றனர்.

அன்று தொடக்கம் இன்று வரை அந்த வெள்ளி நாகபடத்தினை வைத்து நீதிநாயக முதலியாரின் வழித்தோன்றலில் ஒருவர் பின் ஒருவராக தம்பிரான் சர்ப்பக்குழந்தையாக பிறந்த பங்குனிமாத உத்தர மாத நடசத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய இதேநாளில் வருடம் தோறும் பொங்கல் உற்சவம் நடத்துகின்றனர்

அந்தவகையில் வழமைபோன்று புளியம்பொக்கணை ஆலயத்தில் கடந்த21ம் திகதி திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி பிரம்பு வழங்கும் வைபவத்தை தொடர்ந்து மாட்டு வண்டிகளில் சென்ற ஆலய தொண்டர்களும் அடியவர்களும் மீசாலை புத்தூர் சந்திபண்ட மரவடியிலிருந்து மடைப்பண்டம் எடுத்து இன்று இரவு ஆலயத்தைச் சென்றடைந்ததும் பொங்கல்விழா நடைபெறும்.

சு.பாஸ்கரன் ...
பரந்தன் நிருபர்


**கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**

1979 தொடக்கம் இயங்கும் இலங்கையின் முன்னணி விளையாட்டு கற்கை நிறுவனம்

## விளையாட்டு கல்வி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல் - 2021

### உடல் தகுதி பயிற்றுவிப்பாளர் பயிற்சி கற்கை நெறி (NVQ-04)

நாட்டில் அதிகரித்துள்ள தொற்றா நோய் சம்பவங்களை தடுக்கும் நோக்குடன் உடற்பயிற்சித் திட்டங்களுக்காக விஞ்ஞான அறிவு மற்றும் நடைமுறை திறன்களைக் கொண்ட உடல் தகுதி பயிற்றுநர்களை உருவாக்குவதற்கு இந்த கற்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழில் தகைமை அளவு 04 (NVQ – 04) இற்கு அமைவாக இந்த கற்கை நடத்தப்படுவதோடு இந்த கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் மாணவர்கள் உடல் தகுதி நிலையம்/ உடற்பயிற்சிக் கூடத்தில் ஒரு உடல் தகுதி பயிற்றுவிப்பாளராக தமது தொழில் வாழ்வை ஆரம்பிக்க முடியும்.

**காலம்** : 12 மாதங்கள், (மு.ப. 9.00 மற்றும் பி.ப. 4.00 இற்கு இடையே சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில்)

**கற்கை கட்டணம்** : ரூபா 20,000/=

**மொழி** : சிங்களம்/ ஆங்கிலம்

**தகைமைகள்** : விளையாட்டு பின்புலத்துடன் க.பொ.த. (சாதாரண தரத்தில்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***மேலதிக விபரத்திற்கு : கற்கை ஒருங்கிணைப்பாளர் 011 2684921 நீடிப்பு 234***

### பயிற்சியாளர் திறன் அபிவிருத்தி சான்றிதழ் கற்கை நெறி

விளையாட்டு பயிற்சியாளர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கு இந்த கற்கை நடத்தப்படுகிறது. கைப்பந்து, சைக்கிளோட்டம், சவாட் கிக், குத்துச்சண்டை, வலைப்பந்து, கரப்பந்து மற்றும் ஹொக்கி பயிற்சியாளர்களிடம் இருந்து இந்த ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்பவர்கள் குறித்த விளையாட்டில் ஒரு தகுதியுடைய பயிற்சியாளராக அங்கீகரிக்கப்படுவார். அவர்கள் இந்த அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு ‘‘பயிற்சியாளர் பதிவுச் சான்றிதழ்’’ வழங்கப்படும்.

**காலம்** : 03 மாதங்கள் (மு.ப. 9.00 மற்றும் பி.ப. 4.00 இற்கு இடையே சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில்)

**மொழி** : சிங்களம்/ ஆங்கிலம்

**கற்கை கட்டணம்** : ரூபா 5,000/=

**கற்கை அனுமதிக்கான தகைமைகள்:**

1. பயிற்சி அளிக்கும் விளையாட்டுடன் தொடர்புபட்ட தரநிலை கற்கை ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.
2. ஒரு பயிற்சியாளராக 05 ஆண்டுகள் அனுபவம்.
3. சர்வதேச/ தேசிய/ மாகாண/ மாவட்ட அளவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பயிற்சி அளித்த அனுபவம்.

***மேலதிக விபரத்திற்கு : கற்கை ஒருங்கிணைப்பாளர் 011 2684921 நீடிப்பு 241***

### விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி - தரம் I

தொழில்முறை விளையாட்டு பயிற்சியாளர்களாக முன்னேறுவதற்கு தற்போதைய விஞ்ஞானரீதியான அறிவுடன் விளையாட்டு பயிற்சியாளர்களை தயார்படுத்தும் நோக்குடன் இந்த கற்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பேஸ்போல், கபடி மற்றும் மல்யுத்த விளையாட்டுகளுக்காக கற்கை நடத்தப்படும். அரச/ தனியார் துறை அமைப்பில் விளையாட்டு பயிற்சியாளர்களாக பணியாற்றுபவர்கள் மற்றும் தன்னார்வ பயிற்சியாளர்களாக பணியாற்றுபவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**காலம்** : 06 வாரங்கள் (ஒவ்வொரு கற்கைகளும் 60 மணித்தியாலங்கள் - மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை வாரத்தில் 02 அல்லது 03 நாட்கள்)

**மொழி** : சிங்களம்/ ஆங்கிலம்

**கற்கை கட்டணம்** : ரூபா 7,000/=

**தகைமைகள்:**

I. ஒரு திறந்த போட்டியாக இருந்தால், மாவட்ட மட்டத்தில் முதலாவது அல்லது இரண்டாவது இடத்தை பெற்ற அல்லது மாகாண அல்லது தேசிய மட்டப் போட்டியில் முதலாவது, இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தை பெற்ற விளையாட்டு வீரர் மற்றும் விளையாட்டு வீராங்கனை அல்லது அணிகளுக்கு பயிற்சி அளித்திருத்தல் வேண்டும் அல்லது மேலுள்ள அடைவை பெற்ற அணி ஒன்றில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

அல்லது

II. ஒரு பாடசாலை போட்டியாயின், வலய மட்ட போட்டியில் முதலாவது அல்லது இரண்டாவது இடத்தை பெற்ற அல்லது மாகாண அல்லது தேசிய மட்ட போட்டியில் முதலாவது, இரண்டாவது அல்லது முன்றாவது இடத்தை பெற்ற விளையாட்டு வீரர் மற்றும் விளையாட்டு வீராங்கனை அல்லது அணிகளுக்கு பயிற்சி அளித்திருத்தல் வேண்டும் அல்லது மேலுள்ள அடைவை பெற்ற அணி ஒன்றில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

அல்லது

III. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் விளையாட்டு டிப்ளோமா கற்கை நெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

### விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி - தரம் II

விளையாட்டு பயிற்சியாளர்களுக்கு சரியான விளையாட்டு தொழில்நுட்பங்களை வழங்குவதற்கு மற்றொரு படிநிலையாக ஜூடோ, பூப்பந்து மற்றும் கரப்பந்து விளையாட்டுத் துறைகளுடன் தொடர்புபட்டு கற்கைகள் நடத்தப்படும்.

**காலம்** : 12 வாரங்கள் (120 மணித்தியாலம், மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை வாரத்தில் 02 அல்லது 03 நாட்கள்)

**மொழி** : சிங்களம்/ ஆங்கிலம்

**கற்கை கட்டணம்** : ரூபா 10,000/=

**தகைமைகள்:**

1. விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி – தரம் I இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் (ஜூடோ, பூப்பந்து மற்றும் கரப்பந்து)

அல்லது

2. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் விளையாட்டு டிப்ளோமா கற்கை நெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

3. தேசிய/ மாகாண/ மாவட்ட அளவில் விளையாட்டு வீரர் அல்லது வீராங்கனைக்கு வெற்றிகரமான பயிற்சி அளித்திருத்தல் வேண்டும்.

கவனிக்கவும்: மேலுள்ள கற்கைகளுக்காக பதிவுசெய்யும்போது தேவையான தகைமைகளுக்கு மேலதிகமாக உயர் செயல்திறன் மற்றும் விளையாட்டு கற்கை தகைமைகளை சமர்ப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நடைமுறை**


விண்ணப்பப் படிவங்களை **www.niss.gov.lk** என்ற இணையதள முகவரியில் இருந்து தரவிறக்கம் செய்தல் வேண்டும் அல்லது அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 04.00 வரை தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட **விண்ணப்பப் படிவங்களை 2021 ஏப்ரல் 28 அன்று அல்லது அதற்கு முன்னர் “பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், 100/7, இன்டிபென்டன்ஸ் அவனியு, கொழும்பு 07”** என்ற முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

கவனிக்கவும்: விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை/ விளையாட்டின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், 100/7, இன்டிபென்டன்ஸ் அவனியு, கொழும்பு 07.**

**தொலைபேசி: 0112684921 தொலைநகல்: 0112667709 இணையதளம்: www.niss.gov.lk**


# அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் நினைவு தினமும் ஆன்மீக உலக கின்னஸ் சாதனைக்கான தவநிகழ்வும்



சிறப்புக்களைக் கொண்ட பெருமைக்குரிய யோகக்கலையை மனித குலத்திற்கு வழங்கிய ஆசான் வேதாத்திரி மகரிஷி தூலத்தில் மறைந்த போதும் சூட்சும பிரணவ சரீரங்களாக உயிர்க் கலப்புப் பெற்று அன்பான குருவாக உள்ளார்.

இன்று 28.03.2021 அன்று ஆசானின் பதினைந்தாவது நினைவு தினம் உலகசமுதாய சேவாசங்கத்தாலும் அதன் கிளைகள் மூலமும் உலகெங்கும் நினைவு கூரப் பட உள்ளது

இந்த ஆண்டுக்கான நினைவுகூரல் நிகழ்வு மேலதிகமாக ஒரு சிறப்பு நிகழ்வினை இணைத்து நடைபெற உள்ளது.

**இந்த ஆண்டுக்கான நினைவுகூரல் நிகழ்வு மேலதிகமாக ஒரு சிறப்பு நிகழ்வினை இணைத்து நடைபெற உள்ளது. ஆன்மீக உலக கின்னர்ஸ் சாதனைக்குரியதாக SKYYOKA TV எனும் யூடியூப் அலைவரிசை மூலம் நேரடிஒளிபரப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

ஆன்மீக உலக கின்னர்ஸ் சாதனைக்குரியதாக SKYYOKA TV எனும் யூடியூப் அலைவரிசை மூலம் நேரடிஒளிபரப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதில் ஒரு இலட்சம் அன்பர்கள் கலந்து பஞ்சபூத நவக்கிரக தவத்தினை மேற்கொள்ளக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது.

பஞ்சபூதங்களாகிய நிலம் நீர் நெருப்பு காற்று விண் என்ற ஐந்தும் நவக்கிரக கோள்கள் ஆகிய சூரியன் புதன் சுக்கிரன் சந்திரன் செவ்வாய் வியாழன் சனி ராகு கேது ஆகிய ஒன்பதும் மனித வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையன.

மெஞ்ஞானத்தின் அதாவது ஆன்மீகத்தின் அடிப்படையில் இவை அனைத்தும் ஒவ்வொரு தெய்வங்களாகவும் வழிபாட்டிற்கு உரியவையாகவும் மனித வாழ்க்கையுடன் நெருங்கிய இணைப்புப் பெற்றுக் காணப் படுகின்றன.

இதற்கு ஆதாரமாக இன்றும் இந்தியாவில் தமிழ்நாடு ஆந்திராவில் பஞ்ச பூதஸ்தலங்கள் ஐந்து புகழ்பெற்ற சிவாலயங்களாக உள்ளன.இந்த தவம் மனவளக்கலை கற்றுக் கொள்ளாதவர்களும் செய்து கொள்ள ஏற்றது. எவ்வாறு ஆலயவழிபாட்டில் பஞ்சபூதங்களையும் நவக்கிரகங்களையும் உருவகப் படுத்தி வழிபடுகின்றோமோ அதுபோல் இங்கு மனதை அவற்றுடன் இணைத்து உயிர்க்கலப்புப் பெற்று தியானிப்பதன் மூலம் அகவழிபாட்டு முறையில் வழிபடுதல் செய்யமுடியும்.

எனவே இன்று ம் 28.03.2021 மாலை 6.00 மணி முதல் 7.15 வரை நடைபெற உள்ள தவநிகழ்வில் கலந்து நன்மை பெற இலங்கை மனவளக்கலை மன்ற அறக் கட்டளை சார்பில் அன்போடு அழைக்கின்றோம்.

அருள்நிதி ஆ.தங்கராஜா...
மனவளக்கலைப் பேராசிரியர்

# இலங்கை பத்திரிகை சங்கத்தின் 65ஆவது பொதுக் கூட்டம்



இலங்கை பத்திரிகை சங்கத்தின் 65ஆவது பொதுக்கூட்டம் கொழும்பு 7 இல் அமைந்துள்ள மேல்மாகாண நுண்கலை பீட கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கூட்டத்தைத் தொடர்ந்து மேற்படி சங்கத்தின் 2020/2021க்கான அலுவலக நிர்வாகிகள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் எடுத்துக்கொண்ட படம்

அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக: தேசிய ஒருங்கிணைப்பாளர் நிமந்தி ரணசிங்க, பொருளாளர் சமிந்த கருணாரத்ன, பிரதம போஷகர் முடித காரியகரவண, கௌரவ விருந்தினரும் பத்திரிகை முறைப்பாட்டுச் சபையின் முறைப்பாட்டு அலுவலருமான கமல் லியனாரச்சி, தலைவர் தர்மன் விக்கிரமசிங்க, பொதுச் செயலாளர் குருளு கூஜான காரியகரவண, துணைப் பொதுச் செயலாளர் திலக் சேனநாயக்க.

நிற்பவர்கள் இடமிருந்து வலமாக: தமிந்த ஹர்ஷா பெரேரா, சந்துன் யாப்பா கருணாரட்ன, பனி வேவெல, சாலிய பொன்சேகா, சிறில் ஆரியபால, குமுது உபுல் சாந்த, சிறியாஞ்சனி லொக்குலியன, கிருஷ்ணா டி எதிரிசிங்க, மாலி யசந்த கப்ரியேல், ஷக்யா ஷெஷாதி அனுர சி பெரேரா, திலங்க கனகரத்ன, ரேஹித விக்ரமசிங்க, ஆனந்த கண்ணங்கர, சூலா பண்டார மற்றும் யோஹான் பெரேரா

## நினைவு கூரலுக்கான தடைகள்... (15ஆம் பக்கத் தொடர்)

ஒரு பக்கம் தமிழ்த்தேசியமும் அரச எதிர்ப்பும். மறுபக்கத்தில் அரச நிறுவனங்களின் அனுசரணையைப் பயன்படுத்தி சட்டவிரோத, சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை எப்படிச் சொல்வது? இந்த முரணுக்கு (அயோக்கியத்தனத்துக்கு) என்ன பெயர்?

6. புலிகளுடைய இன்னொரு முக்கியமான நிலைப்பாடு ஊழலுக்கு எதிரானது. ஆனால், இன்று தமிழ்ப்பிரதேசங்களில் அரச நிர்வாகப் பிரிவுகள் தொடக்கம், சட்டத்தைப் பாதுகாக்கும் பிரிவுகள், பாடசாலை அதிபர்கள் வரையில் எல்லா இடங்களிலும் ஊழல் பெருத்துள்ளது. இதில் ஈடுபடுவோரிலும் அநேகர் நான் முன்னரே குறிப்பிட்ட அரசியல் நிலைப்பாட்டை அல்லது அந்த அரசியல் அடையாளத்தைக் கொண்டோரே!

7. மேலும் புலிகள் முன்னெடுத்த அல்லது தமது செயற்பாட்டில் அவர்கள் கொண்டிருந்த சமூகப் பாதுகாப்பு, பண்பாட்டு நடவடிக்கைகள் எல்லாம் இன்று எந்த நிலையில் உள்ளன? பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் மீதான வன்முறை போன்றவற்றுக்கு இடமிருந்ததில்லை. பெண்களின் பாதுகாப்பு ஒப்பீட்டளவில் உயர்வாகவே இருந்தது. ஆனால் இன்று? இது தலைகீழாகி விட்டது. இப்பொழுது யாருக்குமே பாதுகாப்பில்லை என்ற அளவுக்கு சமூக வன்முறைகளும் ஒடுக்குறைகளும் பாரபட்சங்களும் அதிகரித்து விட்டன. இதைக்குறித்து தமிழ்த் தேசியவாதிகளின் நிலைப்பாடு என்ன? நடவடிக்கை எது?

குறைந்த பட்சம் இதையெல்லாம் இந்தக் கட்சிகளும் தலைமைகளும் எப்படிப் பார்க்கின்றன? இந்தச் சீரழிவுக்கு இவை எந்த அளவில் பொறுப்பேற்கின்றன? இவற்றைத் தடுப்பதற்கு என்ன வகையான நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் முன்னெடுக்கின்றன? இவற்றில் பால் அசமத்துவம் (பால் வேறுபாடு) சாதியப் பிரிவினை போன்றவை முக்கியமானவை.

8. புலிகளால் முன்னெடுக்கப்பட்ட நினைவு கூரல்களைச் செய்வது மட்டும் பணியல்ல. அதற்கு நிகரானவை இந்தச் சமூகச் சீரழிவுகளைத் தடுப்பதும் தேச வளங்களைச் சூறையாடுவதை எதிர்ப்பதுமாகும் அல்லவா?

இதில் ஏன் இவை அக்கறைப்படாமல் உள்ளன? இவர்களுடைய ஆதரவாளர்கள் இவற்றில் ஈடுபடுவதை ஏன் கட்டுப்படுத்தத் தயங்குகின்றன? இவற்றுக்கு எதிராக இந்தச் சக்திகள் ஏன் போராட முன்வரவில்லை. குறைந்த பட்சமாகத் தங்களுடைய அரசியல் உரையாடல்களில் இதைப் பற்றிய பிரக்ஞை தவறியதேன்?

9. பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் நலத் திட்டங்களையும் திறன் வளர்க்கும் கட்டமைப்புகளையும் உருவாக்கிச் செயற்படுத்தினர். இதுவரையில் உங்களில் எவராவது அப்படிச் சிந்தித்ததுண்டா? செயற்பட்டதுண்டா?

10. ஆனால், ஒன்றை மட்டும் வெற்றிகரமாகச் செய்கிறீர்கள். அவர்களுடைய நினைவு கூரல்களை மட்டும் செய்கிறீர்கள். இது அவர்களுடைய தியாகத்தில் குளிர் காய்வதாகும். இதற்கு அதிகமாக உழைக்க வேண்டியில்லை. செலவழிக்க வேண்டியதுமில்லை. இந்த நினைவு கூரலைச் செய்ய முற்படும்போது ஏற்படுத்தப்படும் தடைகள் கூட உங்கள் அரசியலுக்கு முதலீடாகும். அப்படித்தான் முதலீடாக்கப்படுகிறது. மற்றும்படி சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அவற்றைக் குறித்துச் சிந்திப்பதும் அவற்றைச் செயலாக்கம் செய்ய முயற்சிப்பதும் கிடையாது. ஆக மொத்தத்தில் தேசம் பற்றிப் பேசும் அளவுக்கு அந்தத் தேச உருவாக்கம், அந்தத் தேசத்தின் கட்டுமானம், அதன் இயங்கு நிலை, அதன் வளங்கள் குறித்தெல்லாம் அக்கறையே இல்லை. இது பெரும் முரண்பாடு மட்டுமல்ல பெரும்போலியுமாகும்.

முக்கியமாகச் செயற்பாட்டு அரசியலை முன்னெடுப்பதற்கு முடியாத தயக்கம் இது. இந்தத் தயக்கத்தையும் இந்த முரண்பாட்டு அரசியற் செயற்பாட்டையும் எப்படிச் சொல்வது? இதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?

(தொடரும்)

## பாதிப்படைந்த குடும்பங்கள் கைதூக்கி... (13ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறான நிலையில் பஸ் சாரதியும், டிப்பர் சாரதியும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பஸ் சாரதி தொலைபேசி பயன்படுத்தினாரா என்பதை கண்டறிய அவரது தொலைபேசி அழைப்புகள் ஆய்வு செய்யப்படுவதாக என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்துள்ளார். பஸ் வண்டி நேர அட்டவணையை மீறி பயணித்துள்ளதாக அறிய முடிகிறது. விபத்திற்குள்ளான பஸ் இதுவரை பள்ளத்தில் இருந்து மீட்கப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் நிவாரணங்களை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தார். பாராளுமன்ற உறுப்பினர்களான அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ் ஆகியோரும் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினர். மாகாண ஆளுநர் தலைமையில் விபத்து தொடர்பான விசேட கூட்டம் நடைபெற்று அதனடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்று கொடுக்க பலர் முன்வந்துள்ளனர்.இது வரவேற்க கூடிய விடயமாகும். எனினும் வழங்கப்படும் நிவாரணங்கள் நிரந்தரமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் எதிர்காலம் கருதி கொடையாளர்கள் முன்வர வேண்டும். இது போன்ற விபத்துகள் இடம்பெறாமல் இருக்க அரசாங்கம் சட்டதிட்டங்களை கடுமையாக்கி அப்பாவி மக்கள் உயிர்களை பாதுகாக்க வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு. பள்ளத்தில் கற்பாறைகளுக்கு மத்தியில் கிடக்கும் பஸ்சை மீட்க மூன்று தடவைகளுக்கு மேல் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. விபத்தின் பின்னர் வீதியின் இரு பகுதிகளிலும் வாகனங்களின் வேகத் தடையை ஏற்படுத்துவதற்கான ஸ்பீட் பிரேக்கர்கள் அமைக்கப்பட்டுள்ளன. வீதியின் ஒரு பக்கத்தை அடைத்துக்கொண்டு கடந்த நவம்பர் முதல் கிடக்கும் கற்பாறை இப்போதுதான் எல்லாம் முடிந்த பின்னர் அகற்றப்பட்டிருக்கிறது.

வீதியோரத்தில் தடுப்பு மதில்களை பொருத்தும் நடவடிக்கைகளும் வீதிகளின் ஆபத்தான இடங்களில் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. பஸ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் அனேகமானோர் இனி ஏதாவது ஒரு உடல் குறைபாட்டுடன் தமது வாழ்க்கையை கடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு இனி எதை கொடுத்தாலும் அவர்கள் இழந்ததை ஈடுசெய்ய முடியாது. அவர்களின் எதிர்காலத்தை வளமாக்க உதவ வேண்டியது சமூக பொறுப்புள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

எனவே பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகளின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கும் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கும் தேவையான உதவிகளை நீண்டகால அடிப்படையில் திட்டமிட்டு வழங்க சமூக அமைப்புகளும் நலன் விரும்பிகளும் முன்வர வேண்டும். அதிகரித்து வரும் வாகன விபத்துக்களை தவிர்ப்பதற்காக அரசாங்கம் முறையான ஆய்வுகளை மேற்கொண்டு புதிய சட்டத்திட்டங்களை வகுத்து வீதி போக்குவரத்து விதிகளை கடுமையாக்க வேண்டும். அத்தோடு சாரதிகளின் செயற்பாடுகள் குறித்தும் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் எதிர்காலத்திலும் நாம் இவ்வாறான அவலங்களை சந்திப்பது தவிர்க்க முடியாது.

## பசறை பஸ் விபத்து... (08ஆம் பக்கத் தொடர்)

அநேகமான வாகன உரிமையாளர்கள் அடிக்கடி வாகன சக்கரங்களை மாற்ற விரும்புவது இல்லை. இதனால் சம்பளத்துக்காக வேலைசெய்யும் சாரதிகள் வீதியில் பயணிப்பதற்குப் பொருத்தமற்ற சக்கரங்களைக் கொண்டிருப்பதை அறிந்திருந்தாலும் வேறு வழியின்றி அவ்வாறான வாகனங்களைச் செலுத்தவே செய்கிறார்கள். வீதிப்பாதுகாப்புப் பற்றி விழிப்புணர்வு சாரதிகளுக்குப் முக்கியம். பாதசாரிகளுக்கும் அவசியம். அல்லாவிட்டால் பசறை பஸ் விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த அந்தக் குழந்தையைப் போல ஏராளமான குழந்தைகளின் குரல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும்.

## புளத்சிங்கள கொபாவெல... (08ஆம் பக்கத் தொடர்)

இதேவேளையில் இந்த வீட்டுத்திட்டத்தின் நிலை குறித்து அங்கு அருகாமையில் வசித்துவரும் இதே தோட்டத்தைச் சேர்ந்த புளத்சிங்கள பிரதேச சபை உறுப்பினர் இந்திக்க நிரோஷினி பொன்னம்பலத்திடம் வினவியபோது, தோட்ட மக்களின் நலன் குறித்து ஆரம்பிக்கப்படும் வீட்டுத் திட்டமோ அல்லது வேறெந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அது உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படாது ஆமை வேகத்திலேயே இடம்பெறுகின்றன என்றார். இவை சரியாக முறையாக மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்து அதிகாரிகள் எவரும் ஆராய்ந்து பார்க்க முன்வருவதில்லை. இந்த வீட்டுத் திட்டத்தின் நிலைகுறித்து பயனாளிகளுடன் சென்று அப்போதைய அமைச்சராக இருந்த பழனி திகாம்பரத்தை சந்தித்து எடுத்துக்கூறியபோது இது குறித்து கவனம் செலுத்துவதாக தெரிவித்திருந்தார். ஆனால் எதுவும் நடந்தபாடில்லை. இன்று இம் மக்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளனர். தங்களுக்குரிய வீடுகள் எப்போது கிடைக்கும் என்ற ஏக்கத்துடன் எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதுகுறித்து விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்கிறார் பிரதேச சபை உறுப்பினர் இந்திக்க நிரோஷினி பொன்னம்பலம்.

மண்சரிவு அபாய நிலையிலுள்ள லயன் குடியிருப்புகளிலேயே அக்குடும்பங்கள் தொடர்ந்து வசித்து வருகின்றன. அனர்த்தம் ஏற்படும் துரதிஷ்ட நிலை ஏற்பட இடமளிக்காது மனித உயிரை மதித்து ஏமாற்றத்துக்குள்ளான இந்த மக்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

## உலகத் தமிழ் படைப்பாளராக... (08ஆம் பக்கத் தொடர்)

ஒரு கமராவின் மூலம் பார்ப்பதுபோல் அந்த ஜன்னல் காட்சிகள் அழகாக இருந்தன என்று மாத்தளை சோமு ஒரு கதையில் எழுதுகிறார். அத்தகைய ஜன்னல் காட்சிகளை, வாழ்க்கைக் கூறுகளை, உயிரோவியங்களை, மெய்மை குன்றாத வகையில் தீட்டிக் காட்டுகின்றார். அதீத உயர்வு நவிற்சியும், அநாவசியமான கிண்டலும் இல்லாமல் நேராகவும், சீராகவும் விஷயத்தை விவரித்துள்ளார். இது பாராட்டுக்குரியதாகும். அவரின் பேனா எழுதும் எழுத்துக்களில் எல்லாம் அந்தக் கமரா இருப்பதைக் காண முடிகின்றது என்று பேராசிரியர் அமரர் க. கைலாசபதி மாத்தளை சோமு தொகுத்து வெளியிட்ட 'தோட்டக்காட்டினிலே' என்ற சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் கூறியிருக்கின்றார்.

பத்திரிகைத் துறையில் நீண்ட அனுபவம் கொண்ட இவர், மாத்தளையில் நவரசம் (1971) மாத இதழின் ஆசிரியராகவும், சென்னையில் மக்கள் மலர் நாளிதழின் உதவி ஆசிரியராகவும், சிட்னியில் தமிழ்க் குரல் மாத இதழின் (1987) உதவி ஆசிரியராகவும், தற்போது வெளிவரும் தமிழ் ஓசை மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். பல்வேறு சமூகநல அமைப்புகளில் இணைந்து செயற்பட்டவர். உலகத் தமிழாய்வுக் கழகத்தின் அமைப்பாளராகவும், சிட்னி தமிழ்க்குரல் அமைப்பின் தலைவராகவும், அவுஸ்திரேலியா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியவர். தமிழகம் அவுஸ்திரேலியா உட்பட 50 இற்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளில் நடைபெற்ற இலக்கிய மாநாடுகள், ஆய்வரங்குகள், கருத்தரங்குகளில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியவர்.

இதுவரை 25 நூல்களை எழுதி வெளியிட்டிருக்கும் இவரின் அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் என்ற நாவல் இலங்கை சாகித்திய விருதைப் பெற்றது. அதற்குப் பிறகு அவரது பல நூல்கள் பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கின்றன. இதுவரை சிறுகதை, நாவல், குறு நாவல், மொழிபெயர்ப்பு, ஆய்வுக்கட்டுரை, திருக்குறளுக்கு அறிவியல் உரை, பயணக்கட்டுரை, வரலாறு என பல்வேறு தலைப்புகளில் 25 நூல்களை எழுதி வெளியிட்ட இவருக்கு 9 நூல்களுக்கு பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன.

நாவலுக்கு, இலங்கை சாகித்திய விருது பெற்ற இவர் கண்டிச்சீமை என்ற நாவலுக்கு தமிழக அரசின் கீழ் இயங்கும் மதுரை உலகத்தமிழ்ச் சங்கம் சிறந்த நாவல் பரிசை அண்மையில் வழங்கி கௌரவித்துள்ளது.

இவரின் வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் என்ற நூலுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் 2005 இல் மிகச் சிறந்த நூல் பரிசினை வழங்கியது. அந்த நூலுக்கு புகழ் பெற்ற திருச்சி தூயவளனார் கல்லூரி அறிவியல் தமிழ் எழுத்தாளர் என்ற விருதை வழங்கி கௌரவித்தது. இவர், தற்போது சங்க இலக்கியங்களை ஆய்வு செய்து பாமரர்களும் அறியும் முகமாக வியக்க வைக்கும் தமிழர் சிந்தனைகள் என்ற நூலையும், இராஜேந்திரசோழன் கடாரம் வென்றதை ஒரு நாவலாகவும் எழுதி வெளியிடவுள்ளார்.

இவரது எல்லை தாண்டா அகதிகள் சிங்கள மொழியிலும், கண்டிச்சீமை ஆங்கில மொழியிலும் விரைவில் வெளிவர இருக்கின்றன.


## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள் (இறாகம மற்றும் கராபிட்டிய)

இறாகம மற்றும் கராபிட்டிய வீடியோசாட்சியம் ஒலிபதிவு பணிமனைகளுக்காக கீழேகுறிப்பிட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

### 1. சாட்சியம் ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் - எம்ஏ-03 (02 பதவிவெற்றிடங்கள்)

**தகைமைகள்:**
**கல்விசார்**
**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவியல்/சமூகவியல்/ ஊடக தொடர்பாடல் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று.

### 2. உதவி உளவியலாளர் - எம்ஏ 03 (02 பதவி வெற்றிடங்கள்)

**தகைமைகள்:**
**வெளியக விண்ணப்பதாரிகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவியல்/சமூகவியல்/சுகாதார ஊக்குவித்தல் விஷேட தேவைக் கல்வி/பேச்சாற்றல் மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானங்கள்/ நாடகம் மற்றும் அரங்கு ஆகியவற்றில் பெற்றவொரு பட்டதாரிப் பட்டம்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது மூன்றாந்தர வாழ்தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவியல் ஆலோசனையில் பெற்ற டிப்ளோமா பட்டம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**ஏனையவை (மேலேயுள்ள 01 மற்றும் 02 பதவிகளுக்கானது)**
❖ ஊழியர் வகுதியின் சம்பள செய்விதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:
முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 2/2016 – எம்ஏ 3 ரூபா[32,200-10x445-11x660-10x730-5x750-54,960.00]. முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 02/2016 II ஆம் அட்டவணையின் பிரகாரம், 2020.01.01 ஆம் திகதியன்று மேலேயுள்ளதன் ஆரம்ப சம்பள படிநிலையானது 32,200 ரூபாவாகும்.
❖ **வயது :** வயதானது 23 இற்கு குறைவாகவில்லாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது.
❖ **ஆட்சேர்ப்பு நடைமுறை:** எழுத்து போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் மற்றும்/ அல்லது எழுத்துமூலம் அதிகாரம் பெற்று நியமனம் பெற்ற குழுமமொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாகவும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

### 3. வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் - எம்ஏ 2-1 (02 பதவி வெற்றிடங்கள்)

**தகைமைகள்:**
**வெளியக விண்ணப்பதாரிகள்:**
ஒரு வருட பணிதொடர்பான அனுபவத்துடன் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில்சார் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசியவாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும். (புகைப்படவியல்/கட்புல ஊடகவியல்) அத்துடன் இத்தறையில் ஒருவருட கால அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**
மேலேயுள்ள வெளியக விண்ணப்பதாரிகளினால் தேவைப் படுத்தப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

**ஏனையவை:**
❖ ஊழியர் வகுதியின் சம்பள செய்விதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:
முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 2/2016 – எம்ஏ2-1ரூபா [30,310-10x300-7x350-4x495-20x750-660,50,940]. முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 02/2016 II ஆம் அட்டவணையின் பிரகாரம், 2020.01.01 ஆம் திகதியன்று மேலேயுள்ளதன் ஆரம்ப சம்பள படிநிலையானது 30,310 ரூபாவாகும்.
❖ **வயது:** வயதானது 18 இற்கு குறைவாகவில்லாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது.
❖ **ஆட்சேர்ப்பு நடைமுறை:** எழுத்து போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் மற்றும்/ அல்லது எழுத்துமூலம் அதிகாரம் பெற்று நியமனம் பெற்ற குழுமமொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாகவும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

### 4. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் சாராதது (தட்டெழுத்து முறைமை – சிங்களம்) எம்ஏ 1-1 (02 பதவிவெற்றிடங்கள்)

**வெளியக விண்ணப்பதாரிகள்:**
**கல்விசார்:**
1. அ) ஒரேஅமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I சிங்களம்
II ஆங்கில மொழி
III கணிதம்
ஆ) பொதுவினாத்தாள் நீங்கலாக க.பொ.த. (உ-த) பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தி.
இ) தட்டெழுத்து முறைமை/கணனி முறைமையில் 06 மாத சான்றிதழ் கற்கைநெறி.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**
ஆரம்ப மட்ட-தேர்ச்சி பெற்ற, ஆரம்ப மட்ட-ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப மட்ட-தேர்ச்சியற்ற வகுதிகளிலுள்ள பின்வரும் தகைமைகளையுடைய ஊழியர்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

**கல்விசார்:**
2. அ) ஒரேஅமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I சிங்களம்
II ஆங்கிலமொழி
III கணிதம்
ஆ) தட்டெழுத்துமுறைமை/கணனி முறைமையில் 06 மாத சான்றிதழ் கற்கைநெறி

**ஏனையவை:**
மேலேயுள்ள ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தரமான பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 5. முகாமைத்துவ உதவியாளர் - முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல் சாராதவர். (தட்டெழுத்து முறைமை – தமிழ்) எம்ஏ 1-1 (02 பதவிவெற்றிடங்கள்)

**வெளியக விண்ணப்பதாரிகள்:**
**கல்விசார்:**
1. அ) ஒரேஅமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I தமிழ்
II ஆங்கில மொழி
III கணிதம்
ஆ) பொதுவினாத்தாள் நீங்கலாக க.பொ.த. (உ-த) பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தி.
இ) தட்டெழுத்து முறைமை/கணனி முறைமையில் 06 மாத சான்றிதழ் கற்கைநெறி.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**
ஆரம்ப மட்ட-தேர்ச்சி பெற்ற, ஆரம்ப மட்ட-ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப மட்ட-தேர்ச்சியற்ற வகுதிகளிலுள்ள பின்வரும் தகைமைகளையுடைய ஊழியர்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

**கல்விசார்:**
2. அ) ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I சிங்களம்
II ஆங்கில மொழி
III கணிதம்
ஆ) தட்டெழுத்துமுறைமை/கணனி முறைமையில் 06 மாத சான்றிதழ் கற்கைநெறி

**ஏனையவை:**
மேலேயுள்ள ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தரமான பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
ஆரம்ப மட்ட - தேர்ச்சி பெற்ற, ஆரம்ப மட்ட - ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப மட்ட - தேர்ச்சியற்ற வகுதிகளிலுள்ள பின்வரும் தகைமைகளையுடைய ஊழியர்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

### 6. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராதவர் (ஒப்புநோக்குநர் - சிங்களம்) எம்ஏ 1-1 (02 பதவி வெற்றிடங்கள்)

**வெளியக விண்ணப்பதாரிகள்:**
**கல்விசார்:**
1. அ) ஒரேஅமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I சிங்களம்
II ஆங்கில மொழி
III கணிதம்
ஆ) பொதுவினாத்தாள் நீங்கலாக க.பொ.த. (உ-த) பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தி.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**
ஆரம்ப மட்ட-தேர்ச்சி பெற்ற, ஆரம்ப மட்ட-ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப மட்ட-தேர்ச்சியற்ற வகுதிகளிலுள்ள பின்வரும் தகைமைகளையுடைய ஊழியர்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

**கல்விசார்:**
1. அ) ஒரேஅமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I சிங்களம்
II ஆங்கில மொழி
III கணிதம்

**ஏனையவை:**
மேலேயுள்ள ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தரமான பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 7. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராதவர் (ஒப்புநோக்குனர் - தமிழ்) எம்ஏ 1-1 (02 பதவி வெற்றிடங்கள்)

**வெளியக விண்ணப்பதாரிகள்:**
**கல்விசார்:**
1. அ) ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I தமிழ்
II ஆங்கில மொழி
III கணிதம்
ஆ) பொது வினாத்தாள் நீங்கலாக க.பொ.த. (உ-த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**
ஆரம்ப மட்ட-தேர்ச்சி பெற்ற, ஆரம்ப மட்ட - ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப மட்ட - தேர்ச்சியற்ற வகுதிகளிலுள்ள பின்வரும் தகைமைகளையுடைய ஊழியர்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

**கல்விசார்:**
4. அ) ஒரேஅமர்வில் ஆறு பாடங்களில் பின்வருவன அடங்கலான நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா-த) பரீட்சையில் சித்தி.
I தமிழ்
II ஆங்கில மொழி
III கணிதம்

**ஏனையவை:**
மேலேயுள்ள ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தரமான பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**ஏனையவை (மேலேயுள்ள 4,5,6 மற்றும் 7 ஆம் பதவிகளுக்கானது)**
❖ ஊழியர் வகுதியின் சம்பள செய்விதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:
முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 2/2016 – எம்ஏ1-1ரூபா[27,910-10x300-7x350-4x495-20x750-660-48,540]. முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 02/2016 II ஆம் அட்டவணையின் பிரகாரம், 2020.01.01 ஆம் திகதியன்று மேலேயுள்ளதன் ஆரம்ப சம்பள படிநிலையானது 27,910 ரூபாவாகும்.
❖ **வயது:** வயதானது 18 இற்கு குறைவாகவில்லாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்படமாட்டாது.
❖ **ஆட்சேர்ப்பு நடைமுறை:** எழுத்து போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் மற்றும்/ அல்லது எழுத்துமூலம் அதிகாரம் பெற்று நியமனம் பெற்ற குழுமமொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாகவும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**அனுகூலங்கள்:**
● அடிப்படைசம்பளத்திற்கு மேலதிகமாக, மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து பதவிகளுக்கும் வாழ்க்கை செலவுப்படியும் வழங்கப்படும். ஊசேநி இற்கு 12% மற்றும் 3% ஊநநி இற்கும் அதிகாரசபையினால் செலுத்தப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**
ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை பிரஜையாகவிருப்பதுடன் மிகச்சிறந்த குணவியல்புகளையுடையவராகவும் பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கான உடல் உளரீதியில் பொருத்தமானவராகவும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு தயாராகவுமிருத்தல் வேண்டும்.

**www.childprotection.gov.lk** என்ற தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து மாதிரி விண்ணப்பமானது பதிவிறக்கம் செய்யப்படலாம். உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2021 ஏப்ரல் 12 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ், தே.அ.அட்டை/ கடவுச்சீட்டு, கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களுடன் அனுப்பப்படல் வேண்டும். நீங்கள் ஒரு பதவிக்கு மேலதிகமாக விண்ணப்பிப்பதற்கு விரும்பினால், ஒவ்வொருபதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். அரசதுறை/ கூட்டுத்தாபனம் / நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் நிறுவனங்களின் தலைமையூடாகவே விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்படாத, தெளிவில்லாத விண்ணப்பங்கள் மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு ஒத்திசைவில்லாதவைகள் மற்றும் மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எவ்வகையிலும் ஆதரவு தேடுவது தகைமையை இழப்பதற்கான வழியை வகுக்கும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படுவர். மேலே குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்புக்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,**
**இல.: 330, தலவத்துகொட வீதி,**
**மாதிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர.**
**தொலைபேசி இலக்கம் - 0112778911-14**
**இணையதளம் - www.childprotection.gov.lk**

## சுற்றுலா அமைச்சு

# இலங்கையில் விமான சேவை அதிகார சபை

## இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபை கூட்ட அறையின் ஒலிக் கட்டுப்பாட்டிற்காக (Acoustic Control and Sound Proofing) ஆலோசனைகளைக் கோரல்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் சபை கூட்ட அறையின் ஒலி கட்டுப்பாட்டிற்காக (Acoustic Controal and Sound Proofing) பொறியிடப்பட்ட ஆலோசனைகள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு திட்டமிடல் மற்றும் விலை ஆலோசனைகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி விடயம் பற்றிய உங்களுக்கு ஏதேனும் விசாரணைகள் இருப்பின் 0112358824 தொ.பே. இலக்கத்தில் அல்லது mgrrdp@caa.lk என்ற மின்னஞ்சல் மூலம் பிரதான பெறுகை அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், பணிப்பாளர் சபை கூட்ட அறை ஒலிக் கட்டுப்பட்டிற்கான ஆலோசனைகள் என்று குறிப்பிட்டுதல் வேண்டும். பொறியிடப்பட்ட கேள்விகள் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை, இல. 152/1, மினுவங்கொட வீதி, கட்டுநாயக்க என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2021.04.28 பிற்பகல் 2.00 இற்கு முடிவடையும். அத்தோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேள்விகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

இதற்காக தள பரிசீலனை 2020.04.05ம் திகதி முற்பகல் 10.00 இற்கு இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் இடம்பெறுவதுடன் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் இப் பரிசீலனைக்காக சமுகமளித்தல் கட்டாயமானது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**

---

Uva Wellassa University

# தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசிய வளத்தை மையப்படுத்தி அதற்கான மேலதிக செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுடன் பட்டப்படிப்பு, நிபுணத்துவம், கூட்டுறவு என்பனவற்றின் புதிய போக்குகளையும் ஏற்படுத்துகின்றது. பல்கலைக்கழக கல்விசார் திட்டங்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டு தங்கள் தொழில் வழங்குநருக்கு பெறுமதி சேர்க்கும் தேர்ச்சி வாய்ந்த புதிய மாணவர் பரம்பரையை முன்கொணர்கின்றது. தேசிய பல்கலைக்கழகங்களில் தேசியரீதியிலான இப்பாரிய முயற்சியில் நீங்களும் ஓர் அங்கத்தவராகலாம்.

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத்தலைவர் விலைமனுக்களை கோருகின்றார்.

| இல. | விபரம் | கேள்வி இல. |
|---|---|---|
| 01. | மாணவர் விடுதிகளுக்கு குத்தகைக்கு/ வாடகைக்கு வீடுகள் (பதுளை பிரதேசம்) இணை அலுவலகம் மற்றும் மாணவர் தங்கும் இடம் (கொழும்பு பிரதேசம்) | UWU/GA/ LH/2021/01 |

எந்த வேலை நாட்களிலும் 2021.03.28 முதல் 2021.04.19 வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கிடையில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் ஓர் விண்ணப்பத்தை விலைமனுதாரர் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுதாரர் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் இருந்தும் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://www.uwu.ac.lk/procurement/. 2021.04.20 பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் விலைமனுக்கள் விநியோகிக்கப்படல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

அத்துடன் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி (அங்கீகார கடிதத்துடன்) சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர். விலைமனுக்கள் பொறியிடப்பட்ட உறையில் உள்ளடக்கப்பட்டு, கடித, உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இல. 'UWU/GA/LH/2021/01" என்று குறிப்பிடப்பட்டு, பதுளை. பஸ்ஸர வீதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக அலுவலக பதிவாளரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிட முடியும்.

மேலதிக விபரங்கள் பிரதிப் பதிவாளர் (நிர்வாகம்) தொ.பே. இல. 055-2226470 இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**

---

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
## தேயிலை ஆராய்ச்சி சபை
## பெருந்தோட்ட அமைச்சு

# தலவாக்கலை, சென். கூம்ப்ஸ் தோட்டத்தின், தோட்ட மருத்துவ பரிசோதகர் பதவி

மேலுள்ள பதவிக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில் விபரம்:**

கண்காணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் தொழிலாளர்களின் அன்றாட மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் ஆரோக்கியமான தொழில்படை ஒன்றை பேணுதல்

அதேபோன்று சுகாதார திணைக்களத்துடன் சுகாதார சேவைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அது சார்ந்த அனைத்து ஆவணங்களையும் பராமரிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகள்:**

ஆங்கிலம் மற்றும் எண்கணிதம்/ கணிதத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி (பணியில் அனுபவம் பெற்றவர்களுக்கு இது பொருந்தாது)

**மற்றும்**

இலங்கை மருத்துவ கல்லூரி சபையில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்

**அனுபவம்:**

கனிஷ்ட தோட்ட மருத்துவ பரிசோதகர் ஒருவராக 4 ஆண்டுகள் அனுபவம்

**சம்பள அளவு:**

ரூபா 32,320/= - 1,350 x 40 - ரூபா 86,320/=

ஆண்டு ஊதிய உயர்வு - ரூபா 1,350/=

**வயது எல்லை:**

22 வயதுக்கு குறையாதவராக மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

பதவி நிரந்தரமானது. தேர்வுசெய்யப்படும் அபேட்சகர் தலவாக்கலை, புனித கூம்ப்ஸ் தோட்டம் அல்லது சேவையின் தேவைகளின்படி இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மூலம் நிர்வகிக்கப்படும் வேறு எந்த தோட்டங்களிலும் பணியாற்ற வேண்டும்.

பிறப்புச் சான்றிதழின் பிரதி, தொடர்புடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்முறை தகைமைகள், சேவை சான்றிதழ்களின் பிரதிகள், தொடர்புடைய துறையில் விண்ணப்பதாரரின் திறன்கள் மற்றும் அறிவை மதிப்பீடு செய்ய முடியுமான உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து முழுமையான சுயவிபரக்கோவை ஒன்றை விண்ணப்பதாரர் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அதனை 2021 ஏப்ரல் 12 அன்று அல்லது அதற்கு முன்னர் அடியில் கையொப்பமிட்டதாக கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க சேவை/ கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். இந்த தேவைகளை உறுதி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அதேபோன்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

**பணிப்பாளர்**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்**
**சென். கூம்ப்ஸ், தலவாக்கலை.**

---

## பெருந்தோட்ட அமைச்சு
## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
# தேயிலை ஆராய்ச்சி சபை
# வெற்றிடங்கள்

தலவாக்கலை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

(கலை விஞ்ஞானம், உணவு விஞ்ஞானம், மண் நுண்ணுயிரியல், பகுப்பாய்வு இரசாயனவியல், உயிர்மானம்/ புள்ளிவிபரவியல், பூச்சியியல் மற்றும் செயல்முறை தொழில்நுட்பத்தில் சிறப்புத்தன்மைக்கு முன்னுரிமை)

**தொழில் விபரம்:**

தரவு சேகரித்தல் மற்றும் பதிவுக்காக தொழில்நுட்ப மற்றும் சோதனை அதிகாரிகளுக்கு வழிகாட்டல் மற்றும் பிரிவுத் தலைவர் (HOD), முதன்மை ஆராய்ச்சி உத்தியோகத்தரிடம் (PRO) இருந்து கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வழிகாட்டலின் கீழ் சிறப்புத் துறைகளில் திட்டமிடல், ஆராய்ச்சி திட்டங்களை செயற்படுத்தல், முடிவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் தரவை வழங்கலுக்கு பொறுப்பாக இருப்பார். சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி HOD, PRO வின் வழிகாட்டலின் கீழ் பிரிவின் தொழில்நுட்ப பரிமாற்ற திட்டங்களை திட்டமிடலுக்கு பெறுப்பாவார்.

**வெளிவாரி:**

A. பொருத்தமான பாட இணைப்புகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு ஒன்றுடன் நான்கு (04) ஆண்டு சிறப்புப் பட்டம்.

**அல்லது**

B. பொருத்தமான பாட இணைப்புகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு ஒன்றுடன் நான்கு (04) ஆண்டு சிறப்புப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு பட்டப்பின்படிப்புப் பட்டம்.

**அல்லது**

C. பொருத்தமான பாட இணைப்புகளுடன் விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் இரண்டு (02) ஆண்டு பட்டப் பின் ஆராய்ச்சிப் பட்டம்.

**மற்றும்**

D. தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் எட்டு (08) ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவம் (கலாநிதிப் பட்டத்தை பெற்ற பின் இரண்டு (02) ஆண்டுகள் அனுபவம்)

**குறிப்பு** : குறித்த விடயத்திற்கு தொடர்புடைய ஆராய்ச்சி வெளியீடுகள் கூடுதல் தகைமையாக சேர்க்கப்படும்.

**உள்வாரி:**

a. AR 1 பிரிவு ஆராய்ச்சி உத்தியோகத்தராக குறைந்தபட்சம் ஆறு (06) ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் கலாநிதிப் பட்டம்

**அல்லது**

b. AR 1 பிரிவு ஆராய்ச்சி உத்தியோகத்தராக குறைந்தபட்சம் எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் முதுதத்துவமாணி/ M Sc (02 ஆண்டு ஆராய்ச்சி பட்டம்).

(கவனிக்கவும்: மேலுள்ள (B) அல்லது (C) இன் கீழ் தகைமைகளை பெற்ற விண்ணப்பதாரர் ஒருவர், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கான தகைமைக்கு ஆராய்ச்சி மூலம் மேலதிக பட்டப்பின்படிப்பு ஒன்றை பெறுதல் வேண்டும்)

குறிப்பு: குறித்த விடயத்திற்கு தொடர்புடைய வெளியீடுகள் கூடுதல் தகைமையாக சேர்க்கப்படும்

**சம்பள அளவு** : AR 2 (2016) (I) Rs. 76 200 – 10 x 2,000 – Rs. 96,200/- p.m

**வயது** : 30 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**தேர்வு முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

### 2. சிரேஷ்ட ஆலோசனை உத்தியோகத்தர்

**தொழில் விபரம்:**

தரவு சேகரித்தல் மற்றும் பதிவுக்காக தொழில்நுட்ப மற்றும் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல் மற்றும் பிரிவுத் தலைவர் (HOD), முதன்மை ஆலோசனை உத்தியோகத்தரிடம் (PAO) இருந்து கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வழிகாட்டலின் கீழ் சிறப்புத் துறைகளில் திட்டமிடல், ஆலோசனையை செயல்டுத்தல் மற்றும் திட்டங்களை நீட்டித்தல், முடிவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் தரவை வழங்கலுக்கு பொறுப்பாக இருப்பார். சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (SAO) HOD, PAO வின் வழிகாட்டலின் கீழ் பிரிவின் தொழில்நுட்ப பரிமாற்ற திட்டங்களை திட்டமிடலுக்கு பெறுப்பாவார்.

**வெளிவாரி:**

A. பொருத்தமான பாட இணைப்புகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு ஒன்றுடன் நான்கு (04) ஆண்டு சிறப்புப் பட்டம்.

**அல்லது**

B. பொருத்தமான பாட இணைப்புகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு ஒன்றுடன் நான்கு (04) ஆண்டு சிறப்புப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு பட்டப்பின்படிப்புப் பட்டம்.

**அல்லது**

C. பொருத்தமான பாட இணைப்புகளுடன் விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் இரண்டு (02) ஆண்டு பட்டப் பின் ஆராய்ச்சிப் பட்டம்.

**மற்றும்**

D. தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் எட்டு (08) ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவம் (கலாநிதிப் பட்டத்தை பெற்ற பின் இரண்டு (02) ஆண்டுகள் அனுபவம்)

**குறிப்பு:** குறித்த விடயத்திற்கு தொடர்புடைய ஆராய்ச்சி வெளியீடுகள் கூடுதல் தகைமையாக சேர்க்கப்படும்.

**உள்வாரி:**

a. AR 1 பிரிவு ஆலோசனை உத்தியோகத்தராக குறைந்தபட்சம் ஆறு (06) ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் கலாநிதிப் பட்டம்

**அல்லது**

AR 1 பிரிவு ஆலோசனை உத்தியோகத்தராக எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவையுடன் முதுதத்துவமாணி/ M Sc (18 மாதங்கள் ஆராய்ச்சி பட்டம்). (கவனிக்கவும்: மேலுள்ள (B) அல்லது (C) இன் கீழ் தகைமைகளை பெற்ற விண்ணப்பதாரர் ஒருவர், சிரேஷ்ட ஆலோசனை உத்தியோகத்தருக்கான தகைமைக்கு ஆராய்ச்சி மூலம் மேலதிக பட்டப்பின்படிப்பு ஒன்றை பெறுதல் வேண்டும்)

**குறிப்பு** : குறித்த விடயத்திற்கு தொடர்புடைய வெளியீடுகள் கூடுதல் தகைமையாக சேர்க்கப்படும்

**சம்பள அளவு** : AR 2 (2016) (I) Rs. 76 200 – 10 x 2,000 – Rs. 96,200/- p.m

**வயது** : 30 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**தேர்வு முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

### 03. ஆராய்ச்சி உத்தியோகத்தர்

(உணவு விஞ்ஞானம், இரசாயனவியல்/ உயிரிரசாயனம், உயிர்மானம்/ புள்ளிவிபரவியல், விலங்கியல் மற்றும் இரசாயன பொறியியலில் சிறப்புத்தன்மைக்கு முன்னுரிமை)

**தொழில் விபரம்:**

தரவு சேகரித்தல் மற்றும் பதிவுக்காக தொழில்நுட்ப, சோதனை மற்றும் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல் மற்றும் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் (SRO), முதன்மை ஆராய்ச்சி உத்தியோகத்தர் (PRO) அல்லது பிரிவுத் தலைவரின் கண்காணிப்பின் கீழ் சிறப்புத் துறைகளில் ஆராய்ச்சித் திட்டங்கள், பகுப்பாய்வு முடிவுகள் மற்றும் தரவு வழங்கலை செயற்படுத்தல். ஆராய்ச்சி திட்டங்களை அடையாளம் காணல் மற்றும் திட்டமிடலில் SRO, PRO விற்கு உதவுதல்.

**வெளிவாரி:**

பொருத்தமான பாட இணைப்புகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு ஒன்றுடன் நான்கு (04) ஆண்டு கால சிறப்புப் பட்டம்.

**அல்லது**

பொருத்தமான பாட இணைப்புகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு ஒன்றுடன் நான்கு (04) ஆண்டு கால சிறப்புப் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு பட்டப்பின்படிப்புப் பட்டம்.

**அல்லது**

பொருத்தமான பாட இணைப்புகளுடன் விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் இரண்டு (02) ஆண்டு பட்டப் பின் ஆராய்ச்சிப் பட்டம்.

**உள்வாரி:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் பட்டம் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்/ விஸ்தரிப்பு உத்தியோகத்தர் ஒருவராக ஆறு (06) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**சம்பள அளவு** : AR 1 (2016) (I) Rs. 53, 150 – 10 x 1,375 – 15 x 1910 - Rs. 95,550/- p.m

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**தேர்வு முறை** : எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

### 04. பரிசோதனை உத்தியோகத்தர்

**தொழில் விபரம்:**

ஆராய்ச்சி உத்தியோத்தர்/ சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்/ முதன்மை ஆராய்ச்சி உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் சிறப்புத் துறைகளில் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சியை செயற்படுத்தல் மற்றும் தரவு வழங்கலில் உதவுதல்.

**வெளிவாரி:**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ விவசாயம்/ தேயிலைத் தொழில்நுட்பம் மற்றும் மதிப்புச் சேர்த்தல்/ தோட்ட முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்.

**உள்வாரி: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர் மூலம் தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப பிரிவில் (MA 2-2) ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தராக (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : MA 4 (2016) (I) Rs. 37,970 – 10 x 755 – 15 x 930 – 5 x 1,135 – 65,145/- p.m

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**தேர்வு முறை** : எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

### 05. விஸ்தரிப்பு உத்தியோகத்தர்

**தொழில் விபரம்:**

ஆலோசனை உத்தியோகத்தர்/ சிரேஷ்ட ஆலோசனை உத்தியோகத்தர்/ முதன்மை ஆலோசனை உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் தேயிலை மற்றும் அது சார்ந்த விவசாய ஒருங்கிணைப்பு மற்றும் விவசாயமல்லாத சேவைகள் சார்ந்த அனைத்து விஸ்தரிப்பு/ ஆலோசனை பணிகளிலும் பங்கேற்றல்.

**வெளிவாரி:**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ விவசாயம்/ தேயிலைத் தொழில்நுட்பம் மற்றும் மதிப்புச் சேர்த்தல்/ தோட்ட முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம்.

**உள்வாரி: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர் மூலம் தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப பிரிவில் (MA 2-2) ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தராக (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு** : MA 4 (2016) (I) Rs. 37,970 – 10 x 755 – 15 x 930 – 5 x 1,135 – 65,145/- p.m

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**தேர்வு முறை** : எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

**ஏனைய நன்மைகள்:**

i. கிடைக்கப்பெறுவதாயின் தங்குமிடம் (வதிவிடம்/ விடுதி அறைகள் முழுமையாக அளிக்கப்படும்) வழங்கப்படும் அல்லது தங்குமிடத்திற்கு பதிலாக கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்.
ii. நிறுவனத்தின் மருத்துவ திட்டத்தின் நடைமுறையில் உள்ள விதிகளுக்கு அமைய மருத்துவ நன்மைகள் கிடைக்கப்பெறும்.
iii. நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு அமைய அவசர மருத்துவ சிகிச்சைக்காக இலவச போக்குவரத்து கிடைக்கப்பெறும்.
iv. தலவாக்கலை சென் கூம்ஸ் இருந்து கொழும்பு மற்றும் கண்டிக்கு ஒவ்வொரு வார இறுதியிலும் போக்குவரத்து வழங்கப்படும்.
v. வருங்கால வைப்புநிதி: தேர்வு செய்யப்படும் அபேட்சகர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சம்பளத்தின் 10% பங்களிப்புச் செய்ய வேண்டிய அதேநேரம் நிறுவனம் 15% வீதம் பங்களிப்புச் செய்யும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் நிறுவனம் 3% பங்களிப்புச் செய்யும்.
vi. தேயிலை ஆராய்ச்சி நிறுவன ஊழியர்களுக்கு பொருந்தும் ஏனைய நலம்சார் கொடுப்பனவுகள்.

பதவிகள் நிரந்தரமானவை. பிறப்புச் சான்றிதழின் பிரதி, தொடர்புடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்முறை தகைமைகள், சேவை சான்றிதழ்களின் பிரதிகள், தொடர்புடைய துறையில் விண்ணப்பதாரரின் திறன்கள் மற்றும் அறிவை மதிப்பீடு செய்ய முடியுமான உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து முழுமையான சுயவிபரக்கோவை ஒன்றை விண்ணப்பதாரர் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அதனை 2021 ஏப்ரல் 12 அன்று அல்லது அதற்கு முன்னர் அடியில் கையொப்பமிட்டதாக கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க சேவை/ கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். இந்த தேவைகளை உறுதி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அதேபோன்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

விபரங்களுக்கு www.tri.lk என்ற தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர்**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல : 315

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | 07 | | 08 | 09 | 10 |
| 11 | | 12 | 13 | 14 | |
| 15 | 16 | | 17 | 18 | 19 |
| | 20 | | | 21 | 22 |
| | 23 | 24 | 25 | | |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை பெயர் ..........................................
பாடசாலை முகவரி ..........................................
..........................................
.............................. ..........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) உலகின் எந்தவொரு நாட்டிலும் இருப்பவருடன் இலகுவில் உரையாடுவதற்கான தொடர்பு சாதனம்.
(06) புவியின் சுமார் முக்காற்பங்கு பரப்பில் பரந்து கிடக்கின்றது. ஆழம் என்பதால் இப்பெயர் வந்துள்ளது. (தலைகீழான சொல்)
(08) அழகு என்பதை இவ்வாறும் கூறலாம்.
(12) அக்காலத்தில் நெல்லை அரிசியாக்க, அரிசியை மாவாக்க உபயோகிக்கப்பட்ட உபகரணம். இன்று நவீன உபகரணங்களின் வருகையினால் பெரும்பாலும் அருகி விட்டது.
(15) திரவத்தின் சிறு சொட்டு. (தலைகீழான சொல்)
(17) வீட்டு வாசலில் தரையில் இடப்படும் அழகுத் தோற்றம். இந்துக்களின் வீடுகளில் இவ்வழக்கம் உள்ளது. (தலைகீழான சொல்)
(21) உடலில் புள்ளிக் கோலம் கொண்ட காட்டு மிருகம். (தலைகீழான சொல்)
(23) மாடுகளில் இது கரிய நிறமுடைய இனம்.

**மேலிருந்து கீழ்**

(01) தொழில் புரிந்து, உழைத்து வாழ்பவர் இவர். இம்மக்களின் உழைப்பினாலேயே நாடு முன்னேற்றம் காணமுடியும்.
(02) பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற தொழிற்சாலையை சுருக்கமாக இவ்வாறு குறிப்பிட முடியும். (தலைகீழான சொல்)
(04) மலையின் உச்சியை குறிக்கும் சொல்.
(05) பூக்கள் சுரக்கின்ற அமுதம்.
(09) கதைகள், நாடகம், சினிமாக்களில் வருகின்ற பாத்திரம் இவன். நல்லவர்களுக்கு தீங்கு இழைப்பவன்.
(16) மாடுகளில் இது ஆண் இனம். பெண் இனம் பசு என்பது போல, ஆண் இனம் இது. (தலைகீழான சொல்)
(19) கொழும்பில் இருந்து புகைவண்டியில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கிச் செல்லும்போது, இடைவழியில் இரு திசைகளையும் பிரிக்கின்ற முக்கியமான சந்தி இது. இலங்கையின் ரயில் பாதை வரைபடத்தைப் பார்த்தால் உங்களுக்கு புரிந்துவிடும். (தலைகீழான சொல்)

**போட்டி இல. 315**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 314

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*01. கள்ளி 04. நாகு 07. உழவன் 11. பாதை*
*14. ஓவியம் 21. கம்பளி*

**மேலிருந்து கீழ்**

*01. கந்தை 03. உளி 04. குவலயம் 05. நான்*
*14. ஓடம் 18. களி*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 313

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எஸ். ஷஞ்சிதா,**
*தரம் 09 பி,*
*தி/உவர்மலை விவேகானந்தா வித்தியாலயம்,*
*உவர்மலை, திருகோணமலை.*

**இரண்டாம் பரிசு**
**எம்.ஆர். ஸாரா,**
*தரம் 08, மாறை/அல்.மினா ம.வி,*
*மீயல்லை, ஹக்மனை.*

**மூன்றாம் பரிசு**
**எம்.எப். மஹ்தி,**
*தரம் 08, ஏ, க/கழுகமுவ ம.க.,*
*கழுகமுவ, கெலி ஓயா.*

### பாராட்டு பெறுவோர்

**1. மு.இ. அஹமத் ஆயிஷ்,**
*தரம் 08,*
*மட்/மம/வாழைச்சேனை அன்னூர் தே. பா.,*
*வாழைச்சேனை.*

**2. எம்.எம். பிராஸ் அஹமட்,**
*தரம் 07, அல். அஸ்ஹர் தேசிய பாடசாலை,*
*மன்னார்.*

**3. கு. துவாரகன்,**
*தரம் 04, கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி,*
*கல்முனை.*

**4. எம்.எச்.எம். ஹுதாயா,**
*தரம் 04, பு/ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை,*
*மன்னார் வீதி,*
*புத்தளம்.*

**5. ரவீந்திரன் சபரீசன்,**
*தரம் 04,*
*மட்/பட்/குருமண்வெளி கனிஷ்ட வித்தியாலயம்,*
*களுவாஞ்சிக்குடி.*



குறளமுதம் :

**கணைகொடிது: யாழ்கோடு செவ்விது:ஆங் கன்ன**
**வினைபடு பாலால் கொளல்.**

***தெளிவுரை :*** *நேராகத் தோன்றியும் அம்பு கொடியது: வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது: மக்களின் பண்புகளையும் செயல்வகையால் உணர்ந்து கொள்ள வேண்டும்.*



# நீரின்றி அமையாது உலகு

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 22ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. உலக நீர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. உலக நீர் தினத்தையொட்டி கடந்த 22ஆம் திகதி யன்று நாட்டில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இவ்வாண்டு 'இயற்கையும் நீரும்' எனும் தலைப்பில் உலக நீர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.



இதற்காக உருவாக்கப்பட்ட இணைய தளம், "தற்போதைய நிலையில் இயற்கை முறையில் நாம் நீர் சேகரிப்பை மேற்கொள்ள வேண்டும். மற்றும் பசுமை மயமாக்கல் மூலமும் நீர் சேகரிப்பு செய்ய முடியும். புதிய மரங்களை நடுதல், நதிகளை இணைத்தல் போன்ற செயல்களும் அவசியம்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா.சபையின் அறிக்கையின்படி உலகில் 2.1 பில்லியன் மக்களுக்கு அதாவது 210 கோடி பேருக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை. இவர்களில் 84.4 கோடி பேருக்கு அடிப்படை குடிநீர் வசதிகளே கிடையாது. 26.3 கோடி பேர் குடிநீருக்காக தினமும் 30 நிமிடம் பயணம் செய்து குடிநீர் எடுத்து வருகின்றனர். வீடுகளில் குடிநீர் வசதிகள் இல்லாதவர்கள் 66.3 கோடியாகும்.

பூமியில் சுமார் 71% பரப்பளவில் நீர் உள்ளது. உலகின் மொத்த நீர் வரத்து 33.25 கோடி கன மைல்களாகும். உலகிலுள்ள நீர் பரப்பில் கடலில் மட்டும் சுமார் 97% நீர் உள்ளதால் தூய நீர் மூன்று வீதம் மட்டுமே உள்ளது. உலகிலுள்ள நீர்வளத்தில் 69% உறைந்த நிலையிலும் 30% நிலத்தடி நீராகவும் உள்ளது.

மொத்த நீரில் சுமார் 0.26% மட்டுமே நிலத்தில் நல்ல நீராக உள்ளது. வரும் 2050ம் ஆண்டுக்குள் உலக நீர்த்தேவை இன்னும் 30 வீதமாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அறியப்படுகிறது. கழிவு நீரில் 80 வீதமான அளவுக்கு சுத்தீகரிக்கப்படாமலே நல்ல நீருடன் கலக்கப் படுகிறது. மனிதனின் தவறுகளால் கடந்த 1900 முதல் 71வீதமான நீர்நிலைகள் காணாமல் போயுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

நீர் இன்றி பயிர்கள் இல்லை, நீர் இன்றி உயிர்கள் இல்லை. நீர் இன்றி சுத்தம் இல்லை, நீர் இன்றி தொழில்கள் இல்லை, நீர் இன்றி வீடுகள் இல்லை, நீர் இன்றி காடுகள் இல்லை, நீர் இல்லையேல் பூமி தகிக்கும், நீர் இல்லையேல் உயிர்கள் தவிக்கும், நீர்தான் நம் தாகம் தணிக்கும், நீரின்றி அமையாது உலகு என்றே தண்ணீர் பற்றி வள்ளுவர் உரைத்தார். கடலின் நீர் ஆவியாகி, மழையாய்ப்பொழியுது மக்கள்மீது, பெய்த மழைநீர் வீணாகாமல் சேமித்தாலே உலகம் செழிக்கும், தண்ணீர் சிக்கனம் தேவை. நாம் நீரைச் சேமிப்பது, பாதுகாப்பது என்பது நமக்காக மட்டுமல்ல, நமது எதிர்கால சந்ததியினருக்காகவும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

**பெ. திலானுஷா,**
மாபோல, வத்தளை.

# இவ்வார சிறுமி



**தினுக்ஷிகா,**

சபின்ஸ் ஜோதி,
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.

# எதிரிகளை வீழ்த்துவது எளிது

நல்ல இயல்புகளை தேவர்கள் என்கிறோம். கெட்ட இயல்புகளை அரக்கர்கள் என்கிறோம். சரி, அந்த அரக்கர்களை எப்படி அடையாளம் கண்டுகொள்வது? வெகு சுலபம். ஈகோ, பொறாமை, வெறுப்பு, பேராசை ஆகியோர்தான் அந்த அரக்கர்கள். சரி, இவர்களுடன் நமக்குள் மோதிக்கொண்டிருப்பவர்கள் யார்? தேவர்கள் எனப்படும் நல்ல இயல்புகள் இந்த மோதலில் கெட்டவர்கள் யாரென்று தெளிவாக அடையாளம் தெரிந்துவிட்டது. எனவே, நம் எதிரிகளை வீழ்த்துவதற்கு நாம் ஒரு யுத்தத்துக்கு தயாராக வேண்டும். இந்த அரக்கர் படையை வீழ்த்த என்ன செய்ய வேண்டும்? தேவர்கள் கரத்தை வலுப்படுத்த வேண்டும். அதற்கு நாம் மனிதத் தன்மை, தொண்டு உள்ளம், அன்பு போன்றவற்றை கடைப்பிடித்தாலே போதும். மேற்சொன்ன அரக்கர்களை நிர்மூலமாக்கிவிடலாம்.

**சோ. வினோஜ்குமார்,**
தொழிநுட்ப பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
கிளிநொச்சி.

# சின்னக் குருவி

சின்னக் குருவி சின்னக் குருவி
சேதி சொல்லவா?
சின்ன சின்ன தானியத்தை
சிதறி வைக்கிறேன்;
எண்ணம் போலத்தின்று
எழுந்து பறந்திடு!
ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
அருகில் ஓடிவா!
தோட்டப் பயிரை மேயா மல்
துள்ளி ஓடிவா!
நாட்டம் போல நல்ல தீனி
நான் தருவேன் வா!
பச்சைக் கிளி பச்சைக்கிளி
பறந்து என்னிடம் வா!
இச்சை கொண்டு அழைக்கிறேன்
இனிய கனிகள் தருவேன்
அச்சம் நீங்கி அருகில் வா
ஆசை முத்தம் தருவேன்!
புள்ளிமான் புள்ளிமான்
புதரில் பதுங்குது
கொள்ளிக்கண் புலியென்று
கண்டு மருண்டதோ?
துள்ளிப் பிடித்து விளையாட(த்)
துணிவு வரவில்லையே!

**சாரணா கையூம்**

# உயிரினங்களின் ஆயுள்

| | | |
|---|---|---|
| கடலாமையின் ஆயுட்காலம் | : | 200 வருடங்கள் |
| திமிங்கிலத்தின் ஆயுட்காலம் | : | 500 வருடங்கள் |
| பென்குயினின் ஆயுட்காலம் | : | 22 வருடங்கள் |
| தீக்கோழியின் ஆயுட்காலம் | : | 50 வருடங்கள் |
| பெருங்கரடியின் ஆயுட்காலம் | : | 20 வருடங்கள் |
| செம்மறி ஆட்டின் ஆயுட்காலம் | : | 16 வருடங்கள் |

**கே. எல். ஹில்மி,**
தேசிய பாடசாலை, சம்மாந்துறை -10.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அனுராதபுரம் மதவாச்சி அல் மதீனா வித்தியாலய மாணவி **எம்.ஏ. பாத்திமா அபாஸா** 177 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முகம்மது அரூஸ் ஜஸ்லினா (ஆசிரியை) தம்பதிகளின் புதல்வியாவார்.



கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலை மாணவி **புஷ்பராஜ் கிருஷ்ணி** 169 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் புஷ்பராஜ் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வியாவார்.

# சிறுவர் சித்திரங்கள்





**பி. பிரின்ஸ்,**
தரம் 07ஏ,
கடவளை தமிழ் வித்தியாலயம்,
கடவளை.



**அதீக் இஷாத்,**
களு/அல். பசியதுல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலை,
மருதானை வீதி, பேருவளை.



**ஜி. கிஷானி,**
தரம் 09, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.

மாணவர் கழக
அங்கத்துவ இல : 431



**எம்.எச். முகம்மட் ஆரிப்,**
தரம் 04, கமு/கது/அல் ஹம்றா வித்தியாலயம், செந்நெல் கிராமம், சம்மாந்துறை.

மாணவர் கழக
அங்கத்துவ இல : 432



**முகம்மது ஆஸில் நைஸர்,**
தரம் 05,
முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்,
சம்மாந்துறை.

மாணவர் கழக
அங்கத்துவ இல : 433



**வி.டி. முகம்மட் நிப்லான்,**
தரம் 04,
கமு/கது/அல் ஹம்றா வித்தியாலயம், செந்நெல் கிராமம்,
சம்மாந்துறை.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ..........................................
பிறந்த திகதி ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை ..........................................
..........................................

..........................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

# விளையாட்டு



### தீர்ப்புகளை மீள்பரிசீலனை செய்யும் முறைமை:


# நடுவரின் அபிப்பிராயத் தீர்ப்புக்கு எதிராக கடும் விமர்சனங்கள்!

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் போது நடுவர்களின் தீர்ப்புகளை மீள் பரிசீலனை செய்யும் போது *(Umpire Decision Review System DRS)* நடுவர்களின் அப்பிராயத் *(Umpire's Call)* தீர்ப்பு மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தவண்ணமுள்ளன. இதன்பால் உடனடியாக கவனம் செலுத்த ஐ. சி. சி. கிரிக்கெட் கவுன்சில் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் ஐ. சி. சி. கிரிக்கெட் குழு 'நடுவர்களின் அபிப்பிராய' தீர்ப்பு முறைமைக்கு இன்னும் ஆதரவு தெரிவித்து வருகின்றது.

விளையாட்டில் மத்தியஸ்தம் வகிப்பது என்பது பெரும் பிரச்சினைகளுக்குரிய விடயமாகும். கிரிக்கெட், கால்பந்தாட்டம், ரக்பி, டென்னிஸ், கரப்பந்தாட்டம் மட்டுமல்ல எல்லா போட்டிகளிலும் மத்தியஸ்தம் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது. ஒரு போட்டியை சுவாரஷ்யம் மிக்கதாகவும், போட்டித் தன்மை மிக்கதாகவும் ஆக்குவதற்கும் விளையாட்டு எல்லை மீறிப்போகாமலிருப்பதற்கும் மத்தியஸ்தம் முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் மத்தியஸ்தர்கள் பக்கசார்பாக நடந்துகொள்ளும் போது பிரச்சினைகளும் ஏற்படுகின்றது.

கிரிக்கெட் போட்டிகளைப் பொறுத்தவரை ஆரம்பகாலத்தில் இரு நாடுகளுக்கிடையில் நடைபெறும் போட்டியின் போது போட்டி நடைபெறும் நாட்டினரே நடுவர்களாக இருப்பர். இவர்கள் தமது நாட்டுக்கு பக்கசார்பாக நடந்துகொள்வதாக சர்ச்சைகள் எழுந்ததால் 80களின் பிற்பகுதியில் பாகிஸ்தான் அணியின் அன்றைய தலைவர் இம்ரான்கானின் யோசனைக்கமைய மத்தியஸ்த நடுவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். காலப்போக்கில் அவர்களின் (ரன் அவுட், ஸ்டம்பிங்) தீர்ப்புகளிலும் சில தவறுகள் ஏற்பட தொழில் நுட்ப வசதிகளின் வளர்ச்சியால் அவ்வாட்டமிழப்புகளுக்கு மூன்றாவது நடுவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இந்த அறிமுகத்தின் பின் இவ்வாட்டமிழப்புகளில் சரியான தீர்ப்புகள் கிடைக்கப்பெற்றதால் பிற்காலத்தில் எல்லாத் தீர்ப்புகளுக்கும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்து எல்லா ஆட்டமிழப்புகளுக்கும் மூன்றாவது நடுவர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அதில் சில ஆட்டமிழப்பு களநடுவரின் அபிப்பிராயத்துக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படுகிறது. அதாவது துடுப்பாட்ட வீரரொருவர் எல். பி. டபிள்யூ. மூலம் ஆட்டமிழந்ததாக முறையிட்டால் கள நடுவர் ஆட்டமிழப்புக் கொடுத்தால், எதிரணி வீரர் அதை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவார். மூன்றாம் நடுவர் தொலைக்காட்சி சலனப் படத்தின் மூலம் அதைப் பரிசீலித்து பந்து விக்கெட்டை மெதுவாக தேய்த்துக்கொண்டு போனாலும் கள நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்திருந்தால் ஆட்டமிழந்த வீரராக அறிவிப்பார். ஆனால் பந்து 50% விக்கெட்டை தாக்கினாலும் களநடுவர் ஆட்டமிழப்பு கொடுத்திருக்காவிட்டால் மூன்றாவது நடுவரும் களநடுவரின் தீர்ப்பையே பின்பற்றுவார். இத்தீர்ப்பு களநடுவரின் அபிப்பிராயத் தீர்ப்பு எனப்படுகிறது. இத்தீர்ப்பை சிலர் தற்போது விமர்ச்சித்து வருகின்றனர்.




நடுவர்களின் தீர்ப்புகளை மீள் பரிசீலனை செய்ய முறையிடும் போது நடுவர்களின் அபிப்பிராயத்துக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கும் தீர்ப்புகளுக்கு, எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளதுடன் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி உட்பட பல நாட்டு வீரர்களும் இத்தீர்ப்புகளை அண்மையில் மிகக் கடுமையாக விமர்சித்திருந்தனர். என்றாலும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் ஆலோசனைப்படி இந்த முறைமையை தொடர்ந்து நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள நடைமுறையை பரிசீலனை செய்வது பற்றிய யோசனையை எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ள ஐ. சி. சி.யின் பிரதான அங்கத்தவர்களின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், ஐ. சி. சி. அங்கத்தவர்களினதும், ஹோக்ஸ்ஐ தொழில்நுட்ப அதிகாரிகளிடமும் இது தொடர்பாக ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் நடைபெற்ற ஐ. சி.சி. பிரதான செயற்கமிட்டி கூட்டத்தில் அதன் அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டிய ஒரு விடயம்தான், நடுவர்களின் அபிப்பிராயப்படி தீர்ப்பளிக்கும் போது அது தொடர்பாக வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் விளையாட்டுடன் தொடர்புடைய அனைவருக்கும் மிகத் தெளிவாக விளக்கங்களை கொடுக்க வேண்டுமென்பதாகும்.

முன்னாள் இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் அனில் கும்ப்ளேயை பிரதான அதிகாரியாகக் கொண்டு இயங்கும் ஐ. சி. சி. கிரிக்கெட் செயற்கமிட்டியில் முன்னாள் சர்வதேச கிரிக்கெட் தலைவர்களான அன்றூ ஸ்ட்ரோஸ், ராகுல் ட்ராவிட், மஹேல ஜயவர்தன, ஷோன் பொலோக் உள்ளதுடன், போட்டித் தீர்ப்பாளர் ரஞ்சன் மடுகல்ல, நடுவர்களான ரிச்சர்ட் இலிங்வேர்த், மிக்கி ஆதர் ஆகியோர் அதில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் காரசாரமான விவாதங்களின் பின் ஐ. சி. சி. கிரிக்கெட் கவுன்சில் நடுவர்களின் அபிப்பிராயத்தின்படி தீர்ப்பு வழங்குவதை அமுல்படுத்த வேண்டுமென்பதை சுட்டிக்காட்டியுள்ளதுடன், ஹொக்ஸ் ஐ தொழில்நுட்பம் நூற்றுக்கு நூறு வீதம் சரியான முடிவுகளைத் தருவதில்லை. ஆனால் நடுவர்களின் அபிப்பிராயத் தீர்ப்புக்கு கௌரவமளித்து வீரர்களும், ரசிகர்களும் நடந்துகொள்ள வேண்டும். மேற்படி கமிட்டி அண்மையில் நடைபெற்ற போட்டிகளின் போது தொழிற்நுட்பத்தில் உள்ள குறைபாடுகளை உன்னிப்பாகக் கவனித்து அதில் குறைபாடுகள் உள்ளதை ஏற்றுக்கெண்டுள்ளதுடன் அவைகளை விரைவில் நிவர்த்திப்பதாகவும், நடுவர்களால் கொடுக்கப்படும் தீர்ப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஐ. சி. சி. கிரிக்கெட் கமிட்டி, எம். எம். சி. *(Marylebone Ckicket Club Mcc)* கிரிக்கெட் கமிட்டியின் அங்கத்தவர்களின் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் கடந்த பெப்ரவரி மாதத்தில் நடுவர்களின் அபிப்பிராயத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது ரசிகர்களின் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தும் என்ற கருத்துக்களும் இக்கூட்டத்தின் போது பரிமாறப்பட்டது. என்றாலும் இக்கூட்டத்தில் இறுதியில் எம். சி. சி. அங்கத்தவர்களும் நடுவர்களின் அபிப்பிராயத்துக்கு இடம் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்ததுடன், சிலர் அதை நீக்க வேண்டும் என்றும் அபிப்பிராயப்பட்டுள்ளனர்.

அண்மையில் இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் இரண்டு அணிகளும் நடுவர்களின் தீர்ப்புகளை 65 முறை மறுபரிசீலனை செய்ய முறையிட்டுள்ளனர். அதில் 53 தடவைகள் தோல்வியுற்றுள்ளது. இந்தத் தோல்வியடைந்த நடுவர்களின் 53 தீர்ப்புக்களில் 37 முறை பிழையாக மேன்முறையீடு செய்தவைகளாகும். அதில் 16 தீர்ப்புக்கள் நடுவர்களின் அபிப்பிராயத்தின் கீழ் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தககது.

**எம். சுஹைல்...**

# பொன்டேரா ப்றாண்ட்ஸ் லங்கா நிறுவனத்தால் 60 வீர வீராங்கனைகளுக்கு மாதாந்தம் ஊட்டச்சத்து பொதிகள்

இலங்கையில் தொழில்முறை வீரர்களை உருவாக்கும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள 60 வீர வீராங்கனைகளுக்கு மாதாந்தம் 25,000 ரூபா பெறுமதியான ஊட்டச்சத்து பொதிகளை வழங்குவதற்கு பொன்டேரா ப்றாண்ட்ஸ் லங்கா நிறுவனம் முன்வந்துள்ளது.

சர்வதேச மட்டத்தில் பதக்கம் வெல்லக்கூடிய தொழில்முறை வீரர்களை உருவாக்கும் நோக்கில் சகல விளையாட்டுக்களையும் உள்ளடக்கியதாக 60 வீர வீராங்கனைகள் விளையாட்டுத்துறை அமைச்சுடன் அண்மையில் ஒப்பந்தம் செய்யப்பட்டார்கள்.

இதனையடுத்து கடந்த சில தினங்களுக்கு முன் குறித்த வீரர்களின் பயிற்சிகளுக்காக மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

உயர் ஆற்றல் வெளிப்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட 60 வீர வீராங்கனைகளுக்கும் பொன்டேரா ப்றாண்ட்ஸ் லங்கா நிறுவனத்தின் (அன்கர்) அனுசரணையில் மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஊட்டச்சத்து பொதிகள் கடந்த (24) உத்தியோகப்பூர்வமாக வழங்கிவைக்கப்பட்டன.

இந்த வைபவம் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பொன்டேரா இலங்கை – இந்திய உப கண்டங்களுக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் வித்யா சிவராஜா ஆகியோரது தலைமையில் விளையாட்டுத்துறை அமைச்சின் டன்கன் வைட் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் தொடர்ந்து பேசிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, "போட்டியாளர்களின் ஆற்றல் வெளிப்பாடுகளின் அடிப்படையிலேயே விளையாட்டுத்துறை அமைச்சு அவர்களை ஒப்பந்தத்தில் இணைத்து மாதாந்தம் கொடுப்பனவு வழங்குகின்றது.



அவர்களது ஆற்றல்கள் வருடத்துக்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் திறன்காண் போட்டிகள் மூலம் பரீட்சிக்கப்படும்.

ஆற்றல்களில் பின்னடைவு ஏற்படும் போட்டியாளர்கள் நான்கு மாதங்களுக்குள் உரிய மட்டத்தை மீண்டும் அடையவேண்டும். தவறினால் ஒப்பந்தம் குறித்து பரிசீலிக்கப்படும்.

இந்த வருடம் முதல் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட தேசிய குழாம்களில் இடம்பெற்றுள்ள திறமையான 200 வீர, வீராங்கனைகளை தொழில்முறை வீரர்களாக உருவாக்குவதே எமது குறிக்கோளாக அமைந்துள்ளது.

அந்த வீரர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு, ஊட்டச்சத்து பொதிகளுக்கு மேலதிகமாக தொழில்முறை வீரர்களாக முன்னேறிச் செல்வதற்கான அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, இன்னும் இரண்டு மாதங்களில் கனிஷ்ட வீர, வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்டு ஒப்பந்தத்தில் இணைக்கப்படுவார்கள்" என தெரிவித்தார்.

தற்போது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள 60 வீரர்களுக்கும் ஊட்டச்சத்து பொதிகளை வழங்க பொன்டேரா ப்றாண்ட்ஸ் நிறவனம் முன்வந்தமைக்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இதன்படி மெய்வல்லுநர், குத்துச் சண்டை, பளுதூக்கல், நீச்சல், ஜூடோ, பெட்மிண்டன், விசேட தேவைகள் கொண்ட பரா வீரர்கள் உள்ளிட்ட 7 விளையாட்டுக்களைச் சேர்ந்த 60 வீர, வீராங்கனைகளுக்கு ஊட்டச்சத்து பொதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள குறித்த வேலைத்திட்டத்தின் முதலாவது இலக்கு அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழாக்களில் இலங்கை வீரர்கள் பதக்கங்களை வெல்வதாகும்.



### 46 தேசிய விளையாட்டு விழா

# மரதன் போட்டியில் சிவராஜன், கிருஷாந்தினிக்கு முதலிடம்



46 தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக கடந்த வெள்ளிக்கிழமை கதிர்காமத்தில் நடைபெற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்ற மரதன் போட்டியில் ஆண்கள் பிரிவில் மத்திய மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி எம். சிவராஜன் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டார். அத்துடன் பெண்கள் பிரிவில் பங்கேற்ற மத்தியா மாகாணத்தை சேர்ந்த வேலு கிருஷாந்தினி முதலிடத்தை பெற்றுக் கொண்டார். இந்த மரதன் போட்டிக்கு நெஸ்லே நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும். ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை மேல் மாகாணத்தை சேர்ந்த குணசேகரவும் பெண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை மத்திய மாகாணத்தை சேர்ந்த ஹேரத்தும் பெற்றுக் கொண்டனர். கொரோனா தொற்று காரணமாக கடந்த வருடம் தேசிய விளையாட்டு விழா இடம்பெறவில்லை. அத்துடன் இம்முறை இடம்பெறும் போட்டிகள் அனைத்தும் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைவாக இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




## வாழ்வாதாரமா சேதாரமா

171



தமிழ்க் கவி பேசுகின்றார்

# வாழ்க்கைத்துணையை மகள் தானே தேர்ந்தெடுத்தால் விரும்புவார்களா பெற்றோர்...?



காலங்காலமாக நடைபெற்று வரும் தேசங்களுக்கிடையிலான போராட்டங்களின் அடிநாதம் பொருளாதாரம்தான்.. ஊருக்கூர் நடைபெறும் போட்டிகளிலும் பொருளாதாரமே முன்நிற்கிறது. வீட்டுக்கு வீடு நடைபெறும் உறவினர்களுக்கிடையேயான சண்டை சச்சரவுகளிலும் பொருளும் சாதியும் முன் நிற்கின்றன. கணவன் மனைவியிடையே ஏற்படும் சச்சரவுகளிலும் பொருளாதாரமும் ஒரு காரணியாக நிற்கிறது.

இங்கே நான் பொருளாதாரம் என்னும்போது வேறு ஒன்றும் அல்லது சிலவும் காரணமாக வருகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். கணவன் மனைவியரிடையே தன்மானப்பிரச்சினை மேலெழும்போது வாக்குவாதங்களும் மேலெழுகின்றன. கணவனைவிட மனைவி படித்திருந்தால். கணவனைவிட மனைவி அதிகம் சம்பாதித்தால், கணவனைவிட மனைவி உயர்குடும்பத்தில் பிறந்திருந்தால் திருமண வாழ்க்கையை கட்டிப்போடுவது மிகவும் கடினமானது என்று ஒரு ஆய்வில் படித்தேன்.

எங்கள் கிராமத்தில் ஒரு பெண் க.பொ.த. உயர்தரம் படித்துக்கொண்டி ருந்தாள். அவளை ஒரு அழகிய வாலிபன் காதலித்தான் அவளும் அந்தக்காதலை ஏற்றுக் கொண்டாள். அவள் உயர் குடியில் பிறந்த பெண். அவன் சாதாரண குடும்பம். மழைக்குக்கூட பாடசாலை வாசலில் ஒதுங்காதவன். அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர் ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை. என முடிவெடுத்தவர்கள் தாமாகவே திருமணம் செய்து தனியாக போய்விட்டனர்.

அவள் என்னதான் படித்திருந்தாலும் கணவனுக்கு பிரியமில்லை என்பதற்காக கருத்தடை செய்து கொள்ளாமல் எட்டுப்பிள்ளைகளை பெற்றாள். கணவன் செல்லுமிடமெங்கும் சென்று குடும்பம் நடத்தினாள். எனக்குத் தெரிய அவனும் அவளை அன்பாகவும் கவுரமாகவும் நடத்தினான். இந்த மாதிரியான வாழ்க்கை எல்லோருக்கும் அமைகிறதா? சில பெண்களுக்கு கணவன் எவ்வளவு உழைத்துக் கொடுத்தாலும் அவர்களுக்கு போதும் என்று சொல்லவே மனம் வருவதில்லை. தமது வருவாய்க்கு மேலாக ஆடம்பரமான உடைகளையும் நகைகளையும் அணிவதுடன் ஊரில் நடக்கும் கேளிக்கைகளிலும் கலந்து கொள்வதையே தமது பெருமையை நிலைநாட்டும் வழி என நினைக்கிறார்கள். அது மட்டுமல்ல அவனைவிட அதிகமாக சம்பாதிக்கும் தன் தோழிகளின் கணவன்மாரை உதாரணம் காட்டிப் பேசும்போது அந்தக் கணவனால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இது போன்ற ஏராளமான சம்பவங்களை நான் கண்டிருக்கிறேன். எவ்வகையிலும் இவர்களை சாமாதானப்படுத்தவே முடிவதில்லை. அதிகமான குடும்பப் பிரிவுகளை பொருளாதாரமே உருவாக்கி விடுகிறது. அதற்கமைவான சூழலே இன்று சரளமாக நிலவுகிறது. ஒரு கிராமத்தில் இன்று பெண்பிள்ளைகள் பருவமடைவது. பெரிய நிகழ்ச்சியாக கொள்ளப்படுகிறது. அதேபோல பூப்புனித நீராட்டு என்ற சடங்கு நிகழ்ச்சியும்(என்னதான் பெண்ணியலாளர்கள் இந்தச்சடங்கை அவமானகரமானது என்று விபரித்தாலும். அதுபற்றி நாம் அலட்டிக் கொள்வதில்லை). இந்த நீராட்டு விழாக்களுக்கான ஏற்பாடுகள்பற்றி பார்த்தோமானால் சாதாரணமாக ஒரு நடுத்தர வர்க்க குடும்பத்துக்கு அது ஒரு பாரிய கடன்சுமையை அளிப்பதாக உள்ளது. ஒரு காலத்தில் ஆண்களே கலந்து கொள்ளாத நிகழ்ச்சியாக இருந்தது. இந்த சடங்கு. இன்று குளிக்குமிடத்தில் குழந்தைக்குமரியை படம்பிடிக்கவே இளைஞர்கள் கருவிகளுடன் குளியலறைக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆண்கள் அனைவரும் என்ன நிறத்தில் ஆடை அணியவேண்டியது என்பது முதல் விழாவுக்கு என்ன நிறம் என்பதை திர்மானித்து அதேநிறத்தில் வரும்படி அழைப்பிதழ்களிலேயே குறித்து அனுப்புவதை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் கடைப்பிடிப்பதாக நாம் அறிந்தோம். அது மட்டுமல்ல யார் யார் ஆலாத்தி எடுப்பது, எனனென்ன பதார்த்தத்தை யார் ஆலாத்துவது, அந்த பாதார்த்தத்துக்கு பொருத்தமான நிறத்தில் சேலை அணிவது என்பதுவரை எல்லாமே எழுதி தயாரித்து நடத்துகிறார்கள் என்பதை அறிந்து வியந்தேன். அது மட்டுமா பருவமடைந்த பெண்ணை சொந்தவீட்டுக் கிணற்றில் நீராட்டாமல் வேறொரு வீட்டில் நீராட்டி அலங்கரித்து பல்லாக்கில் ஊர்வலமாக கொண்டு வருகிறார்கள்.

அப்பாடா இதெல்லாம் அயல்நாட்டில் என்று வியந்த எனக்கு அண்மையில் எமது அடிமட்டக் கிராமத்தில் நடந்த ஒரு சாதரண கூலித் தொழில் செய்யும் குடும்பத்தில் நடந்த பூப்புனித நீராட்டு விழா புரட்டிப் போட்டுவிட்டது. அந்த கிராமத்தில் மண்டபங்கள் இல்லை. எனவே அழகான மரங்களடர்ந்த சோலையில் பந்தல் (வாடகைப் பந்தல்தான்)போட்டு மரங்களின கீழே வண்ணக்குடைகள் நாட்டி வாடகைப்பந்தல் சமையற்காரர் சமையல், ஒப்பனைக்குப் பெண்கள், ஒலிபெருக்கி, மேளதாளம், வாசலில் வளைவு, பெண்ணைத் தூக்க பல்லாக்கு எல்லாமே வந்திருந்தது. என்ன முதலாளித்துவம் வாழ்க. என்பதைத்தவிர வேறென்ன சொல்ல முடியும். பட்டண வாசனையே இல்லாத ஊருக்கு பந்தல்கார, கமராக்கார முதலாளிகள் செம்மையாக பரப்புரை செய்து எவ்வளவு ஆடம்பரங்களை சேர்க்கமுடியுமோ அவ்வளவு சேர்த்து அங்கே கடைவிரித்திருந்தார்கள். பலகாரவகை எதுவும் கிடையாது. ஈயக்கடதாசியில் சுற்றிய லட்டு அழகிய இருபெண்கள் அதற்கென அமைக்கப்பட்ட வண்ணக் கூடைகளில் ஏந்திச் சென்று வரும் ஒவ்வொரு விருந்தினருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தோடு முடியாது எமது வெளிநாட்டு மோகம். வீடு செல்லும் விருந்தினர்களுக்கு பாக்கு வெற்றிலை வைத்து ஒரு பை கொடுப்பது வழக்கம். இன்று ஒரு படி மேலாக அந்தப் பையில் ஒரு சிறு எவர்சில்வர் தட்டோ அல்லது சிறு விளக்கோ வைத்து கொடுப்பது வழக்கமாகி விட்டது. அப்படி வைத்தால்தான் விழாக்காரர்களுக்கு பெருமை.

இல்லை நான் தெரியாமல்தான் கேட்கிறேன் எனது பிள்ளைக்கு செய்ய வேண்டிய சிறப்பை அவளுடைய விருப்பம்போல செய்கிறோம் என்று கூறும் பெற்றோர் நிலவைக்கேட்டாலும் கொண்டுவரத் தயாரான பெற்றோர் இன்னும் சில வருடங்களின் பின் அந்தப்பெண் தனக்கென வாழ்நாள் முழுதும் தொடரப்போகும் ஒரு வாழ்க்கைத்துணையை தேடும்போது மனமொத்து அனுப்புவார்களா? எத்தனை பெண்களுக்கு அந்தக் கொடுப்பனை உண்டு. காதலனுடன் ஓடிப்போகும் பெண்களுக்கு ஓடுகாலிப்பட்டம் கொடுக்கும் பெற்றோர் குறிப்பாக தாய்மார் பிள்ளைப் பாசத்தில் பின்னர் மகளுடன் சேர்ந்து கொண்டாலும், எப்படி மகளை அவனிடமிருந்து பிரித்துக் கொண்டு போகலாம் என்பதிலேயே கவனமாக இருப்பார்கள். அநேக குடும்பங்கள் கணவன் மனைவிக்கிடையேயான பிரச்சினைகளுக்கு அப்பால் அவர்களுடைய பெற்றோரால் பிரிக்கப்படுகின்றன என்பதை மறுக்க முடிவதில்லை.

நாகரீகம் வளர வளர சடங்குகளும் அதிகரிக்கும் என்று ஒரு அறிஞர் குறிப்பிட்டார். அந்த நிலையை இன்று கண்கூடாக காண முடிகிறது. கலியாண வீட்டுக்கான ஏற்பாடுகளில் பலகாரச்சூடு என்பது பிரத்தியேகமான நிகழ்ச்சி. ஊர் பெண்கள் கூடி பலகாரத்துக்கான மாவை தயார்செய்து பதப்படுத்தி பலகாரம் செய்வது வழக்கம். ஒரு வாரம் முன்னதாகவே பெண்கள் சடங்குநடக்கும் வீட்டில் குழுமி நாலு கதைபேசி சிரித்து பாடி மகிழ்ந்து பலகாரம் சுடுவார்கள். சமையலும் பெண்களும் ஆண்களும்கூடி நடக்கும். ஊரிலுள்ள ஆண்கள் கூடி பந்தல்போட்டு அலங்கரிப்பார்கள். இன்று அந்த ஒன்று கூடலும் இல்லை. ஒற்றுமையும் இல்லை, வீட்டிலுள்ளவர்களுக்குக்கூட ஒப்பனை செய்து கொள்ளவும் ஒளிப்படத்துக்கு முகம் காட்டவுமே நேரம் சரியாக இருக்கிறது. எல்லாவற்றையும் ஒரு முதலாளியே ஒழுங்கு செய்து பணம்பண்ணிக் கொள்கிறான். சாதாரண மக்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் செய்யும் வல்லமை இல்லாமல் போகிறது அவ்வளவுதான்.




## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்



# தோணிச் சட்டை

வெயில் கொளுத்துகிறது. செம்பட்டை முடிக்குள்லிருந்து வியர்வைக் கோட்டு நெளிவுகள் நாசி நுனியில் தொங்குகின்ற துளி கண்ணாடி மாதிரித் தெரிகின்றது. அரைக்கைச் சட்டையின் தொளதொளப்பு, நான் ரொம்ப ரொம்ப லட்சணமாயிருந்தேன். முதலில் பருவம் தெரிந்து அணிந்த ஆடை இப்போது நினைவிலில்லை. என்றாலும் எனக்கு அந்தத் தோணிப் படம் போட்ட சுருக்கம் வைத்துத் தைத்த சட்டை நல்ல ஞாபகம். அதனை அணிந்து கொண்டு சின்னம்மாவுடன் சிங்கம்'ஸ் ஸ்டூடியோவில் வாயிற் திரைச் சீலை மறைத்திருந்த உள்ளறையின் ஒரு பிரம்புக் கதிரையில் இருந்து பிடித்த படம் இன்றும் என்னிடம் இருக்கிறது...

வேக வைத்த சீனிக் கிழங்குதான் என்னோடு விளையாட வரும் இளையம்மா. எந்நேரமும் நெல்லுப் பாய்க்குக் காவல் பார்க்கும் பெண்ணாகவே அவர் எனக்குத் தெரிகின்றார். வீதி நெடுகிலும் தோட்டுப்பாய் விரித்து அதில் பூராக அவித்த நெல்லைக் கொட்டிப் பரவி இருப்பார்கள். காக இறகு ஒன்று அதன்மேல் கிடக்கும். கையில் முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டொன்று வைத்திருப்பார். காகம் நெல்லை இறைக்க வருகின்றபோது ஒளியை அதன் கண்ணுக்கு அடித்தால் பறந்து விடும். கந்தலான சாயம்போன பாவாடையும் எண்ணெய் பார்த்தறியாத செம்பட்டைத் தலை முடியும் காற்றில் அசைந்து கொண்டே இருக்கும். அருகில் மஞ்சணத்தி மரத்தின் கொப்பில் சொருகியிருக்கும் ஒரு வெள்ளைக் கொழுக்கிலிருந்து அடிக்கடி நீர் பருகிக் கொள்வாள். "சாப்பிட்டியா.." இந்தக் கேள்வியை அந்தச் சின்ன வயதில் என்னால் கேட்க முடியவில்லை...

சின்னக் குடிசை நாற்சதுரமான ஒரே வீடுதான். இளையம்மா, அவர் தாய் இரண்டு சகோதரிகள், வாழ்வின் சகலமும் அந்த இடத்தில்தான். இவர் தாய் எனக்கு உடுப்புத் தைக்கும் நவீன மோஸ்த்தர்களின் சொந்தக்காரி. எனது களிசான் கீழே இறங்காதிருக்க முதுகில் புள்ளடிபோட்டு, இடுப்பிலிருந்து தொடங்கும் வார்ப் பட்டியை இரண்டு தோள்களிலும் போடுவித்தவர். கழுத்துப் பகுதியிலிருந்து எப்பொழுதும் ஒழுகிக் கொண்டிருக்கும் வியர்வை அவரின் தீராத உழைப்பையும் பொழுதுகளையும் மிக வலிமையுடன் வெளிப்படுத்துவதுபோலவே இருக்கும். கட்டியிருக்கும் பாவாடையை முழங்கால்வரை உயர்த்திக் கொண்டு குழந்தைகள் ஒவ்வொருவரையும் இரு புறங்களிலும் இருத்தி அந்தச் சிங்கர் மெசினை மிதிக்கின்றபோது ஏதுமறியாமல் பார்த்து நிற்பேன்...

நம்பவே முடியாத வகையில் அங்கிருந்த எல்லாச் சிறுவர்களுமே மிகவும் இனிமையானவர்களாக இருப்பார்கள். ஒரே நிற ஆடை என்றில்லாது, பல வர்ணங்களில் அணிந்திருப்பார்கள். அந்நேரம் கூடுதலாகப் பொலிஸ்டர் துணிகள்தான் வரவு. பிடித்தால் கை வழுக்கிக் கொண்டு செல்லும். அந்தத் துணியில் சேர்ட் உடுப்போம். காக்கி நிறத்திலான நீளக் காற்சட்டை, அதில் இன்றுள்ளதுபோல் 'சிப்' இராது. பெரிய கபில நிறத் தெறிகள்தான் காணப்படும். சேர்ட்டுக்கும் 'ஐலட்' பிடிப்பார்கள். பெண் பிள்ளைகள் கொசுவச் சட்டையை விரும்புவதும், சிலர் பாவாடை தாவணி அணிவதும் வழக்கம். கொடை வெட்டுப் பாவாடையும் சுருட்டை முடியும் கரு நீளக் கண்களும் கொண்ட ஒரு சிறுமி பாலர் வகுப்பில் என் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்திருந்தாள்.

அவளிடம் ஆச்சரியத்தை வரவழைக்கும் இயற்கையை ஆராதிக்கும் படங்களோடு கூடிய புத்தகங்கள் இருந்தன. ஆறு வயது நிரம்பிய அவள் ஒரு சித்திரப் பாவையைப் போலிருப்பாள். அங்கேயிருந்த அவளோடொத்த குழந்தைகள் செய்த ஒரு குறும்பு அவளைப் புண்படுத்தியிருக்க வேண்டும். அதனாலேயே என் பக்கத்திலிருந்து விலகி அந்த வகுப்பறையின் மூலையில் தன் பொம்மைகளோடு தனியாகச் சென்று விட்டாள். தொடர்ந்து படங்கள் போட்ட புத்தகங்கள் நின்று, ஒரு பெரிய எழுத்திலான கதைப் புத்தகம் மட்டுமே எனக்குக் கிடைத்தது..

தலையில் டொபித் தாளை இரு புறமும் திருகியதுபோல் தலை முடியை வார்ந்து முடிந்திருப்பார்கள். ஒரு ரப்பர் நாடாவில் இரண்டு கறுப்பு மணிகளும் தலையை மேலும் அழகாக்கும். மயிர் மாட்டியைப் பல்லில் இடுக்கி விரித்து முடி கிளம்பிப் பறக்காமல் மாட்டுவார்கள். 'அலிஸ்பென்ட்' முடியின் மேல் வளையமாக அமர்ந்திருக்கும். அதனை பெருவிரலில் தேய்த்து முகர்ந்து பார்த்தால் ஐஸ்கிரீம் மணக்கும்.

இரட்டைப் பின்னல், நடு வகுப்பு, உச்சிக் கொண்டை, குடுமி என்று சிகை அலங்காரங்களில் திளைத்திருப்போம். உயரமாக மெலிவாக இருந்த செய்யது மாமி, தலையில் எப்போதும் சீப்பொன்றைப் பதித்து வைத்திருப்பார். தீவிர முக பாவனையுடன் காணப்படும் சீப்பார் மாமா, பெல்போட்டன் பெல்ஸ் உடுத்திருப்பார். அவர் காலைச் சண்டிச் சண்டி நடக்கின்றபோது வீதியின் தூசி துகளையும் 'பெல்ஸ்' கூட்டிப் போகும். கூடச் செல்லுகின்ற எனக்குத் தார் வீதியில் நடைபோடுகின்ற மாடுகளின் சாணக் கழிசல் செருப்புகளில் அப்பிவிடும். செருப்புக் கனத்தால் வீதி ஓரத்தில் இழுத்துக் கொள்வேன்...

அன்று இரவு எனக்குச் சோறு இறங்கவில்லை; உம்மா புலம்புறா "அவனோட நெனப்பு அவன்கிட்ட இல்ல; மிதிவடிக் கட்டையில போயிருச்சி.." சரிதான் கொழும்புக்குப் போன வாப்பா வாங்கி வரும் மிதிவடியைப் போட்டுக் கொண்டு 'பராக் பராக்'கென்று இந்த எலுகையெல்லாம் நடந்து திரியும் கனவுகள் இப்போதே துளிர்விட, வாசல் படலையைத் திறந்து பார்ப்பேன்; நிலவு மாட்டுக் கொம்பு சைசில் மோக்கையாகத் தெரியும். சாமத்தைத் தூண்டியதற்கு அடையாளமாக விடி வெள்ளி கிழக்கே தலை காட்டும். கார்த்திகை மாதத்துக் குளிருக்குள் இரவு நேரப் பறவையாக வாப்பா வந்து சேர்ந்தார். அவர் கையில் கொண்டுவந்திருக்கும் மிதியடிகள் பொதுவாகப் பாதவடிவில் செய்யப்பட்டு காலில் உள்ள பெரு விரல்களுக்குள் பொருந்தி நிற்கக் கூடியவை..

இதில் பல ரகங்கள் இருக்கின்றன. குமிழ் வடிவில் கட்டை செய்து பதிக்கப்பட்டிருக்கும். உயரத்திற்காக அடியிலும் இரு குற்றிகள் பொருத்தியிருப்பார்கள். மான், மரை, மாடு, ஆடு போன்ற மிருகங்களின் தோலினால் ஆனவை. ஒற்றைவார், இரட்டைவார் என்றிருக்கும். ஆணிகளை அணியணியாய் அடித்து அழகு செய்யப்பட்டவைகள் குதிரைப் பாய்ச்சல் கட்டைகள் எனப்படுகின்றன. கூடவே சீலைத் தொப்பிகளும் பொம்மைகளும் இருந்தன. இதில் நூல்தொப்பி எனக்குக் கிடைத்தத.

சம்மான் தொப்பியும் துருக்கித் தொப்பியும் கண்ணாடி அலுமாரிக்குள் போய் அமர்ந்து கொண்டன. உலகத்தின் எந்த மூலையிலுமே ஏதாவது ஒரு குழந்தைகள் விளையாட்டை "நான்தான் கண்டு பிடித்தேன்.." என்று சொன்னால் அது குழந்தை விளையாட்டே இல்லை. குழந்தைகள் தங்களுக்கான விளையாட்டுகளை தாங்களே உருவாக்கித் தங்களுக்குள் பரப்புகிறார்கள். அவர்களிடமிருந்து பெரியவர்கள் கற்றுக்கொண்டு மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதுபோல் பந்து விளையாடாத எந்தச் சிறுவரும் இருக்க முடியாது நானும் விளையாடினேன்..

வயிற்றில் காது வைத்துக் கேட்கும்போது பல வித சத்தங்கள் தோன்றுமாம். அது பசியின் உந்துதல் என உணர்ந்து கொள்ளும் உம்மா தூக்கத்துக்குப் போகும்வரை சீலைத் தொட்டிலில் வைத்து என்னையும் அசத்தியிருக்கிறார். எங்கள் பழைய வீட்டின் மோட்டு வளையில் என்னைத் தூங்கப் போட்ட தொட்டில் கயிற்றின் அடையாளம்,

(28 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா மாவட்ட செயலகத்தில் மகளிர் தின கொண்டாட்டங்கள்

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸூக்கு முன்மாதிரியான சாதனைப் பெண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட மகளிர் தின நிகழ்வின் போதே வடமாகாண ஆளுநருக்கு குறித்த விருது வழங்கப்பட்டது.

தடைகள் பலவற்றைத் தாண்டி ஒரு முன்மாதிரியான சாதனைப் பெண்ணாக, வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகவும், சுங்க திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும், அமைச்சின் செயலாளராகவும், தற்போது வட மாகாண ஆளுனராகவும் சிறப்பாக செயல்பட்டமையை பாராட்டியே குறித்த விருது வழங்கப்பட்டது.

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம், வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன்பந்துலசேன, மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், திணைக்கள தலைவர்கள், மற்றும் பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் இணைந்து குறித்த விருதினை வழங்கி கௌரவப்படுத்தினர்.







அத்துடன், வவுனியா மாவட்டத்தில் பல்வேறு துறைகளிலும் சாதனைகளைப் படைத்த பெண்களுக்கும், பொருளாதார ரீதியாக சாதனை படைத்த பெண்களுக்கும் இதன்போது விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. வவுனியாவில் ஊடகத்துறையில் பெண்ணாக தற்துணிவுடன் செயற்பட்டு வருகின்றமையை பாராட்டியும், சமூக மட்டத்தில் பல்வேறு அமைப்புக்கள் ஊடாக தமது ஆளுமையை வெளிப்படுத்தி வருகின்றமையை பாராட்டியும் ஊடகவியலாளர் சிவகுமார் திவியாவுக்கு சிறந்த பெண் ஊடகவியலாளர் என்ற விருதும் வழங்கப்பட்டது.

# அவசர நிதித் தேவைகளுக்காக அமானா வங்கியின் தங்கச் சான்றிதழ் நிதியளிப்பு

கொவிட்19 தொற்றுப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு, அரசாங்கத்தின் மீள ஆரம்பிப்பு நடவடிக்கைகளின் போது உதவிகளை வழங்கும் வகையில், அமானா வங்கியின் தங்கச் சான்றிதழ் நிதியளிப்புத் திட்டத்தினுளடாக அவசரப் பணத்தேவைகளுக்கு தற்போது உயர்ந்தளவு முற்பணம் வழங்கப்படுகின்றது. 22 கெரட் தங்கத்துக்கு வாடிக்கையாளர்கள் ரூ. 70000 வரை பெற்றுக் கொள்ள முடியும். பாரம்பரிய அடகு பிடிக்கும் முறைக்கு மாறாக வட்டியில்லாத திட்டமாக அமானா வங்கியினால் அறிமுகம் செய்யப்பட்ட விருதை வென்ற தங்கச் சான்றிதழ் நிதி வசதித் தீர்வு என்பது, சந்தையில் காணப்படும் வங்கிச் சேவைகளை நாடாத, வங்கிச் சேவைகள் சென்றடையாத பிரிவுகளை சென்றடைவது எனும் வங்கியின் கொள்கை நோக்கத்துக்கமைவாக காணப்படுகின்றது.



நாட்டின் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்திருப்பதுடன், விவசாயம் மற்றும் இதர சிறுதொழிற்துறைகளுக்கு நிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள, சௌகரியமான கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

வாடிக்கையாளர்கள் தமது தங்க பாதுகாப்பு வைப்பு சான்றிதழை பிணையாக வைத்து, 12 மாதங்கள் வரை மீளச் செலுத்தக்கூடிய மேலதிக செலவுகள் எதுவுமற்ற கடனைப் பெற்றுக் கொள்ளலாம். முதிர்வின் போது, வாடிக்கையாளர் தாம் கடனாகப் பெற்ற தொகையை மாத்திரம் எவ்விதமான மேலதிக கொடுப்பனவுகளுமின்றி செலுத்த வேண்டியிருக்கும். இந்த நிதித் தீர்வு பற்றிய மேலதிக தகவல்களைப் பெற, வாடிக்கையாளர்கள் bit.ly/AB_EmergenceyCash_T எனும் காணொளியேய் பார்க்கலாம்.

இந்தத் தீர்வு தொடர்பான அமானா வங்கியின் நுகர்வோர் நிதியுதவி பிரிவின் தலைமை அதிகாரி ராமகிருஷ்ணன் கிருபாகரன் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த நெருக்கடியான சூழலில், பலர் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். மக்களுக்கு நட்பான வங்கி எனும் வகையில், அவர்களின் நிலைமையை புரிந்து கொண்டு, எமது தங்கச் சான்றிதழ் நிதியளிப்பு அவசர பணத் தொகையினுளடாக வழங்கப்படும் முற்பணத் தொகையை நாம் அதிகரித்துள்ளோம். அதனூடாக அவர்களின் அவசர நிதித் தேவைகளை சுலபமாக பூர்த்தி செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும்." என்றார்.

## சர்வதேச மகளிர் தினத்தை பெண் ஊழியர்களுடன் கொண்டாடிய அலியான்ஸ் லங்கா




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அலியான்ஸ் லங்கா நிறுவனம் அதன் தலைமை அலுவலகத்தில் ஏற்பாடு செய்த நிகழ்வில் தமது பெண் ஊழியர்கள் பலரையும் ஊக்கப்படுத்தியுள்ளது.

முன்னாள் ஒலிம்பிக் வீராங்கனையும் புகழ் பெற்ற இலங்கை தடை தாண்டல் ஓட்ட வீராங்கனையுமான சிறியானி குலவன்ச, மருத்துவ உளவியலாளரான வைத்தியர் பியாஞ்சலி டி சொய்சா ஆகியோருடன் சேர்ந்து, தமது வாழ்க்கை, எதிர்கொண்ட சவால்கள் மற்றும் துன்பங்கள் மற்றும் எப்போதும் நேர்மறை சிந்தனைகளைப் பேணி எவ்வாறு அவற்றையெல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டனர் என்பது தொடர்பான உள்ளார்ந்த விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்வில் பங்குபற்றியவர்களை சமுதாயத்தின் தேவையற்ற விமர்சனங்களால் துவண்டு போகாமல், தங்கள் கனவுகளை நனவாக்குவதற்கு சிறப்பாகச் செயற்படுமாறு ஊக்குவித்தனர். ஆரோக்கியமான பணி குடும்ப வாழ்வு சமநிலையின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தினர். இந்நிகழ்ச்சியில் அதன் பரந்த கிளை வலையமைப்பின் கீழான ஊழியர்கள் கலந்துகொண்டு நிகழ்வை வெகுவாக வரவேற்றிருந்தனர்.

மேலும், நிறுவனம் ஒரு பெண் விற்பனை ஆளணியை ஸ்தாபித்துள்ளதுடன், இங்கு பெண்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் வழங்கப்படுவதன் மூலமாக வலுவூட்டப்படுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன,

மேலும் அவர்களின் சிறந்த சாதனைகளுக்காக தொடர்ந்தும் உரிய இனங்காணல் அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகின்றது. பெரும்பாலும் ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு தொழிற்துறையில் பெரும் எண்ணிக்கையில் பெண்கள் இப்பணியில் அமர்த்தப்பட்டுள்ளமை இத்திட்டம் வெற்றியளிக்கும் என்பதை நிரூபித்துள்ளது.

தொழில்வாய்ப்பில் சமத்துவம் பேணும் தொழில்தருநராக செயற்படுவதில் அலியான்ஸ் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. இது எங்கள் ஊழியர்களிடையேகூடுதல் நட்புறவு மற்றும் ஒன்றுபட்டு உழைக்கும் உணர்வை ஏற்படுத்தியுள்ளதால், மென்மேலும் வளர்ச்சி கண்டு, வலிமைபெற எங்களுக்கு உதவியுள்ளது.

## சிறந்த ஏற்றுமதியாளருக்கான தங்க விருது வென்ற DSI Tyres



உண்மையான இலங்கையின் வர்த்தகநாமமாக தடம் பதித்துள்ள DSI Tyres, சர்வதேசத்தை வென்ற உள்நாட்டு உற்பத்தி என்பதை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தும் வகையில் வருடாந்த NCE ஏற்றுமதி விருது வழங்கும் விழாவில் பாரியளவிலான பிரிவின் இறப்பர் டயர் மற்றும் அது சார்ந்த உற்பத்திபிரிவில் தங்க விருதினை வென்றுள்ளது.

ஏற்றுமதி துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய ஏற்றுமதிச் சபை ஏற்பாடு செய்த மேற்படி விருது வழங்கும் விழா அண்மையில் கொழும்பு ஷாங்ரிலா ஹோட்டலில் நடைபெற்றது. இதற்கு முன்னரும் DSI Tyres சிறந்த ஏற்றுமதியாளர் விருதுகளையும் ஜனாதிபதி விருதுகளையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இலங்கையின் ஆகச்சிறந்த 125 வர்த்தக நாமங்களில் ஒன்றாகவும் DSI Tyres தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் டயர்கள், முச்சக்கர வண்டிடயர்கள், சைக்கிள் டயர்கள் மற்றும் டியூப்கள் சந்தையில் உள்நாட்டு முதல்வராக அடையாளத்தை உலகறியச் செய்வதற்கு DSI Tyres இனால் முடிந்துள்ளது.

100 சதவீத உள்நாட்டு நிறுவனமான DSI Tyres தற்பொழுது சுமார் 3,000 பேருக்கு தொழில்வாய்ப்புகளை வழங்கியுள்ளது. இந்நிறுவனம் தமது உற்பத்திகளுக்கு உள்நாட்டு மூலப்பொருட்களை அதிகமாக பயன்படுத்துவதை கொள்கையாகவே வைத்துள்ளது.

DSI Tyres, ISO 9001:2015, Inmetro, SLS, Tanzania Bureau of Standard போன்ற தரச்சான்றிதழ்கள் பலவற்றையும் வென்றுள்ளது.

இவ்வெற்றிக்கு பங்களிப்பு செய்த தமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரணதுங்க ராஜபக்ஷ தெரிவித்தார்.

## காலி ஓல்கொட் மஹா வித்தியாலயத்திற்கு smartboard இனை நன்கொடையாக வழங்கிய vivo

உலகளாவிய முன்னணி தொழில்நுட்ப வர்த்தகநாமமான vivo, தொடரும் தொற்றுநோய் நிலைமையில் சமமான கற்றல் வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் இலங்கையில் தனது சமூக நலனை நோக்கமாகக் கொண்ட #vivocares முயற்சியினை முன்னெடுத்துள்ளது. இந்த முயற்சியின் கீழ் vivo ஒரு நவீன ஊடாடும் smartboard இனை காலியில் உள்ள முதல் பயனாளியான 'ஒல்கொட் மஹா ஒல்கொட் மஹா வித்தியாலயத்திற்கு ஒதுக்க முன்வந்தது. இது 1200 மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதுடன், ஊடாடும் கற்றல் அலகுகளை ஊக்குவிக்குகின்றது.




#vivocares முயற்சி தொடர்பில் கருத்து தெரிவித்த vivo Sri Lankaவின் பணிப்பாளர் எலிசன் ஜின், "உலகளாவிய மற்றும் சமூக பொறுப்புள்ள வர்த்தகநாமம் என்ற வகையில் உள்நாட்டு சமூகங்களை ஆதரிப்பதிலும், அவர்களை தொழில்நுட்பத்தில் நன்மையால் வலுவூட்டுவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. முழு மனதுடன் சமூகத்திற்கு பங்களிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பாடசாலை சிறார்கள் எந்தவொரு தேசத்தினதும் எதிர்காலமாக இருப்பதால், பள்ளி பாடத்திட்டத்தில் அவர்களின் ஆர்வத்தையும் பங்கேற்பையும் தக்க வைத்துக் கொள்வது அவசியமாகும். இது பாடசாலைக்கு மாணவர்களின் வருகை மற்றும் இடைவிலகல் விகிதங்கள் போன்ற சிக்கல்களைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் உள்ளடக்கத்துக்கான ஒரு சிறிய படியாகும்," என்றார்.

ஒல்கொட் மஹா வித்தியாலயத்தின் அதிபர், லலித் மாயாகடுவ கருத்து தெரிவிக்கையில்," எமது பாடசாலையின் வசதியை மேம்படுத்தும் பொருட்டு இந்த smartboard இற்கு பங்களிப்பு செய்தமை தொடர்பில் vivo குழுவிற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். இது நிச்சயமாக கற்றலை சுவாரஸ்யம் மிகுந்ததாக மாற்றுவதுடன், இந்த நிச்சயமற்ற காலங்களில் குழந்தைகளுக்கு உற்சாகமாக ஈடுபாட்டுடன் இருக்கவும் உதவும். vivoவின் இந்த முயற்சியானது இளையோரின் அறிவாற்றல் திறன்களை மேம்படுத்தவும் கிராமப்புற பள்ளிகளில் கல்வித் தரத்தை மேலும் மேம்படுத்தவும் உதவும்."

## ஒருங்கிணைந்த சரக்குப் போக்குவரத்துத் தீர்வை விஸ்தரித்துள்ள DP Logistics

கொவிட்19 பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி சீனாவிலிருந்து இலத்திரனியல் பொருட்களை வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் கொண்டு வந்துDP லொஜிஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடட் அண்மையில் தனது ஒருங்கிணைந்த சரக்குப் போக்குவரத்துத் தீர்வை விஸ்தரித்துள்ளது.

மிகவும் சவாலான சூழ்நிலையில் இத்தீர்வு வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டது. சீன வருடப் பிறப்பு விடுமுறை தொடங்கவிருக்கும் நிலையில் விடுமுறைக்கு முன்னதாக பொருட்களை நாட்டிலிருந்து வெளியே எடுப்பதற்கு சேவைபெறுனர் சிரமப்பட்டார்.

விடுமுறை நாட்கள் என்பதாலும், உலகத் தொற்றுநோய் சூழல் தொடர்ந்தும் காணப்படுவதாலும் அவற்றைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமங்கள் நிறைந்த பின்னணி காணப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே DPL, இலங்கையின் கார்கோவுடன் இணைந்து இதில் காலடியெடுத்துவைத்தது. இதற்குத் தீர்வாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானத்தின் மூலம் பொருட்களை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தது. DPL இன் சீனாவில் உள்ள பிரதிநிதி அந்நாட்டில் பிணைக்கப்பட்ட இடங்களிலிருந்து பொருட்களை சேகரித்து, அவற்றை களஞ்சியப்படுத்தி வைத்து பின்னர் ஷன்ஹாங் புடோங் சர்வதேச விமான நிலையத்துக்கு மாற்றி, குறித்த பொருட்களுக்கான சுங்க செயற்பாடுகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்து அவற்றை அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது. DPL அணி அவற்றை சீனாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தது. பொருட்களை சரியான முறையில் கொண்டுவந்து அவற்றை பாதுகாப்பான முறையில் வாடிக்கையாளரிடம் கையளிப்பதை அக்குழு உறுதிப்படுத்தியது.




விதிமுறைக்கு அப்பாற்பட்டு அசாதாரண தீர்வுகளை வழங்குவதில் DPL உறுதிப்பாட்டைக் கொண்டிருப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சரக்குப் பகிர்தல் பொது முகாமையாளர்இந்திக டி.சில்வா குறிப்பிடுகையில் "DPLஇன் அர்ப்பணிப்புடான துறைசார் நிபுணர்கள் குழுவுக்கு பணியாற்றவதற்கான நேரம் அல்லது நாட்கள் குறித்த எந்த வரையறைகளும் இல்லை.

தனித்தனியான பொருளாதார தீர்வுகளுடன் வாடிக்கையாளர்களின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்ய எதை வேண்டுமாயினும் நாம் செய்வோம்" என்றார்.

## பணியாளர்களின் பங்களிப்பினை கொண்டாடும் செரண்டிப் ஃபிளா மில்ஸ் 2021

இலங்கையில் மிக நம்பகமான கோதுமை மா தயாரிப்பு விநியோகத்தர்களில் ஒருவரான Serendib Flour Mills, கொரோனா தொற்றுநோய் பரவல் காரணமாக ஏற்பட்ட முதலாவது பொது முடக்கம் முதல் எமது முழு நாட்டுக்கும் நிலையான விநியோகத்தினை தொடர்ந்து வழங்கிட அயராது உழைத்த தமது தொழிலாளர்களை பாராட்டிடும் முகமாக உலக மாவு தினம் 2021 இனை கொண்டாடுகிறது.

மார்ச் 20ஆம் திகதி கொண்டாடப்பட்ட, உலக மாவு தினத்தன்று உலகெங்கிலும் உள்ள மாவு சார் தொழிற்துறையில் பணியாற்றும் அனைத்து வகையான நிபுணர்களையும் கொண்டாடிடும் வகையில் வெண் தங்கம் உலகெங்கிலுமுள்ள மாவு வீரர்களுக்கு ஒரு பாராட்டு என்ற தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது. இந்நாள் மனித குலத்துக்கு முக்கியமான உணவுகளில் ஒன்றான மாவினைக் கொண்டாடிடும் நாளாகும். இது பல்லாண்டு காலமாக ஒவ்வொரு நாளும் மக்களின் ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் செழிப்புக்கு பங்களிப்பு செய்திடும் ஒரு பிரதான உணவாகும். கோதுமை அதிக விட்டமின்களையும் தாதுப்புக்களையும் கொண்டுள்ளதுடன் ஊட்டச்சத்து நிறைந்த உள்ளடக்கத்திற்கு பெயர் பெற்றதாகும். பல நூற்றாண்டு காலமாக கோதுமை தானியத்திலிருந்து தயாரிக்கப்படும் உணவுகள் மக்களின் ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வை ஆதரிக்க உதவுகின்றன. மேலும் வாழ்க்கை முறை நோய்களுக்கு எதிராக ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித் திறனுடனான வாழ்வை வாழ்ந்திட உதவுகின்றன. கோதுமையில் உப்புக்கள், கல்சியம், மெக்னீசியம், விட்டமின் B மற்றும் விட்டமின் E போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளன. மேலும் இந்த ஊட்டச்சத்துக்கள் இரைப்பை, குடல் நிலைமைகள், தோல் நோய்கள் மற்றும் சுவாச நோய்களை எதிர்த்து போராட உதவுகின்றன. பல்வேறுபட்ட கோதுமை மா தயாரிப்புகளில் இரும்பு மற்றும் ஃபோலிக் அமிலம் போன்ற கூடுதல் அத்தியவசியமான உட்டச்சத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. இது குழந்தைகளினதும் கர்ப்பிணித் தாய்மார்களினதும் நல்வாழ்வினை உறுதி செய்கிறது.



## இலங்கையில் அதிவேக 5G அனுபவத்தை நிரூபித்த HUTCH

இலங்கையை புதிய 5G சகாப்தத்திற்கு அழைத்துச் செல்லும் HUTCH நிறுவனம், அண்மையில் HUTCH One Galle Face ப்ரீமியர் எக்பீரியன்ஸ் சென்டரில் இடம்பெற்ற அதன் ஆரம்ப 5G பரீட்சார்த்த நிகழ்வில், இலங்கை தொலைத்தொடர்பாடல் வழங்குனரொருவர் எட்டிய உச்சபட்ச 5G வேகத்தை எட்டியது.

பல்வேறு செயல் விளக்கங்கள் மற்றும் பயன்பாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கியிருந்த இந்த புரட்சிகர 5G பரீட்சார்த்த முயற்சியின் பொருட்டு HUTCH, தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் உலகளாவிய முன்னணி நிறுவனமான ZTE உடன் கைகோர்த்தது.

இந்த 5G சோதனைகள் பிரதம விருந்தினரான, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல்ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், ஓசத சேனாநாயக்க, HUTCH நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி திருக்குமார் நடராசா மற்றும் HUTCH முகாமைத்துவத்தினரின் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த 5G பரீட்சார்த்த நடவடிக்கையானது பல செயல்முறை விளக்கங்களைக் கொண்டிருந்ததுடன், Ookla global broadband speed test இனையும் உள்ளடக்கியிருந்தது. இதில் இலங்கையில் இதுவரை பதிவான அதி கூடிய 5G வேகமான 1.8Gbps இனை HUTCH எட்டியிருந்ததுடன், மிகக் குறைந்த low latency (Ping) வீதத்தை அடைந்தது. கேமிங், ரிமோட் மீட்டிங் மற்றும் 5G இனைப் பயன்படுத்தி high definition வீடியோ பிளேபேக் உள்ளிட்ட 5G பயன்பாட்டு நிகழ்வுகளின் மூலம் HUTCH இதனை நிரூபித்ததுடன், பங்கேற்பாளர்களுக்கு 5G இன் செயல்திறனை 4G மற்றும் 3G உடனான ஒப்பீட்டின் மூலம் வேறுபடுத்திக் காட்டியிருந்ததுடன், இது எதிர்காலத்திற்கு 5G கொண்டுள்ள நன்மைகளையும் வெளிப்படுத்தியிருந்தது.

இந்த புதிய மைல்கல் தொடர்பில் கருத்து தெரிவித்த HUTCH இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திருக்குமார் நடராசா, "இது உண்மையில் HUTCH இல் உள்ள நம் அனைவருக்கும் ஒரு சிறப்பான தருணமாகும். " என்றார்.






# நிறைவாழ்வு கண்ட மனிதன்

## 'கல்விச் சேவையாளர்' சி. காராளபிள்ளை...!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குப் புறமாகவுள்ள தீவுகள் குடாநாட்டினைப் போன்றே தனிச்சிறப்பு வாய்ந்தவை.

இலக்கிய நூல்கள், சாதனங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள், மட்பாண்டங்கள், இடப்பெயர்கள், மரபுவழிக் கதைகள் இவற்றினூடாக இப்பகுதியின் பண்டைய வரலாற்றை ஓரளவு அறிந்துகொள்ளலாம் என வரலாற்றாய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இத்தீவுக்கூட்டங்களில் நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, வேலணைத்தீவு லைடன் தீவு, காரைதீவு (காரைநகர்) என்பன அடங்கும். இதில் காரைநகர் வட்டுக்கோட்டைத் தொகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஏனையவை ஊர்காவற்றுறைத் தொகுதியில் அடங்கும்.

காரைநகர், லைடன் தீவு, புங்குடுதீவு என்பன யாழ்நகருடன் வீதியால் இணைக்கப்பட்டுள்ளன. ஏனைய தீவுகளுக்கு மோட்டார்ப் படகு மூலமே போக்குவரத்து நடைபெறுகிறது.

ஊர்காவற்றுறையிலிருந்து சுமார் 11 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ள அழகிய சிறு தீவுதான் அனலைதீவு.

இக்கிராமத்தில் முன்னர் விவசாயம் முக்கிய தொழிலாக இடம்பெற்றது. நன்னீர் வளமும், மண் வளமும்கொண்ட இக்கிராமத்துப் புகையிலைக்கு முன்னர் தென்னிலங்கையில் நன்மதிப்பு இருந்தது.

மழைகாலத்தில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டும் மற்றைய காலங்களில் தோட்டச்செய்கையில் ஈடுபட்டும் இங்குள்ள மக்கள் அன்று ஓரளவு தன்னிறைவு பெற்றவர்களாக வாழ்ந்தார்கள். தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வியறிவைக் கொடுக்க வேண்டுமென்பதில் கரிசனையுடையவர்களாக இருந்தார்கள்.

இக்கிராமத்தில், வடலூரிலுள்ள 'சேனா தோட்டம்' என அழைக்கப்பட்ட இடத்தில் சிவப்பிரகாசம் பொன்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனாக 1936 ம் ஆண்டு யூலை மாதம் 9 ம் திகதி காராளபிள்ளை பிறந்தார்.

குடும்பத்தில் கடைசி மகவாகப் பிறந்த காரணத்தால் தந்தையாரின் மிக அன்புக்குரியவராக இவர் வளரலானார்.

அனலைதீவு சதாசிவ துவி பாஷா பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்கத் தொடங்கினார்.

அப்போது அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார்.

அன்று இப்பாடசாலையில் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது.

ஆறாம் வகுப்பிற்கென வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டார். மிகச் சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் இவருக்குக் கிடைத்தன.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் 'எஸ். எஸ். சி.' (S. S. C.) சித்தியடைந்ததும், யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தில் சேர்க்கப்பட்டு உயர்தர வகுப்பைத் தொடர்தார்.

பிற்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக விளங்கியசூசைதாசன், தங்கத்துரை போன்றோர் அன்று இவரது வகுப்புத் தோழர்களாக இருந்தனர்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த காராளபிள்ளை பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காகத் தமிழகம் பயணமானார்.

சென்னை மாநிலக் (பிறசிடன்சி) கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

இலங்கை அரசில் பின்னாளில் மந்திரியாக விளங்கிய ஏ. எல். ஏ. மஜீத் மற்றும் ஆலாலசுந்தரம் போன்றோரும், தமிழகத்தில் 'தி. மு. க.' கட்சியின் சட்ட ஆலோசகராகப் பின்னாளில் செயற்பட்ட எஸ். இராதாகிருஸ்ணன் போன்றோரும் இவருடன் பட்டப்படிப்பை மேற்கொண்ட நண்பர்களாவர்.

அக்காலத்தில் கல்லூரியில் வெளிநாட்டு மாணவர் சங்கச் செயலாளராகவும் செயற்பட்டார்.

கலை இலக்கிய விளையாட்டுத் துறைகளிலும் ஈடுபட்டார்.

எழுந்தமானப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றபோது 'ஈழத்திலிருந்து வந்து தமிழகத்தில் கொடி நாட்டினார்' எனத் தமிழ்த்துறைப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் பாராட்டைப் பெற்றார்.

பட்டப்படிப்பின் இறுதியாண்டு பரீட்சை எழுதியபின் தாயகம் வந்து பிறந்த ஊர்ப் பாடசாலையான சதாசிவ ஆங்கில பாடசாலையில் ஆசிரிய நியமனம்பெற முயற்சித்தார். இருப்பினும் அந்த முயற்சி கைகூடவில்லை.

பின்னர் புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலயத்தில் நியமனம் கிடைத்தது. புவியியல் ஆசிரியராக அங்கு கடமையாற்றத் தொடங்கினார்.

அந்த ஊரை நினைக்கும்போது மெய் சிலிர்க்குமெனக் காராளபிள்ள கூறியுள்ளார். B. A. பட்டத்துடன் அங்கு கற்பிக்கச் சென்றயான் அந்த ஊரைவிட்டுப் போகும்போது M. E. பட்டத்துடன் (Master of Experience) வெளியேறினேன் எனக் குறிப்பிடுவார்.

அங்கு மாணவர்களின் பெருமதிப்புக்குரியவராக விளங்கினார். வித்தியாலயத்தின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார்.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும்போது கரப்பந்தாட்டக் குழுவின் தலைவராகவும், பின்னர் சென்னையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும்போது 'கிரிக்கெட்' குழுவில் 'ரிசேவ்' குழுவில் இடம்பெற்றிருந்த அனுபவங்களும் அங்கு விளையாட்டுப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்ற உதவியாயிருந்தது.

1962 ம் ஆண்டு அங்கு வித்தியாலயத்தில் முதன்முதலில் விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடாத்தப்பட்டது. வித்தியாலயத்தின் கல்வித்தரமும் உயர்ந்தது.

அந்தக் காலத்தில், புங்குடுதீவில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்திய 'இளைஞர் கழகம்' என்ற நிறுவனத்திற்கு உதவுவதிலும் முன்னின்று உழைத்தார். அதனூடாக அன்று அறிமுகமான தொண்டர் க. திருநாவுக்கரசு, புலவர் சிவானந்தன், க. செல்வரத்தினம் ஆகியோர் நாடறிந்தவர்களாகப் பின்னாளில் வளர்ச்சி கண்டனர்.

புங்குடுதீவு மக்களை, அவர்களது பாரம்பரியத்தை நன்கு அறிந்துகொண்டார். அந்தக் காலத்தில் ஆளுமைமிக்கவர்களாக அங்கு விளங்கிய பெரியவர்களின் நட்பையும், மதிப்பையும் பெற்றுக்கொண்டார். அவர்களுடன் பழகிய அனுபவம் வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத் தந்தது என்று கூறுவார்.

ஏழு ஆண்டுகளுக்குப்பின் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு இடமமாற்றம் பெற்றார். அங்கு நிரம்பியிருந்த தீவக மக்களின் தேவைகளை நிறைவேற்றவும், அவர்களுக்குரிய கௌரவத்தையும், அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ளவும் உறுதுணையாகவிருந்து உழைத்தார். அதேநேரம் ஆசிரியர்களுக்கான கௌரவத்தைப் பேணவும், மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவும் பாடுபட்டார்.

அங்கு இராமநாதபுரம் மகாவித்தியாலத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். பின்னர் அரசியல்வாதிகளின் நெருக்கடி ஏற்பட்டு, இடமாற்றங்களால் இடர்பட்டு, ஈற்றில் சொந்த ஊரான அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார்.

அங்கு வித்தியாலயத்தின் கல்வித்தரத்தை உயர்த்தவும், சமூகக் சீர்கேடுகளைக் களையவும் வாலிபர் இயக்கம் உருவாக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அத்தீவின் முன்னேற்றம் கருதி எல்லாப் பொதுநிறுவனங்கள், திருக்கோவில்களினதும் நிர்வாகம் வாலிபர்களின் கைகளுக்கு மாறுவதற்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் அளித்தார்.

அந்தக் காலம் அனலைதீவின் மறுமலர்ச்சிக் காலமெனக் கூறப்பட்டது.

அங்கு கடமையாற்றிய சேவை மூப்புக்கொண்ட அதிபர் இடமாற்றம் பெற்றுச்சென்றதும் சதாசிவ மகாவித்தியாலய அதிபராக (1973) காராளபிள்ள பொறுப்பேற்றுக்கொண்டார்.

இல்ல விளையாட்டுப் போட்டியை மிகச் சிறப்பாக நடாத்திச் சாதாரண பொதுமக்களினதும் வாலிப சக்தியினதும் பேராதரவைப் பெற்றுக்கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் உதவியுடன் அரச நிதியுதவி பெற்று மேலும் ஊர் மக்களின் உதவியும்பெற்று வீதியோரமாகப் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது.

1931 ம் ஆண்டு அமைக்கப்பட்ட பழைய கட்டிடம் திருத்தியமைக்கப்பட்டது. புதிய தளபாடங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு H. N. C. வகுப்பு ஆரம்பிக்க அனுமதி பெறப்பட்டது.

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அபிவிருத்தியில் போதியளவு கடமைசெய்து முடித்துவிட்டபின், கிளிநொச்சிப் பிரதேசத்தில் அனலைதீவு மக்கள் கூடுதலாக வசிக்கும் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திற்கு விருப்புடன் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

இரண்டு வருடங்கள் அங்கு சிறப்பாகப் பணியாற்றியபின் முரசுமோட்டை மகாவித்தியாலயத்திற்கு விருப்புடன் இடமாற்றம் பெற்றார்.

அங்கு ஊர்மக்கள் ஒத்துழைப்புடன் சிறந்த விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டு விளையாட்டுத்துறையை ஊக்குவித்தார்.

பின்னர் விருப்ப ஓய்வுபெற்று, ஆறு மாதங்களின்பின் நைஜீரியா நாட்டின் கல்வித் திணைக்களத்தில் நியமனம் பெற்று விரிவுரையாளராகச் சென்றார்.

அங்கு ஒரு சில வருடங்கள் சிறப்பாகக் கடமையாற்றியபின் இலங்கை நாட்டின் நிலைமையினால் அங்கு செல்ல முடியாத நிலையில் பிரான்ஸ் நாட்டிற்கு வந்துசேர்ந்தார்.

இங்கு நிரந்தர வதிவிடவுரிமையும் பெற்றுக்கொண்டார்.

இங்குள்ள இளைஞர்களின் கண்களில் அறிவுப்பசியை அவரால் உணர முடிந்தது. அவர்கள் வேலைசெய்யும் இடங்களில், போதிய பிரெஞ்சு மொழி அறிவு இல்லாத காரணத்தால் ஏற்படும் அவஸ்தைகளை உணர்ந்தார். இதற்கு ஆவனசெய்ய வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டது.

சமூக உணர்வுள்ள, துடிப்பான இளைஞர்கள் சிலரை ஒன்றிணைத்து, 'பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்' என்ற நிறுவனத்தை உருவாக்க ஊக்கமளித்தார்.

இந்தக் கல்வி நிலையத்தில் பிரெஞ்சு மொழியும், சிறுவர்களுக்குத் தமிழ் மொழியும் ஆரம்பத்தில் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

காலக்கிரமத்தில் இக்கல்வி நிலையம் பாரிய பாய்ச்சலாகப் பெரியதொரு நிறுவனமாக உயர்ச்சியடைந்து, பிரெஞ்சு மொழி, ஆங்கிலம், தமிழ், கணினித்துறை மற்றும் அழகியல் பாடங்கள் யாவும் போதிக்கப்படும் கல்வி நிறுவனமாக மாற்றமடைந்தது.

கால்நூற்றாண்டைக் கடந்து, வளர்ச்சியடைந்து நிற்கும் இந்நிறுவனத்தின் ஸ்தாபகக் காப்பாளராகத் தொடர்ந்து செயற்பட்டுப் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களின் மதிப்புக்குரியவராகக் கணிக்கப்பட்டார்.

பாரிஸ் வந்த காலம் முதல் இளைஞர்களின் கலைத்தாகத்தை, இலக்கிய எழுத்தாற்றலை ஊக்கப்படுத்தி வந்தார்.

எம்மக்கள் தமது அத்தியாவசியப் பத்திரங்களைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்படும் அவலங்களை உணர்ந்தும், அவர்களது அகதி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்படும் கஸ்டங்களையும் கருத்தில்கொண்டு ஓர் மொழிபெயர்ப்புச் சேவை நிறுவனத்தை உருவாக்கினார். இந்நிறுவனத்தில், உயர்கல்விகற்ற புத்திஜீவிகளான நண்பர்களும் இணைந்து செயற்பட்டனர். மொழிபெயர்ப்பில் வல்லவர்களான இரு பிரெஞ்சுப் பட்டதாரிகளும் மொழிபெயர்ப்பாளர்களாக இந்நிறுவனத்தில் கடமையாற்றி உதவினர்.

'மாஸ்ரர் மொழிபெயர்ப்புச் சேவை' என்ற இந்நிறுவனம் எம்மக்களின் மத்தியில் நம்பிக்கையான பெயரையும், உத்தரவாதத்தையும் பெற்றதோடு, ஆபிரிக்க நாட்டு மக்களின் விருப்பத்தையும் நம்பிக்கையையும் பெற்றது.

இலக்கியத்துறையில் ஈடுபட முயற்சித்த இளைஞர்களை ஊக்குவித்து அவர்களது படைப்புகள் நூலுருவாக இயன்றளவு உதவியளித்தார்.

பத்திரிகைகள் நடாத்த முற்பட்டவர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கினார்.

எம் மக்கள் எந்த விடயத்திற்கும் ஆலோசனை பெறவும், ஆறுதல் பெறவும், அணுகக்கூடிய அனுபவம் மிக்க மனிதராக விளங்கினார்.

ஈழத்திலும் இங்கும் கலை இலக்கியத்துறையில் ஈடுபட்டவர்களின் நூல் வெளியீட்டு நிகழ்வுகளில் தலைமை தாங்கியும் சிறப்புரையாற்றியும் வந்துள்ளார்.

பிரான்சில் மாத்திரமன்றி யேர்மனி, இங்கிலாந்து, சுவிஸ் ஆகிய நாடுகளிலும் விழாக்களில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியுள்ளார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வியக்கத்தக்க உரைகளை வழங்கியுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள்வரை எடுத்து விளக்கும் அபார ஆற்றலுடையவர்.

நட்புகளைப் பெரிதும் மதித்தவர். 1996 யூலை 21 ம் திகதி பொதுமக்கள், நண்பர்கள் அவரது மணிவிழாவைச் சிறப்பாக நடாத்திக் கௌரவித்தார்கள். மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

நிறைவாழ்வு கண்டவர் காராளபிள்ளை.

உறவினரான மங்கையர்க்கரசியை திருமணம் புரிந்து மஞ்சுளா, சியாமளா, மனோகரன், பிரேமளா, சுதாகரன் ஆகிய பிள்ளைகளுக்குத் தந்தையானார். பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளையும் கண்டு பூரித்தார்.

கவிஞர் உமர்கயாமின் கூற்றுப்போல, வாழ்க்கையை ரசித்து, நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து, மக்களுக்கும் தன்னிலியன்ற பணிகளைச் செய்தவர்.

கற்பனைச் சிறகுகளை விரித்து, நேசிப்புக்குரிய தன் பிறந்த மண்ணின் அழகினில் தோய்ந்த வண்ணம், நிறைந்த மனதுடன் வாழ்வின் இறுதிக் கணங்களைக் கடத்தினார்.



கடந்த 03 – 03 – 2021 ல் இறுதி மூச்சையும் நிம்மதியுடன் விடுத்தார். அவர் நாமம் எம்மக்கள் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும்..!

**வி.ரி. இளங்கோவன்**

---

# கத்தரிக்காயும் நல்லெண்ணெயும்

சங்ககாலம் தொட்டு இன்றுவரை தமிழ் மக்கள் தமது சாப்பாட்டில் தவறாமல் சேர்த்துக்கொள்ளும் ஒரு மரக்கறிதான் கத்தரிக்காய். பழந்தமிழில் இதற்கு வழுதுணை என்று பெயர். திருமூலர் இதனையே வழுதலை என்றார். ஒரு திருமந்திரப் பாடலில் "வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது" என்னும் வரிகள் வருகின்றன. புல்வேழூர்ப்பூதன் என்பான் தன்னை வீட்டுக்கு வரவழைத்துப் பரிமாறிய உணவின் சிறப்பைப் புகழ்ந்து ஔவை பாடிய ஒரு கவிதை இலக்கிய ஆர்வலர் பலராலும் அறியப்பட்ட ஒன்று.

**வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**
**முரமுரென வேபுளித்த மோரும் திறமுடனே**
**புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டான்ஈ(து)**
**எல்லா வுலகும் பெறும்.**

வரகரிசியில் ஆக்கிய சோறும், கத்தரிக்காயை அடுப்பில் வாட்டிச் சமைத்த கறியும், முரமுரென்று புளித்திருந்த மோரும், என்று புல்வேளூர்ப் பூதன், அக்கறையுடன் தனக்குப் படைத்த விருந்து எல்லா உலகங்களினதும் பெறுமதியுடையது என்கிறாள் ஔவை. மிகச் சாதாரணமான சாப்பாடாக இருந்தாலும் அதனை எந்தவித எதிர்பார்ப்புக்களுமின்றி பாசத்துடன் பரிமாறிய புல்வேளூர்ப்பூதனைக் பெருமைப்படுத்துமுகமாகவே ஔவை இப்பாடலைப் பாடியுள்ளார் எனக் கருதமுடியும்.

அன்றும் இன்றும் மலிவாகக் கிடைக்கும் காய்கறிகளுள் ஒன்றான கத்தரிக்காயின் சிறப்புக்கள் இன்று மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுகளின் மூலம் மேன்மேலும் அறியப்பட்டு வருகின்றன.

இரத்தத்தில் உள்ள கெட்ட கொலெஸ்ரெரோலைக் குறைக்கும் குணம் கத்தரிக்காயில் இருப்பதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. வைட்டமின் A, B1, B2, C என்பன கத்தரிக்காயில் உள்ளன. குறிப்பாக வைட்டமின் P கத்தரிக்காயில் செறிந்து காணப்படுகின்றது. ஒரு கிலோ கத்தரிக்காயில் 1200 மில்லிகிராம் வைட்டமின் P இருப்பதால் நல்லுணவுகளில் இது ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

வைட்டமின் P என்பது உண்மையில் ஒரு வைட்டமின் அல்ல. பல்வேறு நிறங்களையுடைய காய்கறிகளில் செறிந்து காணப்படும் பிளேவொனொய்ட்ஸ் (Flavonoids) எனப்படும் ஒருவித இரசாயனப்பொருள்களைக் குறிக்கவே வைட்டமின் P என்னும் பெயர் முன்னர் பயன்பட்டு வந்துள்ளது.

மனிதக்கலங்களுக்கிடையிலான ஒட்டுதலைப் பேணவும் கலத்தின் நுண்குழாய்கள் (microtubules) சிதைவடைவதைத் தடுக்கவும் இந்த வைட்டமின் P உதவுகின்றது.

முதியோர்களுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடிய காய்கறிகளுள் கத்தரிக்காயும் ஒன்று. இவர்கள் கத்தரிக்காயைச் சாப்பிட்டு வருவதன்மூலம் இரத்தக்குழாய்கள் தடிப்படைதலைத் தவிர்ப்பதுடன் கொலெஸ்ரெரோலையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும். இரத்தக்குழாய்களை மென்மைப்படுத்தி இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் கத்தரிக்காய் உதவுகின்றது.

இரத்தவாந்தியைக் கட்டுப்படுத்தக் கத்தரிக்காய் உதவுகின்றது. மேலும் இரத்தத்தில் அசாதாரணமான அளவில் கொழுப்புக்கள் சேர்வதையும் கத்தரிகாய் தடுக்கின்றது. மூட்டுக்களில் யூரிக் அமிலம் (uric acid) படிவதால் ஏற்படும் கீல் வாதத்தால் (gout) பாதிக்கப்பட்டோருக்கும் கத்தரிக்காய் நல்லது.

ஒட்சியெதிர்ப்புக் குணங்கள் கத்தரியின் தோலில் உள்ளன. கூடவே நார்ச்சத்து, பொட்டாசியம், மக்னீசியம் என்பனவும் இக்காயில் உள்ளன. கத்தரிக்காய் தோலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றது. கூந்தல் வளர்ச்சியையும் ஊக்குவிக்கின்றது.

புற்றுநோய்எதிர்ப்புக் குணங்களைக் கொண்ட பதார்த்தங்கள் கத்தரிக்காயில் உள்ளன. கத்தரியில் உள்ள சில இரசாயனங்கள் உணவுத் தொகுதியில் புற்றுக்கள் பெருகுவதைத் தடுக்கின்றது. ஏனைய கலங்களைப்போலவே புற்றுநோய்க்கலங்களின் வளர்ச்சிக்கும் பெருக்கத்துக்கும் தொடர்ச்சியான இரத்தஓட்டம் தேவைப்படுகின்றது. இந்த இரத்தம் கிடைக்காவிட்டால் புற்றுக்கலங்கள் பெருகமுடியாது. புற்றுக்கலங்களுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லப் புற்றுக்களால் இரத்தக்குழாய்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இத்தகைய குழாய்கள் உருவாவதைத் தடுக்கும் குணங்கள் (antiangiogenic properties) கத்தரிக்காய்க்கு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாகக் கத்தரிக்காயின் தோலில் உள்ள 'நாசுனின்' (nasunin) என்னும் ஒட்சியெதிர்ப்புப் பொருள் கத்தரிக்காயின் இந்தக்குணத்துக்குப் பிரதான காரணமாக உள்ளது.



கத்தரிக்காயை எண்ணெயில் வதக்கிச் செய்யும் பிரட்டல்கறி சுவை மிகுந்தது. பண்டைக்காலம் தொட்டுக் கத்தரிக்காய் எண்ணெய்ப் பிரட்டல் பலராலும் விரும்பப்படும் ஒரு கறியாக இருந்து வந்துள்ளது. இந்தக் கத்தரிக்காய்ப் பிரட்டல் கறிபற்றிக் காளமேகப்புலவரும் பாடியுள்ளார்.

**கரிக்காய் பொரித்தாள் கன்னிக்காய் தீய்த்தாள்**
**பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணினாள் உருக்கமுள்ள**
**அப்பக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள் அத்தைமகள்**
**உப்புக்காண் சிச்சீ உமி.**

'கரி' என்பது யானையைக்குறிக்கும். யானைக்கு மற்றுமொரு பெயர் அத்தி. எனவே கரிக்காய் என்பது அத்திக்காயைக் குறிக்கின்றது. கன்னிக்காய் என்பது வாழைக்காயைக் குறிக்கும். 'பரி' என்றால் குதிரை. குதிரைக்கு மற்றுமொரு பெயர் மா. எனவே பரிக்காய் என்பது இங்கே மாங்காயைக் குறிக்கின்றது. கத்தரிக்காயின் மற்றுமொரு பெயர் அப்பக்காய்.

"என்மேல் பாசமுள்ள அத்தைமகள் எனக்காக அத்திக்காயைப் பொரித்தாள், வாழைக்காயைத் தீய்த்தாள், மாங்காயில் பச்சடி செய்தாள். கத்தரிக்காயில் எண்ணெய்ப்பிரட்டல் செய்தாள். என்னசெய்வது உப்பைத்தான் கொஞ்சம் கூடப்போட்டுவிட்டாள்" என்கிறார் காளமேகம்.

கத்தரிக்காய் எண்ணெயை உறிஞ்சிவைத்திருக்கும் குணமுடையது. எண்ணெயுடன் கறியில் சேர்க்கப்படும் சரக்குகளின் சத்துக்களும் கத்தரிக்காயால் உறிஞ்சப்படுமாதால் எண்ணெய்ப் பிரட்டல்கறி மிக்க சுவையாக இருக்கும். எனினும் எண்ணெயில் பொரித்துச் சமைப்பது கத்தரிக்காயால் பெறக்கூடிய நன்மைகளைக் குறைத்து விடுகின்றது என்கிறார்கள் ஆய்வாளர்கள். எண்ணெய்க் கொழுப்பு அதிகம் சேராத முறையில் கத்தரிக்காயை அவித்துச் செய்யும் கறி ஆரோக்கியமானது என்பது இவர்களது கருத்து. கத்தரிக்காய் அவியலுடன் வெங்காயம் நல்லெண்ணை சேர்த்துச் சாப்பிடுவதும் நல்லது என்கிறார்கள்.

பருவமடைந்த சிறுமிக்குக் கத்தரிக்காயுடன் நல்லெண்ணை சேர்த்து அழ அழச் சாப்பிடவைக்கும் எமது முன்னோரின் வழக்கத்தையும் இவ்விடத்தில் நினைவு கூருகின்றேன். எதிர்காலத்தில் பெண்களுக்கு வரக்கூடிய புற்றுநோய்களில் இருந்து தமது பிள்ளைகளைப் பாதுகாக்கப் பெற்றோர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுள் ஒன்றாகவும் இது இருக்கலாம். காரணமின்றி எமது முன்னோர்கள் இப்படியான ஒரு வழக்கத்தை ஏற்படுத்தியிருக்கமாட்டார்கள்.

கத்தரிக்காயில் சிறுநீரகக் கற்களை உண்டாக்கக் கூடிய ஒக்ஸலேற்றுகள் (oxalates) என்னும் இரசாயனங்கள் உள்ளன. சிறு நீரகக் கற்கள் தோன்றும் அபாயமுள்ளவர்கள் கத்தரிக்காய் உள்ளிட்ட ஒக்ஸலேற்றுக்கள் நிறைந்த உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.

ஒரு சிலருக்குக் கத்தரிக்காயால் 'அலேர்ஜி' எனப்படும் ஒவ்வாமை ஏற்படலாம். இவர்களுக்குக் கத்தரிக்காய் சாப்பிட்டவுடன் வாய், தொண்டை, உதடு என்பவற்றில் இலேசான அரிப்புத் தோன்றலாம். சிலருக்குத் தோல் அரிப்பு, முகம் சிவத்தல், தும்மல் போன்ற அலேர்ஜிக் குணங்களும் காணப்படலாம். கத்தரிக்காய் சாப்பிட்டவுடன் இக்குணங்கள் காணப்பட்டால் உடனே மருத்துவரை நாடவேண்டும். இத்தகையோர் கத்தரிக்காயை அடியோடு தவிர்ப்பது நல்லது.

ஊதா (purple), வெள்ளை கலந்த ஊதா, பச்சை, வெள்ளை, போன்ற பல்வேறு நிறங்களில் கத்தரிக்காய் கிடைக்கும். எனினும் எல்லாக் கத்தரிக்காய்களினதும் குணங்கள் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும். Eggplant, Brinjal, Aubergine என்பன கத்தரிக்காயின் ஆங்கிலப்பெயர்கள்.

**முனைவர் பால. சிவகடாட்சம்**



# வாரபலன்

**28.03.2021 - 02.04.2021**

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பஞ்சமாதிபதியான சுக்கிரன் சூரியனோடு சேர்த்துள்ளதால் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் ஓரளவிற்கு சிறப்பான பலன் உண்டு, தடைபட்ட காரியங்கள் இனிதே நடைபெறும். கொடுக்கல் வாங்கல்களில் இருந்த பிரச்சினை விலகும். பகைமை விலகி நட்புறவு பிறக்கும். தொழில்சார் பிரச்சினைகள் படிப்படியாக விலகும்.

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : ஏப்ரல் 1**

## ரிஷபம்

ரிஷபம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் நிதிநிலை சீராகும். நினைத்த காரியங்கள் அனைத்தும் நினைத்தபடி ஈடேறும். தடைப்பட்ட சுபகாரியங்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறும். புதிய கடன் தொல்லைகள் உருவாகும் வாய்ப்பு உண்டு. உடன்பிறப்புக்களால் சில மனக்கசப்பான விடயங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 28**

## மிதுனம்

மிதுனம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். உத்தியோக மாற்றங்கள் ஏற்படலாம். தொழில்வளர்ச்சி சிறப்பு பெரும். உடல்நலத்தில் கவனம் தேவை. மருத்துவச்செலவுகள் அதிகரிக்கும். பிறரை நம்பி காரியங்களில் வாய்ப்புக்களை இழக்காதீர்கள். புதிய தொழில் தொடங்குவதில் தாமதம் ஏற்படலாம்.

## கடகம்

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள்: மார்ச் 28, 29**

கடகம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால் காரியங்களில் வெற்றி பெறலாம். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையலாம். வருமானத்திற்கு ஏற்ப செலவினங்களும் இருக்கும். உறவினர்களுக்கிடையே சில சில மனக்கசப்புகள் வந்து மறையலாம். பூர்விக சொத்துக்களால் ஏற்பட்ட தடை எதிர்பார்த்த முடிவுக்கு வரும்.

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 31, ஏப்ரல் 1**

## சிம்மம்

சிம்மம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் காணி, நிலம், வீடு, ஆடை ஆபரணம் வாங்கும் கனவுகள் அனைத்தும் நனவாகும் காலம் இது. வருமானம் சிறக்கும். பொதுநலத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிர்பாராத வாய்ப்புக்களும் வந்து சேரும். புதிய தொழில் தொடங்கும் முயற்சிகளில் தடை ஏற்படலாம் இருப்பினும் தொழில் வளர்ச்சி சிறப்பாக அமையும்.

## கன்னி

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 28, 29 , ஏப்ரல் 1, 2**

கன்னி இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் வருமானங்கள் அதிகரிக்கும். வாய்ப்புக்கள் உங்களை தேடி வரும். தடைபட்ட சுபகாரியங்கள் இனிதே நிறைவுறும். உடல்நலத்தில் கவனம் தேவை. யாரையும் நம்பி வாய்ப்புக்களை இழக்காதீர்கள். ஆடை ஆபரண சேர்க்கை உங்களுக்கு மகிழ்ச்சியை தரப்போகின்றது. குலதெய்வவழிபாடு மேலும் நற்பலன்களை தரும்.

## துலாம்

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 30, ஏப்ரல் 1**

துலாம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் திடீர் தனவரவுகளும், எதிர்பாராத வெற்றிகளும் உங்களை சிறப்புடன் மகிழ்விக்கும். தொழில் வளர்ச்சி எதிர்பார்த்த வருமானத்தை தரும். புதிய பயணங்கள் உருவாகும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். சம்பள உயர்வு திருப்திகரமாக அமையும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

## விருச்சிகம்

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 28, 29**

விருச்சிகம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் சுபகாரியங்களால் செலவீனங்கள் அதிகரிக்கும். அதேபோல் செலவீனங்களுக்கு ஏற்ப வருமானங்களும் வந்துகொண்டே இருக்கும். பொதுநலத்தில் ஈடுபடுபவர்களுக்கு புதிய பதவிகளும் கிடைக்கும் வாய்ப்புஉண்டு . குடும்பத்தில் சுபகாரியங்களின் ஏற்பாடும் இனிதே முடிவுக்கு வரும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் ஏற்படலாம்.

## தனுசு

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 28, 29**

தனுசு இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் எதிர்பார்த்த காரியங்கள் வெற்றிபெறும் காலம் இது. தடைப்பட்ட திருமண வாய்ப்புக்கள் கைகூடலாம். தொழில்சார் பிரச்சினைகள் அகலும். பங்குதார வியாபாரங்களில் பொருளாதார நிலை அதிகரிக்கும். மாணவர்களின் கல்வி நிலை உயரும். சகோதர இணக்கம் மென்மேலும் பெருகும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : ஏப்ரல் 1**

## மகரம்

மகரம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் தடைகளை அகற்றி காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். நல்ல வாய்ப்புக்கள் உங்கள் தேடி வரும் காலம் இது. தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உத்தியோகத்தர் பிரச்சினைகள் விலகும். திடீர் உத்தியோக மாற்றங்களும் ஏற்படலாம். பூர்வீக சொத்து தகராறுகள் எதிர்பார்த்த பலனை தரும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக முடியும்.

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 28, 29, ஏப்ரல் 1**

## கும்பம்

கும்பம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் சிந்தித்து செயல்படுவது சிறப்பானதாக இருக்கும். சொத்துக்களின் மூலம் சில பிரச்சினைகளும் ஏற்படக் கூடும். முன்னேற்ற தடைகளும் ஏற்படலாம்.தொழில்சார் சில பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம். தந்தைவழி ஆதரவு பிறக்கும். மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம்.

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : மார்ச் 31, ஏப்ரல் 1**

## மீனம்

மீனம் இப்பொழுது மீனத்தில் சுக்கிரன் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்வதால் சில இழப்புக்களை எதிர்கொள்ள நேரிடலாம். தனவரவுகள் தாமதமாகலாம். தாய்வழி ஆதரவு உண்டு. சுபகாரியங்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. பிறரை நம்பி வாய்ப்புகளை இழக்காதீர்கள். மேலதிகாரிகளின் ஊடாக பல சலுகைகளை பெறுவீர்கள்.

**பணத்தேவையை பூர்த்தி செய்யும் நாட்கள் : ஏப்ரல் 1**

# என்றும் எமை வழிநடத்தும் நீர்வை பொன்னையன்

நீர்வை எங்களை விட்டுப் பிரிந்து விட்டார் எனத் தழுதழுத்த குரலில் தொலைபேசி மூலம் தகவம் தயாபரன் எனக்குத் தகவல் தந்தது நேற்றுப் போல் இருக்கிறது. அதற்குள் வருடம் ஒன்று ஓடி மறைந்து விட்டது. குடும்ப உறுப்பினர் ஒருவரின் இழப்பைப்போல் அச் செய்தி எமையெல்லாம் நிலை குலைய வைத்ததற்கும் அப்பால் கொரோனாவின் பரவல் தீவிரமாக அக் காலகட்டத்தில் இருந்ததால் அவரது இறுதிச் சடங்குகளில் கூட எம்மால் கலந்து கொள்ள முடியாது போனமையே எமைப் பெருஞ்சோகத்தில் ஆழ்த்தியது எனலாம்.

1996ல் 'புதிய பயணம்' எனும் எனது முதலாவது நூல் வெளிவந்த ஓர் சில நாட்களின் பின்னர் காவலூர் ராசதுரையுடன் என் அலுவலகம் தேடி வந்து எனைச் சந்தித்து தன் வாழ்த்தினைத் தெரிவித்த அன்றிலிருந்து அவர் மறையும் வரையிலான கால் நூற்றாண்டு காலமும் எம்மிடையேயான உறவு. நாளுக்கு நாள் வளர்ந்து குடும்ப நட்பாக பரிணமித்தது. ஒரு மூத்த எழுத்தாளன் என்ற பந்தா ஏதுமின்றி மிகவும் அந்நியோந்நியமாகப் பழகும் அவரின் பண்பு எந்தையின் அன்பிற்கு நிகராய் அமைந்து என் இலக்கிய வளர்ச்சி உத்வேகமளித்தது என்றால் அது மிகையாகாது.



நீர்வையின் முதலாவது சிறுகதைத் தொகுதியான "மேடும்பள்ளமும்' என் தந்தையாரின் புத்தக அலுமாரியில் இருந்ததில் பள்ளிக்கூடம் செல்லும் காலத்திலேயே அதை வாசித்திருக்கிறேன். செ. யோகநாதன், செ. கதிர்காமநாதன் ஆகியோருடன் இவர் இணைந்து வெளியிட்ட 'மூவர் கதைகள்' பற்றியும் அறிந்திருக்கின்றேன். இவை தவிர உதயம், பாதை வெட்கை போன்ற தொகுதிகளையும் தான் வெளிக்கொணர்ந்திருப்பதாகக் கூறி அவற்றினையும் எனக்கு வாசிப்பதற்காகத் தந்திருக்கின்றார். அந் நாட்களில் தான் அவரைப்பற்றி நானறியாத பல தகவல்களை அறிய முடிந்தது.

நீர்வேலியில் இராமலிங்கம் – இலட்சுமி தம்பதியினருக்கு 24.03.1930இல் பொன்னையா எனும் பெயருடன் மகனாகப் பிறந்த இவர் அத்தியார் இந்துக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட பின்னர், மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கல்லூரியில் தனது மேற்படிப்பை நிறைவு செய்து சில காலங்கள் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக சம்மாந்துறை முஸ்லிம் பாடசாலையில் பணியாற்றியுள்ளார். அதன் பின்னரே இந்தியா சென்று கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று பி.ஏ. பட்டதாரியானார். பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு 1957இல் நாடு திரும்பிய பின்னர் நீண்டகாலம் வேலை தேடி அலைந்து கிடைக்காது போகவே விவசாயத்தில் நாட்டங்கொண்டு சில காலங்கள் விவசாயியாகவே வாழ்ந்துள்ளார். 1969ஆம் ஆண்டிலிருந்து 1983 வரை அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

1947ஆம் ஆண்டளவில் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டு பல போராட்டங்களில் கலந்துகொண்டுள்ள நீர்வையை கல்கத்தாவில் இருந்த காலத்தில் அங்கு நிலவிய முற்போக்குச் சூழல் மேலும் மெருகிட்டது. ஆங்கில வாசிப்புக்களில் ஆர்வங்காட்டி தன் ஆங்கில அறிவை இவர் விருத்தி செய்து கொண்டதும் கல்கத்தாவில் இருந்த காலகட்டங்களில்தான். இதுவே பின்னர் மொழிபெயர்ப்பாளராக இவர் பணிநிலை கொள்ள அடித்தளமிட்டது எனலாம்.

1957ல் தனது 27ஆவது வயதில் 'பாசம்' எனும் பெயரில் நீர்வை எழுதிய முதலாவது சிறுகதை ஈழநாட்டில் வெளியானது. நீர்வையை அடையாளப்படுத்திய 'மேடும் பள்ளமும்' இவர் சிருஷ்டித்த இரண்டாவது படைப்பாகும். இக்கதை சிற்பியின் கலைச்செல்வியில் வெளியாகிறது. தொடர்ந்து 'தமிழன்' சஞ்சிகையில் நீர்வையின் பல கதைகள் தொடர்ச்சியாகப் பிரசுரமாகின. 1960களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் நீர்வை தன்னை இணைத்துக் கொண்டார். 1961 இல் பிரேம்ஜி ஞான சுந்தரனின் முன்னுரையுடன் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'மேடும் பள்ளமும்' வெளிவந்தது.

1996 இலிருந்து விபவி மாற்றுக் கலாசார மையத்தின் தமிழ் இணைப்பாளராக நீர்வை செயற்பட்டு வந்தார். அந்நாட்களில் தான் எனது கொழும்பு – மீரா பதிப்பகமும் ஆரம்பமாகி செயற்பட்டுக் கொண்டிருந்தது. மீரா பதிப்பகத்தினூடாக தனது சில நூல்களை வெளிக்கொணர நீர்வை விரும்பினார். அந்த வகையில் முதலில் அவரது முதற் தொகுப்பான மேடும்பள்ளமும் எனும் நூலின் மறுபிரசுரத்தினை வெளிக்கொணர வேண்டுமென நாள் அவாவுற்ற வேளை அதற்கு மறுப்பேதுமின்றி உடன்பட்டார். தொடர்ந்து தினக்குரல் பத்திரிகையில் தொடராக அவர் எழுதிவந்த உலகத்து நாட்டார் கதைகளைத் தொகுத்து பெருநூலாக 2001 இல் வெளியிட்டோம். பரீட்சார்த்தமாக வெளிக்கொணரப்பட்ட அந்நூலிற்கு மிகப் பெரிதளவில் வரவேற்பிருந்தது. அதனால் அடுத்தடுத்து மேலும் இரு பிரசுரங்களை மிக குறுகிய காலத்திற்குள்ளேயே அறுவடை செய்ய நேர்ந்தது. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்கவராக நீர்வை விளங்கியதால் அவர் மொழிபெயர்த்து மீள எழுதிய உலகத்து நாட்டார் கதைகளும் வளமானதாக அமைந்திருந்தன.

தொடர்ந்து நீர்வை எழுதிய பதினைந்து கட்டுரைகளைத் தொகுத்து கொழும்பு – மீரா பதிப்பகத்தினூடு 'நாம் ஏன் எழுதுகின்றோம்?" எனும் நூலினை 2004 செப்ரெம்பரில் வெளிக்கொணர்ந்தோம். இந்நூல் உள்ளடக்கிய கட்டுரைகளில் இடது சாரிச் சிந்தனைகளையும் முற்போக்கு இலக்கியக் கேட்பாடுகளையும் நீர்வை மிக விரிவாக எழுதியிருந்தார். அடுத்து நீர்வையின் புதிய சிறுகதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட நான் விரும்பினேன். அதற்கு இசைந்து நூலுருப் பெறாதிருந்த புதிய கதைகள் சிலவற்றைத் தந்தார். 'ஜென்மம்' என்ற மகுடத்தில் கொழும்பு – மீரா பதிப்பகத்தின் 56 ஆவது வெளியீடாக அதை வெளிக்கொணர்ந்தோம்.

அதன் பின்னர் முற்போக்கு எழுத்தாளரான சமீமுடன் இணைந்து நீர்வை, முற்போக்கு இலக்கியப் பேரவையினை உருவாக்கி அதனூடாக தனது பல நூல்களை வெளிக்கொணர்ந்தார். இப்பேரவையினூடும் பின்னர் தனியாகவும் தன் பிற்காலச் சிறுகதைகளைத் தொகுத்து நிமிர்வு, காலவெள்ளம் நினைவுகள் அழிவதில்லை, உறவு, பாஞ்சாள், வந்தனா, வங்கக்கதைகள் போன்ற மகுடங்களில் நூல்களை அறுவடையாக்கினார். மொத்தம் பன்னிரு சிறுகதைத் தொகுதிகளில் நீர்வையின் 125 சிறுகதைகள் உள்ளடங்கியிருப்பதாக அறியமுடிகிறது. இவரது பிற்பட்ட காலக் கதைகளில் சில வசன கவிதைப் பாங்காக அமைந்திருந்தன எனவும், நீர்வையின் படைப்பாளுமையின் ஆழத்தைக் காட்டும் கலையம்சம் நிறைந்த கதைகள் முதற்தொகுதியான மேடும் பள்ளமும் எனும் நூலிலேயே அடங்கியிருந்தன எனவும் விமர்சகர்கள் தம் கருத்துக்களை முன்வைப்பர்.

சிறுகதை, நாட்டார் கதைகள், கட்டுரைத் தொகுப்புகளுடன் 'நினைவலைகள்' எனும் நூலினையும் நீர்வை அறுவடை செய்திருந்தார். இந்நூல் நீர்வையின் வாழ்வியலினூடு அவரின் இலக்கிய செயற்பாடுகளையும் அனுபவங்களையும் விரிவாகவும் விஸ்தாரமாகவும் விளக்கி நிற்கும் ஒரு சுயசரிதைப் பாங்கான பதிவெனலாம். இலக்கிய ஆய்வாளர்களுக்கு உசாத்துணைக்குரிய நூலாக இது விளங்க வல்லது.

நீர்வை பல நூல்களை தொகுத்தும் வெளியிட்டுள்ளார். ஈழத்து சமகால இலக்கியம், முற்போக்கு இலக்கிய சிறுகதைச்சுவடுகள், முற்போக்கு இலக்கிய கவிதைச்சுவடுகள், ஈழத்து முற்போக்கு சிறுகதைகள், இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர் போன்றன அவற்றுள் சிலவாகும்.

விபவி மாற்றுக் கலாசார மையத்தில் இணைப்பாளராக நீர்வை பணியாற்றிய காலங்களில் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பல சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை அகில இலங்கை ரீதியில் நடாத்தி இருக்கின்றார். நீர்வையால் இனங்காணப்பட்டு ஊக்குவிக்கப்பட்ட பலர் இன்று பிரல எழுத்தாளர்களாக இலங்கையில் கோலோச்சிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்த போட்டிகளுக்கெல்லாம் தகவல் இராசையா மாஸ்டர், டாக்டர் எம்.கே. முருகானந்தன், வசந்தி தயாபரன், முதலானோருடன் என்னையும் பல தடவைகள் நடுவர்களாக அழைத்திருக்கின்றார். "விபவி வாயிலாக அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் மாற்றுப் பண்பாட்டினூடாக வர்க்க முளைப்பாட்டை முன்னெடுப்பதற்காக பணியாகவும் அமைந்தன" என ஓரிடத்தில் "ஞானம்" ஞானசேகரன் குறிப்பிட்டிருப்பதையும் இவ்விடத்தே மனங்கொள்ளல் தகும்.

"மேடும் பள்ளமும்" எனும் சிறுகதைத் தொகுப்பு 1961ஆம் ஆண்டின் சாகித்திய மண்டலத் தேர்வில் சிறந்த தொகுப்பாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பினும் அதற்குப் பரிசு கிடைக்காது போனதனால் பின்னர் எப்போட்டிகளுக்கும் நீர்வை தன் நூல்களை அனுப்பிவைப்பதில்லை.

ஆயினும் கொழும்புப் பல்கலைக்கழகம் 1998இலும் பேராதனைப் பல்கலைக்கழகம் 2009இலும் இலக்கிய விருதுகள் வழங்கி அவரது பணிகளைக் கௌரவித்திருந்தன என்பதும், அத்துடன் இவையாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் இலங்கை அரசின் இலக்கியத்துக்கான உயர் விருதான 'சாகித்யரத்னா' விருதினை 2017 இல் நீர்வை பொன்னையன் பெற்றிருந்தார் என்பதும் ஈண்டு பதிவுசெய்யத்தக்கது. இவையாவும் இவரது முற்போக்கான எழுத்துக்குளுக்கு மட்டுமல்ல நீர்வையின் நிலையான கருத்தியலிற்கும் கொடுக்கப்பட்ட விருதுகள் எனத் தாராளமாகவே கொள்ளலாம்.

பெரும் பதவிகளையெல்லாம் நிராகரித்து தன் கருத்தியல் நிலை நின்ற நீர்வை தான் வாழ்ந்த அகவை தொண்ணூறு வரை எழுதிக்கொண்டிருந்தார் என்பது மெச்சுதற்குரியதாகும். "எப்பொழுதும் எழுதிக்கொண்டு இருங்கள்" என்று கூறியே அவர் எமையெலாம் வழிநடாத்தி வந்தார் என்பதும் "விடியட்டும்பார்போம்!" எனும் எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதிக்கு தன் அணிந்துரையால் அணி சேர்த்திருந்தார் என்பதும் இவ்விடத்தே நினைவில் கொள்ளத் தக்கது.

நீர்வை மறையவே இல்லை. உள்ளிருந்து என்றுமவர் எமை வழிநடாத்திய வண்ணமே உள்ளார் என்பதை மெய்!

புலோலியூர்
ஆ. இந்திரத்தினவேலோன்

## பருப்பும் செருப்பும்... (30 ஆம் பக்கத் தொடர்)

வாழ்க்கைத் தரம் மேம்பாடடைதல் என்பது பொருளாதாரம், கல்வி, ஆரோக்கியம் ஆகிய மூன்றையும் குறிக்கும். அவ்வாறு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடடைய அத்திட்டம் உதவாது போனால் அதை அபிவிருத்தித் திட்டம் எனக் கொள்ள முடியாது."

"கிராம வீதிகள் மற்றும் பெருந்தெருக்களை புனர் நிர்மாணம் செய்தல், மதகுகள் , கழிவு நீர் கால்வாய்கள் அமைத்தல் போன்றவற்றைச் செய்து விட்டு அபிவிருத்தித் திட்டங்கள் எனக் கூறுகிறார்களே?"

"அவர்கள் கூறலாம். ஆனால் அவை அபிவிருத்தித் திட்டங்கள் அல்ல. உட்கட்டமைப்புகளை மேம்பாடு அடையச் செய்தல். மக்களின் நீண்ட கால தேவையொன்றை நிறைவேற்றியதாகவும் கொள்ளலாம்."

கடற்கரையை அண்டிய வீதியில் பலர் நடை பயின்றனர். சிலர் தொங்கோட்டம் ஓடினர். கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதற்காக தோணிகள் தள்ளப்பட்டன. மெது மெதுவாக இருள் கௌவ, நிலவு எட்டிப் பார்க்கத் தொடங்கியது. "அந்தக் காட்சியைப் பாருங்களேன்" என்றான் உமறு யாரையோ நோக்கி சுட்டு விரலை நீட்டியவாறு.

முன்னாள் பா.உ. ஒருவர் தனது பெருத்த தொந்தியைத் தூக்கிக்கொண்டு மெதுமெதுவாக தொங்கோட்டம் ஓடிக் கொண்டிருக்க, அவருக்குப் பின்னால் துப்பாக்கி ஏந்திய பொலிஸ்காரர் இருவர் பாதுகாப்புக்காக ஓடிக்கொண்டிருந்தனர். காட்சியைப் பார்த்தவர்கள் குபீர் எனச் சிரித்தனர்.

"ஏன் சிரிக்கிறீங்க? இது நம்ம நாட்டின் தலையெழுத்து. சமுகத்துக்கு சேவை செய்வதாக முன் வருபவன், தன்னை மக்கள் தலைவன் எனக் கூறிக்கொள்பவன் தேகப்பயிற்சிக்காக நடக்கும்போது கூட பொலிஸ்காரர்களை பாதுகாப்புக்காக வைத்துக்கொள்கிறான். போலிஸ்காரர்களுக்கான வேதனம் பொதுமக்களாகிய நாம் கொடுக்கவேண்டியுள்ளது. இந்தக் கருமத்தை யாரிடம் சொல்லி அழலாம்?" என்றார் வேதனை கலந்த குரலில் மக்கஎன்பன்.

"அது சரிய்யா நம்ம நெய்னாகுடித் தொகுதியிலே எந்தக் கட்சி வெல்லும் என நினைக்கிறீங்க? பருப்பா அல்லது செருப்பா?" சிரித்தவாறே உமறு கேட்டான்.

"மக்கள் தன்மானம் இழந்து கை நீட்டியவாறே வாழவேண்டுமென நினைத்தால் பருப்பு வெல்லும். தமது வாழ்க்கை நிலை அபிவிருத்தியடைய வேண்டும் என மக்கள் நினைத்தால் செருப்பு வெல்லும். பொறுத்திருந்து பார்ப்போம்."

அவர்கள் தேர்தல் முடிவை எதிர்பார்த்திருந்தனர். பொதுத் தேர்தல் நடைபெற்ற மறுநாள் காலையில் ஜனநாயக மறுமலர்ச்சிக் கட்சியை விட ஜனநாயக சீர்திருத்தக் கட்சி கூடிய ஆசனங்களைப் பெற்றுள்ளதாக இறுதி அறிவிப்பு கூறிற்று. பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சிக்கு வாக்களித்த மக்கள் இனிமேல் பிரதி மாதமும் இலவசமாக ஒரு தொகைப் பருப்பு தமக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கையில் சீனவெடிகளை கொளுத்தியும், பாற்சோற்றுடன் கட்ட சம்பலுக்குப் பதிலாக பருப்புக் கறி கொடுத்தும்□.. வெற்றியைக் கொண்டாடினர்.

சில நாட்களில் ஜ.சீ.கட்சி சில உதிரிக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியமைத்தது. ஆட்சியமைத்த கையுடன் கட்சித் தலைவர் ஊடகவியலாளர்களின் கூட்டமொன்றை நடாத்தினார். கூடிய சீக்கிரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படப்போகும் இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் இலவச பருப்பு விநியோகம் தொடர்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்போவதாகத் தெரிவித்தார். நெய்னாகுடியின் முச்சந்தியிலுள்ள சுல்தான் ஹோட்டலுக்கு சமீபமாக நடைபெறும் மாலை நேர சந்தையில் பலர் பொருட்கள் வாங்குவதற்காக அலைந்தனர். ஹோட்டலின் ஒலிப்பெட்டியினூடாக பெரிய சப்தத்தில் சினிமா பாடல்கள் ஒலித்தன. அப்போதுதான் இடைநிறுத்தற் செய்தியாக அச்செய்தி வானொலியில் ஒலிபரப்பாகியது. "கடந்த தேர்தலுக்கு முன்னர் வாக்களித்தவாறு மாதாந்தம் மூவாயிரXம் ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பிரதி மாதமும் தலா ஒரு கிலோ பருப்பு இலவசமாக வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது."

மீண்டும் அறிவிக்கப்பட்ட அச்செய்தியைக் கேட்ட பலர் ஆளையாள் ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டனர்.

"பிச்சைக்காரன் கூட ஒரு நாளைக்கு நூறு ரூபா வருமானம் பெறுவானே. அப்படியிருக்க யாருக்கு இவங்க பருப்பு கொடுக்கப் போறாங்க?"

பலர் இக்கேள்வியைக் கேட்டவாறே ஹோட்டலுக்கு முன்னால் கூடினர். அரசாங்கம் தங்களை ஏமாற்றிவிட்டதாக ஆதங்கப்பட்டனர். சந்தையில் வாங்கிய பொருட்களுடன் சற்றுத் தூரத்தே நிறுத்தப்பட்டிருந்த இற்றுப்போன தனது சைக்கிளை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்த உமறை அவனது நண்பனொருவன் இடைமறித்தான். வானொலியில் சற்று முன் கேட்ட செய்தியைச் சொன்னான்.

"என்னடா மச்சான் அரசாங்கம் இப்படி ஏமாத்திப் போட்டுது?" என்றான்.

"இலவசமா பருப்புக் கறியும், பருப்பு வடையும் தின்ன ஆசைப்பட்ட அத்தனை ஏமாளிகளினதும் வாய்களில பருப்புடா!" என உரத்த சப்தத்தில் கூறிவிட்டு உமறு நகர்ந்தான்.

## தோணிச் சட்டை... (25 ஆம் பக்கத் தொடர்)

வீடு உடைக்கும்வரை இருந்தது. அதன் பக்கத்துக் கை மரத்தில் ஊஞ்சல் தொங்கும், அதில் பால் டின்களை முடிந்து நிலத்தில் அரைக்க விட்டு எழும் ஓசையில் தூங்கியிருக்கின்றேனாம். அந்த வீட்டின் சுவர்களில் ஊஞ்சல் பலகை முட்டி முட்டி காலப் போக்கில் பல்லு விழுகின்றமாதிரி கல்லுகளும் விழுந்து தொங்கித் தெரிந்தன. அப்போதும் என் அழுகை அடங்காத நிலையில் கால்களை நீட்டி என்னை மேலே வளர்த்தி இருகைகளிலும் ஏந்தி இடமும் வலமுமாக ஆட்டி நித்திரைக்கு வழி செய்வார். அவர் ஒவ்வொரு அசைவிலும் ஓர் இயல்பான நிதானமும் நேர்த்தியுமிருந்தது. பின்னாளில் என் உடல் குறிப்புணர்ந்து ஆரோக்கியம் பேணியிருக்கிறார். உம்மாவை விடப் பெரியம்மாவின் கம்மிய குரல் எழுப்பும் தாலாட்டில் நான் கண் அயர்வதாக அறிந்து வைத்திருக்கிறேன். மூன்று நான்கு வயதுகளில் நாயோ நரியோ எங்கிருந்தோ அவை எழுப்பும் ஊளைச் சத்தத்தில் உடம்பு பதைபதைத்து, அதற்கு இணையாகச் சில் வண்டுகள் விட்டுவிட்டு ரீங்காரமிடும் அமானுக்ஷ்ய தன்மையை உணர்ந்திருக்கிறேன்..

சந்தோஷம் மிகுதியானால் எனது வலது கைவிரலின் சுட்டுவிரலை உம்மா தன்நாசியின் அருகே வைத்துக் கதை கேட்பதாகக் கூறுவார். தூக்கத்தில் முகம் மலர்ந்து சிரிக்கின்றபோது வானவர்கள் பூக்காட்டுவதாகப் பேசிக்கொள்வார். எனக்கு முதன் முதலில் மல் துணியில் தைத்து அணிவித்த கையில்லாச் சட்டையைப் பாதுகாத்து வைத்திருந்தார். பால் வகையிலும் கௌ அன்ட் கெட், நெஷனல் றை மில்க், க்ளிம், சன்சைன், புரோட்டின் மில்க் என வந்தாலும் அன்று பால் முடிந்து விட்டதால் வாப்பா அவசரத்துக்கு நூறு ரூபாய் பெறுமதியான மரிக்கொழுந்து அத்தரை வெறும் இருப்பது ரூபாய்க்குக் கொடுத்துவிட்டுப் பால்மா வாங்கி வந்ததாக ஒரு கதை சொல்லுவார்.

Repeat Your Ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

BE BETTER INFORMED!

News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

## விலைமனு கோரலுக்கான அறிவித்தல்

பிளெண்டி பூட்ஸ் (தனியார்) நிறுவனம் மூலம் செயற்படுத்தப்படுகின்ற விவசாய வர்த்தக மதிப்புச் சங்கிலி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கலுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்த செயற்திட்டம் அரச அனுசரணையுடன் எமது நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

| வரிசை இலக்கம் | உருப்படி விபரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 01 | பல் செயற்பாட்டு இயந்திரம் Multi-Functional Machine (Intercultivator) | 2750 |
| 02 | விதை நடுதல் மற்றும் உரம் இடும் உபகரணம் (Manual Seeder Cum Fertilizer Applicator) | 2750 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மூலம் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத 500 ரூபா விலைமனுக் கட்டணத்தை செலுத்தி விபரக்குறிப்பு மற்றும் குறித்த ஆவணங்களை (கேள்வி ஆவணம்) பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 2021 ஏப்ரல் மாதம் 08 அன்று மு.ப. 10.00 வரை என்பதோடு முத்திரை பொறிக்கப்பட்ட அனைத்து விலைமனுக்களும் கீழுள்ள முகவரிக்கு அனுப்புவதற்கு அல்லது நிறுவன வளாவில் வைக்கப்பட்டிருக்கும் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விலைமனுக்கள் 2021 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு திறப்பது இடம்பெறுவதோடு அனைத்து வழங்குநர்களும் குறித்த மாதிரிகளையும் எடுத்துக்கொண்டு அன்றைய தினத்தில் வருகை தருவது அவசியமாகும். தாமதித்து கிடைக்கின்ற கேள்விமனுக்கள் (விலைமனு) நிராகரிக்கப்படும் என்பதை கருத்தில்கொள்ளவும்.

மேலதிக விபரங்களை 081 500 44 00/ 081 24 20 230 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் கேட்டறிந்துகொள்ள முடியும்.

பணிப்பாளர்
பிளெண்டி பூட்ஸ் (தனியார்) நிறுவனம்
ஜனசவிகம,
பல்லேகலை.

## இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவை

**திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு**

# வெற்றிடங்கள்

இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவையானது அரசினால் நிதி அளிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று என்பதோடு அது நாட்டில் அரச துறை விஞ்ஞானிகளுக்கு நிதி உதவி வழங்குகிறது.
தேசிய ஆராய்ச்சி பேரவையினால் (NRC) பின்வரும் பதவிக்காக தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தலைமை நிறைவேற்று அதிகாரி – HM 2 -1 பதவி

தொழில் விபரம்: தேசிய ஆராய்ச்சி பேரவையின் நிர்வாகம் மற்றும் நிதி விவகாரங்கள் ஆகிய அனைத்து செயற்பாடுகளுக்காகவும் பொறுப்பாக மற்றும் பொறுப்புக்கூறுபவராக இருப்பார். அவர் பொது வழிகாட்டலின் கீழ் தேசிய ஆராய்ச்சி பேரவையின் உத்தியோகபூர்வ அடைவுகள் மற்றும் இலக்கை தொடர்வதில் சிறந்து விளங்குவதற்காக தேசிய ஆராய்ச்சி பேரவை ஊழியர்களை ஊக்குவித்தல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்கல் மற்றும் பேரவை மூலம் வழங்கப்படக்கூடிய பேரவையின் செயற்பாடுகள், அதிகாரங்களை செயற்படுத்தல் மற்றும் பேரவையின் செயற்பாடு, செயல்திறனை கையாளுதல்.

**தகைமைகள்:**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் விஞ்ஞானம்/ விவசாயம்/ வர்த்தக நிர்வாகத்தில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் முகாமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் கூட்டு அங்கத்துவம்

**மற்றும்**

2. முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம். அதில் முதல் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக ஸ்தாபனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தடப்பதிவு உடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

3. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் விஞ்ஞானம்/ விவசாயம்/ வர்த்தக நிர்வாகம் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டம்

**மற்றும்**

4. நிரூபிக்கப்பட்ட களப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம் மற்றும் முதல் பட்டம் பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் முகாமைத்துவ அனுபவம்.

**வயது:** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
**சம்பள அளவு:** HM 2 – 1 – (ரூபா 91,645 – 2,700x12 – 124,045)

**மேலுள்ள பதவிக்கு பொருந்தும் ஏனைய நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
4. நியமன அதிகாரி மூலம் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
5. இந்த நியமனம் ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) உரித்துடையதாக நிரந்தரமானதாகும். 2016 இன் 11 ஆம் இலக்க தேசிய ஆராய்ச்சி பேரவை சட்டத்தின்படி, அவர் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து கணக்கிடப்பட்ட ஐந்து ஆண்டு காலம் ஒன்றிற்கானதாக இந்த நியமனம் அமையும். தலைமை நிறைவேற்று அதிகாரி மீண்டும் நியமிக்கப்படாவிட்டால், அவர் தலைமை நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்னரான காலத்தில் கூறப்பட்ட சட்டத்தின் மூலம் ஒரு நிறுவன நிர்வாகம் ஒன்றின் உழியர் குழு உறுப்பினராக இருந்திருந்தால், அவர் தனது அறுபதாவது வயதை பூர்த்தி செய்யாத பட்சத்தில் அவரது நிலையான பதவியை நிறுவனம் திரும்ப வழங்கும்.
6. தேசிய ஆராய்ச்சி பேரவையின் நிர்ணயிக்கப்பட்ட பதவிக்கு பொருந்துகின்ற ஏனைய நலம்சார் கொடுப்பனவுகள். (வாகனம் அல்லது வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தொலைத்தொடர்பு கொடுப்பனவு)
7. விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் பிறப்புச் சான்றிதழ், ஏனைய தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் கையொப்பம் இடப்பட்ட தமது விண்ணப்பங்களை 2021 ஏப்ரல் 20 அன்று அல்லது அதற்கு முன்னர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு "தலைவர், தேசிய ஆராய்ச்சி பேரவை, 120/7, வித்யா மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால்/ விரைதூதர் மூலம் அனுப்புதல் வேண்டும்.
8. கொவிட்-19 தொற்றுடன் தொடர்புபட்டு தபால்/ விரைதூதரில் ஏற்படக்கூடிய தாமதத்தை கருத்தில் கொண்டு சரியான நேரத்திற்கு சமர்ப்பிப்பதை உறுதி செய்வதற்கு admin@nrc.gov.lk இற்கு சுயவிபரக் கோவையின் ஸ்கேன் பிரதி ஒன்றை மின்னஞ்சல் செய்தல் வேண்டும். சுயவிபரக் கோவையின் அனைத்துப் பக்கங்களிலும் அபேட்சகர் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும்.
9. அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளின் அதிகாரிகளது விண்ணப்பங்கள் தமது குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. மேலுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரம் www.nrc.gov.lk என்ற தேசிய ஆராய்ச்சி பேரவை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**தலைவர்**
**தேசிய ஆராய்ச்சி பேரவை**
**120/7, வித்யா மாவத்தை**
**கொழும்பு 07**
**தொ.: 011 – 2675176 தொலைநகல்: 011 – 2675136**
**மின்னஞ்சல்:** admin@nrc.gov.lk

## முகக்கவசங்கள் விற்பனைக்கு (Surgical Face Mask)

99% பக்டீரியா மற்றும் வைரஸ்களிலிருந்து பாதுகாக்கும் (Melt Blown Fabric) பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட Bureau Veritas மற்றும் NMRA அங்கீகரிக்கப்பட்ட முகக்கவசங்கள் குறைந்த விலைக்கு விற்பனைக்கு.

*மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்.*

074- 14 355 79

விற்பனை மேலாளர்,
பிரஎம் ஹெல்த்கேர் (பிரைவேட்) லிமிடெட் ஹோமகம
மின்னஞ்சல்: marketing@thermosl.com keneth@thermosl.com

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

யாழ்ப்பாணத் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

## விண்ணப்பக் கோரல்

யாழ் பல்கலைக்கழக கல்லூரியினால் பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி

பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன்

அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது

2021 மார்ச் மாதம் 28 ம் திகதி (Sunday observer) சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு, பல்கலைக்கழக வலைதளத்தினூடாக பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

www.univotec.ac.lk

## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**(2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு 18க்கு கீழ் வெளியிடும் பொது அறிவித்தல்)**

**2020 ஒகஸ்ட் 17ஆம் திகதி பரிமாற்ற உரிமதாரர் (இலங்கை மின்சார சபை) வலையமைப்பில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற மின்சார செயலிழப்பு தொடர்பான பகிரங்க விசாரிப்பு**

பரிமாற்ற உரிமதாரர் வலையமைப்பில் (இலங்கை மின்சார சபை) நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற மின்சார செயலிழப்பு தொடர்பில் 2020 ஒகஸ்ட் 17ஆம் திகதி பகிரங்க விசாரிப்புகேட்கும் கூட்டமொன்றை நடத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்தது.

**மின்சார செயலிழப்பின் விளைவாக மொத்த மின்சக்திக்கு தேவையான மின்சாரத்தை வழங்க முடியாததால் 27.5 ஜிகாவோட் மின்சக்தியை 4 பில்லியன்** மதிப்பிடப்பட்ட **செலவுக்கு இணையான இழப்பும்** பின்னர் தோல்வி காரணமாக கூடுதல் விளைவு இழப்புகளும் அடங்கும். சமூக பொருளாதார தாக்கங்களை மட்டுப்படுத்தல் மற்றும் இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் இடம்பெறுவதை தவிர்ப்பது குறித்த பொருத்தமான பரிந்துரைகளை பெறும் வகையில் பொதுமக்கள் கருத்து கேட்டல் உறுதிபாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கருத்து கேட்டல் கூட்டத்தை, 2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுசட்ட பிரிவு 18 இன் பரிந்துரைக்கமையவும், பொது விசாரணை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையின்படியும் நடத்த ஆணைக்குழுவினால் உத்தேசிக்கப்பட்டது.

மின்சார செயலிழப்புடன் தொடர்புடைய பாதிப்புகள் அல்லது ஏதேனும் பிரச்சினைகள் அல்லது தகவல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களிடம் இதன்மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது. இத்தகைய சமர்ப்பிப்புகளை ஆணைக்குழு பரிசீலிக்கும் அல்லது வாய்மூலம் கருத்துக்களை வெளிப்படுத்த அத்தகைய தரப்பினர் ஆணைக்குழுவினால் வரவழைக்கப்படுவர்.

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சட்டபிரிவு 18 இன் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் பொதுமக்கள் கருத்து கேட்கும் கூட்டம் நடத்தப்படுவதுடன், இப்பகிரங்க கருத்து கேட்டலானது **2021 மே மாதம் 7ஆம் திகதி காலை 9.30 மணிக்கு** பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 இல் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 28 நாட்களுக்குள் எழுத்து மூலமான சமர்ப்பிப்புகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**
**6ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தக கோபுரம்**
**28, புனித மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03**
**தொலைநகல்: 011 2392641**
**மின்னஞ்சல் : consultation@pucsl.gov.lk**

மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களுக்கு
0776618031அல்லது 0112392606-8என்ற இலக்கங்கள் ஊடாக ஜானகி விதானகம அவர்களை தொடர்பு கொள்ளவும்.

**ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய**
**ஜனக ரத்நாயக்க**
**தலைவர்**
**திகதி: 28 மார்ச் 2021**

## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சேவனகள நுகேகலயாய எடிசன் ஹில் இன் தெற்கு வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்தின் வடிவமைப்பு கட்டுமானப் பணி**

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE/2449/2021

1. ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சேவனகள நுகேகலயாய எடிசன் ஹில் இன் தெற்கு வளாகத்தில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்தின் வடிவமைப்பு கட்டுமானத்திற்காக தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. தேசிய போட்டி ஏல நடைமுறைக்கு ஏற்ப ஏலம் எடுக்கப்படும்.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2021.03.29 ஆம் திகதியிலிருந்து 2021.05.10 ஆம் திகதி வரை மு.ப. 09.00 மணியிலிருந்து பி.ப.15.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.2,500/- கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (வழங்கல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்கூறிப்பட்டுள்ள முகவரியில் 2021.03.29 முதல் 2021.05.10 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை சரிபார்க்கலாம் (தொலைபேசி 0710219449/0710219384 தொலைநகல் 011-2632430)
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. 2021.05.11 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (வழங்கல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 011 - 2632430 / 0710219384 தொலைநகல் 011-2632430, மற்றும் www.kdu.ac.lk/ocls/tender-notices யில் பார்வையிடலாம். (விலைமனுக் கோரல்)

தவிசாளர்
திணைக்களத்தின் பெறுகைக் குழு
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலான, இலங்கை.

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

# பருப்பம் செருப்பம்

ஜுனைதா ஷெரீப்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டதென்ற செய்தி ஊடகங்களில் அறிவிக்கப்பட்டது. மக்கள் பரவலாக தெருக்களில் கூடி நின்று கதைத்தனர். அரசியல்வாதிகள் ஆளுக்காள் தொலைபேசிகளினூடாக சாதகபாதகமான கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். அடுத்த நாளைய அச்சு ஊடகங்களில் கொட்டை எழுத்துக்களில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் பிரதான இரண்டு கட்சிகள் கடந்த பல வருடகாலமாக செயற்பட்டுக்கொண்டிருந்தன. ஒன்று ஜனநாயக மறுமலர்ச்சிக் கட்சி. மற்றது ஜனநாயக சீர்திருத்தக் கட்சி.

இனங்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்வான் பேர்வழி என நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து இயங்கிக்கொண்டிருக்கும் கட்சிகள் சில. தத்தமது கொள்கைகளுக்கு ஏற்றவாறாக நாட்டை மாற்றவேண்டுமென கங்கணம் கட்டியவாறு இயங்கிக்கொண்டிருப்பவை வேறு சில.

ஒவ்வொரு பொதுத் தேர்தலும் இடம்பெறவுள்ள காலங்களில் பிரதான இரண்டு கட்சிகளுக்குமான பெரிய பிரச்சினையே எந்த உதிரிகளுடன் கூட்டுச் சேர்வது என்பதுதான். கொள்கைகள் அடிப்படையிலா, கொடுக்கல் வாங்கல் அடிப்படையிலா, தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்தால் உதிரிகளுக்குக் கொடுக்கவேண்டிய அமைச்சர்களின் எண்ணிக்கையிலா என்பவை செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமையும்.

பிரதான கட்சிகளின் அவ்வப்போது இருக்கும் தலைவர்கள் 'கம் ஈசி கோ ஈசி' என்ற அடிப்படையில் உதிரிகள் கேட்கும் சகலதையும் தருவதாக உடன்படிக்கை உடன்படிக்கையாக கையொப்பமிட்டுத் தள்ளுவர். அவற்றில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளில் தருவதாக அல்லது செயற்படுவதாக ஏற்றுக்கொள்ளப்படுபவைகளில் நியமன அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சர்கள் தொகை தவிர்ந்த ஏனையவை நிறைவேற்றப்படாமலே போய்விடும் என்பது கையொப்பமிடும்போதே இரு தரப்பாருக்கும் தெரிந்தே இருக்கும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதான செய்தி அறிவிக்கப்பட்ட பின்னர் அது காலம் வரை ஆளும் கட்சியாக செயற்பட்டுக்கொண்டிருந்த ஜனநாயக சீர்திருத்தக் கட்சியின் தலைமையகத்தின் கேட்போர்கூடத்தில் கூட்டமொன்று நடைபெற ஆயத்தங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. கட்சியின் பா.உ.க்களாக செயற்பட்டவர்கள் வரிவிலக்குப் பெற்று தங்களால் கொள்வனவுசெய்யப்பட்ட அல்லது வரிவிலக்கு அனுமதிப்பத்திரத்தை கொள்ளை விலைக்கு விற்றுவிட்டு சிறிய தொகைக்கு வாங்கப்பட்ட மோட்டார் வாகனங்களில் துருத்திய தொந்திகளுடனும் கொழுத்த முகங்களுடனுமாக வந்து மண்டபத்துக்கு சமீபமாக இறங்கிக்கொண்டிருந்தனர். பா.உ.க்களல்லாத தொகுதிகளின் அமைப்பாளர்கள் எதிர்வரவிருக்கும் தேர்தலில் வெற்றிபெற்றால் எந்தெந்த சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் அனுபவிக்கலாமென்ற பற்பல கனவுகளுடன் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். கூடிக் கூடி நின்று கதைத்தனர். ஹாஸ்ய வெடிகளை உதிர்த்து உரத்துச் சிரித்தனர். முன்னாலும் பின்னாலும் துருத்திய அவயவங்களையும் ஒப்பனை செய்யப்பட்ட முக அழகையும் பிதுங்கிய இடுப்புச் சதையைக் காட்டியவாறும் நடை பயின்ற சில நாரிமணிகளை பலர் கண்களால் தோலுரித்து ரசித்தனர்.

கூட்டம் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டதும் ஜ.சீ. கட்சியின் தலைவர் எழுந்து நின்றார். தேசிய ஆடை அணிந்திருந்தார். வருகை தந்தவர்களை விளித்துவிட்டு நேராக விடயத்துக்கு வந்தார்.

"எந்த யுக்தியையாவது செயற்படுத்தி ஆட்சி அமைத்தே தீரவேண்டும். இதுவரை ஆளும் கட்சியாக இருந்துட்டு இனிமேல் எதிர்க்கட்சியாக செயற்படுவது நமக்கெல்லாம் அவமானமானது. எந்தப் பேயுடன் கூட்டுச் சேர்ந்தாவது, அல்லது எந்தச் சலுகைகளை மக்களுக்குத் தருவதாக வாக்களித்தாவது ஆட்சியைப் பிடித்தே ஆக வேண்டும். அதற்காக நீங்களெல்லாம் உங்களின் பரிபூரண ஒத்துழைப்பைத் தரவேண்டும்." எனக் கூறிவிட்டு நிறுத்தினார்.

அவரைத் தொடர்ந்து முக்கிய நபர்கள் சிலர் பேசினர். தலைவர் மீண்டும் எழுந்து நின்றார். "நமது கட்சி ஆட்சி அமைத்தால் மக்களுக்கு ஒன்றையோ அல்லது பலதையோ இலவசமாகத் தருவதாக நாம் வாக்களிக்க வேண்டும். அத்தகைய இலவசங்கள் கிடைக்குமென்ற நம்பிக்கையில் மக்கள் நமக்கு வாக்களிப்பார்கள். முன்னரெல்லாம் இலவச அரிசி தருவதாகக் கூறி வாக்குகளைப் பெற்றுள்ளார்கள். அந்த அரிசிக் கதை இப்போது வேகாது. ஆகவே, மாற்றீடாக எந்த உணவுப் பொருளைக் கொடுப்பதாக அறிவிக்கலாமென்ற ஆலோசனையை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்" என்றார்.

கூட்டத்திலிருந்தவர்கள் சிந்திக்கத் தொடங்கினர். ஒருவர் எழும்பினார். "சார். எனக்கொரு யோசனை படுது" என்றார்.

"சொல்லுங்க."

"நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் அரிசிச் சோறு அல்லது கோதுமை மாப் பண்டங்களை பிரதான உணவுகளாகக் கொள்கின்றனர். சோறு, ரொட்டி, பாண், தோசை போன்றவற்றைச் சாப்பிட பொதுவாகப் பயன்படுத்துவது பருப்புக் கறிதான். பருப்புக் கறி சமைக்காத வீடுகளோ, ஹோட்டல்களோ இல்லையென்றே கூறலாம். ஆகவே மாதாமாதம் ஒரு தொகை பருப்பு இலவசமாகத் தருவதாக வாக்களித்தால் இலகுவாக வெற்றி பெறலாம் என நான் நினைக்கிறேன்" என்றார்.

அவரது சிபாரிசைக் கேட்டதும் சிலர் மனதினுள்ளும் அல்லது வாய்விட்டும் சிரித்தாலும் பலர் சிந்திக்கத் தொடங்கினர். பலரும் இது சிறந்ததொரு யோசனை என்ற அடிப்படையில் தத்தமது கருத்துக்களை முன்வைத்தனர். ஒரு சிலர் வேறு உணவுப் பொருட்களை சிபாரிசு செய்தனர். நீண்ட நேர ஆலோசனையின் பின்னர் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்தால் குடும்பங்களுக்கு மாதாமாதம் பருப்பு இலவசமாக வழங்குவதென்ற தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

அடுத்த நாள் தினச்சுடர் பத்திரிகையில் 'ஆட்சியமைத்தால் பருப்பு தருவோம்' என்ற தலைப்பில் ஜ.சீ.கட்சியின் தீர்மானம் கட்டமிட்ட செய்தியாக கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

சில தினங்களில் அதே போன்றதொரு கூட்டம் ஜனநாயக மறுமலர்ச்சிக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

தனது பெயருக்குப் பின்னால் சில அறிவியல் பட்டங்களைப் பெற்றிருந்த கட்சியின் தலைவர் எழுந்து ஒலிவாங்கிக்கு முன்னால் நின்றார். மெலிந்திருந்தார். பரட்டையான பாணித் தலை. பணத்துக்கு ஆசைப்படாத நேர்மையான அரசியல்வாதியென ஏற்கனவே பெயர் பெற்றிருந்தார்.

"கடந்த சில வருடங்களாக ஆட்சிசெய்தவர்கள் நாட்டு மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக நின்று நிலைக்கக்கூடிய எந்த வித அபிவிருத்தித் திட்டங்களையும் செயற்படுத்தவில்லை□." எனத் தொடங்கி அந்த ஆட்சியாளர்களின் ஆட்சி முறை பற்றி சொற்ப நேரம் உரையாற்றினார்.



"நாம் நமது நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். விவசாய ஊக்குவிப்பாலும், கைத்தொழில் உற்பத்திப் பொறிமுறைகளாலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். பிற நாடுகளிடம் பிச்சையோ கடனோ கேட்காத நிலைக்கு நாட்டை மாற்ற வேண்டும். வயதான ஆண் பெண் என சகலரும் தாம் விரும்புமிடத்து தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நானாவித செயற்றிட்டங்களை ஏற்படுத்த வேண்டும். அரசாங்கமும், தனியாரும் கூட்டாகவோ தனித்தனியாகவோ ஆயிரக்கணக்கானோருக்கு தொழில் வாய்ப்பை வழங்கக் கூடியவாறான திட்டங்கள் நாட்டின் நானா பக்கங்களிலும் அமைக்கப்படுதல் வேண்டும். எந்த வித சொந்த இலாபமும் கருதாத, மக்களின் நல் வாழ்க்கையை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயற்படக் கூடியவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக வரக் கூடியவாறு பொருத்தமானவர்கள் தேர்தலுக்கு நிற்கவேண்டும். இந்த உயரிய சிந்தனையை செயற்படுத்த நீங்களெல்லாம் தயாரா?" என்ற கேள்வியுடன் அவர் உரையை இடையில் நிறுத்தினார்.

கூட்டத்தில் பங்குகொண்டிருந்தவர்கள் ஏகோபித்த குரலில் 'ஆம்' என்று கூறினர்.

"நீங்களெல்லாம் நாட்டின் நானா திசைகளிலிருந்தும் இங்கு வந்துள்ளீர்கள். உங்களின் பகுதிகளில் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தலாம் என்பதைக் கூறுமாறு உங்களிடத்திலேயே விட்டுவிடுகிறேன். உங்களது பகுதிகளில் காணப்படும் மூலப்பொருட்கள், மனித வளம், கூடுதலானோர் பெற்றுள்ள பயிற்சிகள் என பலதையும் நீங்கள் சிந்திக்கலாம். ஏதாவது உற்பத்தி தொடர்பாக நவீன பயிற்சி தேவைப்படின் வெளிநாடுகளிலிருந்து மிகச் சிறந்த பயிற்றுவிப்பாளர்களை நாட்டுக்கு அழைக்க கட்சியால் ஏற்பாடுகள் செய்ய முடியும். தொகுதிவாரியாக அல்லது கூட்டிணைந்த தொகுதிகள் வாரியாக எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தலாம் என நீங்கள் உங்களது மக்களுடன் ஆலோசித்து கூடிய சீக்கிரம் தலைமையகத்துக்கு அறிவிக்க வேண்டும்." கூறிவிட்டு தலைவர் அமர்ந்தார்.

சிலர் எழுந்து தங்களின் பகுதிகளில் அமைக்கப்பட வேண்டுமென நீண்ட நாட்களாக முயற்சித்துக்கொண்டிருந்த திட்டங்களை விபரிக்கத் தொடங்கினர்.

அநுராதபுர பகுதியைச் சேர்ந்த ஒருவர் எழுந்து நின்றார். "சேர் எனது பகுதியில் தூர்ந்து போன நிலையில் பல கிராமக் குளங்கள் உள்ளன. இவற்றை இனங்கண்டு புனர்நிர்மாணம் செய்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் இரண்டு போக வேளாண்மை செய்ய முடியும்" என்றார்.

"வெரி குட். கிராமக் குளங்கள் தொடர்பாக மூன்று விதமான பட்டியல்கள் தயாரிக்க வேண்டும். ஒன்று பாவனையில் உள்ளவை. அவற்றின் அணைக்கட்டுகளை உயர்த்துவது போன்ற வேலைகளைச் செய்தால் மேலும் ஒரு தொகை வயல்களுக்கு நீர்ப்பாசனம் அளிக்கமுடியுமா என அடையாளம் காண்பது. இரண்டாவது பாவனையில் இருந்தும் நீர் ஏந்தும் பகுதிகள் தூர்ந்து போயுள்ளவை அல்லது ஆழமாக்கி அணைக்கட்டுக்களை உயர்த்தவேண்டியவை, மற்றது குளத்துக்குரியதான காணிகளை விவசாயிகள் அடாத்தாகப் பிடித்து விவசாயம் செய்பவை, என ஆராய்ந்து இதனுடன் புதிய குளங்களை அமைப்பதால் வானம் பார்த்த காணிகளை இரண்டாம் போகம் செய்யக்கூடியவாறு மாற்றமுடியுமா என ஆராயலாம். எப்படி இருந் தாலும் உங்களது தொகுதியில் சிறு குளங்களை புனர்நிர்மானம் செய்யும் திட்டத்தை செயற்படுத்துவதாக பிரசாரம் செய்வோம்."

கரையோரப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் எழுந்து நின்றார். "சேர், எனது பகுதியில் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பவர்கள் நிறையப்பேர் வசிக்கிறார்கள். அவர்களில் கணிசமானோருக்கு ஆழ் கடல் மீன்பிடியில் பயிற்சிகொடுத்து, படகு போன்றவற்றை வாங்க உதவி செய்தால், அந்த மக்களின் குடும்ப நிலைமையை மேம்படுத்தக்கூடியதாயிருக்கும்" என்றார்.

அவரது சிபாரிசு செயற்படுத்துவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது.

இன்னொருவர் எழுந்தார். "சேர், நான் பிரதிநிதித்துவப் படுத்தும் நெய்னாகுடி தொகுதியில் செருப்புத் தயாரிக்கும் தொழிலில் அனுபவமுடையவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நவீன முறைகளில் பயிற்சி கொடுத்து, பாரிய அளவில் செருப்புத் தயாரிக்கும் நிலையமொன்றை ஏற்படுத்தினால் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு உண்டாக்கலாம்" என்றார்.

"நல்ல யோசனை. வெளிநாடுகளிலிருந்து பயிற்றுவிப்பாளர்களை அழைத்து வரலாம். பாதணிகள் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்கள் எவையென அறிந்து முடிந்தால் அவற்றைத் தயாரிக்கக் கூடியதான தொழிற்சாலைகளையும் நிறுவலாம். பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வளம் உள்ளமை ஒரு பிளஸ் பொயின்ட். சந்தை வசதிகளையும் ஏற்படுத்திக்கொண்டால் இந்த உற்பத்தித் தொழிற்சாலை நாட்டு மக்களுக்கான ஒரு பாரிய தொழிற்சாலையாக அமையும்" என்றார் தலைவர்.

தேர்தல் நடைபெறப் போகும் திகதி அறிவிக்கப்பட்டுவிட்டது. ஒவ்வொரு தொகுதியிலும் பா.உ.வாக ஆவதற்காக போட்டி போடும் அரசியல்வாதிகள் தத்தமது வெற்றிக்கான முயற்சிகளில் மும்முரமாயினர். பத்துப் பதினைந்து ஒலிபெருக்கிகளைப் பூட்டி இரவின் அமைதியைக் கிழித்தவாறும், பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் வீட்டுப் பாடங்களைப் படிக்க முடியாமலும் நள்ளிரவு வரை கரடிகளாக கத்தி பிரசாரம் செய்தனர்.

ஒரு நாள் பிற்பகல் ஜ. சீ. கட்சியின் பிரசாரக் கூட்டமொன்று நெய்னாகுடி விளையாட்டு மைதானத்தில் நடைபெற ஏற்பாடானது. நெய்னாகுடி தேர்தல் தொகுதிக்குள் வரும் பதினெட்டு கிராமங்களிலிருந்தும் வாக்களிக்கத் தகுதிபெறாத சிறுவர்கள் உட்பட தொகையானவர்கள் பஸ்களில் கொண்டுவரப்பட்டிருந்தனர். கட்சியின் ஆதரவாளர்கள் வெவ்வேறு தொகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்டிருந்தனர். காலையிலிருந்தே நகரின் ஒரு எல்லையிலிருந்து மறு எல்லை வரை பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் சினிமாப் பாடல்களையும், இடைக்கிடை அபேட்சகரின் புகழ் பாடும் பாடல்களையும் ஒலித்துக் கொண்டிருந்தன. கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக வந்திருந்தவர்கள் கலைந்த கேசக் கற்றைகளுடன் நகரப் பாதைகளில் அலைந்து திரிந்தனர். கொழும்பிலிருந்து விமானத்தில் கொண்டு வரப்பட்ட பருப்புக் கறி, மீன் குழம்பு போன்றவற்றுடன் கூடிய உணவுப் பொதி பரிமாறப்பட்டது.

தலைவர் மேடைக்கு வந்ததும் இரு பக்கங்களிலும் பருப்பு மணிகள் ஒட்டப்பட்ட ஆயிரம் ரூபா தாள்களைக் கொண்ட மாலை அணிவிக்கப்பட்டது. தலைவரின் உரையில் தங்களது கட்சி ஆட்சிக்கு வந்தால் இலவசமாக பருப்பு வழங்கும் செயற்திட்டத்தை பெருத்த தொனியில் கூறியதுதான் தாமதம் கூடி நின்றவர்கள் வானை முட்டும் சப்தத்தில் கரகோசம் செய்தனர்.

இதே சமயம் நெய்னாகுடி கடற்கரை மைதானத்தில் ஜ.ம.கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. மேடை சிறியதாயிருந்தாலும் நிறைய பொதுமக்கள் நின்றனர். கட்சித் தலைவரை எந்தவித பந்தாவும் இல்லாமல் மேடைக்கு அழைத்து வந்தனர். தனது கட்சியின் கொள்கை பற்றி அவர் விலாவாரியாக விளக்கினார். கட்சி ஆட்சிக்கு வந்தால் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடடையக்கூடியவாறான திட்டங்களை அமுல்படுத்தப் போவதாகக் கூறினார். நெய்னாகுடித் தொகுதியில் செருப்பு, சப்பாத்து போன்ற பாதணிகள் தயாரிக்கக் கூடிய பாரிய தொழிற்சாலைகளை நிறுவ உத்தேசித்துள்ள விடயத்தையும் கூறினார்.

தேர்தல் நடைபெறுவதற்கான திகதி நெருங்கிக்கொண்டிருந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நெய்னாகுடி கடற்கரை மணலில் ஓய்வு நிலையடைந்த கிழங்களும், மத்திய வயதானவர்களுமான சிலர் வட்டமாக உட்கார்ந்து கதையளந்துகொண்டிருந்தனர். அவர்களுக்குள் ஓட்டை வாயன்ட மகன் உமறும் காணப்பட்டான். உமறு ஓட்டை வாயன் உதுமானின் இரண்டாவது மகன். தகப்பனைப் போலவே ஹாஸ்யத் துணுக்குகளை அவிழ்த்துவிட்டு மற்றவர்களை சிரிக்க வைப்பவன். சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தாத கேள்விகளைக் கேட்டு தன்னை முன்னிலைப்படுத்த முயல்பவன். கூட்டத்தில் மக்களன்பன் நடுநாயகமாக வீற்றிருந்தார். அவர் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர். நடமாடும் பல்கலைக்கழகமென பலராரும் மதிக்கப்படுபவர்.

"என்ன மக்களன்பன் சேர், நாங்களெல்லாம் கதைக்கிறோம். நீங்க வாயைத் திறக்கிறீங்களே இல்லையே. ஊரிலே என்ன நடக்குது? சொல்லுங்களேன்" என்றான் உமறு.

"எதைக் கேக்கே?"

"இவ்வளவு நேரமும் காதுக்குள்ளே பஞ்சையா வைச்சுக்கொண்டிருந்தீங்க? நடக்கப் போகும் தேர்தலைப் பற்றித்தானே இவ்வளவு நேரமா கதைக்கோம். இலவசமா பருப்பு கொடுக்கப் போறாங்களாமே. அதைப்பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?"


"இலவசங்களைக் கொடுத்து அடுத்த ஐந்து வருசத்துக்கு மக்களை ஏழைகளாகவே வைத்துக்கொள்ளப் போறாங்க. ஒரு வகையில் பார்க்கப் போனால் வாக்குகளைப் பெறுவதற்காக இது மக்களுக்குக் கொடுக்கப்படும் லஞ்சம். மக்களும் காலங்காலமாக தன்மானம், சுயகௌரவம் என எதுவுமே இல்லாம வாழுறாங்க. ஏற்பது இழுக்கு என்பதை மறந்தேவிட்டாங்க. சுயமாக உழைத்து தன் கால்களில் நின்று வாழவேண்டுமென்ற சிந்தனையில்லாம இருக்காங்க. யார் எதைத் தந்தாலும் பிச்சைக்காரனைப்போல வாங்கிச் சாப்பிட தயாரா இருக்காங்க. இதை நினைக்கும்போது வேதனையா இருக்கு" கூறிவிட்டு வயதான மக்களன்பன் மெதுவாக மூச்சிரைத்தார்.

"அப்போ செருப்புத் தொழிற்சாலையைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?" மீண்டும் உமறு கேட்டான்.

"அபிவிருத்தி என்றால் என்னவென்று முதலிலே நீங்க தெரிந்து கொள்ளணும். எந்த ஒரு பகுதியில் அபிவிருத்தித் திட்டமொன்று இடம்பெறுகிறதோ அந்தத் திட்டத்திலிருந்து அப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடடையக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும்.

28 ஆம் பக்கம் பார்க்க...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 37



திரு/திருமதி/செல்வி ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ........................................
........................................
........................................

........................ ........................
திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 37

### கேள்விகள்

**இடமிருந்து வலம்**

1. மானமுள்ளவர்களுக்கு உதாரணமாக சொல்லப்படும் ஒரு விலங்கு.
4. திறப்பு.
6. எண் கணிதத்தில் வரும் கழித்தல் குறி. (திரும்பியுள்ளது)
7. செய்வதற்கு எதுவும் இல்லாத நிலையைக் குறிப்பது.
8. காட்டில் வாழ்க்கை இராமாயணக் கதையிலும் வருகிறது.
10. மாரி காலத்தில் இரவில் உணரலாம்.
11. அடையாளக் குறியீடு. (குழம்பியுள்ளது)
12. மனிதரில் ஆண், பெண் என்ற பகுப்பை குறிப்பது.
13. ஒரு மலர்.
16. சேமிப்பு மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்யும் நிதி நிறுவனம்.
19. தாய்.
20. சாதி மற்றும் ஏழை, பணக்காரன் போன்ற ஏற்றத்தாழ்வு பார்க்காமல் உண வருந்துவது.
23. தண்டனை பெற்று சிறையில் இருப்பவர் திரும்பிவிட்டார்.
24. தூய்மை. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. கீழ்த்தரமான அல்லது தீய குணமுடையவன்.
2. உரைநடை.
3. யுத்தம், வழக்கு என்பன தீர்ந்தபின் ஏற்படும் நிலை.
4. எரிக்கப்பட்டதன் பின்னர் கிடைப்பது.
5. ஆகாயக் கப்பலை ஓட்டுபவர்.
9. அதிர்ஷ்டத்தையும் குறிக்கும்.
12. ஒருவகை மீன்.
14. ஒருவரை தரம் தாழ்த்திக் கேவலப்படுத்துவது.
15. வாசகங்கள் பொறிக்கப்பட்டு பொது இடங்களில் தொங்கவிடப்படும் அறிவித்தல் துணி.
16. வாய்ப்பான நிலை அல்லது சௌகரியம்.
17. பெண் குழம்பிவிட்டாள்.
18. தைப்பொங்கலுக்கு முதல்நாள் கொண்டாடப்படும் பண்டிகை இது. (தலைகீழ்)
21. வாரத்தில் ஒருநாள்.
22. தங்களது என்பதனைக் குறிக்கும். (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 36

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. முழக்கம் 4. பிதா 6. கவி 7. வத்தை 8. தேக்கு 10. பாதணி 11. கரடி 12. வசம் 16. சரி 17. அதிசயம் 18. சத்தம் 19. திருமணம்

**மேலிருந்து கீழ்**

1. முகக்கவசம் 2. குழவி 3. கனி 4. பித்தளை 5. தாவணி 7. பாதை 9. தேகம் 13. சரிதம் 14. போசனம் 15. கரும்பு 17. அசதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 35

### பரிசுபெறுவோர்

முதலாம் பரிசு
**எஸ். நிரோஸன்,**
இல. 24/2, உடுப்பிட்டிய,
உக்குவளை.

இரண்டாம் பரிசு
**எம்.டபிள்யூ.ஏ. அஹ்மத்,**
இல : 18/1, பதுர் லேன்,
கல்பொக்க,
வெலிகம.

மூன்றாம் பரிசு
**ஜே.ஏ.எம். இஸ்ரத்,**
167/12, ரம்புக்கனை வீதி,
மஹாவத்த,
மாவனெல்லை.

### பாராட்டு பெறுவோர்

**1. கே. பதம்மலோஜனி,**
வலயக் கல்வி அலுவலகம்,
களுவாஞ்சிக்குடி.

**2. ஸப்பியா மனாசிர்,**
பெரிய கரிசல்,
பேசாலை.

**3. சிவாந்திகா தம்பிப்பிள்ளை,**
பழைய தபாலக வீதி,
சங்கானை,
யாழ்ப்பாணம்.

**4. என்.கே. வேணி,**
25/10, தேவாலய வீதி,
பலாங்கொடை.

**5. யுஸ்ரியா அஹமட்,**
236/1, குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

**6. கதிரைமலை தருமரெத்தினம்,**
இல. 55, வாவிக்கரை வீதி 01,
மட்டக்களப்பு.



# கசப்பும்... இனிப்பும்...

– தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு–1

கடந்த 16ல் நடைபெற்ற ஒரு நிகழ்வு மிகமிக இனிப்பானது. அதுவும் வழங்கப்பட்ட இடம் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அலரி மாளிகையில்.

அந்த இனிப்புச் சுவையுடன் சிலபல கசப்புகள் சேர்ந்து விட்டதால் கசப்பில் தரவேண்டியதாகிறது.

எவ்வாறாயினும் இனிப்பு என்னவென்பதைத் முதலில் தெரிவிப்பது முறை.

இலங்கை வரலாற்றில் – அதுவும் கலைஞர்கள் வரலாற்றில் – ஒரு முக்கிய நாளாக 16.03.2021 செவ்வாய்க்கிழமை அமைந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுசரணையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தான் ஒருகால மேடைக்கலைஞர் என்பதை மறவாமல் மிக்க ஆர்வமாக அதனை ஏற்பாடு செய்திருந்தார்.

மேடை நாடகக் கலைஞர்களுக்கு மட்டுமென முதன் முதலாக ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தைக் கொண்டு விபத்து, ஊனம், நோய் அகால மரணம், இயற்கை மரணம் எனக் கலைஞர்கள்



அனைத்து வகை அசம்பாவித நிகழ்வுகளையும் சமாளிக்க வென்று ஆயிரம் ஆயிரம், லட்சம் லட்சம் பெறுமதி மிக்க காப்புறுதிப் பத்திரங்கள் கலைஞர்களை நேரில் அழைத்து தேநீர் விருந்தளித்து வழங்கி வைக்கப்பட்டன.

பிரதமர், மூத்த, சிரேஷ்ட கலைஞர்களை மட்டும் அழைத்து தன் கரங்களால் அளித்தார்.

இந்த வகையில், தமிழ்க் கலைஞர் இருவர் மட்டுமே மேடை ஏறினர். திருமதி செல்வம் பெர்ணான்டோ ஒருவர். மற்றவர், இந்தப் பேனாக்காரன், ஒருகாலத்தில் தமிழ் – சிங்கள மேடைகளை இணைத்தவன் என்ற வகையில், ஏனையோருக்கு அவரவர் இருக்கைகளுக்கே சென்று அவர் சார்பில் டவர் மண்டப அரங்க அறக்கட்டளைப் பணிப்பாளர்கள் வழங்கினர்.

இப்படியாக இனிப்புகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், மேடை இசை நிகழ்ச்சிகள் மற்றும் மேடைத் திரையில் ஓடிக் கொண்டிருந்த காப்புறுதி விவரணச் சித்திரங்கள்! அனைத்தும் சிங்களத்தில் மட்டுமே! மேடை அலங்காரத்தில் எந்தத் தமிழ்ப் பதாகைகளும் இல்லை. ஜனசக்தி காப்புறுதித் திட்டம் என்று கூட ஒரு பெயர்ப்பலகை இல்லை.

பிரபல தொகுப்பாளினி, நடிகை ரஞ்சனி ராஜ் மோகன் மட்டும் நறுக்குத் தெறித்தாற் போல தமிழ் ஒலிக்கச் செய்தார் அறிவிப்புகள் மூலம்.

**இவை எல்லாவற்றையும் தூக்கி வீசக் கூடிய முக்கிய கசப்பு. இதை நீங்கள் படிக்கிற இன்றையப் பொழுதுவரையில் தமிழ்க் கலைஞர்கள் எத்தனை பேர் காப்புறுதி பெற்றனர்? கொழும்புப் பகுதியிலிருந்து யார், யார்? வடக்கில் எத்தனை கிழக்கில் எத்தனை? வடக்குலிருந்து தேர்வான மூத்த கலைஞர் யார் எவர்?**

ஊஹூம்! ஒரே மூடு மந்திரம் மர்மம்!

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொகை கலைஞர்களையும் யூகமாகச் சொன்னார்கள். முறையாக உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டியவர்கள் மௌனிகளாக, அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார்கள்! ஊடகங்களுக்கு வைபவத்தின் பின் அனுப்பி வைக்க வில்லை! நானும் கேட்டு அலுத்துப்போனேன். (செய்திருந்தால் ஆளுக்கு முந்தி 'தினகரன்' கடமையைச் செய்திருக்கும்) கடவுளே, கலைஞர் என்போர், அதுவும் தமிழ்க் கலைஞர் மலையகத் தொழிலாளப் பெருமக்கள் போல் பாவப்பட்ட ஜன்மங்கள் தானா?

## கசப்பு–2

கடந்த 21ந் திகதி 'வாரமஞ்சரி'யின் 28ஆம் பக்கத்துக் கட்டுரை ஒன்று எத்தனை பேர் பார்வையில் பட்டதோ, சொல்கிறேன் தலைப்பை" இலங்கை தமிழ் வானொலிகளின் இன்றையப் போக்கு"

**"சிறி மதன்"** என்கிறவரது கட்டுரை அது. அவர், இலங்கையின் சகல தமிழ் வானொலி அலைவரிசைகளையும் ஊறுகாய்போல் தொட்டுப் பார்ப்பதில் வல்லவராகத் தோன்றுகிறார்.

பாராட்டுகள். கட்டுரையின் பெரும்பகுதி ரேடியோ சிலோன் ஆகிய இலங்கை வானொலி பற்றியதே. அதன் பாரம்பரியம், பன்முகப் பரிமாணம் பற்றிப் பதித்திருக்கிறார்.

உண்மை, முன்னொரு காலத்தில் அப்படி இருந்தது உண்மை! இன்றை நிலையில் நிறையக் கசப்புகள் இருப்பது தான் யதார்த்தம்

'சிறி மத'னுக்கு ஒரு பொருளை அடையாளம் காட்டுகிறேன். அது **'அரிவாள் மணை'** பார்த்திருக்கிறாரா? கேள்விப்பட்டிருக்கிறாரா? தமிழ்ச் சமூகக் குடும்பச் சமையலறையில் அது அரசோச்சும்! (முக்கியமாக தமிழ் இல்லங்களில்) தமிழ் எழுத்து "உ" போன்ற அமைப்புடன் கூடிய இருப்புத் தகடாலானது. காய்கறிகளை அரிவதற்குப் பயன்படும் சமையலறைச் சாதனம்.

இத்தகையச் சாதனத்துடன் ஒப்பிடக்கூடிய இடமாக இப்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை அழைக்கலாம். ஏன், **"அரிவாள் மணைக் கூட்டுத்தாபனம்"** என்றும் மாற்றுப் பெயர் சூடி அழைக்கலாம்.

பொழுது விடிந்தால் பொழுது போனால் யாருக்கு வெட்டு விழும், யாருக்குக் காயம் ஏற்பட்டு இரத்தம் சொட்ட சொட்ட மருத்துவமனை நோக்கி, ஓடுவார்கள் எனக் கணிக்க முடியாது!

பாருங்கள், புதிய ஆட்சி பீடமேறியதும் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டார். நாலோ ஐந்தோ நாள் தான் அவர் பதவி நாற்காலியில் அமர்ந்திருந்தது. போய்விட்டார். அப்புறம் ஒரு மாதகாலத்தில் உலகிலிருந்தும் போய் விட்டார். அவர் ஒரு நல்ல நாடகக் கலைஞர்.

அந்தத் தலைவரின் நாற்காலிகள் பிரபல பாடகர் ஒருவர் வந்தமர்ந்தர். ஒரு பதினைந்து நாட்களுக்கு முன் அவரும் 'அரிவாள் மணைக் காய்த்திற்குள்ளானார். பணிப்பாளர் சபைக்காரர்களுக்கும் காயங்களாம். ஆனால் ஊர்ஜிதப்படுத்த அவகாசமில்லை.

சரி, பெரிய தலைகளுக்குத் தான் இப்படி வெட்டு, குத்து என்றால் சிறு கடைநிலை ஊழியரிலிருந்து பகுதி நேர அறிவிப்பாளர் ஈறாக அரிவாள்மணைக் காயங்களுக்குக் காரண காரியமில்லாமல் ஆளாவது சகஜமாகிவிட்டது. பொழுது போக்கும் ஆகிவிட்டது.

இது, "நேயர்" பெருமக்களுக்கும் நிகழும். அவர்கள் பல கடுமையான முயற்சிகளுக்குப் பிறகு தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தி, தங்கள் விருப்பப்பாடலைக் குறிப்பிட்டு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு வெட்டு துண்டிப்பு! பலர் அனுபவித்திருப்பீர்கள்.

ஆக, கொட்டுவதிலும் கொத்துவதிலும் கைதேர்ந்த ஓர் இயல் இசை – நாடக ஊடகமே இன்றைய இ. ஒ. கூ.

அது என்ன வரம் கேட்டு இயங்குகிறதோ அறிய இயலவில்லை அறிவு ஜீவி அல்லாத எனக்கு!

ஆனால் ஒரு தகவல் மட்டும் தெரியும். இப்போதைய டொரிங்டன் சதுக்க நிலையக் கட்டடம் ஒரு சமயம் 'மன நோயாளர்' தங்குமிடமாகவும் வைத்தியம் பார்க்கும் இடமாகவும் இயங்கியது. பல மன நோயாளர் இறப்புகளும் அங்கு நடந்துள்ளன.!

### விழுங்க முடியாத இரு கசப்புகள் நிழற்படங்களில்






தமிழக முதல்வராவதற்கு 5 , 6 ஆண்டுகளுக்கு முன், சசிகலா என்கிற ஜெயலலிதாவின் தோழி காலில் விழுந்து எடப்பாடி பழனிச்சாமியை கோடிக்கான மக்கள் பார்த்தார்கள்!

## இனிப்பு

**இந்த** படத்தை பாருங்கள், முதுமையிலும் முகம் லட்சுமிகரமாக இருக்கிறது. கடந்த 23ல் நூற்றாண்டுப் பிறந்த நாள். (1921.03.23)



ஆனால் கொண்டாடியது யார்? நினைத்துப் பார்த்தவர்கள் யார்?

**'திரிபுரசுந்தரி'** – என்ற பெயருடைய இவர் தமிழகத் திருச்சிமா நகர் தொட்டியம் கிராமத்தவர்.

18ஆம் அகவையில் மருத்துவம் கற்க சென்னை மண்ணை மிதித்தார்! தொடர்ந்து கற்கப் பொருளாதாரப் பிரச்சினை. எழுதி சம்பாதிக்கலாமா, என்று யோசித்து, **'ஆனந்த விகடன்'** நிறுவனர் **எஸ்.எஸ். வாசனையும்,** பொறுப்பாசிரியர் **'கல்கி' கிருஷ்ண மூர்த்தியை**யும் கண்டார். வெற்றி!

1940 03.10ல் 'விகடன்' முதல் கதையை வெளியிட்டு ஏழே ஏழு ரூபாய் சன்மானம் அளித்தது! அப்பொழுது அது பெரிய தொகை! அந்த ஆண்டு மொத்தம் 13 கதைகள் எழுதினார் "லட்சுமி" என்ற பெயரில்!

தமிழ் வாசகர் வட்டம் நல்லதொரு படைப்பிலக்கியவாதியை புகழுடன் விளங்கிய 'ஆனந்தவிகடன்" மூலமாகப் பெற்றது.

'50களில் என் ஒரு கரத்தில் **'கல்கண்டு'வும் 'கண்ணன் பயிலும் இருப்பான்.** மற்றொரு கரத்தில் 'விகடன்' சிரிப்பான். இதழ் வாங்கக் காசில்லாத போது அடுத்த வீட்டு கண்ணாடிக் காரர் **மொகிதீன் நாநா** இலவசமாகப் படிக்கத் தருவார்.

**'லட்சுமி'** என்ற மருத்துவக்கல்லூரி மாணவி எழுதிய. சிறுகதைகள், புதினங்களையும், மகப்பேற்று மருத்துவ நிபுணர் திரிபுரிசுந்தரி வழங்கிய மருத்துவ நூல்களையும் கரைத்துக் குடித்த சாமான்ய வாசகன் நான்.

அந்த வகையில், "தாய்மை" என்ற நூல் சிறந்த மருத்துவ நூலாகத் தேர்வாகி இலங்கையில் நடந்த ஒரு தமிழ் மாநாட்டில் விருதும் கௌரவமும் பெற வந்தவரை அணுகிப் பேசக் கூச்சப்பட்டவன் நான்!

இதே இலங்கை விஜயத்தில், அவர் தன் வாழ்க்கைத் துணைவரையும் கண்டு பிடித்த சங்கதி சில ஆண்டுகளுக்குப் பின்னரே அறிய வந்தேன்.

அந்த மனிதர் கண்ணன். (கண்ணபிரான்?) தென் ஆபிரிக்காவிலிருந்து மாநாட்டுக்கு வந்தவரை இந்த டாக்டரம்மா' வளைத்துப் பிடித்துக் கொண்டார்! அதுவொரு கலப்புத் திருமணமாக அமைந்தது.

ஆஸ்திக்கொரு பிள்ளையாக ஒரேயொரு மகன்மட்டுமே பிறந்தார் என்றும் தகவல்.

150 புதினங்களும், 08 சிறுகதைத் தொகுப்புகளும் 'லட்சுமி' தமிழ்ப் படைப் புலகத்திற்கு விட்டுச் சென்றிருப்பவை.

"ஒரு காவிரியைப் போல..." சாகித்ய விருது பெற்றது.

தேர்வுக்கு நூலைச் சமர்ப்பிக்க வற்புறுத்தி அனுப்பிவைத்தவர் 'தீபம்' நா. பார்த்தசாரதி.

மருத்துவ நிபுண அம்மா 'லட்சுமி' தமிழ்ப் படைப்புலகத்திற்கு செய்திருப்பதைப்போல வேறெந்த திருமதிகளும் அடைந்தார்களில்லை.

அன்னார் தன் நூறாம் ஆண்டை சொர்க்காபுரியில் கொண்டாடியதாக நம்பகரமாக இனிப்புச் செய்தி!

வாழ்த்தி மகிழ்கிறேன் அம்மா, ஒரு வாசகனாக, அதே நேரத்தில் தங்கள் வழியில் என் மகளாரையும் மகப்பேற்று நிபுணராக்கி நிம்மதியாக இருப்பதையும் அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*அடிக்குறிப்பு – இதில் தரப்பட்டுள்ள சில தகவல்கள், காலஞ்சென்ற எழுத்தாளர் விக்கிரமன் கட்டுரையிலிருந்து பெறப்பட்டவை. உதவி கனடா பசுபதி அய்யா!*

---




*ஜீப்பைப் பார்த்ததும்,*
*அப்படியே அசையாமல் நின்றான், சுகுமாரன்!*
*தரையில் பிடித்துப் போட்ட மீனைப் போல்,*
*துடிதுடித்தது*
*மலர்விழியின் இதயம்.*
*இன்னிக்கி நான் செத்தேன்'*
*மலர்விழியின் ஆழ்மனம்,*
*ஊளையிட்டது.*
*அதே நேரம்*
*ஜீப்பின் கதவுதிறந்து கொண்டது!*
*"ஏறு!"*
*குரல் மட்டும் கர்ஜித்தது.*
*நடுங்கும் இதயத்துடன்,*
*பரப்பரப்பை,*
*பாதங்களுக்கு கொண்டு வந்தாள்.*
*தொடர்ந்து,*
*ஜீப்பில் ஏறினாள் மலர்விழி,*
*அடுத்து,*
*காஜல் புயலைப் போல்,*
*சீறிப்பாய்ந்தது ஜீப்!*
*சுகுமாரன்,*
*என்ன நடந்த தென்று புரிந்து கொள்ள முடியாமல்,*
*சோலைக் கொள்ளை பொம்மையாக நின்றிருந்தான்!*
*ஜீப்புக்குள் ஏற்பட்டிருந்த அமைதியை,*
*மலர்விழியால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை.*
*ஜீப்புக்குள் ஏ.சி. இருந்தாலும்,*
*உள்ளே ஏற்பட்டிருந்த உஷ்ணத்தால்,*
*அவளுக்கு வியர்த்துக் கொட்டியது!*
*நேரம் செல்லச் செல்ல,*
*அவளின் இதயத்துடிப்பும் அதிகரித்துக் கொண்டேபோனது!*
*முதல் நாள்,*
*அமைச்சரின் காரில் ஏறிய போது கூட,*
*அவள் இப்படி பயந்து நடுங்கியதாக அவளுக்கு ஞாபகம் இல்லை.*
*தன் அருகில் அமர்ந்திருந்த அந்த அழகிய இளைஞனை,*
*ஓரக்கண்ணால் பார்த்தாள்.*
*கடற்கரையில் வைக்கப்பட்டிருக்கும் சிலையைப் போல்,*
*எவ்வித அசைவுமில்லை*
*பாதையையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார் அமைச்சர்.*
*அவர் ஒரு எரிமலையை போன்றவர் என்று அவளுக்குத் தோன்றியது.*
*அது,*
*எந்த நேரத்திலும் வெடித்துத் தீயைக் கக்கலாம்.*
*அவளுடைய உணர்வு களைப்புரிந்து கொள்ள வேண்டுமென்றால்,*
*அவள் முகத்தைப் பார்க்க வேண்டும்.*
*ஆனால்,*
*அவர்முகத்தை*
*நேரடியாகப் பார்ப்பதற்கு,*
*அவள் அச்ச மிகக் கொண்டாள்.*
*இதனால்,*
*ஜீப்பின் கண்ணாடி வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.*
*விரைந்து பிறந்து வந்த ஜீப்,*
*காலிமுகத்திடலுக்கு அருகில் இருந்த ஓர் ஓட்டலுக்கு முன்னால் வந்து நின்றது.*
*அமைச்சர் இறங்கி நடந்தார்.*
*மலர்விழி,*
*தூக்கிலிடுவதற்காக அழைத்துச் செல்லப்படும் தண்டனைக் குற்றவாளியைப் போல்,*
*அவர் பின்னால் நடந்து சென்றாள்!*
*அறைக்குள் வந்த அமைச்சர்,*
*கதவைச் சாத்தி விட்டு,*
*குட்டி போட்ட பூனையைப்போல்,*
*அப்படியும் இப்படியும்*

# ஆசை அறுபதுநாள் மோகம் முப்பது நாள் என்பது பழமொழி அமைச்சரும் போகிறார் போலும் அந்த வழி!



*விரைவாக நடந்து கொண்டிருந்தார்.*
*புலியின் முன்னால் பதுங்கி நிற்கும்,*
*புள்ளி மானைப்போல்,*
*சுகபோகமான அந்த பெரிய கட்டிலின் ஓர் ஓரத்தில்,*
*அமர்ந்திருந்தாள் மலர்விழி.*
*அவள்மீது,*
*தனது பார்வையை பதிய விடவே இல்லை அமைச்சர்.*
*சிறிது நேரத்திற்குப் பிறகு,*
*அறைக் கதவைத்தட்டி விட்டு உள்ளே வந்த ஓட்டல் சேவகன்,*
*குளிப் பானத்தட்டை,*
*மேசை மீது வைத்துவிட்டுச் சென்றான்.*
*ஒருகிளாசைக் கையில் எடுத்து மலர்விழியிடம் கொடுத்து விட்டு,*
*மற்றதை தனது கையில் எடுத்துக் கொண்டார்.*
*கையில் எடுத்துக்கொண்ட கிளாசில் இருந்த குளிர் பானத்தை.*
*மட மடவென்று, ஒரே மூச்சில் குடித்து விட்டு,*
*கிளாசை மேசையில் வைத்தார்.*
*ஆனாலும்,*
*மலர்விழியால் அப்படி குடிக்க முடியவில்லை!*
*ஒருவாய்தான் குடித்தாள்.*
*"எங்கபோனாய்...!"*
*இதுவரையில்,*
*பன்மையில் வந்த விளிப்பு,*
*முதல் முறையாக ஒருமையில் வந்தது!*
*அவர் பார்வை,*
*அவள் முகத்திலேயே குத்திட்டு நின்றது.*
*"அலுவலகத்தில் வேலை செய்யும் என் சக தோழிக்கு சுகமில்லை அவளைப் பார்க்கத்தான் போனேன்!"*
*வார்த்தைகள் பிசினாக ஒட்டிக் கொண்டு வந்தன.*
*"அப்ப அவன்?" குரலில்,*
*கோடை இடி,*
*"அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர்!" பதிலில்,*
*பனிமழை,*
*"ஓ... அப்போ இவ்வளவுக்கு நாளும் அவனோடுதான் ஊர் சுற்றி வந்தாயா?"*
*நான் எங்கேயும் ஊர், சுத்தப்போகல்ல!"*
*"என்னடி இல்ல... கடற் கரைகளுக்கும், புடவைகடைகளுக்கும் ஓட்டல்களுக்கும் போய் வந்தது. எனக்குத் தெரியாதென்றா நினைக்கிறாய்...*
*அமைச்சர் இப்படிச் சொன்னதும், மலர்விழிக்கும் கொஞ்சம் சூடாகியது.*
*"உங்களைப் போல் எல்லாரையும் நினைச்சிடா தீங்க... அந்த மனுஷன் ஓட்டல் வழிய என்னைய கூட்டிட்டு போகல்ல...!"*
*"ஓ...அப்போ... இப்போ நான்தான் கெட்டவனா... இன்னும் கொஞ்ச நாள்ள அவனுக்கு என்ன நடக்கப்போகுதுன்னு பாரு...!"*
*ஆள்காட்டி விரலை,*
*ஆட்டியபடியே அமைச்சர் அலறினார்.*
*அவர் இப்படிச் சொன்னதும்,*
*மலர் விழி உண்மையிலே பயந்து போய் விட்டாள்.*
*அமைச்சருக்கு ஆத்திரம் வந்தால்,*
*பயங்கர நாகத்தை விட அவர் கொடியவர் என்பது மலர் விழிக்குத் தெரியும்,*
*இதனால்,*
*தன்னால் சுகுமாரனுக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அவள் அஞ்சினாள்.*
*"தயவு செய்து அந்த அப்பாவியை எதுவும் செஞ்சிடாதீங்க!"*
*பணிவு அவள் வார்த்தைகளில்,*
*படர்ந்திருந்தது,*
*அதேநேரம்,*
*மலர்விழியின் கைபேசி அலறியது.*
*அதைக்கையில் எடுத்தாள் மலர்விழி.*
*விரைந்து முன்னால் பாய்ந்த அமைச்சர்,*
*மலர் விழியின் கையில் இருந்த அலைபேசியை பறித்தெடுத்தார்.*
*அவர்,*
*ஹலோ! என்றதும் மறுபக்கத்தில் கைபேசி துண்டிக்கப் பட்டது.*
*"நான் பேசியதும் போனை கட்பண்ணிட்டானா உன்னோட கள்ள நண்பன்!*
*என்று சொல்லிய படியே, கைபேசியை தூக்கி கட்டிலின் மேல் வீசினார் அமைச்சர்.*
*அவர் இப்படிச் சொன்னதும் மலர்விழிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.*
*"ஆமாம்... எனக்கிருப்பதெல்லாம் கள்ள நண்பன்மார் தானே... அன்றிலிருந்து நான் எல்லோருக்குமே கள்ள பொண்டாட்டி தானே"*
*அவள் வார்த்தைகளில்,*
*கோடை வெயில்!*
*"பொத்துடீ வாய்...!*
*கத்தியபடியே,*
*சப்பாத்துக்காலால் தரையில் உதைத்தார்.*
*"இவ்வளவு நாளும் நானும் வாயைப் பொத்திக் கொண்டுதான் இருந்தேன். இதுக்கு மேலும் ஒவ்வொருத்தர் கிட்ட கத கேட்டுட்டு என்னால் இருக்க முடியாது.... எந்தநாளும் உங்களோட கள்ள பொண்டாட்டியா என்னால இருக்க முடியாது...!"*
*"அதனால...!" புருவங்களை வில்லாக்கினார் அமைச்சர்.*
*"என்னைய கல்யாணம் கட்டிக்கோங்க...!"*
*"கலியாணம் கட்டிக் கொள்ளாட்டிலும் உனக்கு நான் என்ன குறை வச்சேன்... ம்... உனக்கு நான் செஞ்சது அதிகமாச்சி...!" என்று சொல்லிய படியே,*
*படாரென்று முன்னால் பாய்ந்து அவள் தலை மயிரைப் பிடித்து,*
*இழுத் தெடுத்தார்.*
*"எங்கே மறுபடி சொல்லு பார்ப்போம்!"*
*தலைமயிர் அவர் கையில் சிக்கி இருந்ததினால்,*
*மலர்விழி வேதனையால் துடித்தாள்.*
*"என்னைய விடுங்க!"*
*அவரது பிடியில் இருந்து விடுபடுவதற்கு,*
*போராடினாள் மலர்விழி ஆனாலும்,*
*அவர் பிடிவரவர இறுகியது.*
*அவள்,*
*முச்சுவிடமுடியாமல் தவித்தாள்.*
*கோபத்தால் துடித்தாள். அவரையும் வேதனைப் படுத்த வேண்டுமென்று அவள் முடிவு செய்தாள்.*
*"மத்தவங்களோட புரு ஷ னமார் எனக்கு வேணாம். எனக் கென்று ஒ ரு புருஷன் எனக்கு வேணும்... அவன்ன... நான் கலியாணம் கட்டிக்கப் போறேன்..."*
*தலைமயிரை அப்படியே இறுக்கிப் பிடித்தபடியே,*
*அவள் முகத்தை தன் பக்கம் திருப்பி,*
*"இதபாரு மலர்விழி... என்னய பத்தி உனக்கு நல்லாவே தெரியும்... என்னைய மிருகமாக மாத்திடாத நீ எனக்கு சொந்த மானவள். அதனால் உன்னைய வேறு எவருக்கும் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்... அதையும் மீறி ஏதாச்சும் நடந்தா உங்கரெண்டு பேரையும் கொன்னுடுவேன்...!"*
*அந்த அறையே அதிரும் படி கத்தினார் அமைச்சர்.*

(தொடரும்)



# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 34

தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்

**('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்|)**

### கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடன் கடைசிவரை வாழ்ந்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன்



ஈழத்தின் பிரபல எழுத்தாளராக விளங்கிய நீர்வை பொன்னையன் 26.03.2020 அன்று அமரத்துவம் அடைந்தவர். அவரது ஓராண்டு அமரத்துவ நினைவு அஞ்சலியாக இப்பத்தி அமைகிறது.

நீர்வை பொன்னையன் 1930ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் நீர்வேலி என்னும் விவசாயக் கிராமத்தில் இராமலிங்கம் இலட்சுமி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். நீர்வேலியிலுள்ள அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற அவர், பின்னர் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கிழக்கிலங்கையில் உள்ள சம்மாந்துறை முஸ்லிம் பாடசாலையில் பணியாற்றினார்.

பின்னர் இந்தியா சென்று கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று பி.ஏ. பட்டதாரியாகத் தாயகம் திரும்பினார். இவர் சென்ற காலத்தில், வங்காளத் தொழிலாளி வர்க்கத்தின் தீவிர போராட்டங்களிலிருந்தும் கலை, இலக்கிய இயக்கத்தின் செயற்பாடுகளிலிருந்தும் இவர் பெற்ற புரட்சிகர உணர்வும் அனுபவங்களும் இவரை படைப்பிலக்கியக் களத்திற்குள் பிரவேசிக்க உந்துதலாயிருந்தன.

1957இல் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் பல ஆண்டுகளாக வேலைதேடி அலைந்து வேலை கிடைக்காமையால் விவசாயியாகவே வாழ்ந்தார்.

இவர் எழுதிய முதலாவது சிறுகதையான பாசம்| யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் 1957இல் வெளியானது. 1960களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து கொண்டார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி மேடும்பள்ளமும் 1961இல் வெளியானது. காலக்கிரமத்தில் உதயம், பாதை, வேட்கை, நிமிர்வு, ஜென்மம், காலவெள்ளம், நினைவுகள் அழிவதில்லை, நீர்வை பொன்னையன் கதைகள் ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளியாகின. இவரது Devils and Demons சிறுகதை ஆங்கில மொழிபெயர்ப்பாகவும் Lengathugama சிறுகதை சிங்கள மொழிபெயர்ப்பாகவும் வெளிவந்துள்ளன.

நீர்வை பொன்னையன் நீர்வை, ஞானி ஆகிய புனைபெயர்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியதோடு பிறநாட்டு இலக்கிய மொழிபெயர்ப்புகளும் செய்துள்ளார். தேசாபிமானி, தொழிலாளி ஆகிய அரசியல் வாரப் பத்திரிகைகளின் ஆசிரிய குழுவில் பணியாற்றி ஆக்கபூர்வமான கட்டுரைகளை எழுதியுள்ளார். 1969ஆம் ஆண்டிலிருந்து 1983வரை அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1996இல் இருந்து விபவி மாற்றுக் கலாசார மையத்தில் தமிழ்ப்பிரிவின் இணைப்பாளராகச் செயற்பட்டு ஆக்க இலக்கியம் மற்றும் கலை சம்பந்தப்பட்ட விடயங்களில் பங்களிப்பைச் செய்துள்ளார்.

சிறுகதைத்துறைக்கு, அப்பால் நாட்டரியலிலும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார். உலகத்து நாட்டார் கதைகள் என்ற இவரது நூலில் 250 நாட்டார் கதைகள் அடங்கியுள்ளன. இவரது ஏனைய நூல்களாக முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் (2002), நாம் ஏன் எழுதுகின்றோம்? (2004) நினைவலைகள் என்பன வெளியாகியுள்ளன. இவர் இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள் என்ற நூலின் தொகுப்பாசிரியருமாவார். முற்போக்கு எழுத்தாளரான சமீமுடன் இணைந்து இவர் முற்போக்கு இலக்கியப் பேரவையை உருவாக்கினார். இந்த அமைப்பின் மூலம் பல நூல்களை வெளியிட்டார்.

இவரது பணிகளைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பு பல்கலைக்கழகம் 1998இலும் பேராதனைப்பல்கலைக்கழகம் 2009இலும் இலக்கிய விருதுகள் வழங்கிக் கௌரவித்தன. ஞானம் சஞ்சிகை தனது 62ஆவது இதழில் (ஜூலை 2005) இவரை அட்டைப்படமாக்கியது. இலக்கியத்துக்கு வழங்கப்படும் உயரிய தேசிய விருதான சாஹித்யரத்னா விருது இவருக்கு 2017இல் வழங்கப்பட்டது.

### உறவுகள் தொடர்கதை நாவல் – ஒரு புதுவகை படைப்பு முயற்சி

பொதுவாகவே நாவல்கள் ஒரு நாவலாசிரியராலேயே எழுதப்படுபவை. ஆனால் இந்த உறவுகள் என்ற நாவல் இருபது எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளது. 20 எழுத்தாளர்கள் சேர்ந்து ஒரு நாவலை எழுதுவது என்பது தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒரு தனித்துவமான முயற்சி. இந்த முயற்சிக்கு இயக்குவிசையாக விளங்கியவர் பிரான்ஸின் வாழும் கவிஞரும் எழுத்தாளருமான ரூபன்சிவா .



இந்த நாவலின் தீம் என்று சொல்லப்படுகிற கதைக்கரு உறவுகளுக்குள் இருக்கும் அன்புப் பரிமாற்றம் என்று குறிப்பிடலாம் இறந்துபோன மனிதர் குறித்த நினைவுகள், அந்த நினைவுகளைத் தாங்கும் மனிதர்க்கிடையிலான காதல், அன்பு, உறவுகள் குறித்த தடுமாற்றங்கள் போன்றவற்றை இந்த நாவல் விபரித்துச் செல்கிறது.

இந்தநாவலை எழுதிய எழுத்தாளர்கள் பிரான்ஸ், பின்லாந்து, பிரித்தானியா, சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, டென்மார்க் போன்ற நாடுகளில் வசிப்பவர்கள். இவர்களை இணைத்து அவர்களுக்கு நாவலின் கருவை விளக்கி அவர்களை எழுதவைத்து அவர்கள் எழுதும் அத்தியாயங்கள் தடம்புரண்டு போகாது நெறிப்படுத்தி நாவலின் விறுவிறுப்புக் குன்றாமல் எழுதவைப்பது என்பது ஒரு இமாயலய சாதனை. கடும் பிரயத்தனத்தோடு இதனைச் செய்திருக்கிறார் ரூபன் சிவா.

இந்த நாவலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் ஒரு எழுத்தாளர் விட்ட இடத்திலிருந்து இன்னொரு எழுத்தாளர் அஞ்சல் ஓட்டம் போன்று எழுதிச் சென்றுள்ளார். இந்த எழுத்தாளர்கள் வெவ்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஒத்த உணர்வுடன் ஒருமைப்பாட்டுடன் இந்த நாவலை எழுதியிருக்கிறார்கள். இந்த நாவலின் கதைக்களம் மற்றும் நாவல் ஒரு நேர்கோட்டில் சென்று முடிவடைதல், மொழிப்பிரயோகம், பண்பாட்டு அம்சங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் சிந்தாமல் சிதறாமல் சிறப்பாக அமைந்தமை போன்ற விடயங்களை நெறிப்படுத்தியிருக்கிறார் ரூபன் சிவா. அவரே இந்த நாவலின் முதல் அத்தியாயத்தையும் இறுதி அத்தியாயத்தையும் எழுதியுள்ளார்.

கொரோனாவால் உலகம் முடங்கிக் கிடந்த வேளையில் எழுத்தாளர்கள் பலரும் வீட்டில் முடங்கிக் கிடந்த வேளையில் அவர்களைக்கொண்டு எழுதவைத்து ஆக்கபூர்வமான ஒரு பணியை ரூபன்சிவா செய்திருக்கிறார்.

இந்த நாவல் ரூபன்சிவாவின் முகநூலில் வாரந்தோறும் தொடராகப் பதிவேற்றம் செய்யப்பட்டு ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவந்து பெருந்திரளான வாசகர்களைக் கவர்ந்தது.

இந் நாவலின் ஒவ்வொரு அத்தியாயங்களுக்கும் பொருத்தமான ஓவியங்களை கருணாகரன் ஆசிரியர் வரைந்திருக்கிறார். அட்டைப்படத்தை புகழ்பெற்ற தமிழக ஓவியரான புகழேந்தி வரைந்திருக்கிறார்.

இது ஒரு தனித்துவமான நாவல் என்பது இதன் சிறப்பு. இந்த நாவலை வெளிட்ட பூபாலசிங்கம் புத்தகசாலையினரும் பாராட்டுக்கு உரியவர்கள். 212 பக்கங்களைக் கொண்ட இந்த நாவலின் விலை ரூபா. 500 /=

### கனடா பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைகைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் அரசியல் பிரதிநிதிகள்




கனடா மத்திய அரசு பாராளுமன்றத்திற்கு முதன்முதலில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட தமிழ்ப்பெண்மணி ராதிகா சிற்சபேசன். இவர் தனது பாராளுமன்ற கன்னிப்பேச்சை தமிழில் ஆற்றிய பெருமைக் குரியவராவார்.

இவர் 2011 மே 2ஆம் திகதி நடந்த தேர்தலில் ஸ்கார்பரோ ரூச் ரிவர் என்ற தொகுதியில் புதிய சனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 18,856 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இவரே கனடா நாடாளுமன்றம் சென்ற முதல் தமிழர் ஆவார்.

இலங்கையில் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தை பிறப்பிட மாகக்கொண்ட ராதிகா, தனது ஐந்தாவது வயதில் கனடாவுக்குக் குடிபெயர்ந்தார். இவர் சிறு வயதிலேயே அங்குள்ள தமிழ் கற்பிக்கப்படும் பாடசாலையில் சேர்ந்து தமிழைக் கற்றார். ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் பட்டப் படிப்பை மேற்கொண்ட இவர், பின்னர் தொடர்ந்து கார்ல்டன் பல்கலைக்கழகத்தில் வர்த்தகவியலில் இளமாணிப் பட்டத்தைப்பெற்றார். அதன்பின்னர் ஷகுயின்ஸ்| பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டத்தையும் பெற்றார். இவர் ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ்மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும் செயற்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

ராதிகா, புதிய சனநாயகக் கட்சியில் 2004ஆம் ஆண்டில் இணைந்தார். அன்றில் இருந்து அக்கட்சியின் பல செயற்பாடுகளில் தீவிரமாகப் பங்குபற்றி வருகிறார்.

இவரை அடுத்து, மத்திய அரசு பாராளுமன்றத்திற்கு 2015இல் தெரிவுசெய்யப்பட்ட இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர். ஹரி ஆனந்தசங்கரி ஆவார். இவர் ஸ்காபரோ றூஜ்பார்க் தொகுதியில் தாராண்மைவாதக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். 2006ஆம் ஆண்டில் ஒஸ்குட் ஹோல் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றவர். உலகளாவிய நிலையில் மனித உரிமைக்காகக் குரல்கொடுக்கும் வழக்கறிஞராகத் தன்னை வளர்த்துக்கொண்டவர். மனித உரிமை தொடர்பாக ஐக்கிய நாடுகள்சபையின் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்ட இவர், கனடாவில் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்பவர். மேலே குறிப்பிட்ட இருவர் மட்டுமே இதுவரை காலத்தில் கனடா பாராளுமன்றம் சென்ற தமிழர்களாவர்.


***(இனி அடுத்த இதழில்)***

---





# படித்ததும் பகர்வதும் 38



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சிறுவர் நலன் காப்போம்



இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள்; நாட்டின் எதிர்கால தலைவர்கள். சிறுவர்களை அன்போடும், அரவணைப்போடும், கண்ணியத்தோடும் நடாத்த வேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள மிக முக்கியமான பொறுப்பாகும்.

தம் பிள்ளைகளாயினும், தம் குடும்பத்தின் பிள்ளைகளாயினும், தம் சூழலில் வாழும் சிறுவர்களாயினும் அவர்கள் அனைவரையும் ஒன்றுபோல் பரிவோடும், பாசத்தோடும், நேசத்தோடும், ஆதரிக்க வேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள கடமையாகும். இன்றைய காலத்தில் சிறுவர்களது உரிமைகள் முறையாக மதிக்கப்படுவதில்லை என்ற பாரிய குற்றச்சாட்டு நிலவுகிறது. ஒவ்வொருவரினதும் தனித் திறமைகளுக்கு ஏற்ப அனைத்து சிறுவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். கல்வி, சுகாதாரம் மற்றும் கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமையை சிறுவர்களுக்கு வழங்குவதும் அவசியம்.

பெற்றோர்களும், பெரியவர்களும் சிறுவர்களை தமது விருப்பப்படி, தாம் எதிர்பார்க்கும் முறையில் வளர்க்க முற்படுகிறார்கள். இதனால் சிறுவர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதோடு அவர்களது தனிப்பட்ட சுதந்திரமும் பாதிக்கப்படுகிறது. ஓடியாடி விளையாடி மகிழ வேண்டிய பருவத்தில் அதற்கு போதிய இடமளிக்காமல் படிப்பு மற்றும் வேலைகள், பொறுப்புகள் என அவர்களை கட்டாயப்படுத்தி, கட்டுப்படுத்துவது சிறந்ததல்ல. இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்றைய காலத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் எங்கும் பரவலாக காணப்படுகிறது. பிறர் மூலம் மட்டுமன்றி சொந்த உறவினர்கள் மூலமும் துஷ்பிரயோகம் நடைபெறுவது கவலைக்குரியது. இலங்கையில் ஒவ்வொரு இரண்டு மணித்தியாலங்களுக்கும் ஒரு சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாக ஆய்வு ஒன்று கூறுகிறது. பெரியோர்கள் இதனை தவிர்ப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் உரிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய அறிவை முறையாக சிறுவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்கள் எச்சரிக்கையாக இருப்பதற்கு வழிவகுக்கும்.

இவை போன்ற சிறுவர் நலனில் கவனிக்க வேண்டிய பல்வேறு விடயங்கள் உள்ளன. அவற்றை கவனித்து சிறுவர் நலன்காக்க ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்வோம்.

## நெஞ்சுக்கு நீதி

Sj ñž ° [ òi ¸ eqd ® ` g˝ X– m£ž f ñS ˆò.Obx d ® `
òi ¸ eqd ® ` g˝ Omh..f ñS ˆòU¬ ¥ı [š [ qha f q[ Q– ¸ e…

## நீத்தார் நினைவு

### 'திரை நிலவன்' ஏ. எஸ். எம். நவாஸ்



எமது நட்புக்குரியவரும், பிரபல ஊடகவியலாளரும், எழுத்தாளரும் கவிஞருமான 'திரை நிலவன்' ஏ. எஸ். எம். நவாஸ் எம்மைப் பிரிந்து ஓராண்டு நிறைவு பெற்றுள்ளது. இலக்கியவாதிகள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் என அனைவரோடும் மிக நெருக்கமாக, நட்போடு பழகிய அவரது நினைவுகள் இன்றும் அனைவரது உள்ளங்களிலும் பசுமையாகவே உள்ளன.

'மேமன் சத்தார்' என அன்போடு அழைக்கப்பட்ட பிரபல எழுத்தாளர் அப்துல் சத்தாரின் மகனாக. 1965 டிசம்பர் 03ம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் பிறந்த நவாஸ், ஒரு மேமன் சமூகத்தவராக இருந்தாலும் தமிழ் எழுத்துக்களால் மிகப் பிரபலமடைந்தார்.

1986ல் எழுத ஆரம்பித்த ஏ.எஸ்.எம்.நவாஸ், கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், சினிமா, விமர்சனம், ஆய்வு என அனைத்துத் துறைகளிலும் பங்களிப்பு செய்துள்ளார். தினகரன், வீரகேசரி, மித்திரன், தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளிலும், ப்ரியா, யாத்ரா, மல்லிகை, பார்வை, ப்ரிய நிலா, ஜனனி உட்பட பல்வேறு சஞ்சிகைகளிலும் எழுதி வந்தார். மித்திரன் வாரமலரில் 'கலாவானம்' பத்தியை தனது அந்திம காலம்வரையும் எழுதினார்.

இலங்கை வானொலி நிகழ்சிகளுக்கு ஆக்கங்கள் எழுதியும், நிகழ்சிகளில் நேரடியாக கலந்துகொண்டும் பங்களிப்பு செய்துள்ளார். பல தொலைக் காட்சி நிகழ்சிகளிலும் கலந்து சிறப்பித்துள்ளார்.

ஓலமிடும் உலகம், புதியபூக்கள், நந்தவனப் புஷ்பங்கள், யாகங்கள் போன்ற பல நூல்கள் இவரது பங்களிப்போடு வெளிவந்துள்ளன. சுகமான சிந்தனைகள், சிங்கள சினிமா வளர்ச்சி, களத்தூர் முதல் தெனாலி வரை, புதைந்த உண்மைகள் என்பன இவரது சுய நூல்களாகும்.

வலம்புரி கவிதா வட்ட வளர்ச்சியிலும் இவரது பங்களிப்பு பாரியதாகும். தனது அந்திம காலம்வரையும் வகவத்தின் மாதாந்த பௌர்ணமி கவியரங்குகளில் கலந்துகொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதன் செய்திகளை வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டினார்.

இலங்கையின் தமிழ் ஊடகத்துறையிலும், எழுத்துலகிலும் கலைத்துறையிலும் 'திரை நிலவன்' ஏ. எஸ். எம். நவாஸ் என்ற பெயர் என்றும் நிலைத்து வாழும்.


## புது வரவு

### ஆர உட்டுத் தேடுவதோ



இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள, இலக்கிய உலகில் பன்முக ஆளுமைகளைக் கொண்ட எழுத்தாளர், கிண்ணியா, பெரியாற்றுமுனை கலாபூஷணம் பீ. ரீ. அஸீஸ் எழுதியுள்ள கிராமியக் கவி நூல் 'ஆர உட்டுத் தேடுவதோ'.

இலக்கியத் துறையில் பல விருதுகளைப் பெற்ற பீ. ரீ. அஸீஸின் எழுத்துரு, வாய்மொழி உருவிலான இக்கவித் தொகுப்பினை வாசிக்கின்ற போது வீசுகின்ற கிராமிய மணம் பழைய கால கிராமத்துக்கே எம்மை அழைத்துச் செல்கின்றன. உணர்வுகள் மேலோங்கி நிற்கின்றது. எவ்வாறான கால சூழலில் இக்கிராமியக் கவிகள் பாடப்பட்டதோ, அத்தகைய விடயங்களை மீள ஞாபகப்படுத்துவனவாக இவை அமைந்துள்ளன.



கிராமிய, நாட்டார் பாடல்களின் தன்மை அதன் பண்புகள், ஓசைநயம், பாட இலகு, கவிச்சுவை என்பன குறையாமல் இதில் நாட்டார்/ கிராமியக் கவிகள் சொல்லப்பட்டுள்ளன. அதனால் படிக்கின்ற வாசக நெஞ்சங்கள் வித்தியாசமான அனுபவத்தை பெறுவார்கள் என்பது உறுதி.

பல்வேறு நாட்டார்/ கிராமிய கவி நூல்களை இலக்கிய உலகுக்குத் தந்து வளம் சேர்த்துள்ள கலாபூஷணம் பீ. ரீ. அஸீஸ் இந்நூலில் வித்தியாசமானதொரு அணுகுமுறையை கையாண்டிருக்கின்றார். தமது கிராமத்துச் சூழலை மையமாக வைத்தே இதிலுள்ள அநேகமான கவிகள் அமைந்துள்ளன. படிக்கவும் பாதுகாக்கவு உகந்த நூலாக இது விளங்குகிறது. கிராமியத்தை விரும்புவோருக்கு இது ஒரு பெருவிருந்தாகும்.

நூல்: ஆர உட்டுத் தேடுவதோ, நூலாசிரியர்: பீ. ரீ. அஸீஸ், வகை: நாட்டார் பாடல்கள், பக்கங்கள்: 76, வெளியீடு: பாத்திமா ருஸ்தா பதிப்பகம், விலை: ரூபா 200/=

## நலமே வாழ்வோம்

### உப்புப் பாவனையை குறைப்போம்



உப்பு பாவனையின் உண்மையான பாதிப்பு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, உலகம் பூராவும் உப்பு பாவனை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் சர்வதேச வாரம், மார்ச் 14ஆம் திகதி வரை நடைமுறை படுத்தப்பட்டது. இலங்கையில் உப்பு பாவனை தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இலங்கையில் 83 வீதமான மரணங்கள் தொற்றா நோயால் ஏற்படுகின்றன. அவற்றில் 34 வீதமானவை இருதய, இரத்த நாளங்கள் தொடர்பான நோய்களினால் நிகழ்கின்றன. இந்த மரணங்கள் இருதயநோய், பக்கவாதம், அதி உயர் குருதி அழுத்தம் போன்றவற்றினால் ஏற்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இவற்றுள் மிகவும் அவதானிக்கப்பட வேண்டிய விடயம் அதி உயர் குருதி அழுத்தம் ஏற்படுவதற்கான பிரதான காரணம், உணவில் அதிகமாக உப்பை பயன் பயன்படுத்துவதாகும். ஒருவர் நாளொன்றிற்கு எடுக்க வேண்டிய உப்பின் அளவு 5 கிராம் (ஒரு தேக்கரண்டி அளவு) என்பதாக உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ளது. ஆனால் இலங்கையில் ஒருவர் நாளொன்றிற்கு 9 கிராம் தொடக்கம் 12 கிராம் வரையிலான அதிகளவான உப்பை பயன்படுத்துவதாக கூறப்படுகின்றது.

விசேடமாக உப்பு பாவனையைக் குறைப்பதனால் ஒரு ஆண்டில் உலகில் ஏற்படுகின்ற மரணங்களில், 25 இலட்சம் மரணங்களைக் குறைக்கலாம் என்று சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தினால் விடுத்துள்ள அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நொறுக்குத் தீனி

ஒருவரது வித்தியாசமான கற்பனை. வருங்கால குழந்தைகளுக்கான "நவீன பாப்பா பாட்டு!". இது எப்படி இருக்கு????

ONLINEÈU ° Èq ¨| o k uº Èi uúi u
gÈOFFLINEÈU ° ÈU Œ í _u{ f Èi uúi u
FACEBOOKÈU ° È{ guó d j √ Èi uúi u
i ¨õ «ÈTWITTERÈU ° Èq ¨| o k uº Èi uúi u
_u| n k ¨º ÈY◊ öf Ÿ d õ ÈMOBILE PHONE
i ¨õ «È_h ≠ Èz _uº í ≤ ù Èg° n ÈWATSAPP
j u| n È... ◊ q ¿ ù ÈYOUTUBE
Yõ —Èq p í _Èi ° ôf √ z _u¢ Èi uúi u
LIKESi ò e ¨ÈW∂ ú{ i ô ¿ Èi uúi u
COMMENTÈi ò e ¨È_° ú{ i ô ¿ Èi uúi u
f √h ... ù ÈgSTATUSÈ| q Èi uúi u
U f h u° Èguz o ° n uù Èq ⊭ u≤ ù i uúi u



**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2021 மார்ச் 28 ஞாயிற்றுக்கிழமை



# கோழிகள் சித்திரவதை செய்யும் சிறை

தாய்லாந்தில் இருந்த குக்கி காய் என்ற சிறைச்சாலை மிகக் கொடுமையானது. சிறைக் காவலர்கள் கொடுமை செய்ய மாட்டார்கள். அங்கு கோழிகளின் கொடுமை தான் தாங்க முடியவில்லை.

சிறைச்சாலையின் கூரை திறந்தே இருக்கும். அதில் வலை கட்டப்பட்டு கோழிப் பண்ணை இருக்கிறது. கிழே இருக்கும் கைதிகளுக்கு நாள் முழுவதும் அந்த பறவையின் கழிவு, மழை போல் கொட்டிக் கொண்டே இருக்கும்.

தாய்லாந்தில் பறவை கழிவுகள் நல்ல சகுனமாம். அதற்காக அந்த கழிவிலேயே வாழ முடியுமா?

தாய்லாந்தின் லயிம் கடற்கரை பகுதியில் கட்டப்பட்டிருக்கும் இந்தச் சிறையில் பிரான்ஸ் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் கிளர்ச்சியாளர்களே அடைக்கப்படுவார்கள். கோழிக் கழிவின் நாற்றத்துடன் சிறிய சிறைக்கூண்டில் வாழ்வது பெரும் கொடுமை தான். நல்லவேளை இப்போது அந்த சிறை பயன்படுத்தப்படவில்லை.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# சிம்பாப்வே அரசாங்கத்தையே ஏமாற்றிய பெண்

பாறையில் இருந்து எண்ணெய் எடுப்பதாக பெண் ஒருவர் ஒட்டுமொத்த சிம்பாப்வே அரசையும் ஏமாற்றிய கதை சர்வாதிகாரி ரொபட் முகாபேவை வெட்கப்பட வைத்தது.

சிம்பாப்வே எரிபொருள் தட்டுப்பாட்டால் தத்தளித்துக் கொண்டிருந்த நேரம். எண்ணெய் எடுக்க எதையும் செய்யத் தயாராக இருந்தது சிம்பாப்வே அரசு. இதுதான் சந்தர்ப்பம் என்று புரிந்துகொண்ட மந்திரவாதி என்று கூறும் நொமட்டர் டகரிரா என்ற



பெண், தனது மந்திர சக்தியால் பாறையில் இருந்து எண்ணெய் வரவழைக்கிறேன் என்று அறிவித்தார்.



இதனை நம்பி சிம்பாப்வே அமைச்சர்கள், நாட்டின் உளவுப் பிரிவு, பொலிஸ், இராணுவத்தின் உயர் அதிகாரிகள் எல்லோரும் பெரிய பாறை ஒன்றுக்கு முன் திரண்டார்கள். அந்தப் பெண்ணும் சொன்னது போல், மந்திரம் ஒன்றை கூறி பாறையில தட்டு விட்டார். என்ன ஆச்சரியம் எண்ணெய் கொட்ட ஆரம்பித்தது.

அந்த மந்திரவாதி புகழின் உச்சத்திற்கே சென்றுவிட்டார். மகிழ்ச்சி அடைந்த அரசு அவருக்கு 1.7 மல்லியன் பௌண்ட் பரிசு வழங்கியது மாத்திரம் அல்ல, ஒரு பண்ணை, கார்கள், காவலர்கள் என்று எல்லாவற்றையும் வழங்கியது. ராஜ வாழ்க்கை வாழ்ந்தார் அந்த ஏமாற்றுப் பெண்.

ஆனால் அந்தப் பொய் நீண்ட காலம் நிலைக்கவில்லை. பாறைக்குள் எண்ணெயை ரகிசியமாக வைத்து அதனை வெளியே எடுத்துக் காட்டி இருக்கிறார் அந்தப் பெண். ஏமாற்று வேலைக்கு 39 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

# போலி பொலிஸ் நிலையம் வைத்திருந்த கில்லாடி

பொலிஸார் போன்று சீருடை அணிந்து குற்றச்செயலில் ஈடுபட்டவர்களை பார்த்திருக்கிறோம், ஆனால் அமெரிக்காவில் ஒருவர் போலியாக பொலிஸ் நிலையம் ஒன்றையே நடத்தி இருக்கிறார். ஹென்ரி டெர்ரி என்ற அந்த ஏமாற்றுக்காரர் பொலிஸ் உடை, பொலிஸ் கார் ஆயுதங்கள் வைத்திருந்தார் என்ற மட்டில் சாதாரணமான ஒரு ஏமாற்றுக்காரர் தான். ஆனால் அவர் தனியே போலி பொலிஸ் நிலையம் ஒன்றையே நடத்தி இருக்கிறார் என்றால் எத்தனை பெரிய ஏமாற்றுக்காரராக இருக்கிறார். அந்தப் பொலிஸ் நிலையத்தில் குற்றவாளிகளின் பதிவு ஆவணம், குற்றங்களை பதிவு செய்வது மாத்திரமல்ல சிலரை விசாரணை செய்து கைது செய்யப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

அந்தம் போலி பொலிஸ்காரர் ஆட்களை ஏமாற்றி பணம்பறித்தது, கற்பழிப்பு, துன்புறுத்தல் குற்றங்களிலும் ஈடுபட்டு கடைசியில் உண்மையான பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.




# இரண்டரை ஆண்டுகள் நீடித்த விக்கல்



விக்கல் வருவது வழக்கம் தான். அதனைப் போக்க என்னவெல்லாம் செய்வார்கள். மூச்சை அடக்கிப் பிடிப்பது, இடைவிடாது தண்ணீர் குடிப்பது என்ற சாதாரண வைத்தியங்கள் தவிர, திடீரென்று கன்னத்தில் அறைவது போன்ற அதிர்ச்சி வைத்தியங்களும் உண்டு. சிலர் பழைய கோபத்திற்கு அடித்துவிட்டு, ஏன் என்று கோபத்தோடு கேட்டால், "விக்கல் நின்று விட்டது பார்" என்று கூறி தப்பிக்கொள்வார்கள்.

ஆனால், பிரிட்டனின் கிறிஸ் சான்ட்ஸிற்கு இந்த அதிர்ச்சி வைத்தியம் எதுவும் சரிப்பட்டுவரவில்லை. 2010 ஆம் ஆண்டு அவருக்கு வந்த விக்கல் இரண்டரை ஆண்டுகள் இடைவிடாது இருந்தது.

மருத்துவர்களும் எத்தனையோ சிகிச்சை செய்து பார்த்தார்கள் விக்கல் நிற்பதாக இல்லை. கடைசியில் தான் அவரது மூளையில் கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கட்டிக்குத் தான் இந்த விக்கல் இருந்திருக்கிறது. கட்டியை அகற்றியதும் விக்கல் நின்றுவிட்டது. உண்மையில் சான்ட்ஸிற்கு வந்த விக்கல் அவரின் உயிரையே காத்தது.

# உலக சிக்கலை தீர்ப்பதற்கான ஒரு படிநிலை!

## பிளாஸ்டிக்கை தின்னும் மெழுகு புழுக்கள்





**உலகம் முழுக்க, ஒவ்வொரு நிமிடமும் சுமார் 2 மில்லியன் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப்படுகின்றன. இப்படியாக கடந்த பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு, குவிந்துள்ள பிளாஸ்டிக் குவியல்களை கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. பிளாஸ்டிக்குகள் மிகவும் ஆபத்தானவைகள், அதை பயன்படுத்துவதை குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் கீழ், அரசாங்கங்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டின் மீது தடை போன்ற சட்டங்களை கொண்டு வந்த நிலைப்பாட்டில், விஞ்ஞானிகள் ஒரு தீர்வை கண்டுபிடிக்க முயற்சி செய்து வந்தனர். அது தற்போது வெற்றி கண்டுள்ளது.அதுவும் புழுக்களின் உதவியுடன்!.**

பிளாஸ்டிக் புதைகுழியை எதிர்த்துப் போராடுவதற்கு உதவும் இந்த புழுக்கள் உண்மையில் மெழுகுப்புழு என்று அழைக்கப்படும் கேட்டர்பில்லர்கள் ஆகும். இதற்கு முன்னர் வளர்ப்பு வகையை சார்ந்த பல்லிகளுக்கு உணவாகவும், சில ஆராய்ச்சிகளில் பாலூட்டிகளுக்கு மாற்றாகவும் பயன்படுத்தப்பட்டு வந்த இந்த புழுக்கள், உலகின் அழிவை தடுக்க உதவும் என்கிற விடயமானது சமீபத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

### கிரேட்டர் மெழுகு பூச்சி

தேனி கூடுகளில் உள்ள மெழுகை உண்பதற்காக மெழுகு புழுக்கள் வருவது உண்டு. இந்த புழுக்கள் இறந்த தேனீக்களின் தோலையும், மகரந்தங்களையும், தேன் கூடுகளையும் கூட விட்டு வைப்பதில்லை. இந்த புழுக்கள் தேனி வளர்ப்பில் பெரிய தொல்லைகளை கொடுக்கும். இந்த மெழுகு புழுக்கள் பூச்சிகளாக (*moth*) பறந்து செல்லும். மூன்று வகையான பூச்சிகள் உலகில் காணப்படுகின்றன. லெஸ்ஸர் மெழுகு பூச்சி (*lesser wax moth – Achroia grisella*), கிரேட்டர் மெழுகு பூச்சி (*Greater wax moth – Galleria mellonella*), இந்தியன் மீல் பூச்சி (*Indian meal moth – Plodia interpunctella*). இதில் கிரேட்டர் மெழுகு பூச்சி பிளாஸ்டிக்கை தின்று பிளாஸ்டிக் மாசுபாட்டிற்கு எதிராக போராடும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



இந்த கம்பளிப்பூச்சிகளுக்குள், பிளாஸ்டிக் செரிமானம் அடைவது தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது. தேனீ வளர்ப்பவர் மற்றும் பேராசிரியர் ஆன பெட்ரிக்கா பெர்டோச்சினி (*Federica Bertocchini*) என்பவர் ஒரு பிளாஸ்டிக் பைக்குள் இந்த மெழுகு புழுக்களை போட்டு வைக்க, சிறுது நேரம் கழித்து அந்த பிளாஸ்டிக் பையில் பல துளைகளை கண்டுள்ளார். இவ்வண்ணமே இந்த புழுக்களால் பிளாஸ்டிக்கை உண்ண முடியும் என்கிற உண்மை வெளிப்பட்டுள்ளது. பின்னர், சுமார் 100 மெழுகு புழுக்களைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் பையைச் சேதப்படுத்தும் அடிப்படையின் கீழ் ஆராய்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. சுமார் 40 நிமிடங்களுக்கு பிளாஸ்டிக் பையில் ஓட்டைகள் விழ தொடங்கின, சுமார் 12 மணி நேரத்திற்குப் பிறகு பிளாஸ்டிக்கின் வெகுஜனத்தில் 92 மில்லிகிராம் குறைந்து இருந்தது. இந்த ஆராய்ச்சியின் கீழ், மெழுகு புழுக்கள் உண்மையில் பிளாஸ்டிக்கின் வேதியியல் பிணைப்பை உடைக்கும் திறனை கொண்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.


## பிறந்த நாள் வாழ்த்து



உங்கள் அபிமான செந்தூரம் இதழில் உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க தீர்மானித்திருக்கிறோம். குழந்தைகளின் அழகிய நிழற்படம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் களமமைத்துக் கொடுக்க தயாராக இருக்கிறோம். குழந்தையின் முழுப் பெயர், பெற்றோரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**பிறந்தநாள் வாழ்த்து, செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல. 834, கொழும்பு.**
**Senthooramtkn@gmail.com**

செந்தூரம் பிறந்த நாள் பகுதிக்கான உங்கள் அன்புச் செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.


**குழந்தையின் மொழி**
**மழலை அருவியாய்**
**கொட்டும் போது**
**அதன் முன் இயற்கை**
**அருவி கூட**
**தோற்றும் போகுமே...!!**



# பாம்பேய் மனிதன் ஏன் கல்லானான் ?

**கடந்தவாரத் தொடர்ச்சி**

இந்த எரிமலை சீற்றத்தால் பாம்பேய் நகரத்துடன், ஹெர்குலேனியம், ஒப்லொன்டிஸ் போன்ற நகரங்களும் எரிமலை சாம்பலால் மூழ்கடிக்கப்பட்டது.. கீழே வெசுவியஸ் எரிமலை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட இடம் வரைபடத்தில் நிழலிட்டு காட்டப்பட்டுள்ளதை கவனித்தால் நன்கு புரியும். இம்மக்கள் கப்பல் மூலம் தப்பிக்க வழி இருந்தும் தப்பிக்க முடியாமல் போனதற்கு முக்கிய காரணம் பலத்த காற்றின் காரணமாக $CO_2$ கலந்த எரிமலை புகை விரைவில் அங்கு பரவி இவர்களை நகர முடியாமல் செய்துவிட்டது.




சில நூறு ஆண்டுகள் ஓடியது. எரிமலை சாம்பலினால் எரிமலையை ஒட்டியுள்ள நிலப்பரப்பு வளமிக்க மண்ணாக மாறி செடி, கொடி, மரங்கள் வளர்ந்து "பச்சைப்பசேல்" என்று காட்சியளித்ததால் வெசுவியஸ் எரிமலை ஏற்படுத்திய அழிவை காலப்போக்கில் மக்களும் மறந்தனர். அது மட்டும் இல்லாமல் இவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டும் அங்கு மக்கள் இன்னமும் பெரும் அளவில் வாழ்ந்த வண்ணம்தான் இருக்கின்றனர். இத்தாலி நாட்டின் வெசுவியஸ் எரிமலையை ஒட்டியுள்ள நகரங்களின் இன்றைய நிலை கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக மண்ணுக்குள் உறங்கி கொண்டிருந்த பாம்பேய்நகரமானது, கி.பி 1748 இல் புதை பொருட்கள் தோண்டும் குழுவால் புதையலுக்காக பாம்பேய்அமைந்த பகுதியில் தோண்டுகின்றனர். ஆனால் புதையலுக்கு பதிலாக சாம்பலால் மூடப்பட்ட எலும்பு கூடுகள்தான் கிடைக்கிறது. இதனால் அந்நாட்டு அரசானது தொல்லியல் ஆய்வுக்கு அந்த இடத்தை உட்படுத்துகின்றனர். பல தொல்லியல் ஆய்வாளர்கள் ஆய்வு செய்கின்றனர். முதலில் கட்டடங்களும், பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டது, பல ஆண்டுக்கு பின்பு தான் இந்த மனித எலும்பு கூடுகள் பலவற்றை கண்டுபிடித்தனர்.



**உயிர் பயத்தில் இறைவனிடம் பிரார்த்தனை செய்தபடி சோகமாக அமர்ந்த நிலையில் இறந்த ஒரு இளைஞரின் காட்சி தான் இது.**

இந்த எரிமலை விபத்தில் வரலாற்று ஆய்வாளர்கள் 20000த்திற்கும் அதிகமானவர்கள் இறந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். ஆனால் இதுவரை 1500க்கும் அதிகமான எலும்பு கூடுகள் மட்டும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

1800 ஆண்டுகள் ஆகியும் இந்த எலும்புக் கூடுகள் எரிமலை சாம்பலினால் போர்த்தப்பட்டு பாதுகாப்பாக இருந்துள்ளதுதான் ஆச்சரியம். அந்த சாம்பலின் வெப்பத்தாலும், சாம்பலில் உள்ள உப்புக்களாலும் இவை மம்மிக்கள் போன்று பாதுகாக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இருப்பினும் பல மனித எலும்பு கூடுகள் சிதைவடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது....

மற்றபடி இங்கே கேள்வியில் கேட்டுள்ளது போன்று பாம்பேய்மக்கள் கல்லாக எல்லாம் மாறவில்லை.



**ஒரு தாய் தன் குழந்தையை கடைசியாக தன் மீது சுமந்த வண்ணம் இறந்துள்ளார்.**

மாறாக கல்லாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அது எப்படி கல்லாக மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்கிறீர்களா.

வரலாற்று ஆய்வாளர்கள் எரிமலை சாம்பலில் புதையுண்ட பாம்பேய்நகரை அகழ்வாராய்ச்சி செய்த போது, எரிமலை சாம்பலினால் மூடப்பட்டு பாதுகாக்கப்பட்ட மம்மிக்கள் போன்ற மனித எலும்பு கூடுகளை கையாளும் போது சேதம் ஏற்படாமல் பாதுகாக்கும் பொருட்டு பாரிஸ் சாந்துவை(plaster of paris) கரைத்து அந்த மனித எலும்புக் கூடுகள் மீது பூசி மோல்டிங் செய்து விட்டனர். மேலும் இது பாம்பேய்நகர மக்கள் தங்களது கடைசி



**கண்டுபிடிக்கப்பட்ட துரித உணவகம்**

நேர உயிர் போராட்டத்தை விளக்கவும் வழிவகுக்கும். ஆதலால் தொல்லியல் ஆய்வாளர்கள் பாரிஸ் சாந்துவை தங்களது ஆய்வுக்கு ஒரு காரணியாக பயன்படுத்தியுள்ளனர். ஆய்வாளர்கள் பாரிஸ் சாந்துவை காலம் காலமாக பயன்படுத்தியும் வருகின்றனர்.... கீழே உள்ள படம் அதற்கான விளக்கத்தை தெளிவாக காட்டும்,




பாம்பேய்மக்கள் இறக்கும் போது அடைந்த வலியையும், வேதனையையும் பாரிஸ் சாந்து சேர்மத்தை பயன்படுத்தி மோல்டிங் செய்து ஆய்வாளர்களால் காட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்களை பார்க்கும்போது கல் நெஞ்சத்தையும் உருக வைத்துவிடும்.

270 ஆண்டுகளாக இத்தாலியில் தொடரும் இந்த தொல்லியல் ஆய்வானது இன்றும்



**தம்பதியினர் இருவர் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிய வண்ணம் இறந்து போன காட்சிதான் இது.**

தொடர்ந்த வண்ணம்தான் உள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டில் கூட பாம்பேய்நகரில் துரித உணவகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய சிற்பக்கலையுடன் ஒத்துப்போகும் யானைத் தந்தத்துடன் கூடிய இலட்சுமி சிலை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது...இன்று வரையில் கலை அரங்கம், விளையாட்டு கூடம், உணவு விடுதி, நூலகம், கோவில்கள், டைல்ஸ் பதிக்கப்பட்ட மாட மாளிகைகள், கண்கவர் ஓவியங்கள், சிற்பங்கள், பாண்டங்கள் என ஆய்வாளர்கள் பாம்பேய்நகரில் புதைபொருட்களை கண்டுபிடித்த வண்ணம் உள்ளனர். ரோம பேரரசு செல்வ செழிப்பாக வாழ்ந்



**வலியால் ஒரு அறையில் குழந்தைகள் முதற்கொண்டு துடித்து இறந்துபோன காட்சியை இறக்கும் தருவாயில் உள்ள ஒரு நபர் வேதனையுடன் பார்க்கும் காட்சிதான் இது..**

தது என்பதற்கு இவை எல்லாம் அடையாளங்களாக காட்சியும் படுத்தியுள்ளது இத்தாலிய அரசு. உலக நாடுகள் பல இந்த ஆய்விற்காக ஆதரவு கரம் நீட்டியுள்ளது. UNESCOவும் இந்த பாம்பேய்நகரை உலக பாரம்பரிய களமாக அறிவித்து பெருமை சேர்த்துள்ளது. ஆதலால் முக்கியமான உலக சுற்றுலா தளங்களில் இத்தாலியில் உள்ள இந்த பாம்பேய்நகரமும் ஒன்று என்றால் அது மிகையாகாது. ஆண்டு ஒன்றிற்கு கிட்டத்தட்ட 2.5 மில்லியன் சுற்றுலா பயணிகள் இங்கு வந்து பார்வையிட்டு செல்கின்றனர். கோராவாசிகள் யாரேனும் வெளிச்சுற்றலா செல்ல முடிவு செய்திருந்தால் இந்த இடத்திற்கு கண்டிப்பாக சென்று வாருங்கள்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



தந்தை: எக்ஸாம் ஹாலிலே தூங்கிட்டு வரேன்னு சொல்றியே, வெக்கமாயில்லை.



மகன்: நீங்கதானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னு முழிச்சுட்டு இருக்காதேன்னு சொன்னீங்க...








"இந்த மிச்சர் பாக்கெட் என்ன விலை?"

"பத்து ரூபா."

"லூசுன்னா எவ்ளோ?"

"எல்லாருக்கும் ஒரே விலை தான்பா."




கல்யாணம் ஆனவனுக்கு அடி விழுதேனு கவலை..!

கல்யாணம் ஆகாதவனுக்கு முடி விழுதேனு கவலை...!!

"அக்கம் பக்கத்துலே கடன் வாங்கியாவது இப்ப சினிமா பார்த்தாகணுமா?"

"படம் எடுக்கறவங்களே கடன் வாங்கித் தாங்க எடுக்கறாங்க. அதனால இது ஒண்ணும் தப்பில்லே!"







ஆசிரியர் : கோபால், உன்னுடைய அப்பா என்ன வேலை செய்கிறார்?

மாணவன் : என் அம்மா சொல்லும் வேலையை.

ஆசிரியர் : ???...

மனைவி : டிபன் வேணுமா?

கணவன் : சாயஸ் இருக்கா?

மனைவி : ரெண்டு இருக்கு

கணவன் : என்னென்ன?

மனைவி : வேணுமா? வேண்டாமா?

# பக்தி எழுத்துக்குள் ஆய்வு தருகிறது ராதாமேத்தாவின் உள்ளத்தில் வைப்போமா...?

**நூலாசிரியர் என்ற புதிய பரிணாமம் ஒன்றுக்குள் காலடி பதிக்கும் கலைஞர், பத்திரிகையாளர், தேசஅபிமானி ராதாமேத்தா தனது எண்ணக்கிடக்கைகளை எழுத்துருவாக்கி பத்திரிகைளில் எழுதிய பத்தி எழுத்துகளை 'உள்ளத்தில் வைப்போமா..?' என்ற தலைப்பில் நூலாக வெளியிட முன்வந்துள்ளார்.**

இந்த நூல் வெளியீடு இன்று 28ஆம் திகதி கொழும்பு11 கதிரேசன் வீதியில் அமைந்துள்ள கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இத்தகைய தருணத்தில் அவரது இந்த முதல்முயற்சி குறித்த அவரது கருத்துகளை வாசக உள்ளங்க ளுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்..

**கேள்வி:** உங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு தாமதமான முயற்சி என்றே கருதுகின்றோம். இது குறித்து.

**பதில்:** உண்மைதான் நூலுருவாக்க முயற்சி என்பதில் நான் கூடிய கவனம் செலுத்தவில்லை.. இதற்கு ஒரு காரணியாக அமைந்தது எனது பத்திரிகைத் தொழில்துறை எமது கருத்துக்களை அவ்வப்போது உடனுக்குடன் பத்திரிகைளில் சொல்லக்கூடிய வாய்ப்புகள் இருந்த காரணத்தினால் நூல் உருவாக்க முயற்சி என்பதில் கூடியகவனம் செலுத்தவில்லை. அப்படியாயின் இப்போது ஏன் இந்த முயற்சி என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். இதற்கும் காரணம் இருக்கிறது. நான் பத்திரிகைகளில் கலைத்துறை குறித்த ஆக்கங்களைப் பெரும்பாலும் புனைப் பெயர்களிலேயே எழுதி வந்தேன். இதில் அடையாளப்படுத்தல் என்பது தவறிப் போகின்ற நிலையிருப்பதை சமகாலத்தில் உணர முடிந்தது. இந்த வேளையில்தான் புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவனர் ஹாசிம் உமர் எனக்கு அளித்த உற்சாகம் எனது முதல் நூலாக்கத்தை உருவாக்க வழிசமைத்தது.

**கேள்வி:** புனைப்பெயர்களில் எழுதிவருவதாக குறிப்பிட்டீர்கள் எந்தெந்த பெயர்களில் நீங்கள் இதுவரை எழுதிவந்துள்ளீர்கள்..?



**பதில்:** கலைரிஷி, ராகவி, நாச்சியூரான், சொல்லாளன் என்ற பெயர்களில் எழுதி வந்துள்ளேன்.

**கேள்வி:** நல்லது கலைத்துறையின் பல அம்சங்களில் நீங்கள் பங்களிப்பு செய்தி ருக்கின்றீர்கள் அவை பற்றி

**பதில்:** நான் ஒரு இசைத்துறை குடும்பத்தை சேர்ந்தவன் எனது பாட்டனார் ஆர்மோ னியம் மற்றும் தபேலா வாத்தியக் கலைஞர், எனது சிறிய தந்தையார் இலங்கை யின் தமிழ் இசைக்குழு வரலாற்றின் ஸ்தாபகர் மற்றும் திரைப்பட இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன். இந்த பின்னணியில் வளர்ந்தாலும் இசைத்துறையை விட நாடகத்துறையின் மீதே எனக்கு நாட்டம் அதிகம் இருந்து. எனது 12 ஆவது வயதில் 'வாசிற்றிவனிதை' என்ற நாடகத்தில் நான் நடிகனாகச் சபை ஏறினேன். அதைத் தொடர்ந்து வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தோடு இணைந்து வீரமைந்தன், மிஸ்டர் கந்தப்பு, சொல்லப்பிள்ளை போன்ற பல்வேறு நாடகங்களில் நடித்தேன். இதன் தொடர்ச்சியாக முதன் முதலாக 'மாமன்மகள்' என்ற நாடகத்தை எழுதி. இயக்கினேன். இக்காலவேளையில் முதன் முதலாக கருணா வில்லிசைக் குழுவில் தாளவாத்தியக் கலைஞனாக அறிமுகமானேன். பின்னர் எனது சிறிய தந்தையாரின் கண்ணன் கோஷ்டியில் தாளவாத்தியக் கலைஞானாக செயல்பட்டேன். இந்த அடிச்சுவட்டில் 1980ஆண்டு கொழும்பில் புதிய அலை கலை வட்டம் என்று அமைப்பை உருவாக்கி அதன்மூலமாக ஊன்றுகோல், மோகனராகம், சக்கரங்கள் சுழன்றால், பாவச்சின்னம்,சங்கமங்கள்,புதியசுவடுகள், விலைபோகும் வாலிபங்கள், அண்மையில் வரம்பு போன்ற நாடகங்களை எழுதி இயக்கினேன். தொடர்ந்து ஒலிஒளி என்ற அம்சம் தலைநகரில் பிரபலம் பெற்றதால் சங்கீதாலயா, திரைப்பிரிய என்ற பெயரில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தினேன். இதனூடாக நடன அமைப்பாளர் என்ற அம்சமும் ஒளியமைப்பாளர் என்ற சிறப்பும் ஏற்பட்டது.

**இந்த நூலின் உள்ளடக்கங்கள் எம்மைவிட்டு மறைந்து சென்றுள்ள கலைகளையும், தொடர்ந்து மறைந்து கொண்டிருக்கும் கலைகளையும் குறித்துப் பேசுகின்றன. குறிப்பாக நான் இரண்டற மூழ்கிக்களித்த கலைகளின் இன்றைய நிலை குறித்த ஏக்கங்கள்; இங்கு பத்திஎழுத்தாக மட்டுமின்றி ஒரு ஆய்வாகவும் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளவேண்டிய அவசிய தகவல்கள் என்ற வரைமுறைக்குள்ளும் உட்பட்டவை என்பதையும் சுட்டுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.**

**கேள்வி:** உங்களது பத்தி எழுத்துத்துறை ஆர்வம் எப்போது ஏற்பட்டது?





**பதில்:** எனது 17ஆவது வயதில் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த ‘காந்திஜியும் கஸ்தூரிபாவும்;’ என்ற ஆக்கம் மூலம் ஏற்பட்டது. பின்னர் எனது எழுத்து முயற்சிகள் சிந்தாமணி, தினகரன் வீரகேசரி பத்திரிகைள் மூலமாக வெளிவந்தன. இவற்றின் ஊடாக எனது கவிதை ஆக்க முயற்சிகள் மேம்பாடு கண்டன. இத்துடன் மெல்லி சைப்பாடல்களை எழுதும் ஆர்வமும் ஏற்பட்டது. 1991ஆம்ஆண்டு நம்நாட்டு தமிழ் கலைஞர்களுக்காக ஒரு சஞ்சிகையை வெளியிடவேண்டும் என்று விருப்பில் ‘கலைவிழி’ என்ற பெயரில் ஒரு மாதாந்த இதழை ஆசிரியனாக இருந்து வெளியிட்டேன். பின்னர் 2001ஆம் ஆண்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ‘காங்கிரஸ்’ பத்திரிகையின் ஆசிரியனாக செயற்பட்டேன். இதன் தொடரச்சியே என்னை 2003இல் ‘சுடர்ஒளி பத்திரிகையின் செய்தி ஆசிரியராக 7 ஆண்டுகள் பணி புரியவும் பின்னர் 2011 முதல் வீரகேசரி வாரவெளியீட்டின் செய்தி ஆசிரியராக நான்கு ஆண்டுகள் பணிபுரியவும் செய்தது. தொடர்ந்து எனது சொந்து முயற்சியில் ‘தினமகுடி’ என்ற மாத சஞ்சிகையையும் பின்னர் ‘வரணம்’ என்ற வாரஇதழையும் ஆசிரியனாக இருந்து வெளியிட்டேன். தொடந்து 2016 முதல் சுடர்ஒளியின் வார இதழில் பொறுப்பாசிரயராகவும் வலம் வரச் செய்தது.

**கேள்வி:** நடிகர், நாடகாசிரியர், இசைக் கலைஞர், நாடகஇயக்குனர், நடன அமைப் பாளர், ஒளிஅமைப்பாளர், கவிஞர், பாடலாசிரியர், பத்திரிகையாசிரியர் போன்ற ஒன்பது அம்சங்களை குறிப்பிட்டுள்ளீர்கள் இதைவிட வேறு ஏதும் உள்ளதா..?

**பதில்:** உண்டு சிறுகதை எழுத்தாளர், ஒவியர், சிற்பக்கலைஞர், சமூகசேவையாளர், தற்போது நூலாசிரியர்.

**கேள்வி:** மொத்தம் 14 கலைத்துறைகளில் சிறப்புகளை கொண்டுள்ள தாங்கள் உண்மையில் பல்துறை கலைஞர்தான் இந்த வகையில் உங்களது இந்த நூலின் உள்ளடக்கம் எவை பற்றி பேசுகின்றன.

**பதில்:** இந்த நூலின் உள்ளடக்கங்கள் எம்மைவிட்டு மறைந்து சென்றுள்ள கலைகளையும், தொடர்ந்து மறைந்து கொண்டிருக்கும் கலைகளையும் குறித்துப் பேசுகின்றன. குறிப்பாக நான் இரண்டற முழ்கிக்களித்த கலைகளின் இன்றைய நிலை குறித்த ஏக்கங்கள்; இங்கு பத்திஎழுத்தாக மட்டுமின்றி ஒரு ஆய்வாகவும் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளவேண்டிய அவசிய தகவல்கள் என்ற வரைமுறைக்குள்ளும் உட்பட்டவை என்பதையும் சுட்டுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

**நன்றி உங்கள் முயற்சிகள் மேன்மேலும் சிறக்க எமது**







## ராதாமேத்தாவின் நூல்வெளியீடு கொழும்பில் இன்று

கலைஞர், பத்திரிகையாசிரியர், புதிய அலை கலை வட்டத்தின் நிறுவுனர் போன்ற பல்வேறு தகமைகளைக் கொண்ட ராதாமேத்தாவின் முதல் நூலாக அவர் பத்திரிகைளில் எழுதி வெளிவந்த கலைத்துறை சார்ந்த கட்டுரைத்தொகுப்பான “உள்ளத்தில் வைப்போமா? என்ற நூலின் வெளியீடு இன்று 28 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கொழும்பு 11 கதிரேசன் வீதியில் அமைந்துள்ள, ஸ்ரீகதிரேசன் மண்டபத்தில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.பி.எ.அரசரட்ணம் தலைமை ஏற்கிறார் .

இந்த நூலை தனது புரவலர் புத்தகப் பூங்காவின் 40ஆவது வெளியீடாக வெளி வரச் செய்துள்ள இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கின்றார்.

முதற்பிரதியை தொழில் அதிபரும், நகைச்சுவைக் கலைஞருமான எம். பிரேம்ராஜ் பெற்றுக்கொள்கிறார். இந்த நூலின் ஆய்வுரையை தொழிலதிபரும், அறங்காவலருமான கணேஷ் ஈசுவரனும் வாழ்த்துரையை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரும், நூல் ஆய்வுரையை கொழும்பு மாவட்ட செயலகத்தின் கலை,கலாசார உத்தியோகஸ்தர் திருமதி கிறிஸ்ரிரோஸும் வழங்குகின்றனர்.

இந்த நிகழ்ச்சியின் மற்றொரு அம்சமாக புதிய அலை கலை வட்டம் நடத்திவரும் எவோட்ஸ் 2021 கலாசார போட்டியில் பாடல் எழுதும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் கௌரவ, சிறப்பு, கலை இலக்கியத்துறை, ஊடகத்துறை மற்றும் சமூக அரசியல்துறையைச் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

# வேலுநாச்சியாராக விரும்பும் சாக்ஷி அகர்வால்



நடிகை சாக்ஷி அகர்வால் சமீபகாலமாக நடிப்பதோடு எய்ட்ஸ் பாதித்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவுதல், ஆரோக்கிய உணவு, பசி கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு போன்ற சமூக பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

வேலுநாச்சியார் வேடத்தில் போட்டோ ஷூட்டும் நடத்தி உள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:

“நான் தற்போது பிரபுதேவாவுடன் பஹிரா என்ற திகில் கதையில் நடிக்கிறேன். சுந்தர்.சியின் அரண்மனை 3ம் பாகத்தில் வருகிறேன். எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கும் நான் கடவுள் இல்லை படத்திலும் முக்கிய வேடம். த நைட் படத்தில் தற்போது நடித்து வருகிறேன். மேலும் 2 புதிய படங்களில் நடிக்க இருக்கிறேன். 4 வருடங்களாக சமூக சேவை பணிகளை செய்கிறேன். சமீபத்தில் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை சந்தித்து பாட்டு நடனம் என்று நேரத்தை செலவிட்டேன். ஒருவர் இரு குழந்தைகளுக்கு உணவு கொடுக்க முன்வந்தால் பசியே இருக்காது என்ற விழிப்புணர்வு பணியையும் செய்கிறேன். சமூக சேவையில் மகிழ்ச்சி கிடைக்கிறது. நிறைய படங்களில் நடித்து சிறந்த நடிகை என்ற பெயர் வாங்கி ரசிகர்கள் மனதில் இடம்பெற வேண்டும் என்பதே இப்போதைய நோக்கம். வலுவான கதாபாத்திரங்களில் நடிக்க ஆர்வம் உள்ளது. திகில், பேய் படங்களில் நடிக்க பிடிக்கும். வாழ்க்கை கதை படத்தில் நடிக்க ஆர்வம் உள்ளது. குறிப்பாக வேலு நாச்சியார் கதாபாத்திரத்தில் நடிக்க ரொம்ப ஆசை. அதனால்தான் அவர் தோற்றத்தில் போட்டோ ஷூட் செய்து இருக்கிறேன். தென்னிந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்ட முதல் ராணி அவர்தான். அவரது கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தால் சந்தோஷப்படுவேன்''

இவ்வாறு சாக்ஷி அகர்வால் கூறினார்.

# அதைப் பார்த்து வெட்கப்பட்ட அதுல்யா



கோலி குண்டு கண்ணழகியான அதுல்யா ரவி காதல் கண் கட்டுதே திரைப்படத்தின் மூலம் திரைத்துறையில் அறிமுகமானார்.

நாடோடி 2, அடுத்த சாட்டை, கேப்மாரி, ஏமாலி, வட்டம் உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார். இவர் தற்போது, சாந்தனு பாக்கியராஜின் முருங்கைக்காய் சிப்ஸ் படத்தில் நடித்து வருகிறார்.

இணையத்தில் அக்டிவாக இருக்கும் இவர் அண்மையில் ஒரு யூடியூப் சேனலுக்கு அளித்துள்ள பேட்டி தற்போது வைரலாகி வருகிறது.

காதல் கண்கட்டுதே இவர் அறிமுகமான திரைப்படமாகும். இந்தப் படம் பெயர் சொல்லும் அளவுக்கு ஓட வில்லை. இருப்பினும் விடாது பல முயற்சிகளை செய்து வரும் அதுல்யா, கிடைக்கும் வாய்ப்பை சரிவர பயன்படுத்தி கதாபாத்திரங்களை சிறப்பாக செய்து வருகிறார்.

எந்தப்படமும் பெயர் சொல்லும் அளவுக்கு அமையவில்லையே என்ற கவலை இருந்தாலும், ரசிகர்களை தன் வசப்படுத்தும் யுக்தியை தெரிந்து வைத்துள்ள அதுல்யா, இணையத்தில்படு அக்டிவாக இருக்கிறார். அவ்வப்போது புகைப்படத்தை பதிவிட்டு லைக்குகளை பெற்று வருகிறார்.

இவர் எந்த புகைப்படத்தை பகிர்ந்தாலும் அதற்கு விடாது லைக்குகளை போட்டு, அவரை குஷிப்படுத்தி விடுகின்றனர் ரசிகர்கள். இவருக்கு இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மட்டும் சுமார் 13 லட்சத்திற்கும் மேல் பாலோவர்கள் இருக்கிறார்கள். மேலும் ட்விட்டரில் 2 லட்சத்திற்கும் மேல் பலோவர்கள் இருக்கிறார்கள்.

அதுல்யா யூடியூப் சேனலுக்கு அளித்துள்ள பேட்டியில், வாயை கொடுத்து வசமாக மாட்டிக்கொண்டுள்ளார். அந்த நேர்காணலில், தொகுப்பாளர் நீங்கள் முதன் முதலில் பார்த்த பிட்டு படம் என்னா என்று கேள்வி கேட்க? அது பிட்டுப்படமானு தெரியாது. ஆனால், நானும் என் கல்லூரி நண்பர்களும் வகுப்பறையில் ஆஷிக் பானா என்ற இந்தி பாடலை பார்த்து இருக்கிறோம் என்று பதிலளித்துள்ளார்.

அந்த பாடலில் செம ரொமான்டிக் சீன்கள் இருந்தன, வகுப்பறையில் யாருக்கும் தெரியாமல் ஒளிந்து ஒளிந்து பார்த்தது உண்மையில் த்ரில்லாக இருந்தது. இதை எப்படியோ என் ஆண் நண்பர்கள் கண்டுபிடித்து விட்டு செமயா எங்களை கிண்டலடித்தார் என்று கூறினார். இந்த பேட்டியைப் பார்த்த ரசிகர்கள் என்னது பிட்டுபடமா என வாய் பிளந்துள்ளனர்.



# பிரசாந்த் ஜோடியாக பிரியா ஆனந்த்

இந்தியில் ஆயுஷ்மன் குரானா நடித்து வெற்றி பெற்ற படம் அந்தாதூன். இந்த படத்துக்கு தேசிய விருதுகள் கிடைத்தன.

மெல்பர்னில் நடந்த ஆஸ்திரேலிய திரைப்பட விழாவில் திரையிடப்பட்டும் விருதுகளை வென்றது. தற்போது அந்தாதூன் படம் தமிழில் அந்தகன் என்ற பெயரில் ரீமேக் ஆகிறது. இதில் ஆயுஷ்மன் குரானா கதாபாத்திரத்தில் பிரசாந்த் நடிக்கிறார். நடிகர் தியாகராஜன் இயக்குகிறார். இதில் சிம்ரன், கே.எஸ்.ரவிக்குமார், ஊர்வசி, லீலா சாம்சன், மனோபாலா, வனிதா விஜயகுமார் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். படப்பிடிப்பு தொடங்கி உள்ளது. இதில் பிரசாந்த் ஜோடியாக நடிக்க நடிகை தேர்வு நடந்தது. தற்போது பிரியா ஆனந்தை ஒப்பந்தம் செய்துள்ளனர். இவர் இந்தியில் ராதிகா ஆப்தே வந்த கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார்.

பிரசாந்த் பார்வையற்ற மாற்றுத்திறனாளியாக நடிக்கிறார். ஒரு கொலையும், அதன் பின்னணியில் நடக்கும் சம்பவங்களுமே கதை. இந்தியில் தபு வில்லியாக மிரட்டி இருந்தார். அந்த கதாபாத்திரத்தை தமிழில் சிம்ரன் செய்கிறார்.

# வனிதா விஜயகுமார்




கொரோனா ஊரடங்கில் பீட்டர்பால் எனபவரை திருமணம் செய்து சர்ச்சையில் சிக்கிய நடிகை வனிதா விஜயகுமார் சில தினங்களிலேயே அவரை குடிகாரர் என்று உதறி தள்ளி மேலும் பரபரப்பு ஏற்படுத்தினார்.

தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வந்த வனிதா, தற்போது சினிமாவில் தீவிர கவனம் செலுத்த தொடங்கி இருக்கிறார். அனல் காற்று என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்துக்கான தொழில்நுட்ப பணிகள் நடக்கின்றன. படம் விரைவில் திரைக்கு வர உள்ளது. அடுத்து ‘2 கே அழகானது காதல்’ என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.

தொடர்ந்து பிரசாந்தின் அந்தகன் படத்திலும் நடிக்க உள்ளார். இதன் படப்பிடிப்பு தொடங்கி உள்ளது. 4வதாக வசந்த பாலன் இயக்கும் படத்தில் நடிக்கவும் ஒப்பந்தம் செய்துள்ளனர். வனிதா படங்களில் அடுத்தடுத்து நடிக்க தொடங்கி இருப்பது அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. வலைத்தளத்தில் அவருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

# பிச்சைக்காரர்கள் போன்று கிழிந்த ஜீன்ஸை அணிய வேண்டாம்



இளசுகள், பிச்சைக்காரர்கள் போன்று கிழிந்த ஜீன்ஸை அணிய வேண்டாம் என நடிகை கங்கனா ரணாவத் தெரிவித்துள்ளார்.

உத்தரகாண்ட் மாநில முதல் மந்திரி தீரத் சிங் ராவத் பெண்கள் கிழிந்த ஜீன்ஸ் அணிவதை விமர்சித்தது சர்ச்சையாகி உள்ளது. அவர் பேசும்போது, “இளைய தலைமுறையினர் நாகரிகம் என்ற பெயரில் கிழிந்த ஜீன்ஸ் அணிகிறார்கள்.

இளம்பெண்களும் அணிகிறார்கள். நான் விமானத்தில் பயணித்தபோது தொண்டு நிறுவனம் நடத்தும் ஒரு பெண் கிழிந்த ஜீன்ஸ் அணிந்து இருந்தார். அவரால் சமூகத்தில் நல்ல தாக்கத்தை எப்படி உருவாக்க முடியும்'' என்றார். அவரது பேச்சை கண்டிக்கும் வகையில் நடிகைகளும், இளம்பெண்களும் கிழிந்த ஜீன்ஸ் அணிந்து இருக்கும் புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் நடிகை கங்கனா ரணாவத்தும் லேசாக கிழிந்த ஜீன்ஸ் அணிந்துள்ள தனது புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டு, “கிழிந்த ஜீன்ஸ் அணிய விரும்பினால் இந்த புகைப்படத்தில் குளிர்ச்சியாக இருப்பது போன்ற ஜீன்ஸை அணியுங்கள்.

அது ஸ்டைலாக தெரியும். அதற்கு மாறாக வீடு இல்லாத பிச்சைக்காரர்கள் போன்று கிழிந்த ஜீன்ஸை அணிய வேண்டாம். இளசுகள் பலர் தற்போது இப்படித்தான் அணிகிறார்கள்'' என்றார்.

இந்த கருத்துக்கு சிலர் ஆதரவு தெரிவித்துள்ளனர். சிலர் கங்கனா அரைகுறை ஆடையில் இருக்கும் புகைப்படங்களை பகிர்ந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இன்னும் சிலர் தீபிகா படுகோனே, சாரா அலிகான், டாப்சி, ஆலியா பட் உள்ளிட்டோரின் கிழிந்த ஜீன்ஸ் புகைப்படங்களை வெளியிட்டு இவர்களைத்தான் கங்கனா ரணாவத் சாடி உள்ளார் என்று பதிவுகள் வெளியிட்டுள்ளனர்.





# எரிமலை வெடிப்பு: ஐஸ்லாந்தில் பொங்கும் எரிமலைக் குழம்பு

**பெயரில் ஐஸ் கொண்ட நாட்டின் தலைநகருக்கு அருகே தீப்பிழம்பு சீறிப்பாய்கிறது.**

ஆம். ஐஸ்லாந்துதான் அந்த நாடு. இந்நாட்டின் தலைநகர் பெயர் ரேக்யூவீக். இந்நகரில் இருந்து தென்மேற்கே சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு எரிமலை வெடித்துள்ளது என்கிறது அந்நாட்டு வானிலை ஆய்வு அலுவலகம்.

ரேக்யூவீக் தீபகற்பத்தில் உள்ள இந்த ஃபேக்ரதால்ஸ்ஃப்யாட்ல் (Fagradalsfjall) எரிமலை வாயின் பிளவு 500 முதல் 700 மீட்டர் நீளமுள்ளது என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது. 800 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இந்த எரிமலை வெடிக்கிறது.

இது தவிர, ஐஸ்லாந்தில் கடந்த மூன்று வாரங்களில் 40 ஆயிரம் நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

2010ம் ஆண்டு இந்நாட்டில் உள்ள ஏயுஃப்யாட்யோகுட் (Eyjafjallajokull) எரிமலை வெடித்தபோது, ஐரோப்பா முழுவதும் விமானப் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

ஆனால் தற்போது வெடித்துள்ள ஃபேக்ரதால்ஸ்ஃப்யாட்ல் எரிமலை சாம்பலையும், புகையையும் அவ்வளவாக உமிழாது என்றும் அதனால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்படாது என்றும் நம்பப்படுகிறது.

கிரீன்விச் சராசரி நேரப்படி வெள்ளிக்கிழமை இரவு 8.45க்கு இந்த எரிமலை வெடித்ததாகவும், வெப்காம், செயற்கைக்கோள் படங்கள் மூலமாக பிறகு இது உறுதி செய்யப்பட்டதாகவும் வானிலை ஆய்வு அலுவலகம் தெரிவிக்கிறது.

கடலோரக் காவல் படை ஹெலிகாப்டர் ஒன்று இந்தப் பகுதியை ஆய்வு செய்து, எரிமலை வெடித்து லாவா (எரிமலைக் குழம்பு) வழியும் காட்சியைப் படம் பிடித்து அனுப்பியது.

### சிவப்பு நிறத்தில் தகிக்கும் வானம்

"சிவப்பு நிறத்தில் தகித்துக்கொண்டிருக்கும் வானத்தை என் வீட்டின் சாளரத்தில் இருந்து பார்க்க முடிகிறது. இங்கிருக்கும் எல்லோரும் தங்கள் காரில் அங்கே சென்று பார்க்க போய்க்கொண்டிருக்கிறார்கள்" என்று தெரிவித்தார் ரான்வெய்க் குட்முண்ட்ஸ்டோடி என்பவர். இவர் எரிமலையில் இருந்து 8 கி.மீ. தொலைவில் கிரிண்டாவிக் என்ற இடத்தில் வசிக்கிறார்.

எரிமலை வெடிப்பதற்குப் பல மணி நேரம் முன்பாக அந்த எரிமலையில் இருந்து 1.2 கி.மீ. தொலைவில், 3.1 அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது.

எதிரெதிர் திசையில் மோதிக் கொள்ளும் இரு புவித் தட்டுகளுக்கு (டெக்டானிக் பிளேட்டுகள்) இடையில் சிக்கிக்கொண்டிருப்பதால் ஐஸ்லாந்தில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது. அட்லாண்டிக் கடலிடை முகடு, கடற்பரப்புக்கு மேலே தெரிகிற நாடு உலகிலேயே ஐஸ்லாந்து மட்டுமே.




### தணிகிறது

ஐஸ்லாந்து தலைநகர் ரேக்யூவீக் அருகே அணமையில் வெடித்து, லாவா என்னும் எரிமலைக் குழம்பை உமிழத் தொடங்கிய எரிமலை ஓரிரு நாள்களிலேயே தணியத் தொடங்கிவிட்டதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த எரிமலை வெடிக்கும் என்பது முன்கூட்டியே தெரிந்து ஐஸ்லாந்து மக்கள் அதற்காக பல வாரங்களாகத் தயாராகி வந்தனர். எரிமலை வெடித்த பிறகும் பல்லாயிரம் நிலநடுக்கங்கள் அங்கே ஏற்பட்டன.

இந்த எரிமலை வெடிப்பு மிகச் சிறியது என்றும், இதனால் யாருக்கும் ஆபத்து இல்லை என்றும் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பொதுமக்கள் இந்த எரிமலை வெடிக்கும் இடத்துக்குச் செல்ல தடை ஏதும் விதிக்கப்படவில்லை.


டார்வின் கிராண்ட்பாஸ்


தில்ஷாட் முஹம்மட், ஷாகீர் அஹ்மட் தம்பலகாமம்


றாசிக் நபாயிஸ், மருதமுனை.


தேனீஷன் ஐங்கரன் நேசன் , பூண்டுலோயா


சாரிக் அமீன் மடவள பசார்


பைசல் நகர் நூலகத்தில்.....

# செல்ஃபி உலா

**தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**


யூ.எல்.எம் சஜீத், சங்கரில்லா ஹோட்டல்


சிவராஜா திருகோணமலை


எல். ஹில்பேர்ட், அனுதர்ஷினி யாழ்ப்பாணம்


தனுஷான்...








## எல்பர்ட் ஐன்ஸ்டைன்


சார்பியல் கோட்பாடு



## சரியான நேரத்தை கணியுங்கள்



## நிறம் தீட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்

- walk
- run
- play
- read
- write
- jump
- talk



# ஊக்கத்தையும் சுறுசுறுப்பையும் தந்து ஒரு வேளை பசியைப் போக்கும் கஞ்சி

## அரை நூற்றாண்டுகளாக கஞ்சி வியாபாரம் செய்யும் மொஹமட் நசூர்தீன்

( நீர்கொழும்பு தினகரன் நிருபர் ருஸ்மான் )

**ஒரு நேரக் கஞ்சி வயிற்றுப் பசியை போக்குவது மாத்திரமின்றி உடல் ஊக்கத்தையும் மிகவும் சுறுசுறுப்பாக்கும் திறமையையும் உள்ளடக்கியுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது . வீதி வழியே பயணிக்கும் பயணிகளின் ஒரு வேளை பசியை போக்கும் " நைனாப் பூ " கஞ்சி வியாபாரியை " நான் ரொம்ப பிஸி" பகுதிக்காக சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது . " நைனாப் பூ " கஞ்சி வியாபாரி மொஹமட் நசூர்தீன் குடும்பத்தில் நிலவிய வறுமை நிலை காரணமாக 16 வயதில் கஞ்சி வியாபாரத்தை ஆரம்பித்துள்ளார் .**





**கேள்வி:** உங்களுடைய கஞ்சி வியாபாரத்தைப் பற்றிக் கூறுங்கள்?

**பதில் :** நான் தற்போது நாத்தாண்டிய நகரத்திற்கு அருகிலுள்ள கொட்டராமுல்ல முஸ்லிம் கிராமத்தின் சந்தியில் கஞ்சி வண்டியொன்றை வைத்து கஞ்சி வியாபாரம் செய்து வருகின்றேன். 49 வருடங்களாக கஞ்சி வியாபாரத்தையே செய்து வருகின்றேன். வேறு எந்த தொழிலும் நான் செய்யவில்லை.

**கேள்வி:** எத்தனை வயதில் உங்களுடைய கஞ்சி வியாபாரத்தை ஆரம்பித்தீர்கள் ? அப்போது ஒரு கிளாஸ் கஞ்சியின் விலை எவ்வளவு ?

**பதில் :** 16 வயதிலேயே கஞ்சி வியாபாரத்தை ஆரம்பித்தேன். அதாவது 1972 ம் ஆண்டிலேயே இந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன். எனது குடும்பம் அப்போது மிகவும் வறுமையில் இருந்தது. அதனால் நான் பள்ளிவாசல் கொடியேற்ற கந்தூரி விழாக்கள், வாராந்த சந்தைகள் ஆகிய இடங்களில் கஞ்சிப் பானையை கொண்டு சென்று அவ் இடங்களிலேயே கஞ்சியை தயாரித்து விற்பனை செய்வேன்.

1972ம் ஆண்டில் நான் ஒரு கிளாஸ் கஞ்சியை இரண்டு ரூபாய் பணத்திற்கே விற்பனை செய்துள்ளேன்.



நான் ரொம்ப பிஸி...

**கேள்வி:** கடந்த 1972ம் வருடத்தில் நீங்கள் கஞ்சி வியாபாரத்தை ஆரம்பித்து செய்யும் போது நீங்கள் வியாபாரம் செய்த இடங்களில் எத்தனை கஞ்சி வியாபாரிகள் இருந்தனர் ?

**பதில் :** இரண்டு அல்லது மூன்று நபர்கள் மாத்திரமே அப்போது கஞ்சி வியாபாரம் செய்தனர். அப்போது ஒரு கிளாஸ் கஞ்சியின் விலை இரண்டு ரூபாய் மாத்திரமே. இருபத்தைந்து அல்லது முப்பது கிளாஸ் கஞ்சியை நான் விற்பனை செய்வேன். அன்றைய காலத்தில் இந்த உழைப்பு மூன்று வேளை சாப்பாட்டுக்குப் போதுமானதாக இருந்தது. நான் வியாபாரம் செய்யும் இடங்களில் என்னையும் சேர்த்து இரண்டு அல்லது மூன்று நபர்கள் கஞ்சி வியாபாரம் செய்ததால் எங்களுக்கு இடையே போட்டி, பொறாமை இல்லை. அவர்களும் மிகவும் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.





**கேள்வி:** அன்றைய காலத்தில் கஞ்சியை காய்ச்சி எடுப்பதற்கு எவ்வளவு செலவுகள் போயிருக்கும் என்று உங்களுக்கு ஞாபகம் உள்ளதா ? அதனை கூற முடியுமா ?

**பதில் :** அப்போது ஒரு இறாத்தல் பயறு 35/= ரூபாய் மாத்திரமே. சீனி, கித்துல் பாணி, கருப்பட்டி மற்றும் சவ்வரிசி ஆகியவை மிகவும் குறைவான விலைகளிலேயே இருந்தன. கஞ்சிக்கு தேவையான அத்தனை பொருட்களும் குறைவான விலைகளிலேயே சந்தையில் அப்போது இருந்தன. ஆனாலும் பணத்தின் மதிப்பு அதிகமாக இருந்தது.

**கேள்வி:** உங்களது தற்போதைய குடும்ப நிலவரம் பற்றி சற்று கூற முடியுமா ?

**பதில் :** எனது வீடு கொட்டராமுல்ல, தர்கா வீதியில் இருக்கின்றது. எனக்கு நான்கு பிள்ளைகள் எல்லோரும் வளர்ந்தவர்கள்.

எனது மனைவி காலமாகி விட்டார். நான் பிள்ளைகளுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றேன்.

**கேள்வி:** தற்போது நீங்கள் கொட்டாரமுல்ல சந்தியில் தள்ளு வண்டிலொன்றில் வியாபாரம் செய்து கொண்டு வருகிறீர்கள் . இந்தத் தள்ளு வண்டிக் கடையை எப்போது ஆரம்பித்தீர்கள் ?

**பதில் :** கடந்த 1993ம் வருடத்தில் நான் தள்ளு வண்டியில் கஞ்சி வியாபாரத்தை ஆரம்பித்தேன். அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து கஞ்சி தயாரிப்பதற்கான அனைத்து பொருட்களையும் ஒழுங்கு படுத்துவேன். அதாவது தேங்காய்களைத் துருவி தேங்காய்ப் பாலை எடுத்து வைப்பேன். கஞ்சி தயாரிக்கத் தேவையான சகல பொருட்களையும் தயார்படுத்துவேன். மண்ணெண்ணெய் அடுப்பில் வைத்தே கஞ்சியை காய்ச்சி எடுப்பேன். மண்ணெண்ணெய் அடுப்பு எனது தள்ளு வண்டியில் உள்ளது. எனது வண்டியில் சகல பொருட்களையும் மிகவும் சுத்தமான முறையிலேயே வைத்துள்ளேன்.

**கேள்வி:** நீங்கள் வியாபாரம் நடாத்தும் தள்ளு வண்டியின் விலை என்ன ? அதனை வாங்குவதற்கு யாரும் உதவி செய்தார்களா?

**பதில் :** இந்த தள்ளு வண்டியைத் தயாரிப்பு செய்வதற்கு சுமார் 45 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ளது. இந்த வண்டியை செய்வதற்கு பணம் கேட்டு நான் யாரிடமும் கையேந்தவில்லை. சிறுகச் சிறுக சேமித்து வைத்த பணத்தைக் கொண்டே இந்த வண்டியை செய்து எடுத்தேன். இதனால் எனது வியாபாரத்தை பாதுகாப்பாக செய்யலாம்.

**கேள்வி:** தற்போது ஒரு கிளாஸ் கஞ்சியை எத்தனை ரூபாய்க்கு விற்பனை செய்கிறீர்கள் ?

**பதில் :** ஒரு கிளாஸ் கஞ்சியை 40/= ரூபாய்க்கு விற்பனை செய்கிறேன்.

கஞ்சியை காய்ச்சி எடுப்பதற்கு தேவையான அனைத்து பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. ஒரு கிலோ பயறு 800/= ரூபாய். சீனி, சவ்வரிசி, பாதம் பயறு, கருப்பட்டி மற்றும் அனைத்து பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. நான் ஒரு நாளைக்கு சுமார் நூறு கிளாஸ் கஞ்சியை விற்பனை செய்வேன்.

ஆயிரம் ரூபாய் அல்லது ஆயிரத்து ஐநூறு ரூபாய் இலாபம் எனக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும். இதனை வைத்து எனது காலத்தை ஓட்டுகிறேன் .

**கேள்வி:** உங்களுக்கு வேறு உதவிகள் கிடைக்கின்றனவா ?

**பதில் :** நான் யாரிடமும் உதவி கேட்பதில்லை. நான் சுயதொழில் செய்து வருவதால் சாமான்கள் குறைந்த விலைகளில் கிடைத்தால் மிகவும் சந்தோஷமாக இருக்கும் என்று நம்புகிறேன். வேறு ஒன்றும் எதிர்பார்ப்பதில்லை. எங்களுடைய தொழிலுக்கான உணவுப் பொருட்கள் சாதாரண விலைகளில் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமாயின் அதனை நான் வரவேற்கின்றேன்.

**கேள்வி:** உங்களுடைய வியாபார அனுபவங்கள் எப்படி?

**பதில் :** 1956 ம் வருடத்தில் பிறந்து 16 வது வயதில் கஞ்சி வியாபாரத்தை ஆரம்பித்தேன். இப்போது எனக்கு 65 வயது ஆகின்றது. இந்த தொழிலை யாரும் கற்றுத் தரவில்லை. பாடசாலைக் கல்வியை சிறு வயதிலேயே விட்டு விட்டு இந்த தொழிலை ஆரம்பித்தேன். இறைவனின் அருளால் இந்தத் தொழில் எனக்கு மட்டுமன்றி எனது குடும்பத்துக்கும் சோறு போட்டது என்று கூறலாம்.

( படங்கள் ; நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

# கர்ப்ப காலத்தில் பெண்கள் கட்டாயம் தவிர்க்க வேண்டியவை!





கர்ப்ப காலத்தில் பெண்கள் இந்த விஷயங்களை கண்டிப்பாக செய்யக்கூடாது. அப்படி செய்தால் அது கருவை பாதிக்கும். கர்ப்ப காலத்தில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டிய விஷயங்களை அறிந்து கொள்ளலாம்.

கருவுற்ற 10 -16 வாரங்களில் கரு சிதைவு ஏற்பட மன உளைச்சலும் ஒரு காரணம். எனவே பயம், பதற்றம், கோபம், வஞ்சம் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். மசக்கையை தடுக்க மாத்திரைகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

அடிக்கடி தாம்பத்திய உறவு, அலைச்சல், அதிக எடை, சற்று இறுக்கமான ஆடைகள் அணிவது நீண்டநேரம் கண் விழிப்பது, பிளாஸ்டிக் சேர் மற்றும் நைலான் சேரில் உட்கார்வது, மலம், சிறுநீரை அடக்குவது, பட்டினியாக இருப்பது போன்றவற்றை செய்யக் கூடாது.



தூங்கிக்கொண்டிருக்கும் கர்ப்பிணிகளை சத்தம்போட்டு பயமுறுத்தி எழுப்பக்கூடாது. சிறுநீரை அடக்குவதால் சிறுநீரகக் கற்கள், சிறுநீர் பாதையில் தொற்று ஏற்படும். எண்ணெய் குளியல், எண்ணெய் மசாஜ் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும்.



கர்ப்பிணி பெண்கள் நல்ல நார்ச்சத்து நிறைந்த உணவுகளை தினமும் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக நார்ச்சத்து நிறைந்த பழங்கள் மற்றும் காய் வகைகள், மேலும் குறிப்பாக கீரை வகைகளை உணவில் தினமும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆட்டிறைச்சி, பன்றி, மாட்டிறைச்சி போன்ற சிவப்பு மாமிச வகைகளை தவிர்ப்பது நல்லது. மேலும் சீஸ் அதிகம் கலந்த உணவையும் தவிர்க்க வேண்டும். இவை ஜீரணமாக அதிக நேரம் எடுப்பதோடு, சில உபாதைகளையும் உண்டாக்கக் கூடும்.

பகலில் தூங்குதல் கூடாது. இதனால் இரவில் தூக்கம் வராமல் மன உளைச்சல் ஏற்படும்.

உயரமான கட்டடங்களுக்கு செல்லுதல், படியில் அடிக்கடி ஏறுதல், காலடி சத்தம் கேட்கும்படி பலமாக நடப்பது, வாகனங்களில் பயணம் செய்வது, தலைக்கு மேல் எடை தூக்குவது போன்றவற்றை செய்யக் கூடாது.

காபி மற்றும் தேநீர் போன்றவற்றை முடிந்த வரை தவிர்ப்பது நல்லது. இவை உடலில் இரத்தசோகை மற்றும் வேறு சில உபாதைகளை உண்டாக்கக் கூடும்.

எனவே கர்ப்ப காலத்தில் பெண்கள் இவ்வாறான விடயங்களை முடிந்தவரை தவிர்ப்பது நலம் தரும்.



# பட்டாணி மசாலா கூட்டு



தோசை, சப்பாத்தி, சூடான சாதத்துடன் சாப்பிட அருமையாக இருக்கும் இந்த பட்டாணி மசாலா கூட்டு.

**தேவையான பொருட்கள் :**

- பட்டாணி 2 கப்
- சின்னவெங்காயம் அரை கப்
- நெய் 4 தேக்கரண்டி
- கருவாப்பட்டை 1
- சீரகம் அரை தேக்கரண்டி
- கல் உப்பு – தேவைக்கேற்ப
- மஞ்சள்தூள் அரை தேக்கரண்டி
- தக்காளி 3
- மிளகாய்தூள் அரை தேக்கரண்டி
- கொத்தமல்லி தூள் – 1தேக்கரண்டி
- இஞ்சி, பூண்டு விழுது 2 தேக்கரண்டி
- கொத்தமல்லி தழை தேவையான அளவு

**செய்முறை:**

கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும். வெங்காயம், தக்காளி ஆகியவற்றை தனித்தனியே அரைத்துக்கொள்ளவும். கடாயில் நெய் ஊற்றி அது உருகியதும் சீரகம், பட்டை ஆகியவற்றை சேர்த்து லேசாக வறுக்கவும்.

அதில் அரைத்த வெங்காயத்தை போட்டு பொன்னிறமாகுவரை வதக்கவும். பின்னர் இஞ்சி, பூண்டு விழுது, மஞ்சள்தூள், மிளகாய்தூள், கொத்தமல்லி தூள் ஆகியவற்றை கொட்டி லேசாக கிளறவும்.

பின்னர் தக்காளி, பட்டாணியை அடுத்தடுத்து கொட்டி நன்றாக வதக்கவும். வதங்கியவுடன் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி உப்பு சேர்த்து வேகவிடவும். எண்ணெய் பிரிந்து வரும்போது கொத்தமல்லி தழை தூவி இறக்கவும்.

சூப்பரான பட்டாணி மசாலா கூட்டு ரெடி.

குறிப்பு: பாக்கெட்டில் அடைத்து விற்கும் பட்டாணியை பயன்படுத்துவதை தவிர்க்கவும்.



# திரையிசையின் கம்பன் கண்ணதாசன்

**காவியத் தாயின் மூத்த மகன் கம்பன் என்றால், இளைய மகன், காலத்தை வென்றவன், காவியம் ஆனவன் கண்ணதாசன் எனலாம். 'தாடி இல்லாத தாகூர்; மீசை இல்லாத பாரதி' என்று கண்ணதாசனைப் பாராட்டுவார் கவிஞர் வாலி.**

திரையுலகில் க.மு., க.பி. என்றால் 'கண்ணதாசனுக்கு முன்', 'கண்ணதாசனுக்கு பின்' என்று பொருள். கண்ணதாசன் கல்லூரிக்கோ பல்கலைக்கழகத்திற்கோ சென்று படித்ததில்லை. எனினும் அவர் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை, சித்தர் பாடல்கள் முதல் சிற்றிலக்கியங்கள் வரை கற்று அறிந்தவர்; அதனால் அவருடைய திரையிசைப் பாடல்களில் இலக்கியங்களின் தாக்கம் இருக்கும். கவிச்சக்கரவர்த்தி கம்பன் கவிதைகளின் தாக்கம் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன.



### கைவண்ணம்

ராமனும் இலக்குவனும் விசுவாமித்திரரோடு மிதிலைக்குச் செல்லும்போது, ராமனது திருவடித் துகள்பட்டுத் தனது சாபம் நீங்கி முன்னைய பெண் வடிவத்தைப் பெறுகிறாள் அகலிகை. அப்பொழுது அகலிகையின் வரலாற்றை எடுத்துரைத்த விசுவாமித்திரர், 'மேகம் போன்ற கரிய திருமேனியுடைய ராமனே! வருகிற வழியில் வனத்தில் அஞ்சனம் போலும் கரிய நிறத்தையுடைய தாடகை என்னும் அரக்கியோடு செய்த போரில் உன் கையின் திறத்தை வில்லின் ஆற்றலை பார்த்தேன்; இங்கு உன் திருவடியின் திறத்தைக் கண்டேன்' என்று கூறுகிறார்.

'இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்;
இனி இந்த உலகுக்கு எல்லாம்
உய்வண்ணம் அன்றி, மற்றுஓர்
துயர்வண்ணம் உறுவது உண்டோ?
மைவண்ணத்து அரக்கி போரில்,
மழைவண்ணத்து அண்ணலே உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்; கால்
வண்ணம் இங்கு கண்டேன்'

கம்பனின் இப்பாடல் கண்ணதாசனை ஈர்த்தது. அதன் விளைவாக உருவானதுதான் 'பாசம்' என்னும் திரைப்படத்தில் திருமணம் ஆன கணவனும் மனைவியும் இணைந்து பாடுவதாக அமைந்த புகழ்பெற்ற இப்பாடல்...

ஆண்: பால்வண்ணம் பருவம் கண்டு
வேல் வண்ணம் விழிகள் கண்டு
மான் வண்ணன் நான்
கண்டுவாடுகிறேன்!
பெண்: கண் வண்ணம் அங்கே
கண்டேன்
கை வண்ணம் இங்கே கண்டேன்
பெண் வண்ணம் நோய்
கொண்டுவாடுகிறேன்!

கம்பர் பயன்படுத்திய 'வண்ணம்'என்னும் சொல்லே மீண்டும் மீண்டும் வர, இத்திரைப்படப் பாடலைப் புனைந்துள்ளார் கண்ணதாசன்.

### தோள் கண்டார்

தேர் ஏறி வீதி உலா வரும் ராமனைக் கண்டு மகிழ மிதிலை நகரத்து மகளிர் மொய்க்கின்றனர். ராமபிரானது தோள் அழகைக் கண்டவர்கள், அவ்வழகை முற்றும் கண்டு களித்து முடியாமையால் அத்தோள் அழகினையே கண்ட வண்ணம் இருந்தார்களாம். வாள் போன்ற கண்களையுடைய மிதிலை நகரப் பெண்டிருள் ராமனது திருமேனியழகினை முழுவதும் பார்த்தவர்கள் ஒருவரும் இல்லையாம்.

'தோள் கண்டார், தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன தாள்
கண்டார், தாளே கண்டார்; தடக் கை
கண்டாரும், அதே வாள் கொண்ட
கண்ணார் யாரே வடிவினை முடியக்
கண்டார்?
ஊழ் கொண்ட சமயத்து அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்'

இப்பாடலின் தாக்கம்தான்
'இதயக் கமலம்'படத்தில்
'தோள் கண்டேன் தோளே கண்டேன்
தோளில்இரு கிளிகள் கண்டேன்;
வாள் கண்டேன் வாளே கண்டேன்.
வட்டமிடும் விழிகள் கண்டேன்'
என்று கண்ணதாசன் பாட
துாண்டுகோலாக அமைந்தது.

### நதியின் குற்றமல்ல

ராமனிடம் மன்னனாகிய தசரனது ஆணையை கைகேயி கூறிய அளவில், கானகம் செல்லப் புறப்பட்டு விடையும் பெற்று விடுகிறான் ராமன். ராமன் காடு செல்வது கேட்ட நாட்டு மக்கள் துயரம் அடைகிறார்கள். இலக்குவன் போர்க்கோலம் பூணுகிறான். இதையறிந்த ராமன், இலக்குவன் இருக்கும் இடத்திற்கு விரைந்து வந்து அவனது சீற்றத்தைத் தணிக்க முற்படுகிறான்.

'மழைநீர் வரத்து இன்மையால் சில காலம் ஆற்றில் நீர் வற்றுவது ஆற்றின் குற்றம் அன்று; அதுபோல என்னைக் காடு செல்லும்படி சொன்னது தந்தையின் குற்றம் அன்று; காடு செல்லும்படி வரம் வாங்கியது, பெற்று நம்மைக் காப்பாற்றி வளர்த்தவள் ஆகிய கைகேயியின் அறிவினது குற்றமும் அன்று; நமது ஊழ்வினையால் விளைந்த குற்றமே ஆகும். இதனை ஆராயாது, நீ இந்தச் செயலுக்கு இவர்களைக் காரணமாக்கிக் கோபித்தது ஏன்?'

என்று வினவுகிறான் ராமன்.'நதியின் பிழைஅன்று நறும்புனல் இன்மை; அற்றே பதியின் பிழை அன்று; பயந்து நமைப் புரந்தாள்மதியின் பிழை அன்று; மகன் பிழை
அன்று; மைந்த!

விதியின் பிழை; நீ இதற்கு என்னை வெகுண்டது?' என்றான்.

கம்பரின் இப்பாடற் கருத்தினை கண்ணதாசன் 'தியாகம்' என்னும் படத்தில் எடுத்தாண்டுள்ளார். கதைத் தலைவன் 'தன்மீது சுமத்தப்பட்ட பழிக்குத் தான் காரணம் இல்லை; விதிதான் காரணம்' என்று கூறுவதாக வரும் அப்பாடல்...

'நல்லவர்க் கெல்லாம் சாட்சிகள் ரெண்டு
ஒன்று மனசாட்சி, ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா!....... நதிவெள்ளம் காய்ந்து விட்டால்நதி செய்த குற்றமில்லை;விதி செய்த குற்றம் அன்றி
வேறே யாரம்மா?'

### வசந்த மாளிகை

கடலைத் தாவி இலங்கைக்குச் சென்ற அனுமன், அசோக வனத்தில் சீதை சிறை வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறான்; எப்படியாவது சீதையைச் சிறையிலிருந்து விடுவிக்க எண்ணுகிறான். 'தாயே! தாங்கள் என் தோளில் அமர்ந்து கொள்ளுங்கள், தங்களை யான் ராமன்பால் சேர்ப்பிப்பேன்' என்று சீதையிடம் விண்ணப்பிக்கிறான். அது கேட்ட சீதை, அது பொருத்தமற்ற செயல் என்று விளக்கிக் கூறி அதற்கு உடன்படாது மறுக்கிறாள். பிராட்டியின் வார்த்தைகளைக் கேட்டுத் தெளிந்த அனுமன் தன் கருத்தை விலக்கிக் கொண்டு, 'ராமபிரானுக்கு யான் கூற வேண்டிய செய்தி யாது? கூறுக' என்று கேட்கிறான். சீதை, 'அண்ணல்பால் நினைவுறுத்துக' என்று தனித்திருந்த போது இருவரும் பேசிப் பகிர்ந்து கொண்ட சில அடையாள மொழிகளைக் கூறுகிறாள். அவற்றுள் ஒன்று, ராமன் மிதிலையை அடைந்து, தன்னைத் திருமணம் செய்து கொண்ட காலத்தில், 'இந்தப் பிறவியலில் இரண்டாவது பெண்ணை மனத்தால் கூடத் தீண்ட மாட்டேன்' என்று கூறிய செவ்வரத்தை அண்ணலின் செவியில் சாற்றுக'என்பது. ராமன் சீதைக்கு அளித்த செவ்விய வரத்தினை, திருவார்த்தையை, ஒரு திரைப்பாடலில் நயமாகப் பொதிந்து வைத்துள்ளார் கண்ணதாசன். 'வசந்த மாளிகை' திரைப்பட பாடலில், 'மயக்கமென்ன இந்த மௌனமென்ன மணி மாளிகை தான் கண்ணே; தயக்கமென்ன இந்தச் சலனமென்ன அன்புக் காணிக்கைதான் கண்ணே' என்று காதலிக்குத் தான் கட்டி வைத்திருக்கும் மாளிகையைக் காட்டிக் கூறும் காதலன்,


'உன்னையல்லால் ஒரு பெண்ணை
இனிநான்
உள்ளத்தினாலும் தொட மாட்டேன்!'
என்று உறுதி கூற,'
உன் உள்ளம் இருப்பது என்னிடமே
அதைஉயிர் போனாலும் தர
மாட்டேன்!'

என்று காதலியும் நெகிழ்ந்து கூறுவதாகப் பாடுகிறார் கண்ணதாசன்.

### லட்சுமி கல்யாணம்

கம்ப ராமாயணத்தில் கூறப்படும் ராமனின் அவதாரச் சிறப்பு முழுவதையுமே 'லட்சுமி கல்யாணம்' என்னும் திரைப்படத்திற்காக எழுதிய பாடலில் ரத்தினச் சுருக்கமான மொழியில் எடுத்துக்காட்டியுள்ளார் கண்ணதாசன்.

'ராமன் எத்தனை ராமனடி அவன்நல்லவர் வணங்கும் தேவனடி
தேவன் ராமன் எத்தனை ராமனடி!
கல்யாணக் கோலம் கொண்ட கல்யாணராமன் காதலுக்குத் தெய்வம் அந்தச் சீதாராமன்,
அரசாள வந்த மன்னன் ராஜாராமன்'என்று நீள்கிறது அந்த பாடல். இப்படி கம்பனின் கவித்திறம் கவியரசர் கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில் எங்கும் நீக்கமறப் படிந்து அவற்றிற்குத் தனி வண்ணமும் வனப்பும், கூடுதல் வளமும், வலிமையும் சேர்த்திருக்கிறது.





**பாகிஸ்தானின் 81வது தேசிய தினம் கடந்த 23ஆம் திகதி கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் கொண்டாடப்பட்டது. பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முகம்மது சாத் கட்டக் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறுவர்கள் பாகிஸ்தான் தேசிய கொடியை அசைத்து ஆரவாரம் செய்வதை படத்தில் காணலாம்...**

***(படம்: அஷ்ரப் ஏ சமட்)***

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.